# தமிழரசு


மலர்: 3.
இதழ்: 2.
16-7-1972


## முதல்வர் தரும்

### குறளோவியம் (இலக்கியக் கட்டுரை)

### தொண்டாற்ற வந்துள்ள தூதுவர்கள்!


வேளாண்மைத் துறையில்
வியத்தகு சாதனைகள்!

அறநிலையத் துறையில்
அரசு செய்யும் பணிகள்

கல்வெட்டுக் காட்டிடும் வீரம்

பருகூரில் பார் போற்றும் பணி

கூவம் நதியின் மிசை நிலவினிலே.....!

களஞ்சியம் நிரப்பிடக்
கரிகாலன் வந்துவிட்டான்!

உண்மையின் சந்நிதி (தொடர் கதை)

நாணயத்தின் வரலாறு

கண்ணகிக் கோட்டம்

கேளுங்கள் கொடுக்கப்படும்

அறிவுடையோர் போற்றுகின்றார் (கவிதை)

ஒருநாள் நீதிபதி (சிறுவர் கதை)

ஆராய்ச்சிமணி (படக்கதை)

வெண்பாப் போட்டி

உழைப்பாளர் நலங்காக்கும்
ஒப்பற்ற மருத்துவமனை

சுவைமிகு புதிய அவரை 'கோ-8'







# செய்திச் சித்திரங்கள்







தமிழகத்தில் கடல் நீரைக் குடிநீராக மாற்ற 200 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.


தமிழ்நாட்டில் சென்னையில் அல்லது மாமல்லபுரத்தில் 1 கோடி ரூபாய் செலவில் சுற்றுலா அரும்பொருட் காட்சியகம் ஒன்று அமைக்கத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது.
சுற்றுலா அரும்பொருட் காட்சியகம்


1972-73 ஆம் ஆண்டில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 75 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வழங்குவது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

# குறளோவியம்

ஒரு மனிதன் இயற்கையெய்தி விடு
கிருன். மறைந்த அந்த மனிதனைப் பற்றி
ஊரார் பேசிக்கொள்கிருர்கள். இறந்த
வன் நல்லவனு கெட்டவனு என்று பிரச்
சினை எழுகிறது. ஒருவன், இறந்தவனைப்
பற்றித் தீர்ப்புக் கூறப் புதிய வழி கண்டு
பிடிக்கிருன்.

"ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறீர்கள்?
மறைந்தவன் எத்தகையோன் என்பதை
அறிய அவனது மகனைப் பார்த்தால் தெரி
கிறது – திருவள்ளுவரே கூறியிருக்
கிருரே நடுவுநிலை உடையவரா நடுவுநிலை
இல்லாதவரா என்பது அவரவர்களின்
மக்களால் காணப்படும் என்று"

இதுபோல் அவன் விளக்க முரைத்து
அதற்கான குறளையும் கூறுகிருன்.

"தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

இதுதான் அவன் ஆதாரங் காட்டிடும்
குறள்! எச்சமென்ருல் மக்கள் எனப்
பொருள் கொண்டு, 'மக்களைப் பார்த்துப்
பண்பைப் புரிந்து கொள்' என்று உரை
கூறியவர்கள், தவருன பாதையில்
நடந்துவிட்ட காரணத்தால் மேற்கண்ட
தீர்ப்பை வழங்க அவன் முன்வந்திருக்
கிருன். அந்த உரையின்படி உலகத்தை
நோக்கிஞல் குறளே பொய்த்துவிடும்
போல் தோன்றுகிறது.

காந்தியாரின் பெருமையை அவரது
எச்சமான அப்துல்லா காந்தியைப் பார்த்
துத் தெரிந்து கொண்டால் என்ன ஆவது?
புராணத்தை எழுதியிருக்கிருர்களே;
அதிலே வரும் பிரகலாதனின் பண்பைப்
பார்த்து அவனது தந்தை இரணியனின்
பண்பைக் கணக்கிட இயலுமா என்ன?

இதுபோன்ற வேறுபாடுகளை உன்னிப்
பார்க்குமிடத்து "எச்சம்" என்னும் சொல்
லுக்குச் சரியான பொருள் கொள்ள
வேண்டியது அவசியமாகிறது.



# முதல்வர் கலைஞர்

எச்சமென்றால்—எஞ்சி நிற்பது என்று தானே பொருள்! ஒரு மனிதன் இறந்த பிறகு எஞ்சி நிற்பது அவன் மக்கள்தான் என்பது எப்படிப் பொருந்தும்? அவனுக்குக் குழந்தைகளே பிறக்காமல் போயிருந்தால் அவன் மக்கள்தான் என்பது எப்படிப் பொருந்தும்? அவனுக்குக் குழந்தைகளே பிறக்காமல் போயிருந்தால் அவன் தகவிலர் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டியவன்தானா? திருமணமே செய்து கொள்ளாத எத்தனையோ பெரியவர்களும் தலைவர்களும் எச்சம் வைக்காத காரணத்தால் தக்கார் — தகவிலர் என்ற தராசுக்கே வராமல் போய்விடுவார்களே! ஆகவே—எச்சம் என்பது மக்களைக் குறிப்பிடும் சொல் அல்ல என்பது உறுதியாகிறது.

எச்சம்—எஞ்சி நிற்பது! ஒரு மனிதன் இறந்த பிறகு, எஞ்சி நிற்கிற புகழோ— அல்லது பழிச் சொல்லோதான் அவனைப் பற்றிய நல்ல தீர்ப்பைக் கூறவல்லது.

காந்தியை, உத்தமர் என்று கூறுகிறோம்—தக்கார் வரிசையிலே நிற்கிறார் என்றால் காரணம் எஞ்சியிருக்கும் புகழ்தான்!

அவரைக் கொன்றவன் தகவிலர் பட்டியலில் முதலிடம் பெறுகிறான்—காரணம் அவனுக்குப்பின் எஞ்சியிருப்பது பழிச் சொல். குறளைப் படிக்கிறோம்—வள்ளுவன் வாழ்க என்று கூவுகிறோம்! வள்ளுவனின் எச்சம் திருக்குறள்!

இப்போது குறளின் உண்மைப்பொருள் நமக்குப் புரிகிறது—தக்காரா—தகவிலரா என்பது அவருக்குப்பின் எஞ்சியுள்ள புகழாலோ—அல்லது பழியாலோ நிர்ணயிக்கப்படும்.

"தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்"





# தொண்டாற்ற வந்துள்ள தூதுவர்கள்

“சமதர்ம வளங்கெழுமிய சமுதாயத்தினை ஏற்படுத்துவது இந்த அரசின் நோக்கம். சமதர்மம் என்றால் வெறும் பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; சமுதாய நிலையிலும் மாற்றங்கள் பூத்துக் குலுங்கிட வேண்டும். சமுதாய மாற்றமற்ற பொருளாதார மாற்றம் புண்ணை மறைத்துப் பொன் துகில் அணிந்து கொள்கிற கதையாக முடிந்துவிடும்'' என்று இவ்வாண்டு மார்ச் திங்கள் முதல்நாள் அன்று சட்டப் பேரவையில் நான் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளேன்.

இந்தச் சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்காக அரசு ...ட்டும் திட்டங்களைச்செயல்படுத்துவதில் மாவட்ட நிருவாகிகள் அச்சாணி போன்றவர்கள். அரசு ...வாகத்தில் அரசு ஊழியர் ... அத்தனை பேருக்கும் பங்கு ...ண்டு என்றாலும் மாவட்ட அள...ல் பணிபுரியும் நீங்கள் பெரும் ...ங்கினை ஏற்றுள்ளீர்கள். மக்களை நேரடியாகச் சந்தித்து, அவர்...ளுடைய அன்றாட வாழ்வில் ...ங்கு கொண்டு, அவர்களுடைய ...வகளை நிறைவேற்றும் பணி... நீங்கள் ஈடுபட்டிருக்கிறீர்... சிறந்த மாநில ஆட்சிக்கு ...படை சிறந்த மாவட்ட நிரு...மே. மாவட்ட நிருவாகத் ...சாதனையைக் கொண்டுதான் ...ன் திறமையை மக்கள் ... போடுகிறார்கள். நாலரைக் ... மக்களின் நல்வாழ்வுக் ... பணிகள் உங்கள் கையில் ...டைக்கப் பட்டிருக்கின்றன ...று கூறுவதில் தவறு ஒன்றும் ...லை என்று நான் கருதுகிறேன்.

...ன்று தேர்தலோ போரோ ...றி, நெருக்கடி நிலைமை ...றி, அமைதிச் சூழ்நிலை ...லுகின்ற இந்த நேரத்தில் ...ள் முழுக் கவனத்தையும் ...ரின் ஆக்கப் பணிகளில் ...த்த இயலும்.

பண்டை நாட்களில் அரசின் கடமைகள், வரி வசூலிப்பது, சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பது என்ற அளவோடு இருந்தன. ஆனால், ஜனநாயகம் தழைத்தோங்குகின்ற இந்த நாளில் அந்தப் பழைய கொள்கை ஏற்புடையதாக இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பெரும் பணி ஏழை எளியவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் செயல்களில் ஈடுபடுத்தப்பட வேண்டியுள்ளது.

பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல, உலக வழக்கே என்பது தமிழ் இலக்கணம் பற்றிக் கூறப்பட்டதெனினும் அது ஆட்சி முறைக்கும் பொருந்தும். சுமார் இருபத்தைந்து, முப்பது ஆண்டுகளுக்கு முன் கலெக்டர் என்றாலோ அல்லது மாவட்டப்போலீஸ் அதிகாரி என்றாலோ மக்களிடம் அதிகாரம் செலுத்த வந்தவர்கள் என்ற எண்ணம்தான் நிலவி இருந்தது. ஆனால், காலத்தின் போக்கால் அவர்கள் பெயர், மாவட்ட ஆட்சியாளர்கள், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் என்று பெயர்களில் மாற்றம் ஏற்பட்டது மட்டுமல்லாமல், அவர்கள் பணிகளை ஆற்றும் முறையிலும் கூட மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதிகாரம் செலுத்த வந்தவர்கள் என்ற நிலை மாறித், ''தொண்டாற்ற வந்துள்ள தூதுவர்கள்'' என்ற நிலை ஏற்பட்டுள்ளது. நீங்கள் ஏழை எளியவர்கள் வாழும் கிராமங்களுக்கு எல்லாம் நேரடியாகச் சென்று, அவர்கள் குறைகளைக் கேட்டுஅறிகின்றீர்கள். மனுநீதித் திட்டத்தின் மூலம் இயலுமானால் அந்தந்த இடத்திலேயே முடிவினையும் அறிவிக்கின்றீர்கள். இம்மாதிரி மக்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களின் சிறு சிறு குறைகளை எல்லாம் கேட்டறிந்து, பரிகாரம் காணும் பாங்கிலேதான் நிருவாகத் திறமையே அடங்கியுள்ளது. ஏழை எளிய மக்கள் மன நிறைவோடு வாழவேண்டும் என்பதே இந்த அரசின் தலையாய நோக்கம். அதை நிறைவேற்றுவதில் உங்கள் பொறுப்பு—பொறுப்பு என்பதை விட உங்கள் தொண்டு தலையாய இடம் பெறுகிறது.

ஒரு நாட்டின் எதிர்காலம் ஒளியுடன் விளங்க வேண்டுமானால் அந்நாட்டில் உடல் வலிவும், மன வளமும் கொண்ட இளைஞர்கள் வேலை வாய்ப்பின்றித் தவிக்கும் நிலை மாறவேண்டும். அவர்களிடம் வாழ்க்கையில் ஏமாற்றமோ மனச் சோர்வோ ஏற்படக் கூடாது. அது நாட்டுக்கு நல்லதல்ல. வேலையின்மையைப் போக்குவதற்குத் தேசிய அளவிலே திட்டங்கள் தீட்டப்பட வேண்டும் எனினும், இந்த அரசு இளைஞரணியை அமைத்தல், பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பளித்தல், பொறியியல், மருத்துவம் போன்ற தொழில் நுட்பக் கல்விகளில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை உண்டாக்கித் தருதல் போன்ற பல காரியங்களைத் தன்னால் இயன்ற அளவுக்குச் செய்து வருகின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒருசில குடிசைத் தொழில்கள் சிறந்து விளங்க வாய்ப்புகள் இருக்கின்றன. நீர் வளம், மின் சக்தி, மூலப் பொருட்கள், எளிதில் தொழிலாளர்கள் கிடைக்கும் நிலை இவைகளைப் பொறுத்து ஆங்காங்குச் சிறிய அளவில் நவீனத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த மாவட்டங்களில் வாய்ப்புகள் இருக்கின்றன. தொழில் முன்னேற்றம், விவசாய வளர்ச்சி, இவைகள் சீரான முறையில் நடைபெற வேண்டுமென்பதற்காகவே நமது மாநிலத்தில் திட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்டு அது செவ்வனே செயல்பட்டு வருகிறது. ஆனால், நம் நாட்டில் திட்டம் என்பது கிராமங்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு அமைய

வேண்டும். ஆகவேதான் மாவட்ட அளவில் முதலில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அது மாநில அளவில் உருவாக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மாவட்ட அளவில் தயாரிக்கப்படும் திட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. அதில் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெருகிவரும் மக்கள் தொகையை ஓர் அளவில் கட்டுப்படுத்துவதற்கு நாம் ஒவ்வொருவரும் மிகுந்த அக்கறையுடன் பணியாற்ற வேண்டும். குடும்பநலத் திட்டத்தை ஆர்வத்துடன் அமலாக்க வேண்டும். சென்ற ஆண்டில் தென் ஆர்க்காடு, தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் ஆற்றிய பணி போற்றுதற்குரியது. பாமர மக்களிடத்திலும், படித்தவர்களிடத்திலும் அறுவைச் சிகிச்சை முறை பற்றியுள்ள ஒருவித பயத்தை நாம் அறவே நீக்கி விட்டதாகச் சொல்வதற்கில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக அறுவைச் சிகிச்சையில் ஏற்படுகின்ற சிறு கோளாறுகள் அந்தப் பயத்திற்குக் காரணமாக இருக்கலாம்.

ஆகவே, குடும்ப நலத் திட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மருத்துவர்கள், தாங்கள் மேற்கொள்ளும் அறுவைச் சிகிச்சைகளில் நூற்றுக்கு நூறு வெற்றி காண வேண்டும். ஏழை எளிய மக்களிடம் அறுவைச் சிகிச்சைக்குப் பின் மருத்துவ மனைகளில் அக்கறையுடனும், அன்புடனும் கவனிக்கின்றார்கள் என்ற எண்ணம் பரவ வேண்டும். இப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒளிமிக்க எதிர் காலத்தை இந்நாட்டிற்கு உருவாக்கிக் கொடுக்கும் தொண்டில் ஈடுபட்டுள்ளோம் என்ற எண்ணத்துடன் பணியாற்ற வேண்டும். குடும்ப நலத் திட்டத்தை இன்னும் திறம்படச் செயலாற்ற என்னென்ன வழி முறைகளைக் கையாளவேண்டும் என்பது பற்றி எல்லாம் நீங்கள் விவாதிக்க இருக்கின்றீர்கள். ஆகவே, அதைப்பற்றி நான் மேலும் அதிகமாகச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்ட மக்களுக்குப் பயன் அளிக்கும் சில சிறு திட்டங்களை மாவட்ட ஆட்சியாளர்கள் நிறைவேற்றுவதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். உதாரணமாகக் கோடைக்காலத்தில் கோடை வாசஸ்தலங்களுக்குச் சென்று தங்கள் விடுமுறையைக் கழிக்க இயலாத நூற்றுக் கணக்கான மாணவர்களும், மாணவிகளும் இருக்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் ஏழைமை நிலையிலுள்ள சில மாணவ-மாணவிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களைக் கொடைக்கானலுக்கு அனுப்பி, ஓய்வு நாட்களைப் பயன்படும் முறையில் கழிக்கும் வண்ணம் மாவட்ட ஆட்சியாளர் ஒரு திட்டத்தைச் செயல்படுத்தினார். இதில் எத்தனை பேர் பயனடைந்தார்கள் என்பதல்ல முக்கியம்; சமுகத்தின் அடித்தளத்திலே உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த அரசு முற்பட்டுள்ளது என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும்.

கோடை வாசம் வாழ்க்கையில் வசதி படைத்தோர்களின் தனி உரிமை என்ற கருத்தைப் போக்க இது பயன்படும். தாழ்ந்து கிடக்கும் நாம் முன்னுக்கு வர இயலுமா என்று ஏங்கித் தவிக்கும் இளம் உள்ளங்களில் ஏற்படும் நம்பிக்கை ஒளியாகும். அந்த முறையில் இத்திட்டம் போற்றத்தக்க ஒன்றாகும். மேலும் மற்ற மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியாளர்களின் முயற்சியால் கல்லூரிகளும், பள்ளிகளும், கல்யாண மண்டபங்களும், விளையாட்டு அரங்கங்களும் தோன்றுகின்றன. இவைகள் எல்லாம் வரவேற்கத்தக்கவை.

நமது மாநிலத்தில் பிச்சைக்காரர்களை—குறிப்பாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை முழுமையாக மேம்பாடடையச்செய்ய வேண்டும் என்பதற்காகத் திட்டம் வகுத்துச் செயல்பட்டு வருகிறோம். பிச்சைக்காரர்களுக்குத் தனி நிறுவனங்கள் ஏற்படுத்தி, அதில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு முதலியன ஏற்படுத்தித் தருவதற்கு மாவட்ட ஆட்சியாளர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் ஆகியவர்களின் ஒத்துழைப்பு மிக மிகத் தேவை. பிச்சை எடுத்தலையே தமிழகத்திலிருந்து விரட்டவேண்டும். வந்தவர்களுக்கு எல்லாம் வாரி வழங்கிய இந்த மண்ணில், பிச்சை எடுத்தலை இனியும் அனுமதித்தல் நல்லதல்ல. பிச்சை எடுத்தலை இன்னும் ஐந்தாண்டுக்காலத்திற்குள்ளேனும் ஒழித்தாக வேண்டும். இந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள கண்ணொளி வழங்கும் திட்டத்தின் முக்கியத்துவத்தை நீங்கள் நன்கு உணர்வீர்கள். அரசு இயந்திரத்தின் அச்சாணி போன்ற நீங்கள் இந்தத் திட்டங்களில் தனி ஆர்வமும் அக்கறையும் காட்டுதல் அவசியம்.

## முதல்வர் கலைஞர்

கிராமத்திலே உள்ள விவசாயிகள் அனைவருக்கும் அரசிடமிருந்து கடன் வழங்குதல் போன்ற பல வழிகளில் உதவிகள் கிடைக்கின்றன. அவர்கள் தண்ணீர்த் தீர்வை, விவசாய வருமான வரி, கடன் பாக்கி போன்றவற்றிற்கு அரசுக்குப் பணம் செலுத்தவேண்டி இருக்கிறது.

ஆனால் அவர்கள் எவ்வளவு கடன் வாங்கினார்கள், வட்டி எவ்வளவு, எப்போது செலுத்த வேண்டும், யாரிடம் செலுத்த வேண்டும் என்பன போன்ற தகவல்கள் அந்த எளிய மக்களிடம் இருப்பதில்லை. அதனால் அவர்கள் சிற்சில சிரமங்களுக்கு உள்ளாகின்றார்கள். அந்தக் குறைகளை நிவர்த்திப்பதற்கு ஒரு ''கணக்குப் புத்தக முறை''யை (பாஸ் புக்) அமலாக்க இந்த அரசு எண்ணியுள்ளது. இத்துடன் கிராமக் கணக்குகளையும் எளிமையாக்கினால் நடைமுறைச் சிக்கல்கள் பல நீங்கி, அதனால் சிறு விவசாயிகளுக்கும், ஏழை எளியவர்களுக்கும் ஏற்படுகின்ற தொல்லைகள் குறையும். இதுபற்றிய உங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

''1961-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உச்சவரம்புச் சட்டம் விரிவான நீண்டகால எச்சரிக்கை விளம்பரத்துடன் கொண்டுவரப்பட்டதால், சட்டம் வருவதற்கு முன்பே அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான தந்திரங்களில் நிலக்கிழார்கள் ஈடுபட்டு, பினாமி முறையிலும் விதிவிலக்குகளைப் பயன்படுத்திக்கொண்டும், உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டு நிமிர்ந்து நின்றார்கள். சட்டமோ நாணிக் கோணித் தலை தாழ்த்திக் கொண்டது'' என்று நான் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால், அண்ணாவின் ஆட்சிக் காலத்திலும் அதற்குப் பின்பும் வந்த நிலச் சீர்திருத்தச் சட்டங்

களைப் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். இச்சட்டங்களோ ''நிலம் ஒருசில பணக்காரர்களின் தனி உரிமையாக மாறுவது கூடாது; நிலம் உழுபவனுக்கே சொந்தமாக்கப்படவேண்டும்'' என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை. இந்தச் சட்டங்களை அமலாக்குவதில் பல நடைமுறைச் சிக்கல்களை நீங்கள் சந்தித்திருக்கலாம். அவைகள் எவை எவை? அவற்றைத் தவிர்க்க எந்த விதிமுறைகளைத் திருத்த வேண்டும்? என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பன பற்றியும் நீங்கள் விரிவாக ஆராய இருக்கின்றீர்கள்.

தமிழ்நாடு குடியிருப்புச் சட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு வீட்டு நிலம் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது. இது ஏழை எளிய மக்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையும் பிடிப்பும் ஏற்படுத்துவதற்குக் கொண்டுவரப்பட்ட சட்டம் ஆகும். இதை விரைவாகவும், செம்மையாகவும் அமல்படுத்துவதில்தான் மாவட்ட ஆட்சியாளர்களாகிய உங்களின் திறமை அடங்கியிருக்கிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழகத்தில் உள்ள தரிசு நிலங்களின் பெரும் பகுதியினை நீங்கள் ஏழை எளிய மக்களுக்குப் பட்டா செய்து கொடுத்திருக்கிறீர்கள். சுமார் 20 ஆண்டுக் காலத்தில் செய்யப்படாத ஒன்றை நீங்கள் செய்து முடித்திருக்கிறீர்கள். நிலமற்ற ஏழை மக்கள் அரசு நிலத்தை ஆக்கிரமிப்புச் செய்துள்ளார்கள் என்ற எண்ணத்தை மாற்றி, இது எனது, என்னுடையது என்ற நம்பிக்கையை அந்த ஏழை எளியவர்கள் மனத்தில் ஏற்றியுள்ளார்கள். இன்னும் மீதமுள்ள தரிசு நிலங்களையும் விரைவிலேயே அடமானம் செய்வதற்கு இனித் தரிசு நிலங்களே இல்லையெனும் நிலையினை இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் உண்டாக்க வேண்டும்.

விவசாயத் துறையிலே நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம். உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறோம். உணவுத் துறையில் நாம் தன்னிறைவை அடைந்துள்ளோம். என்பது எல்லாருக்கும் மனநிறைவு தரும் ஒன்றாகும்.

தீவிரச் சாகுபடித் திட்டங்கள், உயர்ந்த ரக விதைகளைக் கண்டுபிடித்தல் போன்ற ஆராய்ச்சிகள் பெரும்பாலும் நெல்லைப் பொறுத்த வரையில்தான் செய்யப்பட்டு வந்துள்ளன. பருத்தி, நிலக்கடலை, கம்பு, சோளம் போன்ற புன்செய்த் தானியங்களில் நாம் ஓரளவு அக்கறை காட்டியிருக்கிறோம் என்றாலும், நெல்லுக்குக் காட்டிய அளவுக்கு மற்ற தானிய உற்பத்தியில் நமது கவனம் அதிகமாகச் செலுத்தப்படவில்லை. வேளாண்மைத் துறையினர் புன்செய்த் தானிய உற்பத்தியிலும் இனி அதிக அக்கறை காட்ட வேண்டும். அதற்கான திட்டங்களைத் தீட்டி அவற்றைத் தீவிரமாக அமலாக்குவதில் மாவட்ட ஆட்சியாளர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு அதிக அளவில் உற்பத்தியாகும் தானியங்கள் அண்டை மாநிலங்களுக்குக் கடத்தப்படுவதைத் தடுப்பதில் காவல் துறையினரும் உணவுத் துறையைச் சேர்ந்தவர்களும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்.

மழைக் காலங்களில் மூழ்கிப் போகின்ற ஏழை மக்களின் குடிசைகளை எல்லாம் மாற்றி, மாடி வீடுகள் கட்டித்தரும் வகையில் தீவிரமான முயற்சிகளில் குடிசை மாற்று வாரியம் ஈடுபட்டுள்ளது. சென்னையிலுள்ள குடிசைகளை எல்லாம் சீரமைப்பதற்குச் சுமார் 40 கோடி ரூபாய்க்குமேல் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதை ஏழு ஆண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டும் என்ற முனைப்போடு திட்டமிட்டுச் செயல்பட்டு வருவதை யாவரும் அறிவர். மாவட்டத் தலைநகரங்களிலேயும் குடிசைப் பகுதிகள் தோன்றியுள்ளன. அவைகளைச் சீரமைப்பதில் வீட்டு வசதி வாரியம் ஈடுபட்டுள்ளது.

சட்டம் அமைதியைப் பேணிப் பாதுகாப்பதில் தமிழகம் என்றும் தலைசிறந்து விளங்குகிறது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் எனினும், மாணவர்கள் போராட்டமானாலும், விவசாயிகள் கிளர்ச்சி என்றாலும் காவல் துறையினரும் மாவட்ட ஆட்சியாளர்களும் ஏனைய வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் எவ்வளவு முன் எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது என்பது உங்கள் எல்லாருக்கும் தெரியும்.

இம்மாதிரிக் கிளர்ச்சிகளின் போது எப்படியாவது வன்முறைச் செயல்கள் தலைதூக்கி விடுகின்றன. கோரிக்கைகளின் முக்கியத்துவம், நியாயம் இவைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு விடுகின்றன. இத்தகு சூழ்நிலைகளில் நிலைமைகளை நேருக்கு நேர் சந்திக்கும் மாவட்ட அதிகாரிகள் மிகவும் நிதானத்துடன் நடந்துகொள்ளவேண்டி இருக்கிறது. அந்த நிதானத்தைத் தொடர்ந்து கடைபிடித்துச் செம்மையாகப் பணியாற்றுங்கள்.

இன்றும் நாளையும் நடக்க இருக்கும் மாநாட்டில் நீங்கள் பல பொருள்கள் பற்றி விவாதிக்க இருக்கின்றீர்கள். அதில் உங்கள் அனுபவபூர்வமான கருத்துக்களைத் தருவதோடு மக்களின் பிரச்சினைகளை நீங்கள் அணுகும்போது உங்களுக்குள்ள நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் எடுத்துக் கூறி, அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் காண இந்த மாநாடு உதவும் என்ற நம்பிக்கையுடன் அமைகிறேன்.

**[சென்னையில் கடந்த 30—6—72 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்டக் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை.]**

## இந்து அரிசன வகுப்பினர் சிறு தொழில்கள் நடத்த வட்டியில்லாக் கடன் அளிப்பது பற்றி அரசு அறிவிப்பு

அரிசன நலத் திட்டத்தின்கீழ் 1972-73-ஆம் ஆண்டிற்கு இராமநாதபுர மாவட்டத்திலுள்ள சிறு தொழில் செய்யும் இந்து அரிசன வகுப்பினருக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பப் படிவங்களைச் சம்பந்தப்பட்ட வட்ட ஆட்சியாளர்கள் (தாசில்தார்கள்) வட்டார வளர்ச்சி அலுவலர்களிடம் பெற்றுக் கொண்டு மேற்படி மனுக்களை மதுரையிலுள்ள இராமநாதபுர மாவட்ட நல அலுவலருக்கு 30-9-72-க்குள் அனுப்பி வைக்க வேண்டும். மேற்படி விண்ணப்பங்கள் அனுப்பும் பொழுது தாங்கள் செய்து வரும் தொழிலுக்குண்டான உரிமம் பற்றிய விவரங்கள் குறிப்பிட வேண்டும். தொழில் செய்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தையும் குறிப்பிட வேண்டும். மனுதாரர்களில் 22 முதல் 50 வயதிற்குள் உள்ள நபர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். மற்ற விவரங்களை மதுரையிலுள்ள இராமநாதபுர மாவட்ட நல அலுவலர் அவர்களின் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.



# கொய்தவை

தமிழ்நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டத் தினைப்போக்க ரூ. 4 கோடி செலவில்ஒருதிட்டம் தயா ரிக்கப்பட்டுஉள்ளது. தமி ழக அரசு இந்த ஆண்டுத் திட்டத்தில் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்து வதற்காக, ஒரு குறிப் பிட்ட தொகையை ஒதுக் கியுள்ளது.

இது தவிர வேலை வாய்ப்புகளை மேலும் அதிகப் படுத்துவதற்காக, ரூ. 4 கோடியே 38 இலட்சத்து 77 ஆயிரம் செலவில், விசேடத் திட்டத் தைத் தமிழக அரசு தயா ரித்து இருக்கிறது. இந்தத் திட்டத்துக்கு மத்திய அர சின் திட்டக் குழு அனுமதி வழங்கி இருக்கிறது. திட் டத்துக்கான செலவில், பாதித் தொகையைத் தமி ழக அரசும், பாதித் தொகையை மத்திய அர சும் ஏற்கும்.

இதேபோல், கேரளத் திற்கு ரூ. 3 கோடியே 58 இலட்சம் செலவிலும், குஜராத்துக்கு ரூ. 1 கோடியே 81 இலட்சம் செலவிலும், ஒரிசாவுக்கு ரூ. 2 கோடி செலவிலும், உத்தரப் பிரதேசத்துக்கு ரூ. 8½ கோடி செல விலும் திட்டங்கள் தயா ராகி உள்ளன.

இந்த ஐந்து மாநிலங்க ளிலும் சேர்த்து, இந்தத் திட்டங்களினால் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேருக்கு வேலை கிடைக்கும். அதா வது 80 ஆயிரம் தொழி லாளருக்கும் (படிக்காத வர்கள்) 20 ஆயிரம் நிபுணர்களுக்கும் (பொறி யாளர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள் போன் றவர்கள்) வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்படும்

* * *

சென்னைக்கு 26 கி.மீ. தொலைவில் உள்ள செம்ப ரம்பாக்கம் ஏரி மேம் பாட்டுத் திட்டப் பணியை முதல்வர் கலைஞர் அவர் கள் துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் வீராணம் ஏரிக்கு அடுத்தபடியாக இரண்டாவது அதிகப்பாச னம் அளிக்கும் இந்த ஏரியை மேம்படுத்துவதன் மூலம் இப்போது சாகுபடி செய் யப்படும் 10,759 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் வசதி உறுதியளிக்கப்படும். மேலும் சாகுபடி ஆகா மல் விடப்பட்டுள்ள 2,464 ஏக்கர் நிலம் சாகுபடி செய்யும் வாய்ப்பு உள் ளது. இதன் மூலம் சுமார் 7,351 டன் அதிகப் படி உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

கரையில் மேம்பாட்டுப் பணிகள், மறுகால் வழிப் பாதை செப்பனிடுதல், புதிய மறுகால் பாதை வெட்டுதல், நீர் வழங்கும் கால்வாய்களைப் புதிய முறையில் கான்கிரீட் கொண்டு சீர் செய்தல், பூங்காக்கள், புல்தரைகள், மற்றும் உல்லாசப் படகுத் துறைகள் கட்டுதல், உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாக மாற்று தல் ஆகியவை மேம் பாட்டுப் பணிகளில் அடங் கும். இதற்காக ரூ. 75 இலட்சம் செலவில் திட்டம் திட்டப்பட்டுள்ளது.

* * *

இந்தியா முழுவதிலும், மக்கள் 10 இலட்சத் திற்கு மேல் வசிக்கும் நக ரங்கள் 9 உள்ளன. கல் கத்தா நகரில்தான் அதிக மான மக்கள் வசிக்கிறார் கள். கல்கத்தாவில் 70 இலட்சத்து 31 ஆயிரத்து 382 பேர் வசிக்கிறார்கள். அடுத்து பம்பாயில் 59 இலட்சத்து 70 ஆயிரத்து 575 பேர் இருக்கிறார்கள்.

மூன்றாவதாக டெல்லியில் 36 இலட்சத்து 47 ஆயிரத்து 23 பேர் வசிக்கி றார்கள். சென்னை 4-வது இடத்தைப் பெற்றுள் ளது. சென்னையில் 31 இலட்சத்து 69 ஆயி ரத்து 930 பேர் இருக்கி றார்கள். அடுத்து ஐதரா பாத்தில் 17 இலட்சத்து 96 ஆயிரம் பேர்களும், ஆமதாபாத்தில் 17 இலட்சத்து 41 ஆயிரம் பேர் இருக்கிறார்கள்.

பெங்களூரில் 16 இலட் சத்து 53 ஆயிரத்து 779 பேர் இருக்கிறார்கள். கான்பூர், பூனா ஆகிய நகரங்களிலும் 100 இலட் சத்திற்கு மேலான மக்கள் இருக்கிறார்கள்.

இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 54 கோடியே 79 இலட்சத்து 49 ஆயிரத்து 809 பேர் களில், ஆண்கள் 28 கோடியே 37 இலட்சத்து 36 ஆயிரத்து 614 பேர். பெண்கள் 26 கோடியே 40 இலட்சத்து 13 ஆயி ரத்து 195 பேர்.

மொத்தமுள்ள மக்கள் தொகையில் 44 கோடி பேர் கிராமப் பகுதிகளில் வசிக்கிறார்கள். 10 கோடிப் பேர் நகரங்களில் வசிக்கிறார்கள்.

இந்தியாவின் மக்கள் தொகையான 54 கோடியே 79 இலட்சத்து 49 ஆயிரத்து 809ல்; இந்து மக்கள் 45 கோடியே 32 இலட் சத்து 92 ஆயிரத்து 86 பேர். முஸ்லீம்கள் 6 கோடியே 14 இலட்சத்து 17 ஆயிரத்து 934 பேர். கிறித்தவர்கள் 1 கோடியே 42 இலட்சத்து 23 ஆயி ரத்து 382 பேர்.

கடந்த 10 ஆண்டுகளில் இந்துக்களின்மக்கள்தொகை 83 சத வீதத்திலிருந்து 82 சத வீதமாகக் குறைந்து விட்டது. முஸ்லீம்கள் மக்கள் தொகை 10 சத வீதத்தில் இருந்து 11 சத வீதமாக உயர்ந்துள்ளது. கிறித்தவர்களின் தொகை யில் எந்தவித மாற்றமும் இல்லை.

# வேளாண்மைத் துறையில்

# வியத்தகு சாதனை!

வேளாண்மைத் துறையிலே இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை உள்ளபடியே யார் யார் ஆதரிக்கவேண்டுமோ அவர்கள் எல்லாரும் ஆதரித்து நல்ல கருத்துக்களையும் சொல்லியிருக்கிறார்கள். சிலர் வழக்கப்படி குறைகளையே சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பொதுவாகப் பார்க்கின்ற போது தெரிகிறது. இந்தத் துறையைச் செம்மைப்படுத்த வேண்டுமென்று நீண்டநாள் திட்டமிட்டு, அதன் தொடர்பாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பசுமைப் புரட்சித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதற்கு இப்போது இருக்கின்ற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உயரிய விதைகளை எல்லாம், ஐ.ஆர். 8, கருணா போன்ற மிகு பயன் தரக்கூடிய விதைகளை எல்லாம் கண்டுபிடித்து, அவைகளைப் பயிரிடச் செய்து, போதிய கடன் உதவிகளையும் செய்து வருகிறார்கள்.

1966—67-ல் 66 இலட்சம் ஏக்கரில் 37 இலட்சம் டன் அரிசி உற்பத்தி ஆகியிருக்கிறது. அதைப்பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ''எங்கள் ஆட்சிக் காலத்தில் 37 இலட்சம் டன் உற்பத்தி செய்தோம்; இவர்கள் ஆட்சியில் 54 இலட்சம் டன்தான் உற்பத்தி செய்திருக்கிறார்கள்'' என்று சொல்வார்கள் என நினைத்தேன். யாரும் சொல்லவில்லை. அவர்கள் ஆட்சியில், 20 ஆண்டுக் கால ஆட்சியில் 66 இலட்சம் ஏக்கரில் 37 இலட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறார்கள். ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்த 5 ஆண்டுக் காலத்தில் 54 இலட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறோம். இதற்கு என்ன சொல்வது என்பதே தெரியவில்லை. அந்த முயற்சியில் ஈடுபட்டவர்கள் யார்? விவசாயிகளுக்கு என்று என்ன ஊக்கம் தந்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் உணர்ந்து பார்க்க வேண்டும். விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து அவர்கள் உற்பத்தியில் தீவிரமாக ஈடுபடுவதற்கு ஏற்ற வகையில் ஊக்கமளித்திருக்கிறோம். உற்பத்தியை இந்த அளவுக்குப் பெருக்குவதற்கு ஏற்றவகையில் அவர்களை உற்சாகப்படுத்தியிருக்கிறோம். கடன் கொடுத்தோம் என்று சொல்லும்போது, கொடுத்த கடனை வசூலித்தீர்களா என்று கேட்பார்கள். கடனைக் கொடுத்துவிட்டு, அதே மாதிரி ஒழுங்காக, விவசாயிகளுக்கு எந்தவிதத் தொந்தரவும் இல்லாமல் திருப்பி வாங்கியிருக்கிறோம்.

இன்றைக்கு நமது மாநிலத்திலே, தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற மத்திய வங்கி, சிறந்த முறையில் கடன் கொடுத்து, நல்ல முறையிலே பாக்கி இல்லாமல் உரிய காலத்தில் கடனை வசூலித்திருக்கிறது என்பதற்காக முதல் பரிசு வாங்கியிருக்கிறது. கடன் பெற்றவர்களும் உற்சாகத்தோடு கடனைத் திருப்பிக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு வங்கிகளும், விவசாயிகளும் ஒரு குடும்பம்போல் செயல்பட்டு வருகிறார்கள். விவசாயிகள் சிறப்பான நல்வாழ்வு வாழ்கிறார்கள். அதனால்தான் 1971-லே சிறப்பான தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் தஞ்சை மாவட்டத்தைப் பற்றியும், விவசாயிகளைப் பற்றியும் குறிப்பிடுவதால் தஞ்சை மாவட்டத்தைப்பற்றி மட்டும் பேசுகிறேன் என்று யாரும் நினைக்க வேண்டாம்.

ஊரிலேனும் நாட்டிலேனும்
உலகிலேனும் எண்ணினால்
நீர்நிறைந்த கடலையொக்கும்
நேர்உழைப்ப வர்தொகை
நீர்மிதந்த ஓடமொக்கும்
நிறைமுதல்கொள் வோர்
தொகை
நேரிற்சூரை மோதுமாயின்
தோணிஓட்டம் மேவுமோ?

என்ற கவிதை என் நினைவுக்கு வருகிறது. தஞ்சை மாவட்டம் இன்று அந்த நிலையில் இருக்கிறது. அங்கே இருக்கின்ற முதலாளிகள் ஓடம்போல் இருக்கிறார்கள். அந்த ஓடத்தை அடித்துச் செல்லுகின்ற சூரையாகவே இந்த திட்டங்கள் அமைந்திருக்கின்றன.

20, 25 ஆண்டுக் காலமாகப் போராடினார்கள். அந்தப் போராட்டங்களின் வாயிலாக, இடைக்காலத்தில் யாராலும் செய்ய முடியாததை இன்றைக்கு நாங்கள் செய்து காட்டியிருக்கிறோம்.

விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்கு அரசு பல வகையில் உதவி செய்திருக்கிறது. ஆடுதுறை 27 போட்டால் அதற்கு ரூ. 350 ஐ.ஆர். 8 போட்டால் அதற்கு 380 ரூபாய் என்பதாக எந்த அளவுக்குக் கடன் உதவியைச் செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்திருக்கிறது.

இந்த ஆட்சி வந்த பிறகுதான் மாவட்ட ஆணையாளருக்கு உத்திரவிட்டு 4 படி கூலியை 6 படியாக உயர்த்தினார்கள். ஒரு விவசாயி, அவன் மனைவி இருவருமாக 8 கலம் அறுத்தால் முன்பு 32 படி கூலி வாங்கினார்கள் என்றால் இன்றைக்கு 48 படி கூலியை மனக்களிப்போடு வாங்கிப் போகிறார்கள். விவசாய மக்களிடையே இன்றைக்கு உற்சாகம் இருக்கத்தான் செய்கிறது.

பொதுவாக நிலப்பட்டா முந்திய ஆட்சியில்-20 ஆண்டுகளில் கொடுக்கப்பட்டது ஒரு இலட்சத்துப் பதினைந்தாயிரம்தான். ஆனால், கடந்த ஐந்து வருடங்களில் நம்முடைய அரசு வழங்கியுள்ள பட்டாக்கள் ஐந்து இலட்சமாகும். தஞ்சை மாவட்டத்தில் 1,861 ஏக்கரா மட்டும் நிலமற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது முந்திய ஆட்சியில். ஆனால், இந்த அரசு 27,555 ஏக்கராக்களைக் கொடுத்திருக்கிறது.

27 ஆயிரம் பேர்களுக்கு மேல், ஒரு குடும்பத்திற்கு உச்சவரம்பாக 60 ஸ்டாண்டார்டு ஏக்கரா வைத்துக்கொள்ளலாம் என்று இருந்ததை மாற்றி 40 ஸ்டாண்டர்டு ஏக்கரா என்பதோடு இன்றைக்கு 15 ஸ்டாண்டர்டு ஏக்கராவாகக் குறைத்திருப்பது இந்த அரசு தான். அதுமட்டுமல்ல. 81-வது பசலிக்கும் வரி கட்டிவிட்டால் பாக்கியிருந்த கடனை எல்லாம் வஜா செய்வதற்கு முன்வந்திருப்பது நம்முடைய அரசு. இப்படி விவசாயம், விவசாயப் பெருங்குடி மக்கள் ஆகியவர்களின் மீது அக்கறை கொண்டு இந்த அரசு ஆற்றி வருகிற நற்பணிகளை எதிர்க்கட்சித் தலைவர்கள் பாராட்டியிருந்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

உரத்தைப் பற்றிச் சொன்னார்கள். நெய்வேலியில் கூட ஒரு நாளைக்கு 200 டன் உற்பத்தி செய்து தருவதாக இருந்தது. வேலை நிறுத்தம் காரணமாக ஒரு நாளைக்கு 120 டன் உற்பத்தி செய்ய முடியவில்லை. யுத்தம் வந்த காரணத்தினால் கப்பல்கள் வருவதும் கடுமையாகிறது. அதன் காரணமாக நமக்கு வரவேண்டிய உரம் 60 சதவீதம் தான் வந்தது. 40 சதவீதம் கிடைக்காமல் போய் விட்டது. நமக்குத் தேவையான உரத்தை எந்தவகையிலும் பெற வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கழகத்தால் தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடியில் பாமினி உரத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. கிடைக்கின்ற உரத்தை நல்ல முறையில் விவசாயிகளுக்குக் காலாகாலத்தில் கிடைப்பதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னமும் எல்லாரும் ஒத்துழைத்தால் விவசாயத்துறை நல்ல முறையில் முன்னேறி-உணவுப் பிரச்சினையில் வெற்றி கண்டு இன்னும் பல நற்பணிகளை ஆற்றுவதற்கு வசதி ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் தங்கள் ஒத்துழைப்பை அளித்து, விவசாயத் துறையை முன்னேற்ற ஊக்கம் அளிக்க வேண்டும், ஆதரவை நல்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பூச்சிமருந்தைப் பொறுத்தவரையில் 1970—71-லே 352 இலட்சம் ரூபாய்க்கு மருந்து வாங்கித் தெளித்திருக்கிறோம். 1971—72-லே 480 இலட்சம் ரூபாய் அளவிற்கு மருந்து வாங்கிக் கொடுத்திருக்கிறோம். இருந்தாலும் கூட, அது சரியில்லை. இந்த மருந்து சரியில்லை என்று சொல்கிறார்கள். இந்தியாவில் இருக்கிற கம்பெனிகளின் நிலைமை எல்லாருக்கும் தெரியும். எந்த அளவிற்கு நாம் விழிப்பாக இருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு வேண்டிய முயற்சிகளை நாம் செய்கிறோம்.

அடுத்தபடியாக, உருளைக் கிழங்கைப் பற்றிச் சொன்னார்கள். ஒரூரில் ஏக்கருக்கு 750 ரூபாய் என்றும் நீலகிரியில் ஏக்கருக்கு 900 ரூபாய் என்றும் வெங்கடசாமி அவர்கள் சொன்னார்கள். உருளைக்கிழங்கு நல்ல முறையில் பயிர் செய்யப்படுகின்றன. நல்ல முறையில் அபிவிருத்தி செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

விதைப்பண்ணைகளில் நட்டம் வருவதாகவும், அந்த நட்டத்தை ஈடு செய்ய வேண்டும் என்றும் சொன்னார்கள். அங்கு இலாபம்தான்கிடைத்திருக்கிறது. 1970—71-லே 10 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைத்து இருக்கிறது. 1971—72-ல் 14 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. இலாபம் கிடைத்திருக்கிறதே தவிர நட்டம் என்று சொல்வது சரியில்லை. நீலகிரி விதைப்பண்ணையைப் பொறுத்தவரையிலும் இலாபம் கிடைத்திருக்கிறது.

பருத்தி உற்பத்தியைப் பற்றி-அது சரியான, தீவிரமான முறையில் நடவடிக்கை எடுக்கவில்லையென்று பலர் சொன்னார்கள். கோவில்பட்டி, மணப்பாறை, திருப்பூர் ஆகிய மூன்று இடங்களிலும், இராமநாதபுரம் பகுதியிலும் தீவிர அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. சாகுபடித் திட்டத்தின்கீழ் சிறப்பான



வேளாண்மைத் துறை அமைச்சர்
மன்னை நாராயணசாமி

ஆராய்ச்சி வேலைகள் செய்யத் திட்டம் போடப்பட்டுள்ளது. 2 இலட்சத்து 50 ரூபாய் செலவில் தீவிர திட்டம் செயல்பட வழி செய்யப்பட்டுள்ளது. கோவில்பட்டியில் பண்ணையை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் நடந்து வருகின்றன.

மூன்று இலட்சத்து முப்பதாயிரம் ஏக்கரில் கரும்பு பயிராகின்றது. கரும்புக்குச் சரியான முறையில் பலன் கிடைக்கவில்லை. சரியான அபிவிருத்தி கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். கரும்பைப் பொறுத்தவரையில் புதிய புதிய இனங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். எந்த ரகக் கரும்பை எங்கே பயிரிட்டால் நல்ல மகசூல் கிடைக்கும் என்பதை அறிய வேண்டும். எந்த ரகம் எந்த மண்ணுக்கு ஏற்றதாக இருக்கிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு குழுவை ஒவ்வொரு பகுதிக்கும் அனுப்பி என்னென்ன நிலைமைகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிய வேண்டும். கரும்பின் தரம், மண்ணின் ரகம், தன்மை ஆகியவற்றை ஆராய்ச்சி செய்ய வேண்டும். ஆகவே, அடுத்த ஆண்டுக்குள்ளாக எந்தெந்த ரகம் எந்தெந்த இடங்களுக்குப் பொருந்தும் என்பதைக் கண்டு பிடித்துச் சொல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். மதுராந்தகம், ஆம்பூர், ஆப்பக்கூடல், முண்டியம்பாக்கம், பெண்ணாடம், புகளூர் அலங்காநல்லூர் ஆகிய இடங்களில் கரும்பு ஆராய்ச்சிக்கூடங்கள் ஏற்பட வழி செய்யப்பட்டிருக்கின்றன. விரைவிலே அது செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கரும்பின் விலையைப்பற்றிச் சொன்னார்கள். நம்முடைய கரும்புக்கு 80 ரூபாய் 85 ரூபாய்தான் கிடைக்கிறது என்று திரு கோவைச் செழியன் அவர்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டில் வளரும் கரும்பில் சர்க்கரைச்சத்து அதிகமாக இல்லாத காரணத்தால் விலை குறைகிறது. மற்ற மாநிலங்களில் பார்த்தால் கரும்பில் சர்க்கரைச் சத்து மிகுந்து காணப்படுகிறது. பீகார் மாநிலத்தில் 9·01 சதவீதம் சர்க்கரைச்சத்து கரும்பில் இருக்கிறது மகாராஷ்டிரத்தில் 11·25 சதவீதம் சர்க்கரைச் சத்து இருக்கிறது. குஜராத்தில் 10·27 சதவீதம் இருக்கிறது. பஞ்சாபில் 8·57 சதவீதம் இருக்கிறது. ஆந்திர

மாநிலத்தில் 10·21 சதவீதம் சர்க்கரைச் சத்து இருக்கிறது. மைசூரில் 10·56 சதவீதம் இருக்கிறது. மத்தியப் பிரதேசத்தில் 9·29 சதவீதம் இருக்கிறது. கேரளாவில் 8·68 சதவீதம் இருக்கிறது. மற்றும் உத்தரப் பிரதேசத்தில் 9·16 சதவீதம் இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் விளையும் கரும்பில் 7·87 சதவீதம்தான் சர்க்கரைச் சத்து இருக்கிறது. 1970–71லே 8·99 சதவீதமாக சர்க்கரைச் சத்து இருந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே விலையை ஏற்றுவது என்பது சரியல்ல. மேலும் சர்க்கரை உற்பத்தி செய்கிற ஆலைகள் அநேகமாகக் கூட்டுறவுத் துறையில்தான் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, பணத்தை உயர்த்துவதற்கான நிலைமையில் கரும்பின் தரம் இல்லை. தரமான கரும்பை உற்பத்தி செய்து, சர்க்கரைச் சத்தை அதிகப்படுத்தினால் அந்த நிலைமையைப்பற்றி எண்ணிப் பார்க்கலாம்.

விவசாய அபிவிருத்திக்காக, விவசாயம் சம்பந்தப்பட்ட வித்துக்களை ஆர்ாயவும், மற்றவற்றிற்கும் 1972–73-ஆம் ஆண்டுக்காக 1 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. விவசாய அபிவிருத்திக்காக, அதற்கான வேலைகளைக் கவனிக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, 1972–73-லிருந்து செயல்பட்டு விவசாய அபிவிருத்தி வேலைகள் சிறப்பாக இருக்க வழிவகைகள் செய்யப்படும். திறமையான குழு ஒன்று போட்டு, எந்தெந்த இடத்தில் எந்தெந்தச் சாகுபடி செய்யலாம், அங்கே முதலிலே தண்ணீர் கிடைக்குமா என்பதை எல்லாம் அறிவதற்காக ஒரு பம்பு செட் அமைத்துத் தண்ணீர் கிடைக்குமா என்பதையும் ஆராயும்.

புன்செய் பயிர் செய்கிற இடங்களில் நன்செய் பயிர் செய்வதால் தண்ணீர் அதிகமாகத் தேவைப்படுகிறது. அந்த மாதிரி செய்கிற இடங்களில் தேவையான தண்ணீர் கிடைக்குமா? என்பதையெல்லாம்ஆராய நிபுணர் குழு ஒன்று அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன்.

மஞ்சள் பற்றிச் சொன்னார்கள். அதற்காக ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம் ஆகிய இடங்களில் முனைப்புத் திட்டம் போடப்பட்டு, ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இது ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறது. ஆண்டில் அதிகமான அளவுக்குக் கெடாமல் இருக்க வழிவகைகள் விரைவிலே காணப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பூச்சி மருந்து தருகிறார்கள். இப்போது நெல்லுக்குக் கூடப் பூச்சி மருந்து கொடுக்கிறார்கள். எந்த ரகத்திற்கு எந்த மருந்து தெளிப்பது என்று பார்ப்பதில்லை. ஒரு பகுதியில் உபயோகிக்கும் மருந்தை இன்னொரு பகுதியில் இருக்கும் பயிருக்கு அடித்தால் கூட சரியாகச் வேலை செய்வதில்லை. பூச்சி மருந்துகளை ஏரியல் ஸ்ப்ரே மூலமாகச் செய்கிறார்கள். சிலர் அந்த முறை சரியில்லை என்கிறார்கள். விசைத் தெளிப்பான் மூலமாகச் செய்ய வேண்டும் என்று எல்லாரும் சொல்கிறார்கள். பூச்சி மருந்துகளை விசைத் தெளிப்பான் மூலமாகச் செய்யும் யோசனை இருக்கிறது. ஒரு யூனியனுக்கு 3 அல்லது 4 விசைத் தெளிப்பான்கள் இருந்தால் போதும் என்று சொன்னார்கள். குறைந்தது ஒரு யூனியனுக்கு 30—ஆவது வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி இருந்தால்தான் யூனியன் பூராவுக்கும் சப்ளை செய்யப்படும். புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட பயிர்களுக்கு நாம் நைட்ரஜன் உரம் போடுகிறோம். அதன் காரணமாகப் பயிர், பச்சை நிறமாக வந்து விடுகிறது. அதன் காரணமாக பூச்சி எளிதில் வந்துவிடுகிறது. சீக்கிரமாகப் பச்சை வந்துவிடுகிற காரணத்தால் எவ்வளவு வேகமாகப் பரவ முடியுமோ அவ்வளவு வேகமாகப் பூச்சிகள் பரவுகின்றன. ஆகவே, மூன்று, நான்கு விசைத் தெளிப்பான்களை வைத்துக் கொண்டிருப்பதால் பிரயோஜனம் இல்லை. அதை வைத்துக்கொண்டு ஒரு நானகைந்து ஏக்கர்களுக்குத்தான் மருந்து தெளிக்க முடியும். நாம் ஒரு பக்கம் மருந்து தெளித்துக் கொண்டிருக்கும் போது இன்னொரு பக்கத்தில் பூச்சி பரவிக்கொண்டே போகும். ஆகாய விமானம் மூலமாகவும், ஹெலிகாப்டர்கள் மூலமாகவும் மருந்து தெளிப்பதால் ஒரே சமயத்தில் ஒரு நாளில் மருந்து தெளிக்க முடியும். ஒரே சமயத்தில் பூச்சிகளும் அழியும். அப்போது பூச்சிகள் எல்லாம் இறந்துவிடும்.

ஒரு விசைத் தெளிப்பான் விலை 700 ரூபாய் ஆகிறது. அதற்கு ஒரு நாளைக்குச் செலவு 4 ரூபாய் ஆகிறது. அதற்காக ஒவ்வொரு யூனியனிலும் விசைத் தெளிப்பான் ரிப்பேர் செய்வதற்காக ஒரு மெகானிக் போட வேண்டும். அதற்கான ஷெட்டை மாவட்ட அளவில் வைப்பதா, அல்லது யூனியன் அளவில் வைப்பதா என்பதை ஆராய்ச்சி செய்து, அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய இருக்கிறோம்.

உறுப்பினர்கள் எல்லாரும் பல பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அவையெல்லாம் எந்த எந்த அளவிலே விரைவிலே கவனிக்கப்பட வேண்டுமோ அந்தந்த அளவிலே விரைவில் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மக்கள் நன்மைக்காக அவர்கள் சொன்னதையெல்லாம் நான் கவனிப்பேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[தமிழ்நாடு சட்டமன்றத்தில் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் மீது 25—3—1972ல் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் ஆற்றிய உரை.]

## கிராமப் பணிகளில் பெண்கள்

தமிழ் நாட்டில் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் 'முக்கிய சேவகி' யாகப் பல பெண்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் கிராமங்கள் தோறும் சென்று பணிபுரிய வேண்டும்.

சில குறிப்பிட்ட வட்டாரங்களில் மட்டும் இந்தப் பெண்களுக்கு 'ஸ்கூட்டர்' வழங்கத்தீர்மானிக்கப்பட்டு உள்ளது. இதற்காக 'ஸ்கூட்டர்' ஓட்டிப் பழகுமாறு அவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது.

அதே சமயம் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பணிபுரியும் 'கிராமசேவகிகள்' என்ற பெண் சிப்பந்திகளுக்குச் சில குறிப்பிட்ட வட்டாரங்களில் மட்டும் சைக்கிள்களை வழங்க அரசு தீர்மானித்து உள்ளது.

# அறநிலையத் துறையில்
# அரசு செய்யும் பணிகள்

அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் பல உறுப்பினர்களும் நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். நாங்கள் சென்ற ஆண்டு செய்திட்ட மிக முக்கியமான காரியங்களில் ஒன்று சாதி வித்தியாச உணர்ச்சியை நீக்க வேண்டும் என்பது. சமூகத்திலே சாதி மத வேற்றுமைகளை ஒழிக்க வேண்டும். அதற்கு முதற்படியாக இறைவன் முன்னிலையில் சாதி வித்தியாசத்தை ஒழிக்க வேண்டுமென்று திட்டமிட்டு, எல்லாச் சாதியினரும் அறங்காவலராக இருக்கலாம்.— எல்லாச் சாதியினரும் அர்ச்சனை செய்யலாம் என்ற நிலையைக் கொண்டு வந்தோம். அதை எதிர்த்துச் சிலர் உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்தார்கள். அரசாங்கத்தினுடைய சட்டம் செல்லும் என்று உச்ச நீதி மன்றத்திலே தீர்ப்பு வழங்கப் பட்டிருக்கிறது. இப்படிப் பட்ட ஒரு நல்ல சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை மாண்பு மிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள்.

அடுத்து, கோயில்களில் தமிழ் வழிபாட்டு முறைகளைப் பற்றிச் சொன்னார்கள். எல்லாக் கோயில்களிலும் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்று அறநிலையத்துறை ஆணையர் அறிவுரை வழங்கியிருக்கிறார். அதேமாதிரி தமிழில் அர்ச்சனை நடைபெறுகிறது. யாராவது விரும்பிக் கேட்டால் சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யலாம் என்று அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

எங்கெங்கே பரம்பரை அறங்காவலர்கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் கூடுதல் அறங்காவலர்களை நியமிக்கலாம் ; நிருவாக அதிகாரிகளையும் போடலாம் என்றும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சைக் கோயில் மட்டுமல்லாமல், அதைப்போன்ற நூற்றுக் கணக்கான பழம் பெருமை மிக்க கோயில்கள் மத்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சிப் பிரிவுக்கு உட்பட்டதாக இருக்கின்றன. அவைகளை எல்லாம் பாதுகாக்க வேண்டும்—திருப்பணி செய்ய வேண்டும் என்று நாம் தீவிர முயற்சி எடுத்துள்ளோம். மத்திய அரசைப் பலமுறை கேட்டிருக்கிறோம். அவர்கள் இன்னும் நமக்கு அனுமதி கொடுக்கவில்லை. அதனால் நாளுக்குநாள் அந்தக்கோயில்கள் இடிந்து போகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கங்கை கொண்ட சோழபுரம், குடுமியாமலை அங்கெல்லாம் இருக்கின்ற கோயில்களும், இவை போன்ற ஏராளமான கோயில்களும் மிகவும் முக்கியமான கோயில்களாகும். அவையெல்லாம் மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றன. அதனால் அவர்கள் அனுமதி இல்லாமல் நம்மால் திருப்பணிகளைச் செய்யமுடியவில்லை. அவைகளில் குறிப்பாகக் குடுமியாமலையில் இருக்கின்ற கோயில் மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

குடுமியாமலைக் கோயில் கல்வெட்டுகளில் நம்முடைய தமிழ்நாட்டின் இராகங்கள்-தமிழ் மொழியில் பண்கள் என்று அழைக்கப்படும்-பல வகைப் பண்கள் தமிழகத்திலே இருந்தன என்பதற்கு அந்தக் கல்வெட்டுகள் சான்றுகளாக இருக்கின்றன.


அறநிலையத் துறை அமைச்சர்
மு.கண்ணப்பன்

வடமொழியில் கரகரப்பிரியா என்பது தமிழில் படுமலைப்பண் என்று இருந்தது. வடமொழியில் கல்யாணி என்னும் இராகம் தமிழில் அரும்பாலைப் பண் என்று இருந்தது. வடமொழியில் அரிகாம்போதி என்பது தமிழில் கோடிப்பாலைப்பண் என்று இருந்தது. வடமொழியில் பைரவி என்பது தமிழில் விளரிப்பாலைப்பண் என்று இருந்தது. வடமொழியில் தோடி என்பது தமிழில் செவ்வழிப் பாலைப்பண் என்று இருந்தது. கடலைக் கண்டால் ஒரு பாடல், கரியைக் கண்டால் ஒரு பாடல், தளிரைக் கண்டால் ஒரு பாடல், காதலியைக் கண்டால் ஒரு பாடல் இப்படி இன்ப உணர்ச்சியை இசையில் கண்டான் தமிழன். இப்படி ஏராளமான பாடல்கள் இருக்கின்றன. அவைகளுக்கு எல்லாம் இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கிறது. குடுமியாமலைக் கோயில் கல்வெட்டுகளில் அவைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறது. ஆனால், மத்திய அரசு தடுத்துக் கொண்டிருக்கிறது.

பள்ளிக்கூடம் ஏற்படுத்த வேண்டும் என்றும் பள்ளிக்கூடக் கட்டடத்திற்குப் பத்தாயிரம் ரூபாய் வேண்டுமென்றும் இரண்டு மாதங்களுக்கு முன்பு அதற்குச் சம்மதித்து, தருவதற்கு இசைந்தார்கள். உயர்நிலைப்பள்ளி ஏற்படுத்துவதற்கும் முயற்சி மேற்கொண்டிருக்கிறோம்.

அழகர் கோயிலுக்குச் சாலை போடவேண்டும் என்றும் இங்குச் சொல்லப்பட்டது. பழமுதிர்ச்சோலை மலைப் பகுதியில் இருக்கிற இடமாகும். பழமுதிர்ச்சோலைக்குச் சாலை போடும் திட்டம் தாமதப்பட்டு வந்தாலும் 5 இலட்சம் ரூபாய் செலவில் அதைத் துவங்க இருக்கிறோம். அந்தக் கோயிலில் அதற்குப் போதுமான நிதி இல்லை. இரண்டு இலட்சம்தான் இருக்கிறது. வேறு கோயில்களில் இருந்து பணத்தை மாற்றி அந்தக் கோயிலுக்குக் கடனாகக் கொடுத்தால் பின்னர் அதைத் திருப்பித் தந்து விடுவதாக அறங்காவலர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது பற்றியும் அந்தத் துறை அதிகாரிகள்

நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அழகர் கோயில்களில் உள்ள சிலைகள் திருட்டுப் போவது பற்றி திரு சௌடி சுந்தர பாரதியும், மற்றவர்களும் சொன்னார்கள். அத்திருட்டு நாளுக்கு நாள் அதிகப்பட்டு வருகிற காட்சியைப் பார்க்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் பல இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புடைய சிலைகள் களவு போனதை நாம் அறிவோம். இதன் காரணமாகத்தான் அறநிலையத்துறை அதிகாரிகளுக்கு இது சம்பந்தமாக ஒரு ஆணைவிடப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு கோயிலிலும் உள்ள சிலைகளின் எண்ணிக்கை, அவற்றின் தனித்தனி மதிப்பு, உயரம் எடை, ஆகியவை பற்றி எல்லாம் ஒரு மதிப்பீடு செய்து அதன் நகல்களை எல்லாம் அந்தந்த வட்டாரத்தில் உள்ள காவல் துறையினருக்கும், அறநிலையத்துறை அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கவேண்டும் என்று உத்திரவு போட்டிருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் அதுபோன்ற சிலைகளைப் பாதுகாப்பாக வைக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். நல்ல பாதுகாப்பு இல்லை என்கிற கோயில்களில் உள்ள சிலைகளை எல்லாம் எடுத்து அந்த மாவட்டத்திலேயே நல்ல பாதுகாப்புடைய இரண்டு இடங்களில் குறிப்பாகத் தஞ்சை சரஸ்வதி மகாலில் ஒன்று. அடுத்து திருவாரூர் தியாகராசர் கோயிலில் வைக்கலாமா என்றும் யோசிக்கப்பட்டு வருகிறது. கூடுமான வரையில் எந்த எந்த வகைகளில் எல்லாம் சிலைத் திருட்டைத் தடுக்கலாம் என்பது நல்ல முறையில் யோசிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறநிலையங்களுக்கு என்று தனியாக ஒரு வாரியத்தையே அமைத்துவிட வேண்டுமென்று அம்மையார் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே வாரியம் தான் அமைக்கப்பட்டிருந்தது. 1925-ல் அமைக்கப்பட்ட வாரியம் 1951 வரை செயல்பட்டிருக்கிறது. நிருவாகம் அப்போது சரியான முறையில் நடக்கவில்லை என்பதற்காகத் தான் 1951-ல் இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை கொண்டுவந்தார்கள். 1968-ல் அந்தச் சட்டத்தையும் மாற்றி அமைத்துக் கொண்டிருக்கிறோம். வாரியத்தை எடுத்து விட்டு இதுபோன்ற அமைப்பைக் கொண்டு வந்த காரணத்தினால் நிருவாகம் நல்ல முறையில் நடைபெறுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கோயில்களின் வருமானம் மூன்று கோடியே தொண்ணூற்றெட்டு இலட்சம் என்றால், இந்த ஆட்சியில் கோயில்களின் வருமானம் ஐந்து கோடியே ஐம்பத்தைந்து இலட்சமாகப் பெருகியிருக்கிறது. அவர்கள் காலத்தில்தான் கோயில்களில் பெருச்சாளிகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தன. அந்தப் பெருச்சாளிகளைக் கண்டுபிடித்து ஒழிப்பதில்தான் இந்த அரசு தீவிரக் கவனம் செலுத்திவருகிறது. அதற்கான தனி அலுவலர்களைப் போட்டு இதுவரை 32,540 கோயில்களின் சொத்துக்களைப் பல பெருச்சாளிகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இதுவரை அந்தத் தனி அதிகாரி கண்டு பிடித்திருப்பது மட்டும் 1,59,322 ஏக்கராக்களாகும். அவர்கள் பணியைப் பார்க்கிற போது இன்னும் சில மாதத்துக்குள் தொடர்ந்து பணியாற்றினால் மேலும் பல ஆயிரக் கணக்கான நிலங்களைக் கண்டு பிடித்துவிடுவார்கள். கண்டு பிடிக்கப்பட்ட நிலங்களை அறநிலையத்துறை ஆட்சியின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படுகின்றன.

கோயில்களின் உபரி நிதியில் இருந்து பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி போன்றவைகளைக் கட்டுவதைவிட வருமானம் இல்லாத கோயில்களின் திருப்பணி வேலைகளைக் கவனிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அவர்களுடைய காலத்தில் உபரி நிதியிலிருந்து ஒரு கோடியே பத்தொன்பது இலட்சம்தான் திருப்பணிக்காகச் செலவிடப் பட்டது. ஆனால் இந்த ஆட்சியில் 1971-ல் மட்டும் இரண்டு கோடியே பத்தொன்பதுஇலட்சம் ரூபாய் திருப்பணிக்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. அதோடு அப்போது 334 கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டன என்றால் இப்போது 698 கோயில்களில் திருப்பணி நடந்திருக்கிறது. பக்தர்கள் என்று பறை சாற்றிக் கொண்டு முன் வருகிறவர்களைவிட இந்த அரசு நல்ல முறையில்தான் கோயில் நிருவாகங்களைக் கவனித்து வருகிறது என்பதற்காகவே இவற்றைச் சொல்கிறேன்.

கோயில் என்றால்—சரித்திர சம்பந்தமான சான்றுகளை எல்லாம் பார்த்தால் அந்தக் கோயில் மருத்துவ மனையோடு, கல்விச் சாலையோடு, நீதி மன்றத்தோடு இணைந்த ஒன்றாகத்தான் இருந்திருக்கிறது. அதன் காரணமாகத்தான் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றும் சொன்னார்கள். எதிர் காலத்தில் இப்படிப்பட்ட நிலைமைகள்தான் நமது கோயில்களில் உருவாக வேண்டும் என்கிற அடிப்படையில் நாம் செயல்படுகிறோம்.

ஏழை எளிய மக்கள் எளிய முறையிலும், குறைந்த செலவிலும் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்கிற அடிப்படையில் கோயில்களின் சார்பில் திருமண மண்டபங்களைக் கட்டியிருக்கிறோம். மிகவும் ஏழைகளாயிருப்பவர்கள், கையிலே காசில்லாதவர்கள், 'தாங்கள் மிகவும் ஏழைகள்' என்பதற்கான சான்றுகளை தக்க அதிகாரிகளிடத்திலிருந்து பெற்றுத் தருவார்களானால் அவர்களுக்கு இலவசமாகவே திருமணங்களைச் செய்துகொடுப்பதாக இருக்கிறோம். மேலும், அந்தக் கோயிலிலிருந்து 100 அல்லது 150ரூபாய் வரையிலும் செலவு செய்து அந்தத் திருமணத் தம்பதிகளுக்கு துணிமணிகள்போன்றவற்றையும் மாங்கல்யம் போன்றவற்றையும் வாங்கிக் கொடுத்து, திருமணத்தை நடத்தி வைக்க வேண்டுமென்கிற நல்ல திட்டத்தைச் செய்ய இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, முதியோர்களுக்காக ஒரு திட்டம். நாம் இப்பொழுது 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 'ஓல்ட் ஏஜ் பென்ஷன்' கொடுக்கிறோம். எல்லாருக்கும் இது கிடைக்காது. அப்படிப்பட்டவர்களைப் பிச்சைக்காரர் விடுதியிலும் சேர்க்க இயலாது. ஆகவேதான், எந்தெந்த கோயிலில் உபரி நிதி இருக்கிறதோ, அதைக் கொண்டு வயதான முதியவர்களுக்காக முதியோர் இல்லங்களை ஏற்படுத்துவது என்கிற முடிவினை எடுத்திருக்கிறோம். நான் பலருக்கு பதில் சொல்ல முடியாமல் காலம் குறுக்கே இருப்பதால், அவர்களுடைய கருத்துக்களை ஏற்று, நிறைவேற்றித்தரத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்து, இந்த அளவில் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**[27-3-72-ல் சட்டமன்றத்தில் அறநிலையத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு அற நிலையத்துறை அமைச்சர் கூறிய பதிலுரை]**

# பருகூரில் பார் போற்றும் பணி



தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரிக்கு மேற்கே 10 மைல் தொலைவில் உள்ள ஒரு சிற்றூர், பருகூர்.

இந்தச் சிற்றூர் இன்று பார் புகழும் ஊராக மாறத் தொடங்கியிருக்கிறது.

'' அங்கம் குறைந்தழுகி ஐயா எனக் கையேந்தி அகத்தின் கதவருகே அழைக்கின்ற '' தொழுநோய்ப் பிச்சைக்காரர்களின் மறுவாழ்வு இல்லம் ஒன்றைத் தமிழக அரசு இந்தப் பருகூரில் உருவாக்கியுள்ளதுதான் அதற்குக் காரணம்.

கடந்த 18-6-72 அன்று, அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களின் தலைமையில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த இல்லத்தைத் திறந்து வைத்தார்கள்.

குன்றுகள் பின்னணியில் நிற்க, சிறு சிறு மரங்கள் இலைகளை ஆட்டி அசைத்து வாழ்த்துத் தெரிவிக்க, அவற்றின் நடுவே இந்த இல்லம் கட்டப் பெற்றிருக்கின்றது. 20 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த இடத்தில் தற்போது 12 குடியிருப்புகள் கட்டி முடிக்கப் பெற்றுள்ளன. இன்னும் 13 கட்டப் பெறவிருக்கின்றன.

300 பேர்கள் தங்குவதற்கு வசதியுள்ள இந்த 12 குடியிருப்புகளில், தற்சமயம் 254 பேர்கள்தான் இருக்கிறார்கள். இவர்களில் ஆண்கள் 215 பேர், பெண்கள் 35, சிறுவன் 1, பெண் குழந்தைகள் 3.

பருகூரில் தொழுநோய்ப்பிச்சைக்காரர் இல்லம்திறக்கப்பட்டபோது கண்ணொளி வழங்கும் திட்டத்திற்காக தருமபுரி மக்களின் சார்பில் 60,000 ரூபாயை மாவட்ட ஆட்சியாளர் திரு பத்மநாபன் அவர்கள் முதல்வர் கலைஞரிடம் கொடுத்தார்.



இங்கே சமையற்கூடம் ஒன்றும், நிருவாகப் பிரிவுக் கூடம் ஒன்றும், செவிலியர் குடியிருப்பு இரண்டும், கடைநிலை ஊழியர் குடியிருப்பு ஒன்றும், மருத்துவர் குடியிருப்பு ஒன்றும் கட்டப் பெற்றுள்ளன.

ஏழு இலட்ச ரூபாய் செலவில் போடப்பட்ட இந்தத் திட்டம் தற்போது எட்டு இலட்ச ரூபாய் அளவில் வந்து நிற்கிறது.

இந்தப் பருகூர்ப் பகுதி தொழுநோய் அதிகம் உள்ள பகுதி என்று ஏற்கெனவே மருத்துவத்துறை அறிவித்திருக்கின்றது. தருமபுரி, சேலம், கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்கள் அனைத்துக்கும் சேர்ந்த மறுவாழ்வு நிலையமாக இந்தப் பருகூர் மறுவாழ்வு இல்லம் அமைந்திருக்கிறது.

கும்பகோணம், சென்னை முதலிய ஊர்களிலிருந்தும் தொழுநோய்ப் பிச்சைக்காரர் எல்லாம் தாமாகவே இந்த மறுவாழ்வு இல்லத்தில் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

விரைவில் வடஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலைக்கு அருகிலும், திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டைக்கு அருகிலும், இராமநாதபுர மாவட்டத்தில் சாத்தூர் அருகிலும், மதுரை மாவட்டத்

தில் உசிலம்பட்டி அருகிலும் இல்லங்கள் உருவாக்கப்பட விருக்கின்றன. இல்லங்கள் அமைப்பதற்குரிய இடங்கள் (Grounds) தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டன. விரைவில் கட்டடப் பணி தொடங்கப் பெற விருக்கிறது.

இனிமேல் உருவாகும் மறு வாழ்வு இல்லங்கள் தற்போதுள்ள இல்லங்களைப் போன்று இருக்காது. அவை இன்னும் அதிக வசதி படைத்தவையாய் இரண்டு அடுக்குக் கட்டடங்களாய் உருவாக்கப்படும். மேல் தளத்தில் சிகிச்சை பெறும் நோயாளிகள் தங்குவார்கள். கீழ்த்தளத்தில் அவர்கள் பணி புரியும் நிலையம் இருக்கும். அதாவது அவர்கள் பயிற்சி பெறுவதற்கும் பணி புரிவதற்கும் என்றே ரப்பர் செருப்புத் தயாரித்தல், பிரெயில் தயாரித்தல், பாய் பின்னுதல் போன்ற ஏராளமான தொழில்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. அந்தத் தொழில்கள் கீழ்த்தளத்தில் நடைபெறும்.

பரனூர் மறுவாழ்வு இல்லத்தில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் பாய் பின்னுகிறார்கள். தோட்ட வேலை செய்கிறார்கள்.

உளுந்தூர்ப்பேட்டை மறுவாழ்வு இல்லத்தில் பாய் பின்னுதல் தோட்ட வேலை செய்தல், ஆகியவற்றோடு தையல் தொழிலும் செய்கிறார்கள்.

### விருது பெறும் விந்தைக் காமிரா

நினைத்துப் பார்க்கக்கூட முடியாத அதிவேகத்தில்—வினாடிக்குப் பல இலட்சம் படம் எடுக்கும் திறனுள்ள காமிராவுக்கு 1972-ஆம் ஆண்டுக்கான வடிவமைப்புக் குழுவின் விருது வழங்கப்பட்டிருக்கின்றது.

புதிய கருவிகள் வடிவமைத்துத் தயாரிப்பவர்களுக்கு ஆண்டு தோறும் பரிசு அளித்து இதுபோன்ற கண்டுபிடிப்புக்களை ஊக்குவித்து வருகிறது, பிரிட்டனின் வடிவமைப்புக் குழு. சென்ற ஆண்டு இந்தக் குழு பரிசுக்கு உரிய பொருளாகத் தேர்ந்தெடுத்தவற்றில் இந்த உயர் வேகக் காமிராவும் ஒன்று.

மற்றொரு கருவி, தண்ணீருக்கு அடியில் புதையுண்டிருக்கும் குழாய்களில் கசிவு இருந்தால் அதனை மேலே இருந்தபடியே எக்ஸ்-ரே மூலம் கண்டுபிடிக்கும் கருவியாகும்.

பருகூரில் செருப்புத் தைத்தல், மெழுகுவத்தி தயாரித்தல், பிரெயில் தயாரித்தல், சோப் தயாரித்தல் ஆகிய தொழில்களைச் செய்கிறார்கள்.

இங்கே உள்ள 200 கோழிகள் கொண்ட கோழிப் பண்ணையைக் கவனித்துக் கொள்கிறார்கள். இவ்வாறு பலவித அலுவல்களைத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் செய்கிறார்கள்.

இவர்களுக்கு இலவசமாக மருந்தும், இலவசமாக உணவும் தந்துவரும் அரசு, இவர்கள் செய்யும் பணியினை இலவசமாகப் பெற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் செய்யும் வேலைக்குரிய கூலியைக் கொடுத்து விடுகிறது.

இங்கேயுள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் எல்லாம் விரைவில் தங்கள் நோயிலிருந்து விடுதலை பெறவேண்டும். சமூகத்தில் அவர்களும் வாழத் தகுதி படைத்தவர்களாக ஆகவேண்டும் என்பதுதான் அரசின் குறிக்கோள். அந்தக் குறிக்கோள் கட்டாயம் ஈடேறும் என்ற நம்பிக்கை பருகூரில் மருத்துவப் பணிபுரியும் மருத்துவத் துறை அதிகாரிகளின் அயராத அருந்தொண்டுகளினாலும், அன்பான சிகிச்சையினாலும் தெளிவாகியுள்ளது.


## பசுமைப் புரட்சிக்கும் பச்சைச் சீருடைக்கும்...

என்பீல்டு இந்தியாவின் தயாரிப்புகளான வில்லியர்ஸ் என்ஜின்கள் வேளாண்மைத் துறையில் நீர்ப்பாசனத்துக்கும், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளைத் தெளிக்கவும் உழவுப் பெருங்குடி மக்களின் உற்ற நண்பனாக உதவுகின்றன.

நாட்டின் எல்லைப் பகுதிகளில் பணிபுரியும் படைவீரர்களுக்கும் மற்றவர்களுக்கும் போக்குவரத்து ஊர்திகளாகப் பணி புரிகின்றன, என்பீல்டு இந்தியர்வின் புல்லெட் மற்றும் குருசேடர் மோட்டார் சைக்கிள்கள்.

வேளாண்மை, தொழில், போக்குவரத்து ஆகிய துறைகள் வளம் பெற அரும்பணி ஆற்றும் நிறுவனம் என்பீல்டு இந்தியா.



**தி என்பீல்டு இந்தியா லிமிடெட்**
**சென்னை-19**

FDSEI-1512TM

# உழைப்பாளர் நலங்காக்கும் ஒப்பற்ற மருத்துவ மனை





கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவ மனையைக் கடந்து அயனாவரம் செல்லும் பாதையில் வானுற ஓங்கி வளர்ந்து நின்றபடி, E. S. I. Hospital என்ற எழுத்துக்களுடன் காட்சி தருகிறது மாநிலத் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ மனை.

1955-ஆம் ஆண்டில் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் வாடகைக் கட்டடத்தில் 75 படுக்கைகளுடன் தொடங்கப் பெற்ற மருத்துவ மனை 15-6-1962 அன்று அயனாவரத்தில் சொந்தக் கட்டடத்தில் பணி புரியத் தொடங்கியது. 1962-ல் 200 படுக்கைகளுடன் உருவாகிய இந்த மருத்துவ மனை இன்று 625 படுக்கைகளுடன் விளங்குகிறது.

துவக்கத்தில், ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்ந்து கொண்ட தொழிலாளர்களுக்கு மட்டும் தான் இந்த மருத்துவ மனையில் சிகிச்சை வசதி செய்யப்பட்டது. 1967-ஆம் ஆண்டு, நவம்பர் 15-ஆம் நாள் முதல் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கும் இங்கே சிகிச்சை தரும் திட்டம் தொடங்கப் பெற்றது. இந்தத் திட்டத்தைப் 'பேரறிஞர் அண்ணா' அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தொழிலாளர்களின் குடும்பம் என்பது, தொழிலாளர், அவரது மனைவி, ஊதியம் தேட இயலாத பெற்றோர்கள், தொழிலாளர்களின் குழந்தைகள் ஆகியோர்தாம். குழந்தைகளும் 18 வயதுக்குட்பட்டவர்களாக இருந்தால்தான் சிகிச்சை செய்யப்படுவார்கள். தொழிலாளர்களின் உடன் பிறந்தவர்களுக்கு இங்கே சிகிச்சை கிடையாது.

தொழிலாளர்-அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் கட்டுப்பட்ட தொழிலாளர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் கணக்கெடுத்துப் பார்த்ததில்—சென்னை நகர மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் சென்னையில் சிகிச்சை தருவது இந்த மருத்துவ மனைதான்.

தமிழ்நாட்டில் இந்தத் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டத்தின் கீழான பெரிய மருத்துவ மனைகள் அயனாவரம், கோவை, மதுரை ஆகிய மூன்று இடங்களிலேதான் இருக்கின்றன. அங்கேயும் படுக்கை வசதிகள் போதாமல் அரசு மருத்துவ மனைகளிலும் தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகச் சார்பில் 1,900 படுக்கை வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அயனாவரம், கோவை, மதுரை தவிர ஏனைய பெரிய நகரங்களில் அரசினர் பொது மருத்துவ மனையில் இ.எஸ்.ஐ.-க்கு ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் தொழிலாளர்களுக்குச் சிகிச்சை செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 93 இடங்களில் இ.எஸ்.ஐ. மருந்தகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 34 தான் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றன. ஏனையவை வாடகைக் கட்டடத்தில் உள்ளன.

ஏறத்தாழ 16 ஆயிரம் தொழிலாளர் குடும்பங்களைச் சார்ந்த 4 இலட்சம் பேர் இந்த ஈட்டுறுதித் திட்டத்தினால் பயன்பெற்று வருகின்றனர்:

இந்த மருந்தகங்களுக்கு ஆகும் செலவு மத்திய அரசு ஈட்டுறுதிக் கழகத்தினால் அளிக்கப்படுகிறது. அரசு ஈட்டுறுதித் திட்டத்திற்குக் கட்டுப்பட்ட ஒரு தொழிலாளி தனது சம்பளத்தில் 2 சதவீதத்தை மத்திய அரசின் ஈட்டுறுதிக் கழகத்திற்குத் தருகிறார். முதலாளி 4 சதவீதம் தருகிறார். அந்தத் தொகையை மத்திய அரசு ஈட்டுறுதிக் கழகம் தொழிலாளர் மருத்துவ மனைத் திட்டங்களுக்காகத் திருப்பி அளிக்கிறது. அப்படி அளிக்கின்ற பணம் நமது மாநிலத்துக்குப் பற்றாக் குறையாக இருக்கிறது. அதன் காரணமாக, அதை மாநில அரசு ஈடு கட்டி வருகிறது. இந்த வகையில் 1970—71-ஆம் ஆண்டில் நமது மாநில அரசு 84 இலட்ச ரூபாய் செலவிட்டிருக்கிறது. 1971—72க்கு, ஒரு கோடி ரூபாயை மாநில அரசு வழங்கியிருக்கிறது. வேறு எந்த மாநிலத்தையும் விடத் தமிழகம் தான் இதுபோன்ற திட்டங்களை மிகுந்த அக்கறையோடு நிறைவேற்றி வருகிறது.

இந்த மருத்துவ மனையில் அனைத்து வசதிகளும் உள்ளன. புறநோயாளர் பிரிவு (Out Patient Block) உள்ளிருப்பு நோயாளர் பிரிவு (In-Patient Block) இரத்த வங்கி (Blood Bank), ஆய்வுச்சாலை (Laboratory) கண்நோய்ப்பிரிவு, சருமநோய்ப் பிரிவு முடம் நீக்கும் பிரிவு ஆகிய அநேக பிரிவுகள் உள்ளன.

இந்த மருத்துவ மனையைத் தவிர, சென்னை நகரில் 28 வட்டார மருந்தகங்கள் உள்ளன. இவற்றில் புற நோயாளிகளைப் பார்வையிட்டு, அவர்களுக்குத் தேவையான மருந்துகளைக் கொடுக்கிறார்கள்—ஊசிகள் போடுகிறார்கள்.

அண்மையில் சைதையில் ஏழு லட்ச ரூபாய் செலவில் ஒரு மருந்தகம் உருவாவதற்கு—முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள்.

இந்த அயனாவரம் மருத்துவ மனையில் மருந்துக் கிடங்கு ஒன்று உள்ளது. மருத்துவ மனைக்குத் தேவையான மருந்துகள் இங்கே இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்ல, நகரத்தில் உள்ள 28 இ.எஸ்.ஐ. மருந்தகங்களுக்குத் தேவைப்படும் மருந்துகள் இங்கிருந்துதான் அனுப்பப்படுகின்றன.

சுமார் 15 ஏக்கருக்கு மேல் பரப்பளவு கொண்ட இடத்தில் இந்த மருத்துவ மனை அமைந்திருக்கிறது. நான்கு தளம் கொண்ட கட்டடம் இது. நோயாளிகளை மேல் தளங்களுக்கு அழைத்துச் செல்ல மின் ஆற்றலால் இயங்கும் ஏந்து ஊர்தி (lift) ஒன்று இருக்கிறது. இரு அறைகள் கொண்ட அறுவை அரங்குகள், முதல் மூன்று தளங்களிலும் உள்ளன.

இங்கே 24 சிவில் சர்ஜன்கள் இருக்கிறார்கள். மருத்துவமனைக் கண்காணிப்பாளருக்கும், 16 உதவி சர்ஜன்களுக்கும் குடியிருப்புகள் மருத்துவ மனையின் எல்லைக்குள்ளேயே கொடுக்கப்பட்டுள்ளன.

காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை புற நோயாளர் பிரிவு பணிபுரிகிறது. ஆனால் நாள் தோறும் இந்தப் பிரிவில் 600-லிருந்து 700 நோயாளர் வரை வருவ



புறநோயாளர் பிரிவில் சுறுசுறுப்பான பணி நடைபெறுகிறது.

தால், 10.30 மணியுடன் பணி முடிவதில்லை. மேலும் ஒரு மணி நேரம் நீடிக்கிறது.

ஞாயிற்றுக்கிழமைகளில் சுமார் 1,000 பேர்கள் வருகிறார்கள். என்றாலும் ஏனைய மருத்துவ மனைகளில் வரும் அளவற்ற கூட்டம் போல் இங்கே கூட்டம் வருவதில்லை. இதற்குக் காரணம் என்ன தெரியுமா?

இந்த மருத்துவ மனை, தொழிலாளர்—அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் கட்டுப்பட்ட தொழிலாளர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்குமே தவிர வேறு எவருக்கும் அல்ல.

சாதாரண, உடல் நலக் கோளாறுகளுக்கு அந்தந்த வட்டாரங்களில் இருக்கின்ற இ.எஸ்.ஐ. மருந்தகங்களுக்குச் சென்று, அங்குள்ள மருத்துவர்களிடம் தங்களது நோய்களைத் தெரிவித்துத் தேவையான மருந்துகளைத் தொழிலாளர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.

இங்குக் கட்டாயம் வர வேண்டும் 'என்ற கட்டத்தில் உள்ளவர்கள் மட்டும்தான் வருகிறார்கள். வட்டார மருந்தகங்களிலுள்ள மருத்துவர்களால் ஆய்வுக்காக அனுப்பபடுகின்ற நோயாளிகள் தாம் இந்தப் பெரிய மருத்துவ மனைக்கு வருகிறார்கள்.

இங்குள்ள ஆய்வுக்கூடத்திற்கு (Laboratory) ஒவ்வொரு நாளும் 100 'மாதிரி'களுக்கு மேல் வருகின்றன. சிறு நீர்ப் பரிசோதனை, மலப் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, சளிப் பரிசோதனை இப்படிப் பலவித பரிசோதனைகளுக்காக இங்கு வருகிறார்கள்.

நாள்தோறும், சராசரியாக 595 பேர் உள்ளிருப்பு நோய்ப் பிரிவில் சிகிச்சை பெறுகிறார்கள்.

50 ரூபாய்க்கு மேலும் 500 ரூபாய்க்குக் கீழும் மாத வருவாய் உள்ள தொழிலாளர்கள்தான் இந்த மருத்துவ மனையில் சிகிச்சை பெற முடியும்.

தொழிலாளர்கள் தாங்கள் கட்டும் ஆயுள் காப்பீட்டுத் தொகையைக் குறித்த காலத்தில் செலுத்தத் தவறுவதுண்டு. அப்படிப்பட்டவர்களுக்குச் சலுகையை இந்த மருத்துவ மனை உடனடியாக நிறுத்தி விடுவதில்லை. தொடர்ந்து ஆறு வாரம் சலுகை தருகிறார்கள். அதற்குப் பின்பும் அவர்கள் 'பிரிமியம்' தொகையைக் கட்டத் தவறினால் அவர்களுக்கு இங்குக் கிடைக்கின்ற சிகிச்சை நிறுத்தப்படுகிறது.

தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை (Identity Card) கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவர்களது குடும்பத்தினருக்கும் அடையாள அட்டை உண்டு; தொழிலாளரின் மனைவி, குழந்தைகள் முதலியோர் இந்த அட்டையில் குறிப்பிடப்படுகின்றனர். குழந்தை பிறந்தால், அதற்கென இருக்கும் ஒரு மனுவில் எழுதிக் கொடுத்துப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

தற்காலிகத் தொழிலாளர்களுக்கும் அடையாள அட்டை உண்டு; இந்த அட்டை 13 வாரங்களுக்குச் செல்லுபடியாகும்.

இந்த அடையாள அட்டை தொலைந்து விட்டால் என்ன செய்வது? ஸ்டர்லிங் ரோட்டில் உள்ள சென்னை மாநிலத் தொழிலாளர் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் இயக்குநருக்கு, அடையாள அட்டையின் எண்ணைக் குறிப்பிட்டு, அது காணாமற் போன விவரத்தையும் தெரிவித்து, மனுச் செய்ய வேண்டும். 50 காசுகளைப் பெற்றுக் கொண்டு நகல் பிரதி தருவார்கள்.

அரசினர் மருத்துவ மனையில், உள்ள 'பொது வார்டுகள்', 'ஸ்பெஷல் வார்டுகள்' என்ற பிரிவு இந்த மருத்துவ மனையில் கிடையாது. ஏனென்றால், இந்த மருத்துவ மனையே 'ஸ்பெஷல் மருத்துவ மனை' யாகக் காட்சி தருகிறது. தூய்மையும் துப்புரவும் இங்கே நிறைந்திருக்கிறது. மருத்துவ மனை நல்லமுறையில் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பொது மருத்துவ மனைக்கும் இந்தத் தொழிலாளர் மருத்துவ மனைக்கும் மிகுந்த வேற்றுமை இருக்கிறது. குறிப்பிட்ட நோயாளியின் நோய் நீங்குவதற்குத் தேவைப்படும் மருந்து, மாத்திரைகள் பொது மருத்துவ மனையின் இருப்பில் இல்லாதிருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நோயாளிகள் மருந்துகளைத் தங்கள் சொந்தச் செலவில் வாங்கிக் கொள்ள நேரும். ஆனால் இந்த இ. எஸ். ஐ. மருத்துவ மனையில் அப்படி இல்லை; பெரும்பாலும் இங்கே விலையுயர்ந்த மருந்துகளே வாங்கி வைக்கப்பட்டுள்ளன. நோயாளிகளுக்குத் தேவைப்படும் மருந்து, மருத்துவ மனையின் இருப்பில் இல்லாவிட்டால் அது என்ன விலையானாலும் சரி, மருத்துவ மனையினரே அதை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து நோயாளிக்குத் தருகினர்.

சில மாதங்களுக்கு முன்பு, இங்கே சேர்க்கப்பட்ட நோயாளி ஒருவருக்குக் கண்ணில் அல்சர் ஏற்பட்டு விட்டது. அதனைக் குணப்படுத்துவதற்காக 'காராமைசின்' ( Garamycin ) என்ற விலையுயர்ந்த மருந்தை மருத்துவர்கள் சிபாரிசு செய்தனர். அந்த மருந்து, மருத்துவ மனையில் இல்லை. உடனே அதனை வாங்கிக் கொடுத்தனர். இரண்டு வேளைகளுக்குரிய அந்த மருந்தின் விலை எவ்வளவு தெரியுமா? 36 ரூபாய். தனது மருத்துவ மனையை நாடிவரும் நோயாளிக்கு மருத்துவ மனையே இவ்வாறு அதிகச் செலவு செய்து மருந்து வாங்கித் தரும் நிகழ்ச்சிகள் இங்கே பல முறைகள் நடைபெற்றிருக்கின்றன.

மகப்பேறு அடையும் பெண் தொழிலாளர்களுக்கு 12 வாரம் ஊதியத்துடன் கூடிய விடுமுறை கிடைக்கிறது. கருச்சிதைவு ஏற்பட்டுவிட்டால் விடுமுறையும் பணமும் கொடுக்கப்படுகிறது. இவை எல்லாம் சாதாரணமாக வேறு எந்தத் துறையில் பணி புரிபவர்களுக்கும் இல்லாதது. இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்கு மட்டுமே கிடைத்துள்ள தனி உரிமைகள் என்பது குறிப்பிடத் தக்கது.

இங்குள்ள எக்ஸ்ரே பிரிவு மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது. 1971-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நவம்பர்த் திங்கள் வரை 29,571 எக்ஸ்ரேக்கள் எடுக்கப்பட்டுள்ளன. அதாவது மாதத்திற்கு சராசரி 2,700 எக்ஸ்ரேக்கள் எடுக்கப்பட்டுள்ளன. 'ஸ்கிரீனிங்' என்று சொல்லப்படும் திரையிட்டுப் பார்த்தலுக்கும் இங்கே வசதி இருக்கிறது. என்றாலும், இங்கே 'ஸ்கிரீனிங்' அதிகமாகச் செய்யப்படுவதில்லை. ஏனென்றால் இங்கு வரும் தொழிலாளர்கள் 'ஸ்கிரீனிங்' செய்வதை வரவேற்பதில்லை. 'இருட்டறையில் டாக்டர்களே பார்த்துக் கொள்கிறார்கள்— நமக்கு எதுவும் புரியவில்லையே'' என்று எண்ணுகிறார்கள். அதனால் எக்ஸ்ரே எடுத்து—அந்தப் படத்தை அவர்களின் கண்களில் காண்பித்தால்தான் அவர்களுக்கு ஒருவித நம்பிக்கை ஏற்படுகிறதாம்.

மெழுகுக்குளியல்.



இளம்பிள்ளை வாதத்துக்கு இங்கே அபூர்வமான சிகிச்சைகள் நடைபெறுகின்றன. அதற்குப் பலவகை இயந்திரங்கள் இங்கே உள்ளன. அவற்றை இயக்குவதன் வாயிலாக இளம்பிள்ளை வாதம் வந்த குழந்தைகள் — நோய் நீங்கப் பெறுகிறார்கள்.

Wax Bath ( ) என்று சொல்லப்படும் மெழுகுக் குளியல் சிகிச்சை முறை இங்கே இருக்கிறது. கை, கால்கள், விரல்கள் முதலியனவற்றை இயக்குவதற்காக—இந்த மெழுகுக் குளியல் பயன்படுகிறது. இது மின் ஆற்றலால் இயங்குகிறது. தாங்கிக் கொள்ளக்கூடிய அளவு வெப்ப நிலையில்தான் இருக்கிறது. உருகிக் கொண்டிருக்கும் மெழுகுக் குழம்பில், நோயாளிகள் தங்கள் விரல்களைச் செலுத்துகிறார்கள். சில விநாடிகளில் விரல்களை வெளியே எடுத்து விட்டு, விரல்களைச் சுற்றி உறைபோல் படர்ந்துள்ள மெழுகை நீக்கித் தொட்டிக்குள்ளே போட்டுவிட்டு, மீண்டும் விரல்களை மெழுகுக் குழம்புக்குள் செலுத்துகிறார்கள். இவ்வாறு நாள்தோறும் சில மணி நேரங்கள் இந்தப் பயிற்சி செய்கிறார்கள்.

இங்கு நல்ல முறையில் நிருவகிக்கப்படும் சமையற் பிரிவு ஒன்று இருக்கிறது. செம்பரம்பாக்கம் கூட்டுறவுக் கைக் குத்தலரிசி ஆலையிலிருந்து அரிசி வரவழைக்கப்படுகிறது. மாதத்திற்கு 1,000 கிலோ கிராம் அரிசி செலவாகிறது.

இங்கு நோயாளிகளுக்குத் தரப்படும் சாப்பாடு தரமானதாகும். அதன் விலை 3 ரூபாய் ஆகிறது. வியாழக்கிழமை என்றால் மாமிச நாள் என்றும், ஞாயிற்றுக்கிழமை என்றால் முட்டை நாள் என்றும், செவ்வாய்க்கிழமை என்றால் மீன் நாள் என்றும் சொல்லப்படுகிறது. அதாவது அந்தந்த நாளில்— அந்தந்த உணவுகள் கொடுக்கப்படுகின்றன.

உடைகள், படுக்கை விரிப்புகள், மெத்தைகள் ஆகியவை நீராவிச் சலவையின் வாயிலாகத் தூய்மை செய்யப்படுகின்றன. சலவைப் பிரிவு இங்குச் சிறப்பான முறையில் இயங்கி வருகிறது.

இந்த மருத்துவ மனையைச் சேர்ந்த ஆம்புலன்ஸ் வண்டி உண்டு. நோயாளிகள் தொலை

பேசி மூலம் மருத்துவ மனைக்குத் தொடர்பு கொண்டு, ஆம்புலன்ஸைத் தங்களது இருப்பிடத்திற்கு வரவழைத்து மருத்துவ மனைக்கு வந்து சேரலாம். ஆம்புலன்ஸ் கிடைக்காத சூழ்நிலையில்—நோயாளிகள் டாக்சி வைத்துக் கொண்டு, மருத்துவ மனைக்கு வந்து சேரலாம். டாக்சிக் கட்டணத்தை நோயாளிக்குக் கொடுத்து விடுகிறார்கள் மருத்துவ மனையினர், உடனே அல்ல—இரண்டு மூன்று நாட்களில்.

இங்கே சிகிச்சை பெறும் நோயாளிகள் மருத்துவ மனையில் இறந்து விட்டால், உறவினர்கள் மருத்துவமனையில் இறப்புச் சான்றிதழ் பெற்று, உள்ளூர் இ.எஸ்.ஐ. அலுவலகத்தில் மனுச் செய்தால் இ.எஸ்.ஐ. கழகம் சவ அடக்கத்திற்காக 100 ரூபாய் தருகிறது.

நடமாடும் பொது மருத்துவ மனையும் இங்கு உள்ளது. ஒவ்வொரு நாளும், காலையும் மாலையும் இந்த நடமாடும் மருத்துவ மனை பணிபுரிகிறது. தாம்பரத்திலிருந்து மீஞ்சூர் வரை, கிண்டி அருகில் நந்தம்பாக்கம், செயின்ட் தாமஸ் மலை ஆகிய இடங்களுக்கெல்லாம் சென்றுவருகிறது. அங்குள்ள ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்ந்துகொண்ட தொழிலாளர்களைப் பரிசோதித்து அவர்களது நோய் நீங்க மருந்து தருகிறது. அவர்களுக்குக் காச நோய் இருக்கிறதா என்ற ஆய்வும் நடத்துகின்றது.

இந்த இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் மற்றொரு சிறப்பும் உண்டு. இங்கே ஒரு நூலகம் உள்ளது. சென்னை மாவட்ட நூலகத்தின் கிளை இது. பிற்பகல் 1 மணியிலிருந்து 7 மணி வரை இந்த நூலகம் திறந்திருக்கும் ; நோயாளிகள் இங்கே வந்து படிக்கலாம் ; புத்தகங்களை எடுத்துச் செல்லலாம். திங்கள் இதழ்கள், கிழமை இதழ்கள் முதலியவையும் இங்கே உண்டு. இவை மருத்துவ மனையின் சொந்தச் செலவில் வாங்கப்படுகின்றன.

இந்த மருத்துவ மனைக்குச் சிகிச்சை பெற வருகின்றவர்கள் இங்குக் கிடைக்கும் சிகிச்சையை எண்ணி, மன மகிழ்ச்சி கொள்கிறார்கள். மருத்துவ மனை என்றதும், பொதுவாக ஏற்படும் அச்சம் இங்கு வருபவர்களின் உள்ளத்தில் ஏற்படுவதில்லை. அந்த அளவுக்குத் தூய சிகிச்சை இங்கே கிடைக்கிறது. சுருங்கச் சொன்னால் உழைப்பாளர் நலங் காப்பதற்குக் கிடைத்துள்ள ஒப்பற்ற மருத்துவமனை இது என்று தான் குறிப்பிட வேண்டும்.



## திரு இலட்சுமிபதி

சுமார் 24 ஆண்டுகள் செய்தித் துறைப் புகைப்படப் பிரிவில் பணிபுரிந்த திரு இலட்சுமிபதி 1924-ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆம் நாள் சென்னையில் பிறந்தார். திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியில் கல்வி கற்றுச் செய்தித் துறையில் 1948 பிப்ரவரி மாதம் புகைப்படப் பிரிவின் உதவியாளராகச் சேர்ந்தார். அவர் எடுத்த முதல் புகைப்படம் : காந்தியடிகளின் அஸ்தி சென்னைக்கு வந்த காட்சி.

1956 அக்டோபர் மாதம் தனித் தமிழ்நாடு செயல்பட்ட சமயத்தில் தலைமைப் புகைப்படக்காரரான திரு ஜோசப், கேரள மாநிலத்திற்குப் பணிபுரியச் சென்று விட்டதால் திரு இலட்சுமிபதி தலைமைப் புகைப் படக்காரர் பொறுப்பை ஏற்றார். அன்று முதல் அவர், தான் காலமாகும் வரை மிக முக்கியமான நிகழ்ச்சிகள் பலவற்றைப் படமெடுத்துள்ளார்.

முதுமலைக் காட்டில் புலிகளே இல்லை என்று எல்லாரும் கூறிவந்த சமயத்தில் இவர் அங்குச் சென்று ஒரு புலியைப் படம் எடுத்து வந்தார்.

திடீரென்று நோய்வாய்ப்பட்ட அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும்போது கூடக் கடமையில் கருத்துக் காட்டி உதவியாளர்களுக்குத் தாக்கீது செய்துவிட்டுப் போனதும், ஒரு சமயம் இறந்த குழந்தையை அடக்கம் செய்துவிட்டு அன்று பிற்பகலே அலுவலகத்திற்கு வந்த நிகழ்ச்சியும் அவருடைய கடமையுணர்ச்சியைக்காட்டுகின்றன. தன்னைப் போலவே மற்றவர்களும் கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்பதில் அவர் மிக உன்னிப்பாக இருந்தார்.

அவர், தன் மனைவியையும் எட்டுக் குழந்தைகளையும் விட்டு விட்டு 5-7-1972 அன்று சென்னையில் அரசினர் பொது மருத்துவமனையில் காலமானார். அமைச்சர்களும், அதிகாரிகளும், அவருடன் பணிபுரிந்தவர்களும், அவருக்குக் கடைசி மரியாதை செலுத்தி இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்.

அவரது குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உலகெங்கணும் உள்ள வேளாண்மை ஆராய்ச்சியாளர்களின் இடைவிடா முயற்சியால், புத்தம் புதிய ரகங்கள் நித்தம் நித்தம் வெளிவந்துகொண்டிருக்கின்றன. அப்புதிய ரகங்கள் அதிக மகசூல் அளித்து, உழவர்களின் வருவாயை அதிகப்படுத்துவதுடன், உலகில் நிலவிவரும் உணவுப்பற்றுக்குறையையும்ஊட்டச் சத்துப் பற்றுக்குறையையும், அகற்றுவதற்குப் பெருந் துணையாக இருக்கின்றன. அரிய புதிய ரகங்களைக் கண்டுபிடிக்கும் அரும் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பயறு வகைப் பிரிவினால், அண்மையில் ' கோ. 8 ' என்ற புதிய அவரை வெளியிடப் பட்டுள்ளது தமிழ்நாடு உழவர்களுக்கு உவகைதரும் செய்தியாகும்.




தற்பொழுது காய்கறிக்காகப் பயிரிடப்பட்டு வரும் நாட்டு அவரை வகைகளை ஒரு குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே பயிரிட இயலும். பொதுவாக நாட்டு அவரை வகைகளின் விதைகளை ஆடி (ஆகஸ்ட்), மாதத்தில் குழிகளில் ஊன்றுவார்கள். அவை முளைத்து, வளர்ந்து பூத்து, கார்த்திகை, மார்கழி தை (டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி) மாதங்களில் காய்த்துப் பலன் கொடுக்கும். பொதுவாக, நாட்டுவகை அவரை படரும் தன்மையுள்ளவை. அவைகள் ஏழு மாத வயதுடையவையாகும். ஆனால் புதிதாக வெளியிடப்பட்டுள்ள 'கோ. 8' அவரை நாட்டு வகை அவரைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். ஏனெனில், இது தோட்ட அவரையையும், மொச்சையையும் ஒட்டுச் சேர்த்துக் கண்டுபிடிக்கப் பட்டதாகும்.

### கோ. 8 அவரையின் சிறப்புக் குணங்கள்.

1. கோ. 8 அவரை, செடியைப் போன்று நேராக வளரும். எனவே, கோ. 8 அவரைக்குப் பந்தல் தேவையில்லை.

2. விதைத்த 45 நாட்களில் பூத்து, 60 நாட்களில் காய்க்கும் தன்மை வாய்ந்தது. 100 நாட்கள் வரை பூத்து, ஒவ்வொரு 5 நாட்களுக்கும் ஒரு முறை வீதம் காய்களை அறுவடை செய்யலாம். எனவே, கோ. 8 அவரை குறுகிய கால வயதுடையதாக இருப்பதுடன், குறுகிய காலத்திலேயே பலனளிக்க வல்லதாக இருக்கிறது.

3. எல்லாப்பருவத்திலும் கோ. 8அவரையைப் பயிர் செய்யலாம்,

4. வீட்டுத் தோட்டத்திலும், பெரும் பரப்பளவிலும் பயிரிட ஏற்றது.

5. கோ. 8 அவரையை இறைவையாகவும், பயிரிடலாம் ; மானாவாரியாகவும் சாகுபடி செய்யலாம்.

6. கோ. 8 அவரையின் இளங் காய்கள் இளம் பச்சை நிறமாகவும், 12 சென்டி மீட்டர் (4.8 அங்குலம்) நீளமுள்ளதாகவும், சுவை மிகுந்ததாகவும் இருக்கின்றன.

7. ஹெக்டேருக்கு 4,600 கிலோ வரை மகசூல் அளிக்க வல்லது.

8. தமிழகத்தில் மட்டுமல்ல. மற்ற மாநிலங்களிலும் கோ. 8 அவரையை எல்லாப் பருவத்திலும் பயிரிடலாம்.

இத்தகைய பல்வேறு சிறப்புக் குணங்களைக்கொண்ட கோ. 8 அவரையைப் பயிரிடக்கீழ்க்கண்ட சாகுபடிக் குறிப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.

### சாகுபடிக் குறிப்புகள்.

**பருவம்.** ஆண்டு முழுவதும் கோ. 8 அவரையைப் பயிரிடலாமெனினும், இறைவைப் பயிருக்கு மார்ச்சு-ஏப்ரல் மாதங்களும், ஜூலை-ஆகஸ்டு மாதங்களும் சாலச் சிறந்தவையாகும்.

**மண்.**—செம்மண் கலந்த குறுமண் மிகவும் உகந்தது.

**விதையளவு .**— ஹெக்டேருக்கு 25 கிலோ (ஏக்கருக்குப் பத்து கிலோ) விதை தேவைப்படும்.

**இடைவெளி.**—வரிசைக்கு வரிசை 60 சென்டி மீட்டர் (2 அடி) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும் விட்டு, 2.5 சென்டி மீட்டர் (ஓர் அங்குலம்) ஆழத்தில் விதைகளை ஊன்ற வேண்டும்.

**உர அளவு:**—கீழ்க்கண்ட அளவில் அடியுரம் இட்டால் கோ. 8 அவரை நல்ல மகசூல் அளிக்கும்.

ஹெக்டேருக்கு.

தொழு எரு—50 வண்டி.
அமோனியம் சல்பேட்—125 கிலோ.
சூப்பர் பாஸ்பேட்—300 கிலோ.

தொழு எரு—20 வண்டி.
அமோனியம் சம்பேட்—50 கிலோ.
சூப்பர் பாஸ்பேட்—120 கிலோ.

மேற்கூறிய முறையில் கோ. 8 அவரையைச் சாகுபடி செய்து பலன் பெறுமாறு தமிழக உழவர் பெருமக்களைக்கேட்டுக்கொள்கின்றோம். அதுபோலவே கோ. 8 அவரை பயிரிட்டுச்சுவைமிகு காய்களைப் பெற்று மகிழ்வோடு வாழுமாறு வீட்டுத் தோட்டம் அமைப்போரைக் கேட்டுக் கொள்கின்றோம்.

**(தகவல் : தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-3)**



# கூவம் நதியின் மிசை நிலவினிலே....

தென்னகத்தின் பலதரப் பட்ட மக்கள் வாழும் சென்னை நகரத்திற்கு ஒரு சாபக்கேடு எனப் பலராலும் கருதப்பெற்று வந்த கூவம் ஆற்றிலிருந்து பரவிய துர்நாற்றத்தைப் போக்கி, மக்களின் உடல் நலத்தைப் பேணிக் காக்கத் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட மாபெரும் திட்டங்களுள் கூவம் சீரமைப்புத் திட்டமும் ஒன்று. இந்தத் திட்டம் பல்லாண்டுகளாக ஏட்டளவிலேயே இருந்து வந்தது. அதனைச் செயற்படுத்திய பெருமை இன்றையத் தமிழ்நாடு அரசையே சாரும்.

கூவம் நதி, சென்னையில் வங்கக் கடலில் வந்து சங்கமம் ஆகும் வரையில் அது, நகரின் மையப் பகுதிகளிலேயே ஊர்ந்தும் ஓடியும் வரும். பலமாதங்கள் இந் நதியில் தண்ணீர் வராதபோது தண்ணீர் ஓட்டமில்லாதபோது வழி நெடுகிலும் பலமுனைகளிலிருந்து வந்து கலக்கின்ற நகரின் நல்வாழ்விற்கு ஊறு விளைவிக்கும் படுமோசமான கழிநீர்த் தேக்கமாக விளங்கியதையும் சென்னை வாழ் மக்களும், சென்னைக்கு வந்து செல்லும் வெளியூர்-வெளிநாட்டுப் பயணிகளும் அறிவார்கள். இந் நிலைக்கு ஒரு விடிவு வராதா என்று மக்களெல்லாம் எண்ணி ஏங்கி, இளைத்து அலுத்துப் போன நேரம்,

'எத்துறையில் சென்றாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்பதுபோல எதைச் செய்தாலும் மக்கள் நலன் ஒன்றே குறிக்கோளாகக் கருதிச் செய்கின்ற — ஏன்? மக்களின் நல்வாழ்வுக்காக எதையும் மேற்கொள்ளுகின்ற பண்புடைய தமிழ்நாடு அரசு கூவம் சீரமைப்புத் திட்டத்தைச் செயற்படுத்த முற்பட்டது.

**அட்டை சொல்லும் கட்டுரை**

நதியின் இருமருங்கிலும் எழுப்பப் பெற்ற குடிசைப் பகுதிகளை அப்புறப் படுத்தி, அந்தக் குடிசை வாழ் மக்களுக்கு நல்வாழ்வளிப்பது ;

நீரோட்டத்தின் போக்கைத் தக்கவாறு மாற்றிக் கடல்நீரை நீரெழுச்சி முறையில் உள்ளே பாய்ச்சி, அதனைத் தூய்மைப் படுத்தி, நதியின் இருபுறமும் உட்கால்வாய்கள் வெட்டிக் கழிவு நீரைக் கடலுக்குள் பாய்ச்சவும், பலமான பக்கச் சுவர் அமைத்து நீரோட்டத்தை ஒழுங்கு படுத்தவும் வகை செய்தல்;

நதியின் இரு மருங்கிலும் நல்ல சிமெண்ட் தளமிட்ட நடைபாதைகள் அமைத்து, அதில் உல்லாசப் படகுப் போக்குவரத்தை ஊக்குவித்தல்;

நதியின் இரு மருங்கிலும் அழகிய தோட்டங்களையும் புல் வெளிகளையும், பூங்காக்களையும் அமைத்து அழகு படுத்தல்;

அழகிய பல் வேறு திட்டங்களையும் உள்ளடக்கிய இந்தக்- கூவம் சீரமைப்புத் திட்டத்தை மூன்று கட்டங்களாகப் பிரித்துத் திட்டத்தை நிறைவேற்றும் பணி மேற் கொள்ளப்பட்டது.

முதற்கட்டமாக, கூவம் நதி கடலோடு கலக்குமிடத்தில் ஒரு சிமெண்ட் மதகு அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப் பட்டது. இந்த மதகு, நீர் மட்டத்தைக் கட்டுப் படுத்தக் கூடியது. அலைவேகம் உயர்ந்து கடல் பொங்கும் பொழுது கடல்நீர் நதிக்கு வரவும், அலை உயரம் குறையும் போது நதியின் நீர்மட்டம் குறையாமல் பாதுகாக்கவும் இம் மதகு பயன்படக்கூடியது. இவ்வாறு கடல் நீர் நதிக்குச் செலுத்தப் படும்போது, கடல் மணல் வந்து மதகில் குவிந்து விடாமல் தடுத்துக் காப்பதற்காகவும், மணல் திட்டுக்களை ஒழுங்கு செய்து கடல் நீரைச் சீராக உள்ளே விடவும் ஒரு மாபெரும் மணல்வாரி இயந்திரம் நிறுவப் பட்டுள்ளது. இவ்வளவு பெரிய மணல்வாரி இயந்திரம் இந்தியாவில் வேறெங்கும் இல்லை என்பது குறிப்பிடத் தக்கது.

அடுத்து இரண்டாவது கட்டத்தில் சேத்துப்பட்டு ரெயில்வேப் பாலத்திலிருந்து நேப்பியர் பாலம் வரையுள்ள சுமார் ஐந்தரை மைல் நீளத்திற்குக் கால்வாய் வெட்டும் வேலை தொடங்கப்பட்டு, இரு கரைகளின் சரிவுகளிலும் சிமெண்ட் பலகைகள் பொருத்தப்படும் பணி மேற்கொள்ளப் பட்டு அது மிக விரைவில் நிறைவுறும் நிலையில் உள்ளது.

நேப்பியர் பாலத்தின் அருகில் பல்வேறு நவீன வசதிகளுடன் கூடிய மிக அழகிய படகுக் குழாம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இந்தப் படகு நிலையத்தில் முதல் தளத்தில் சிற்றுண்டி விடுதி அமைக்கப் படவிருக்கிறது. படகு நிலையத்தின் நுழைவுப் புறத்தே



அகில உலகத் தரத்தில் மிகவும் நவீனமான பல்வேறு வசதிகளுடன் கூடிய இரு நீச்சல் குளங்கள் அமைக்கப் பட்டுள்ளன. நீச்சல் குளங் களின் உட்சுற்றுப் புறமும், தரைப்பகுதியும் பளபளக்கும் பளிங்குக் கற்களால் பொருத்தப் பட்டுள்ளன. அருகில், உடை மாற்றிக் கொள்வதற்கு உதவி யாக வசதியான அறையும், நீச்சல் குளத்தைப் பார்வை யிட்டவாறு பார்வையாளர் அமர்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. நீச்சல் குளங்களுக்குப் புதிய சுத்தமான தண்ணீரைத் தொடர்ந்து செலுத்தவும், அடிக்கடி தண் ணீரை மாற்றவும் தக்க ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அடுத்து, குழாத்திலிருந்து சேத்துப்பட்டு ரெயில்வே பாலம் வரை சுமார் 5½ மைல்களுக்குள் வெல்லிங்டன் பாலம் ஹாரிஸ் பாலம் கலைக்கல்லூரிப் பாலம், வாலாசா பாலம், கல்லூரிப் பாலம், கமான்டர் இன் சீப் பாலம், சேத்துப்பட்டு ரெயில்வே பாலம் ஆகிய எட்டு இடங்களிலும் படகுத் துறை கள் கட்டப்படுகின்றன. இத் துறைகளில் பயணிகள் ஏறவும் இறங்கவும், சிற்றுண்டிகள் பெறவும் வசதிகள் செய்யப் பட்டு வருகின்றன.

படகுகளின் வசதியான ஓட் டத்திற்காகப் பாலங்களிலும் படகுத் துறைகளிலும் மின் வசதிகள் செய்யப்படுகின்றன. கூவம் நதியின் இரு மருங்கிலும் மின் விளக்குகள் பொருத்தப் படுவதற்கான பணிகள் நடை பெறுகின்றன.

ஜெர்மன் குடியரசைச் சார்ந்த ஹாலி மாநகராட்சி யினால் அன்பளிப்பாகத் தரப் பட்ட ஒரு மாபெரும் அழகிய செயற்கை நீரூற்றுக் குழாய் நேப்பியர் பாலத்துக்கு அருகில் அமைக்கப்படுகிறது. இந்தச் செயற்கை நீரூற்று 300 அடி உயரத்திற்கு மேல் நோக்கிப் பாயவல்லது. இதில்பொருத்தப் படும் வண்ண மின் விளக்குகளின் ஒளியும், அவ்வொளியில் இந் நீரூற்று இயங்கும் அழகும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந் தூட்டும் என்பதில் ஐயமில்லை.

கூவத்தின் வட சிறகிலும் அண்ணா சதுக்கத்திலும் அழகிய பூங்காக்களும் புல்வெளிகளும் நீர்ச்சுனைகளும் நிறுவப்பட் டுள்ளன. நகரின் அழகுக்கு அழகு சேர்க்க நடமாடும் சிற் றுண்டி விடுதியும், பூங்காக் களும், பொழுதுபோக்கு விடுதி களும் அமைப்பதற்காக வட சிறகின் ஒரு பகுதி தமிழ் நாடு உல்லாசப் பயண அபிவிருத்தி இணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரின் சாபக் கேடாகக் கருதப்பட்ட கூவம் நதி, சென்னைக்குக் கிடைத்த பெரும்பேறாகக் கருதப்படக் கூடிய வகையில் விரைந்து மாற்றப்பட்டுவருகிறது.

அண்மையில், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்களும், தமிழ் நாடு சுற்றுலாத்துறை-பிற்பட் டோர் நலத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர் களும் கூவம் நதியில் படகுப் பயணம் செய்து பாராட்டி யுள்ளனர்.

சூலை மூன்றாவது வாரத்தில் பெரும்பாலும் படகுப் பயணம் செய்வதற்கான முயற்சிகள் மிக விரைவாக மேற் கொள்ளப் பட்டுள்ளன.

கூவம் நதியில் நாம் இயந்திரப் படகு, துடுப்புப் படகு, காலால் சுழற்றிச் செலுத்தும் படகு ஆகிய மூன்று வகையான படகு களில் பயணம் செய்யலாம். இப்போதைக்குச் சுமார் 15 படகுகள் விடப்பட இருக் கின்றன. பேரறிஞர் அண்ணா விரும்பியதற்கிணங்க, சென்னை யின் கூவம் இங்கிலாந்தின் 'தேம்ஸ்' ஆக மாறிக் கொண் டிருக்கிறது.

ஆம்!

'கூவம்நதியின்மிசை
நிலவினிலே
கொஞ்சும்தமிழ் இளைஞர்
கூட்டத்துடனே
பாவலர் தமிழினில்
பாட்டிசைத்துப்
படகுகள் ஓட்டிவிளை
யாடிவருவோம்'

என்ற கலைஞரின் கற்கண்டுக் கவிதையைப் பாடி மகிழ்ந்த வண்ணம் நாம் கூவம் நதியில் உல்லாசப் படகுப்பயணம் மேற்கொள்வோமாக!





# காய்கறி
# சாகுபடியாளர்களே!
# புழுபூச்சிகள் உங்கள்
# இலாபங்களைத்
# தின்பதை இனி
# நீங்கள் தவிர்க்கலாம்

**ஸைதியான்** புழுபூச்சிகளினால் உண்டாகும்

ப்ரீமியம் கிரேட் மலாதியான்

## சேதத்திலிருந்து பயிர்களை சக்தி வாய்ந்த முறையில் பாதுகாக்கிறது

ஏனெனில் **ஸைதியான்** ஒரு சாதாரண பூச்சிக் கொல்லியல்ல,
புழு பூச்சிகளினால் ஏற்படும் ஈடு செய்ய முடியாத
சேதத்திலிருந்து உங்கள் காய்கறிச் செடிகளையும்,
இலாபத்தையும் பாதுகாக்கிறது.

**ஸைதியான்** பட்டவுடனே புழுபூச்சிகள் மடிகின்றன,
உங்கள் காய்கறிச் செடிகள் சொல்லத்தரமற்ற சேதத்தி
லிருந்து தப்பிக்கின்றன. **ஸைதியான்** வண்டல்களை
விட்டுவைப்பதில்லை. பயிர்ச் செழுமைக்கு உகந்த
பூச்சிக் கொல்லி...**ஸைதியான்**...நூற்றுக்கு
மேற்பட்ட புழுபூச்சி வகைகளினால் பாதிக்கப்படும்
தொண்ணூறுக்கு மேற்பட்ட பயிர்வகைகளைப்
பாதுகாக்கும், பலகாரிய பூச்சிக் கொல்லி.




CYANAMID ***உலகெங்கும் விவசாயத்திற்கு சேவை செய்கிறது***

விவசாயப் பிரிவு
ஸயனமைட் இந்தியா லிமிடெட்
த.பெ. எண் 9109, பம்பாய்-25

SISTA'S-CIL-372TAM




இருக்கின்ற வாய்ப்புகளைப் பொறுத்துத் திறமைக்கு ஏற்ற வேலையைப் பெற இளைஞர்களுக்கு வழி காட்டுவது என்பது ஒரு சீரிய குறிக்கோள். சிந்தனையாளர்கள் பலராலும் போற்றப் பட்ட கருத்து இது. ஆனால், நடைமுறையில் இவ்வகையில் முறையான பணி அண்மைக் காலத்தில் தான் தொடங்கப்பட்டது.

நாட்டில் எந்தெந்த வகை வேலைகள் அல்லது தொழில்களுக்கு அதிகத் தேவை இருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு தனி ஒரு நபரின் இயல்பு, மனப்பாங்கு, ஆற்றல் ஆகியவைகளுக்கு ஏற்ப வேலைக்கும் முன்னேற்றத்துக்கும் ஆலோசனை கூறுவதே, வேலையைத் தெரிந்தெடுத்துக் கொள்ள உதவும் அமைப்பின் நோக்கமாகும். வேலையின் மூலம் திறமையை வளர்த்துக் கொண்டு அதன் மூலம் மனநிறைவு கண்டு அதே நேரத்தில் தேசிய ஆள் பலத்தை மிகப் பயனுள்ள முறையில் ஈடுபடுத்திக் கொள்வது இத்திட்டத்தின் அடிப்படையான அம்சம் ஆகும்.

**ஆள்பலம் வீணுக்கலாமா ?**

ஒரு நாட்டின் பொருளாதார வளத்தை மேம்படுத்துவதற்கு, நாட்டினுடைய மூலப் பொருட்கள், தொழில் நுட்ப வசதிகள், நிதிவசதிகள் ஆகியவைகளைத் திட்டமிட்ட முறையில் பயன்படுத்திக் கொள்வது இன்றியமையாதது என்பது அனைவரும் அறிந்ததே. இதே வகையில் நாட்டின் ஆள் பலத்தையும் முறையாகத் திட்டமிட்டுப் பயன்படுத்துவது அவசியம் என்பதை, கடந்த 20-30 ஆண்டுகளாகவே பல்வேறு நாடுகளின் அரசுகளும் உணரலாயின.

மக்கள் தொகை மிக அதிகமாக உள்ள இந்தியா போன்ற நாடுகளில், தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள், முறையான தொழில்வகைத் தேர்ச்சி பெற்றவர்கள் பற்றாக்குறையாக இருக்கும் நிலை ஒரு பக்கமும், ஆள் பலம் உபரியாக இருக்கும் நிலை மற்றொரு பக்கமுமாக இருப்பதனால், ஆள் பலத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்திக் கொள்கின்ற பணி அதிக முக்கியத்துவம் பெறுகின்றது.

**வளரும் வாய்ப்புகள்**

வளர்ச்சியடைந்து வருகின்ற ஒரு நாட்டில், படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பரவியிருக்கின்ற, நிலைமையானது பலத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்தாத குறையையே குறிப்பிட்டுக் காட்டுகிறது. பல தொழில்களில், தொழில் நுட்ப நபர்களும் தொழில் பயிற்சி பெற்றவர்களும் பற்றாக்குறையாக இருக்கும் நிலையைப் பார்க்கும் போது, இவ்வகையில் நமது குறைபாடு நன்கு பளிச்செனத் தெரிகிறது.

தொழில் நுட்ப முன்னேற்றம் புதிய தொழில்கள் கண்டுபிடிப்பு, புதிய தொழில்கள் வளர்ச்சி, புதிய முயற்சிகள் புது வகை வேலைகள், ஏற்கெனவே உள்ள வேலைகளில் மாற்றங்கள் முதலியவற்றின் விளைவாக, இன்று தேவைப்படும், சில தொழில் நுட்பங்களும் சில உத்திகளும் மிக விரைவில் பயனற்றுப் போகும் நிலை ஏற்படலாம். எனவே, நாட்டின் ஆள் பலத் தேவைக்குக் கல்வி தொழில் பயிற்சித் திட்டங்களுக்கிடையே துல்லியமானதோர் சமநிலையைக் கண்டாக வேண்டியிருக்கிறது.

**ஏதோ ஒரு வேலை**

தெரிந்தோ தெரியாமலோ, நாட்டின் இளைஞர்கள் பலரும், இளம் பெண்கள் பலரும் தொலை நோக்குடன் சிந்திக்காமல் ஏதாவது ஒரு வேலையை மேற்கொண்டு விடுகின்றனர். இந்த வேலை தங்கள் வருங்கால வாழ்க்கை விதியோடு பிணைப்புடையது என்பதைப் பலர் எண்ணிப் பார்ப்பதில்லை. ஏதோ வேலை கிடைத்தது என்கின்ற முறையிலோ தங்கள் பெற்றோர், நண்பர்கள் ஆகியவர்களின் சொற்படியோ, ஒரு வேலையை மேற்கொண்டு விடுகின்றனர். அந்த நேரத்தில் அவர்கள் தங்களுக்குரிய ஆற்றல், மனப்பாங்கு ஆகியவைகளை வைத்து எண்ணிப் பார்த்து ஒரு முடிவு செய்யாமல், அப்போதைய நிலையை ஒட்டி முடிவுக்கு வந்துவிடுகின்றனர்.

**திறனுக்கு ஏற்ற வேலை**

வேலையில்லாத் திண்டாட்டம் இப்போது ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பள்ளிப் படிப்பை அல்லது கல்லூரிப் படிப்பை முடித்து விட்டு வரும் இளைஞர்களில் எண்ணற்ற பேர்களுக்குத் தாங்கள் என்ன வேலைக்குத் தகுதியானவர்கள் என்பது தெரியாது. தங்கள் வருங்காலத்தைத் திட்டமிட்ட முறையில் அமைத்துக் கொள்ள அவர்களுக்குச் சரியான வழி காட்டுவோரும் கிடையாது. இப்படிப் பட்ட ஓர் இக்கட்டான நிலைமையைச் சமாளிக்க முற்படும் போது தான் "வேலையைத் தெரிந்தெடுத்துக் கொள்ள உதவும் அமைப்பு (Vocational guidance) ஓர் அரிய கருவியாக வந்து உதவுகின்றது. வேலைகளைப் பற்றி தெரியவரும் விவரங்களை எல்லாம் புரிந்துகொண்டு கிடைக்கின்ற பயிற்சி வசதிகளையும், தமது விருப்பம், திறன், உளப்பாங்கு ஆகியவைகளையும் கருத்தில் கொண்டு, இளைஞர்கள் தத்தமக்கு உரிய வேலையைத் தெரிந்தெடுத்துக் கொள்ள இந்த அமைப்பு வழிவகை காட்டுகின்றது. ஒரு தொழிலை அல்லது வேலையைப் பற்றி நன்கு சிந்திக்க வைத்து, இன்னும் அதிகப் பொருத்தமான, திருப்தியான வேலையை ஒருவர் நாடலாமா என்று துருவித் தேடிடவும் இது உதவுகின்றது.

இப்படி வழி காட்டுகின்ற இந்த அமைப்பினால் குறிப்பிட்ட வேலை அல்லது தொழில் பற்றிய எல்லா விவரங்களையும் துல்லியமாக உணர்ந்து கொள்ளவும் தமது உளப்பாங்கு, திறன், மன ஈடுபாடு ஆகியவைகளைப் புரிந்து கொள்ளவும் முடிகின்றது. இந்த நிலைமையை அனுசரித்து வழி காட்டுவதும் எளிதாகின்றது. இப்படி வழி சொல்லும்போது, நியமன வாய்ப்புக் கிடைக்கக்

கூடிய வேலைகளாகப் பார்த்துச் சொல்லுவதும் முக்கியம்.

### மாவட்டங்களில் பணி

திறமைக்கு ஏற்ற வேலையைத் தெரிந்தெடுத்துக் கொள்வதில் உதவும் பணி தமிழ்நாட்டில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தான் தொடங்கியது. இந்தப் புதிய முயற்சிக்கு ஓரளவு முன்னோடியாக இருந்த அமைப்பு, வேலை வசதிப் பயிற்சித் துறையாகும். தேசிய வேலை வாய்ப்பு அமைப்புகள் உள்ள வேலை வழிகாட்டும் பிரிவு, அந்த அமைப்பின் ஒரு முக்கிய உறுப்பாக விளங்கி இளைஞர்களும் வயது வந்தவர்களும் தங்களுக்குரிய வேலையைத் தெரிந்தெடுத்துக் கொள்ள உதவுகின்றது. தமிழகத்தில் வேலை வழிகாட்டும் பிரிவுகள், மாவட்டங்களில் (தருமபுரி, நீலகிரி நீங்கலாக) மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெற்ற அலுவலர்கள் இவற்றில் பணியாற்றுகிறார்கள்.

### சில உத்திகள் நியதிகள்

திறமைக்கு ஏற்ற வேலையைக் குறிப்பிட்டு வழி காட்டுவது என்பது சிக்கல்கள் பல நிறைந்த ஒரு நடைமுறையாகும். இப்பணியில் முழு நிறைவு தரும் வகையில் செயல்முடிப்பது எளிதல்ல. ஒரு தனி நபரை எடுத்துக் கொண்டால் கூட, அவரது குண இயல்புகள், திறன்கள் ஆகியவைகளில் எத்தனையோ முரண்பாடுகள் உள்ளன என்பதைக் கவனிக்கும் போது, இச்சிக்கல்களின் தன்மையை ஒருவாறு உணரலாம். ஆனாலும் கூடப் பல ஆண்டுக்காலமாக நடந்த முயற்சிகளின் பலனாகச் சில திட்டவட்டமான உத்திகள் அல்லது நியதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த உத்திகள் அல்லது நியதிகள் நல்ல பலன் தரக்கூடியவை என்பது நிரூபணமாகியும் இருக்கின்றது.

இந்த உத்திகள், நியதிகளைப் பொதுப் படையாகப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

1. இளைஞர்களை ஒரு தொகுதியாக வைத்து ஆலோசனை வழி வகை கூறுவது.

2. தனிப்பட்ட முறையில் ஆலோசனை, வழி வகை கூறுவது.

### தொகுதியாக வைத்து யோசனை

இதில் தொகுதியாக வைத்து ஆலோசனை பல கூறுவதைப் பொறுத்தவரை, வேலை தேடி வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு வருவோரை வைத்து, ஒவ்வொரு நாள் காலையில் வேலை நிலவரங்கள் பற்றிப் பொதுப்படையாக உள்ள நிலைமைகளையும் வாய்ப்புகளையும் எடுத்துரைக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் ஆலோசனை கூறும் போது அந்தத் தனிப்பட்ட நபரின் இயல்புகள், மதிநுட்பம், கல்வி, திறன்கள், ஆர்வம், அவரது உடல் கூறுத் தன்மைகள், குடும்ப நிலைமை ஆகியவைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப வேலைவாய்ப்புகள் எடுத்துரைக்கப்படுகின்றன. அதுபோகத் தகவல் விளக்கம் தரப்படுகிறது. வேலை வாய்ப்புகள் பற்றிய வெளியீடுகளும் வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் வேலை வாய்ப்பு அலுவலகப் பணிகள், அதிகமான பயனும் சிறப்பும் உடையவையாக ஆகின்றன.

மாநில வேலை வாய்ப்புப் பயிற்சி இயக்குநரகத்தோடு இணைந்த மாநில வேலை வழிகாட்டும் பிரிவு, மாவட்டங்களில் நடக்கும் இப்பணியை ஒருமுகப்படுத்திப் புது டில்லியில் உள்ள வேலைவாய்ப்பு டைரக்டர் ஜெனரல் வகுக்கப்பட்ட கொள்கைகளைச் செயல்படுத்துவதில் உதவுகின்றது. மாவட்டங்களில் நடைபெறும் வேலைகள் அவ்வப்போது கண்காணிக்கப்படுகின்றன. மாவட்டங்களில் அவ்வப்போது வேலைவாய்ப்பு சம்பந்தப்பட்ட பொருட்காட்சிகள் நடத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. அலுவலகங்களுக்கு வேண்டுமான கையேடுகள், நூல்கள் வெளியிடப்படுகின்றன.

### திறனை அறிய ஆய்வுத் தேர்வு

வேலை வழி காட்டும் அலுவல் பிரிவின் சிறப்புப் பணிகளில் குறிப்பிடத் தக்க ஒன்று, தொழிற் பயிற்சி நிறுவனங்களில், திறனை மதிப்பிடும் தேர்வுகள் நடத்துவதாகும். ஆண்டுதோறும் ஜூலை மாதத்தில் இந்த ஆய்வு முறைத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர முன்வரும் ஆயிரக் கணக்கான மனுதாரர்களை வைத்து இந்த ஆய்வுத் தேர்வு நடத்துவதால், ஏற்ற திறனும், உரிய செயற்பாங்கும் உள்ளவர்களைத் தெரிந்தெடுக்க வழி ஏற்படுகின்றது. தனிப்பட்ட தொழில் நிருவாகிகளும் கூடச் சரியான நபர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள இந்தப் பிரிவு ஆய்வுத் தேர்வு நடத்தி உதவுகின்றது.



## அதிசயப் பூட்டு

**வீட்டைப்** பூட்டிக்கொண்டு வெளியே சென்று சாவியைத் தொலைத்துவிட்டு அவதிப்படுவோர் அநேகம் பேர். இவர்களை மனத்தில் கொண்டு பிரிட்டனில் ஒரு புதிய பூட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சாவியே தேவையில்லை. எனவே, தொலைத்து விடும் பயம் இல்லை.

சுமார் ஆறு அங்குல நீளம் இரண்டு அங்குல அகலத்தில் இருக்கும் இந்தப் பூட்டைக் கதவோடு பொருத்திக் கொள்ளலாம். இதில் மேலிருந்து கீழாக ஒன்று முதல் 10 வரையில் எண்கள் உள்ள பித்தான்கள் உண்டு. ஒவ்வொரு பூட்டும் பூட்டிக்கொள்ளவும், பூட்டிய பிறகு திறந்து கொள்ளவும் ஒரு இரகசிய எண் உண்டு. பூட்டிக் கொண்டு வெளியே சென்ற பிறகு வீட்டுக்குத் திரும்பி, அந்த இரகசிய எண்ணை அமுக்கினால் பூட்டு திறந்து கொள்கிறது.

இதில் வேறு சில உத்தரவாதங்களும் உண்டு. இரகசிய எண் என்ன என்று தெரியாமல் யாரும் இதனைத் திறக்க முடியாது. வெவ்வேறு எண்களை அமுக்கி முயற்சி செய்யலாம் என்பது இதனிடம் பலிக்காது. தவறான எண் ஒரு முறை அமுக்கப்பட்டாலும் உடனே எச்சரிக்கை மணி ஒன்று ஒலிக்க ஆரம்பிக்கும். வீட்டின் உள்ளே இருக்கும் விசையை இயக்கும் வரை இந்த மணி ஒலித்துக்கொண்டே இருக்கும். அதுமட்டுமல்ல, இந்தப் பூட்டை உடைக்கவோ அல்லது இதன் இணைப்பைத் துண்டிக்கவோ முயற்சி செய்தாலும் இதே போல் எச்சரிக்கை மணி ஒலிக்கும்.

இந்தப் பூட்டிற்குள்ளேயே ஒரு பாட்டரியும் உண்டு. சாதாரணமாக மின்சார இணைப்புடன் இருக்கும் இந்தப் பூட்டு, மின் சப்ளை நின்று விட்டால் தானாகவே பாட்டரியால் இயங்க ஆரம்பிக்கிறது.

பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று தயாரித்துள்ள இந்தப் பூட்டு, தற்போது லண்டனில் நடைபெற்றுவரும் 'பத்திரங்களுக்கான சாதனங்கள்' கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது.

# கல்வெட்டுக் காட்டிடும் வீரம்

**நடன. காசிநாதன். எம். ஏ.**

தமிழ்நாட்டு மக்களின் வாழ்வு பழங்காலத்தில் அகம் புறம் என்ற கூறுகளின் அடிப்படையிலேயே அமைந்திருந்து என்பதை இலக்கியங்கள் மூலமாக உணர முடிகிறது. அகவாழ்விலே திளைத்து இல்லறத்தைப் போற்றியவர்கள் புறவாழ்விலும் நாட்டம் செலுத்தி வெற்றிகளை விளைவித்திருக்கிறார்கள்.

வெற்றியென்பது அடுகளத்தில் கடுகிப் பாயும் வீரமறவனை எதிர் நின்று தாக்கி வீழ்த்துவது மட்டுமல்ல. அந்தக் களத்திலே பாய்ந்து வரும் மதயானையையும் தாக்க வேண்டும். காடுகளிலே உலவுகின்ற விலங்குகளிலே துன்பம் விளைவிக்கின்ற கொடிய விலங்குகளான அரிமா, புலி ஆகியவைகளோடு போரிட்டு சாகடிப்பதிலும் வெற்றி தோய்ந்திருக்கிறது. இம்மாதிரியான சில நிகழ்ச்சிகளையும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் தானிப்பாடி வட்டாரத்தில், தானிப்பாடியிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் மோத்தக்கல் என்று ஒரு சிற்றூர் இருக்கிறது. இவ்வூரைத் தாண்டி ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்றால் தருமபுரி மாவட்டத்தின் எல்லை வந்து விடுகிறது. இந்த ஊரைச் சுற்றிலும் பெருங்குன்றுகள் காணப்படுகின்றன.

ஊரின் தென் கிழக்கே ஒரு மூங்கில் காட்டில் இரு நடுகற்கள் காணப்படுகின்றன. இரண்டும் பக்கத்துப் பக்கத்தில் அமைந்துள்ளன. இரண்டிலும் வட்டெழுத்தில் கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்றுள்ளன. இக்கல்வெட்டுகள் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் காலத்தைச் சார்ந்ததாகும். அதாவது இன்றைக்கு 1,300 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் எழுதப் பெற்றதாகும்.

மகேந்திரவர்மனின் முப்பத்திரண்டாம் ஆட்சி ஆண்டில் சிற்றரசன் ஒருவன் மற்றொரு சிற்றரசரோடு போர் தொடுக்க விரும்புகிறான். அதனைத் தெரிவிக்கும் அறிகுறியாக மாற்றரசனின் ஆநிரைகளைக் கவர்ந்து வரும்படி ஆணை பிறப்பிக்கிறான். ஆணையை ஏற்றுப் போர் வீரர்கள் சென்று ஆநிரைகளைக் கவர்கின்றனர். மாற்றரசனின் போர் வீரர்கள் இவர்கள் கவரா வண்ணம் காக்கின்றனர். கடும் போர் ஒன்று நிகழ்கிறது. வீரனொருவன் களச் சாவடைகிறான். அவனுக்கு வீரக்கல் நடப்படுகிறது. அவ்வீரன் அக்கந்தை கோடன் என்றும் அவனது மன்னன் பொன்மோதனார் என்றும் ஒரு நடுகல் உணர்த்துகிறது.



இரண்டாம் நடுகல் கூறும் செய்திதான் இதயத்தைத் தொடுகிறது. இங்குப் போர் நிகழவில்லை. புலியொன்று ஊர் நடுவே வருகிறது. வீரர்கள் பலர் ஆயுதம் ஏந்துகின்றனர், புறப்பட்டு விட்ட வரிப் புலியை வீழ்த்த. அவர்களிலே ஒருவன் தலைமையேற்கின்றான். புலியைத் தன் கத்தியால் குத்தித் தரையிலே சாய்க்கின்றான். தானும் தரையிலே சாய்கின்றான். அவனையும் ஊரார் மறந்தாரில்லை. நடுகல் எடுத்தனர். நாடோறும் விழா நடத்தினர் அவனது நினைவாக. அவன் பெயர் வின்றன் வடுகன். அவனது மன்னனும் பொன் மோதனார்தான். இந்த நடுகல்லில் காணப்படும் செய்தி :

''கோவிசைய மயேந்திர பருமற்கு முப்பத்திரண்டாவது பொன்மோதனார் சேவகன் வின்றன் வடுகன் புலிகுத்திப்பட்டான் கல்''.

வட ஆர்க்காடு மாவட்டம் கீழ்முட்டுகூரில் கிடைத்த மற்றொரு நடுகல் சோழ மன்னன் பராந்தகனின் காலத்தில் நிகழ்ந்த ஒரு வீரச்செயலை விவரிக்கிறது. இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கீழ் முட்டுகூர் என்று வழங்கும் இவ்வூர், முட்டுகூர் என்று அழைக்கப்பெற்றிருக்கிறது. இந்த ஊரைச் சார்ந்த குமாரந்தை புழவன் என்பான் போருக்குப் புறப்படுகிறான்.

போர் வீரர்களுக்குப் பதிலாகப் புலி ஒன்று தென்படுகிறது. எதிரில் புறப்பட்டவன் மறவனல்லவா! அதனால் வரிப்புலியை வீழ்த்துவதும் தனக்குப் பெருமைதான் என்று கருதுகிறான். கையிலோ சிறு குறுவாளைத் தவிர வேறெதுவும் வைத்திருக்கவில்லை. அதற்காகப் பின்வாங்கிடவும் அவசர மனம் ஒப்பவில்லை. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமல்லவா? குறுவாளை நிமிர்த்திப் பிடிக்கிறான். புலி மீது பாய்ந்து தாவுகிறான். புலியின் மீது அமர்ந்து கொண்டு வாயைப் பிடித்துக் கிழிக்க முற்படுகிறான். புலியும் விடவில்லை. அவனைப் புரட்டியெடுக்கிறது. தனது நகங்களினாலும், பற்களாலும் மறவனின் மார்பினும், முகத்திலும் விழுப்புண்களைப் படுத்துகிறது. குருதி வடிகிறது. குமாரந்தைக்கு அப்பொழுதுதான் கோபாவேசம் ஏற்படுகிறது. தனது முழு

வலிமையையும் பயன்படுத்தி புலியைச் சாய்க்கின்றான். புலி மடிகிறது. வெற்றிக் களிப்பிலே வீரன் உழலுகிறான். உடல் தீப்பிழம்பாய்க் காட்சியளிக்கிறது. உணர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தடுமாறுகின்றன. தனது நிலையும் தடுமாறுகிறது. கீழே விழுகின்றான், வெற்றிப் பெருமிதத்தோடு. அவனுக்கும் கல் நடப்படுகிறது. இந்நிகழ்ச்சி தில்லைக் கூத்த பிரானின் திருச்சபைக்குப் பொன் கூரை வேய்ந்த சோழ மன்னன் முதலாம் பராந்தகனின் காலத்தில் நடைபெற்றுள்ளது. நாட்டப்பட்டிருக்கும் நடு கல்லில் காணப்படுபவை:

‘‘ஸ்ரீ மதிரை கொண்ட கோப்பர கேசரி பத்மற்கு யாண்டு முப்பத்து இரண்டாவது வடகரை முக்கூட்டூர் குமாரநந்தை புழவன் புலி குத்திந கன்னாடு’’.

தகடூர் மாவட்டம், நவலை என்ற ஊரில் உள்ள கிளியேரியின் ஓரத்தில் காணப் பெறும் நடுகல் மற்றொரு வீரச் செயலைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இங்கு வீரன் புலியோடு பொருதவில்லை. குதிரையோடு மோதுகிறான். குதிரையைக் குத்திச் சாகடித்து விட்டுத் தானும் வீர மரணம் எய்துகிறான். சேலம், தருமபுரி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதி கொங்குநாடு என வழங்கப் பெற்றது. அப்பகுதியைக் கங்க அரசர்கள் ஆண்டு வந்தனர். அவர்கள் பல்லவ மன்னர்களிடத்துத் திறை செலுத்தி வாழ்ந்து வந்தனர். ஸ்ரீ புருஷன், சிவமாறன் போன்ற அரசர்கள், அவர்களில் மிகவும் புகழ் பெற்றவர்கள். இம்மன்னர்களுள் ஒருவர் கங்க நாடு, கோயிலூர் நாடு, வேளாளநாடு, கோவூர்நாடு, எயில்நாடு, புறமலைநாடு, அதியனூர்நாடு ஆகிய பகுதிகளை ஆண்டு வருகையில் இம்மன்னனின் வீரன் பூங்குடி வடுகன் வடவல்லூர் என்ற ஊரைத் தாக்குவதற்குப் புரவி மீதேறி வருகிறான், அவனை எதிர்த்திட வடவல்லூரைச் சார்ந்த வீரனும் குதிரை மீது வருகிறான். இருவருக்கும் போர் நிகழ்கிறது. எதிரி மடிகிறான் முதலில். பின்னர் குதிரை அவனை எதிர்த்துப் போராடுகிறது. அதையும் குத்தி வீழ்த்துகிறான். தானும் களச் சாவை அணைக்கிறான். அந்த வீரனின் ஆண்மையைப் பாராட்டிக் கல் ஒன்று நடப்படுகிறது. அதில் குறிக்கப்பட்டிருப்பவை :



‘‘ஸ்ரீ ................பர்க்கு யாண்டு பதினேழாவது கங்க நாடும், கோயிலூர் நாடும், வேளாள நாடும், கோவூர் நாடும், எயில் நாடும், புறமலை நாடும், அதியனூர் நாடும் ஆளாநிற்க இத்தரை யான்று இக்குதிரையோடு வந்து வடவல்லூர் எறிந்த ஞான்று குதிரைகுத்தி பட்டான் பூங்குடி வடுகன்’’.

வீரச் செயல் புரிந்து மரணம் எய்திய வீரர்களின் குடும்பங்களுக்கு, இன்று அரசு உதவி செய்வது போன்று அன்றும் அரசர்கள் நிலம் போன்றவற்றைப் பரிசாக அளித்து வந்திருக்கின்றனர். அவ்வாறு அளிக்கப்பெற்ற நிலங்கள் ‘‘உதிரப்பட்டி’’ என்று கல்வெட்டுகளிலே காணப்படுகிறது.

## மீனோ மீன் !

### மலை விழுங்கி

தன்னைவிட மிகப் பெரிய மீனை விழுங்கும் ஒருவகை மீன் உண்டு. இதைக் கரும் விழுங்கி என்று கூறலாம். இது ஆழ நெடுங்கடலில் வாழும் சிறுமீன். இது ஏனைய மீன்களையே உண்டு வாழும். தன்னினும் மிகப் பெரிய மீனையும் எளிதில் விழுங்கிவிடும். இதன் வாயும் வயிறும் மிகப் பெரிய அளவில் விரிந்து கொடுக்கும் இயல்பின.

### வாள் மீன்

1,100 இராத்தல் கனமும், 15 அடி நீளமும் உள்ளது. முழு வளர்ச்சி பெற்றது வாள் மீன். இதன் வாள் போன்ற உறுப்பு மிக்க வலிமையும் நீளமும் வாய்ந்தது ; சிறிய படகைச் சின்னா பின்னமாக்கும் ஆற்றலும், வலிமையும் இந்த வாள் மீனுக்கு உண்டு.

### படகு மீன்

படகு மீனுக்கும் வாள் மீனுக்கும் இருப்பது போன்ற ஓர் உறுப்புண்டு ; ஆனால், இது மிகச் சிறிய மீன். விரைந்து நீந்தும் இயல்புடையது. மிக்க அழகு வாய்ந்தது. இதன் கனம் இரு நூறு இராத்தலுக்கும் மேற்பட்டது.

### கடற்கதிரவன் மீன்

இதைத் தலைமீன் என அழைக்கின்றார்கள். ஏனென்றால் இதன் உருவத்தின் பெரும் பகுதி தலையாகவே இருக்கிறது. முழு வளர்ச்சி பெற்ற கடற் கதிரவ மீன் 2,000 இராத்தல் எடையுள்ளதாயிருக்கும். இதன் உருவத்தைப் பார்த்த உடனேயே விரைவில் நீந்த முடியாத மீனென இதைச் சொல்லி விடலாம்.

### மின்சார விலாங்கு

மின் அதிர்ச்சி ஊட்டும் மீன்கள் பல உண்டு. இதனால் தன் எதிரிகளை இவை தாக்கும். தென் அமெரிக்காவில் வாழும் இம்மீனின் மின் தாக்குதல் மிகக் கொடியது. ஒரு குதிரையையும் தன் மின் ஆற்றலால் தாக்கி நிறுத்தும் வலிமை இந்த மீனுக்கு உண்டு.

# களஞ்சியம் நிரப்பிடக் "கரிகாலன்" வந்து விட்டான்!




உழவர் பெருமக்களே! உங்கள் களஞ்சியத்தை நிரப்பிடக் '' கரிகாலன் '' வந்து விட்டான்.

ஆம், உங்கள் களஞ்சியங்கள் நிரம்பிடவும், அதன் பயனுய் உங்கள் வாழ்வு உயரவும் வேண்டித் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை '' கரிகாலன் '' என்ற ஒரு புதிய உயர் விளைச்சல் தரும் நெல் ரகத்தை வெளியிட்டுள்ளது.

கரிகாற் சோழன் காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கினுன்; காவிரியின் இருமருங்கும் பெருங் கரை அமைத்தான்; கல்லணையைக் கட்டிக் காவிரியின் வெள்ளத்தை வாய்க்கால் வழியே செலுத்தி, உழவுத் தொழிலை விழுமிய தாக்கினுன். கரிகாலன் காலத்திலே ''சோழ வளநாடு சோறுடைத்து '' என்ற பெயர் பெற்றிருந்தது. அவனது அரும்பெரும் செயல்களை நினைவு கூறும் முகத்தான், ஆடுதுறையில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட '' ஆடுதுறை—29 '' என்ற ரகத்திற்குத் தமிழ் நாடு வேளாண்மை அமைச்சர் திரு மன்னை ப. நாராயண சாமி அவர்கள் '' கரிகாலன் '' என்று பெயரிட்டுள்ளார்.

கரிகாற் சோழனுல் உழவர் பெருமக்கள் உயர்வு பெற்றது போலவே, '' கரிகாலன் '' என்ற புதிய உயர் விளைச்சல் தரும் நெல் ரகத்தாலும் உழவர் பெருமக்கள் உயர்வடைவர் என்பது திண்ணம்.

### '' கரிகாலன் '' சிறப்புகள்

*கோ-33 ரகத்தைவிட 19 சதம் அதிக விளைச்சல் கொடுப்பான் '' கரிகாலன் ''.

*'' கரிகாலன் '' ஆடுதுறை 27 போல் கீழே சாய்ந்து விடமாட்டான்.

*கோ-33 ரகத்தைவிட 19·8 சதம் அதிக வைக்கோல் மகசூல் கொடுப்பான் " கரிகாலன்.''

*'' கரிகாலன் '' உயரமாக வளர்வதால் ஓரளவு நீர்ப் பிடிப்புப் பகுதிகளுக்கும் ஏற்றது.

*''பேக்டீரியல் இலைக் கருகல் நோய் '' கரிகாலனைத் தாக்காது.

*'' கரிகாலன் '' ரகம் 10·25 சதம் புரதச் சத்துப் பெற்றுள்ளது. (ஆடுதுறை-27-ல் 9·62 சதம் புரதச் சத்து மட்டுமே உள்ளது).

### ''கரிகாலன்'' நெல் பிறந்த கதை

'' ஆடுதுறை-27 '' என்னும் ''ஜப்பானிக்கா இன்டிகா '' ரகம் 1965-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்த ரகத்திற்கு, ஓரளவுக்கு உரமிடுவதற்கு ஏற்ப மகசூல் கொடுக்குந் தன்மையும், நல்ல தரமான அரிசி அளிக்கும் பண்பும் இருந்த போதிலும், அதனுடைய உயரமாக வளரும் தன்மையும், தாள்களில் வலிவிழந்த தன்மையும் (சாய்ந்து விடும் தன்மை) பெருங் கேடு விளைவிப்பனவாக இருந்தன. எனவே, ''ஆடுதுறை-27'' ரகத்தின் தாவரப் பண்புகளை மேம்படுத்த வேண்டும் என்பது ஆராய்ச்சியாளர்களால் உணரப்பட்டது.

அண்மைக் காலத்தில் குட்டையான தன்மையும், சாயாத பண்பும், அதிக அளவு உர மேற்கும் குணமும் கொண்ட '' இண்டிகா '' நெல் ரகங்கள் உலகின் பல பாகங்களில் உருவாக்கப் பெற்றன. அத்தகைய ரகங்களில் ஒன்று '' தைச்சுங் நேட்டிவ்-1 ''. அதுவே, இந்தியாவில் அறிமுகப் படுத்தப்பட்ட முதல் குட்டையான '' இண்டிகா '' ரகமாகும்.

அயல்நாட்டு ரகங்களையும், ஆடுதுறை-27 ரகத்தையும் ஐதராபாத்தில், கரு இணைப்புச் செய்து பல்வேறு கலப்பினங்கள் உருவாக்கப் பெற்றன. அவைகளிலிருந்து கிடைத்த திருந்திய வழித் தோன்றல் வகை விதைகள், ஆடுதுறையில உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்குக் கொண்டு வரப்பெற்று, சிறந்ததை தேர்ந்தெடுக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன. ''தைச்சுங்நேட்டிவ்-1 ''. ரகத்தையும், ஆடுதுறை-27 ரகத்தையும், கரு இணைப்புச் செய்ததால் கிடைத்த வளர்ப்பு 5652 ( Culture 5652 ) என்ற வகை 1967-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப் பெற்றுச் சோதனைகளுக்காக இனப்பெருக்கம் செய்யப்பட்டது.

வளர்ப்பு எண் 5652 என்ற நெல் வகை ஆடுதுறை மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1969—70, 1970—71, 1971—72 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் சோதனை செய்து பார்க்கப் பட்டது. அந்த மூன்ருண்டுக் காலத்திலும், வளர்ப்பு 5652 வகையே, குறுவைச் சாகுபடிக் குத் தரமான ரகமென்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த '' கோ-33 '' ரகத்தைவிடக் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு அதிக மகசூல் அளித்தது.

'' வளர்ப்பு 5652 '' என்ற வகை அங்கு நடைபெற்ற சோதனைகளில் உச்ச அளவுச் சராசரியாக (Highest Mean) ஹெக்டேருக்கு 6,192 கிலோ (ஏக்கருக்கு 2,450·6 கிலோ) மகசூல் அளித்துள்ளது. ஆனுல், '' கோ-33 '' உச்ச அளவு சராசரியாக ஹெக்டேருக்கு 5,201 கிலோ (ஏக்கருக்கு 2,105.6) கிலோ மகசூல் மட்டுமே கொடுத்துள்ளது. அதிலிருந்து '' வளர்ப்பு 5652 '' என்ற வகை நெல், கோ-33 ரகத்தைவிடச் சராசரியாக 19 சதம் அதிக மகசூல் அளிக்க வல்லது என்பது தெரிய வந்தது. சோதனைகளின் முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### அட்டவணை

ஆடுதுறை, மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 1969—70 முதல் 1971—72 வரை நடைபெற்ற மகசூல் ஒப்பீட்டுச் சோதனைகளின் முடிவுகள் :—

| ரகத்தின் பெயர். | உச்ச சராசரி ஹெக்டேர் மகசூல் (கிலோ). |
|---|---|
| வளர்ப்பு 5652 | 6,192 |
| வளர்ப்பு 5524 | 5,724 |
| வளர்ப்பு 7711 | 5,261 |
| பூசா-2·21 .. | 4,694 |
| கோ-33 .. | 5,201 |

ஆடுதுறை மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் வளர்ப்பு 5652 நல்ல மகசூல் அளித்ததால், இது தஞ்சை மாவட்டத்தில் அனுசரணை ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்டது. அனுசரணை ஆராய்ச்சியின் கீழ் முதலாண்டில் (1970–71) தஞ்சை மாவட்டத்தில் உள்ள 12 மாநில விதைப் பண்ணைகளில், ஹெக்டேருக்கு 70 கிலோ தழைச் சத்து, 52·5 கிலோ மணிச் சத்து, 35 கிலோ சாம்பல் சத்து என்ற அளவிலும், ஹெக்டேருக்கு 125 கிலோ தழைச் சத்து, 62·5 கிலோ மணிச் சத்து, 62·5 கிலோ சாம்பல் சத்து என்ற அளவிலும் ஆக இருவேறு உர அளவில் பயிரிட்டுப் பார்க்கப்பட்டது. இருவேறு உர அளவுச் சோதனைகளிலும் வளர்ப்பு 5652 மகசூலில் முதலிடம் வகித்தது. அதன் முடிவுகள் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை**

குறைந்த அளவு (ஹெக்டேருக்கு 75 கிலோ தழைச்சத்து. 52·5 கிலோ மணிச் சத்து, 35 கிலோ சாம்பல் சத்து) உர மிட்டதில் கிடைத்த மகசூல்.

| ரகத்தின் பெயர். | ஹெக்டேர் மகசூல் (கிலோ) |
|---|---|
| வளர்ப்பு 5652 | 4,938 |
| சி.ஆர்.ஐ. 6 | 4,758 |
| ஐ.இ.டி. 400 | 4,528 |
| ஐ.இ.டி. 849 | 4,468 |
| கோ-33 .. | 4,730 |

உயர்ந்த அளவு (ஹெக்டேருக்கு 125 கிலோ தழைச் சத்து, 62·5 கிலோ மணிச் சத்து, 62·5 கிலோ சாம்பல் சத்து) உரமிட்டதில் கிடைத்த மகசூல்.

| ரகத்தின் பெயர். | ஹெக்டே மகசூல் (கிலோ) |
|---|---|
| வளர்ப்பு 5652 | 5,108 |
| சி.ஆர்.ஐ. 6 | 4,780 |
| ஐ.இ.டி. 400 | 5,045 |
| ஐ.இ.டி. 849 | 4,550 |
| கோ-33 .. | 5,103 |

அனுசரணை ஆராய்ச்சியின் இரண்டாம் ஆண்டில் (1971–72) குறுவைப் பட்டத்தில் 70 இடங்களில், உழவர்களின் நிலத்தில் வளர்ப்பு 5652-ஐ சோதனையில் ஈடுபடுத்தப்பட்டது. சோதனையில் ஈடுபடுத்தப்படும் ரகங்களின் பண்பை நன்கு அறிந்து கொள்ளவும், பல்வேறு தரப்பட்ட உழவர்களின் கருத்தறியவும் வேண்டித் தஞ்சை மாவட்ட மெங்கும் பரவலாக இருக்கும் வண்ணம் சோதனைகள் மேற்கொள்ளும் இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அச்சோதனைகளில் கிடைத்த முடிவுகள் கீழ கொடுக்கப்பட்டுள்ளன.

சராசரி மகசூல்

| ரகத்தின் பெயர். | ஹெக்டேர் மகசூல் (கிலோ). |
|---|---|
| வளர்ப்பு 5652 | 5,750 |
| வளர்ப்பு 5524 | 4,990 |
| பூசா-2·21 .. | 5,650 |
| ஐ.ஆர். 22 .. | 5,583 |
| கோ-33 .. | 5,540 |

வயது

| ரகத்தின் பெயர். | மொத்த காலம் (நாட்கள்) |
|---|---|
| வளர்ப்பு 5652 | 110 |
| வளர்ப்பு 5524 | 107 |
| பூசா-2·21 .. | 101 |
| ஐ.ஆர். 22 .. | 120 |
| கோ-33 .. | 105 |

உயரம்

| ரகத்தின் பெயர். | உயரம் (சென்டி மீட்டர்). |
|---|---|
| வளர்ப்பு 5652 | 90 |
| வளர்ப்பு 5524 | 85 |
| பூசா-2·21 .. | 82 |
| ஐ.ஆர். 22 .. | 85 |
| கோ-33 | 75 |

எழுபது இடங்களில் நடைபெற்ற சோதனைகளில் மகசூலைப் பொறுத்த வரையில் 25 இடங்களில் வளர்ப்பு 5652 முதலிடத்தையும், 16 இடங்களில் பூசா-2·21 முதலிடத்தையும், 14 இடங்களில் கோ–33 முதலிடத்தையும் பெற்றுள்ளன. சராசரி மகசூலின் அடிப்படையில் வளர்ப்பு 5652, ஹெக்டேருக்கு 5750 கிலோ மகசூல் கொடுத்து, மற்ற ரகங்களைவிட மகசூலில் மிஞ்சி நின்றுள்ளது. மற்ற ரகங்களைக் காட்டிலும் வளர்ப்பு 5652-ல் மகசூல் வேறுபாடு மிகமிகக் குறைவு. எனவே, இதை உழவர்கள் விரும்புகிறார்கள்.

இதன் வயது 110 நாட்களாக (விதை முதல் விதை வரை) இருப்பதால் குறுவைச் சாகுபடிக்கு மிகவும் ஏற்றது.

மேலும் இது மற்ற ரகங்களைக் காட்டிலும் உயரமாக வளர்கிறது. உழவர்களைப் பொறுத்த வரையில் வைக்கோலும் முக்கிய பொருளாக விளங்குகிறது. வளர்ப்பு 5652-ன் உயரம் 90

## அல்சர் தீர்க்கும் அருமருந்து

"பெப்டிக் அல்சர்" எனப்படும் சீரண உறுப்புகளில் ஏற்படும் புண்களுக்குப் புதிய மருந்து ஒன்று லண்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கார்பனுக்சோலோன் சோடியம் (Carbenoxolone Sodium) எனப்படும் இந்த மருந்து இந்நோயைத் தீர்ப்பதில் மிகச் சிறந்ததாகச் சோதனைகள் மூலம் மெய்ப்பிக்கப் பட்டுள்ளது.

சாதாரணமாக, இந்த நோய் வந்தால் அறுவை சிகிச்சை செய்வதைத் தவிர, வேறு வழியில்லை என்றிருந்த நிலைமையை இப் புதிய மருந்து மாற்றிவிட்டது. கேப்சூல் வடிவில் இப் புதிய மருந்து தயாரிக்கப்படுவதால் அறுவைச் சிகிச்சை தேவையற்றதாகி விடுகிறது.

லண்டனில் உள்ள பயோரெக்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் இந்த மருந்தைக் கண்டுபிடித்துள்ளது. சோதனைகளில் இதன் பயனுள்ள உபயோகம் நிரூபணமாகியுள்ளது.

இப் புதிய மருந்தைக் கண்டுபிடித்த நிறுவனத்தைப் பாராட்டும் வகையில் இந்த ஆண்டு தொழில் துறைச் சாதனங்களுக்கான இங்கிலாந்து அரசியாரின் விருது இந்நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

சென்டி மீட்டராக இருப்பதால் தால், மற்ற ரகங்களைக் காட்டிலும், அதிக அளவு வைக்கோல் கிடைக்கிறது. அதன் விவரம் வருமாறு : —

வைக்கோல் மகசூல்.

| ரகத்தின் பெயர். | ஹெக்டேருக்கு வைக்கோல் மகசூல். (கிலோ) |
|---|---|
| வளர்ப்பு 5652 | 8,098 |
| வளர்ப்பு 5524.. | 8,328 |
| பூசா 2·21 .. | 7,358 |
| ஐ.ஆர். 22 .. | 7,978 |
| கோ. 33 .. | 7,758 |

மேற்கூறிய விவரங்களிலிருந்து கோ 33 ரகத்தைக்காட்டிலும் வளர்ப்பு 5652 நெல் 19·8 சதம் அளவுக்கு அதிக வைக்கோல் கொடுக்கிறது என்பது தெளிவாகிறது.

'' பேக்டீரியல் இலைக் கருகல்'' நோய்த்தாக்குதலை வளர்ப்பு 5652 நன்கு தாங்கிக் கொள்ளுகிறது. ஆனால், '' கோ-33 '' இந்நோயினால் மிகவும் பாதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. பூசா 2·21 ரகமும் இந்நோயினது தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் சக்தி பெற்றுள்ளது.

வளர்ப்பு 5652 நெல், அதிக மகசூல் அளிக்கும் தன்மை, விரும்பத்தக்க பயிர்க் குணங்கள், அதிக உரமேற்கும் பண்பு, நோய் தாங்கும் சக்தி, தரமான அரிசி அளிக்கும் தன்மை ஆகியவைகளைப் பெற்றிருப்பதால் தஞ்சை மாவட்டத்தில் குறுவைப் பட்டத்தில் பயிரிடுவதற்கு ஏற்ற உயர் விளைச்சல் தரும் நெல் ரகமாக இதை வெளியிட, தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை முடிவு செய்தது. ஆனால் ஆடுதுறை, மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் உருவாக்கப் பெற்ற இந்த வளர்ப்பு 5652-ஐ, ஆடுதுறை-29 எனப் பெயரிடத் திட்டமிடப் பெற்றது. இந்த ரகத்திற்கே பின்பு '' கரிகாலன் '' என்று பெயரிடப் பெற்றது.

உங்கள் களஞ்சியம் நிரப்பிட கரிகாலன் வந்துவிட்டான்.

எனவே, உங்கள் களஞ்சியம் நிரம்பிடவும் அதன் பயனாய் உங்கள் வாழ்வை உயர்த்திக் கொள்ளவும், ' கரிகாலன் '' பயிரிடுங்கள் என்று தஞ்சை மாவட்ட உழவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

# தொழிற்சங்கங்களுக்கு அரசின் உதவி

உயர்நீதி மன்றத்தில் வழக்காட வேண்டிய நிலை ஏற்பட்டு அதற்கான சட்டத்துணை தேவைப்படுகிற தொழிற்சங்களுக்கு வழக்குரைஞர் உதவி கிடைக்கத் தமிழக அரசு புதியதொரு திட்டத்தை வகுத்திருக்கிறது.

இப்புதிய உதவித் திட்டத்தையொட்டி அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது.

1. பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு இந்த சட்ட உதவி கிடைக்கும்.

2. ரிட் மனு அல்லது ரிட் அப்பீல் ஒன்றுக்கு ரூ. 150 என்று கட்டணம் வசூலிக்கப்படும்.

3. அரசுக் கெதிராக வழக்காட இம்மாதிரிச் சட்ட உதவி கிடைக்காது.

4. வேலையிழக்கும் தனிப்பட்ட தொழிலாளர் (உயர் நீதி மன்றத்தில்) வழக்காட இந்த உதவி கிடைக்கும். ஆனால் அந்த வழக்கும் அரசுக் கெதிரானதாக இருக்கக்கூடாது.

5. போதுமான நிதிவசதி இல்லாத தொழிற்சங்கங்களுக்கு மட்டுமே இந்தச் சட்ட உதவி கிடைக்கும். அதாவது 500 உறுப்பினர்களுக்கும் குறைவாக இருந்தால் அத்தகைய சங்கங்கள் இந்த உதவியைப் பெறலாம். ஒரு சங்கத்தினர் உறுப்பினர் எண்ணிக்கை 500-க்கு மேல் இருந்தும் அதன் நிதி நிலை சரியில்லாவிடில் இந்தச் சட்ட உதவி கேட்டு அச்சங்கம் அரசுக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய வேண்டுகோள்களை அரசு பரிசீலிக்கும்.

6. சொந்த வழங்குரைஞரை வைத்துக் கொள்ளும் சங்கங்களுக்குச் சட்ட உதவி கிடைக்காது.

7. அரசுத் துறை நிறுவனம் ஒன்றில் உள்ள தொழில் தகராறு பற்றிய வழக்காக இருந்தால் சட்ட உதவி கிடைக்காது.

## பாப் போட்டி—39

கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனாரின் நூற்றுண்டு விழாவையொட்டி அவரது தொண்டுகளைத் தன்னகத்தே கொண்ட நிலைமண்டில ஆசிரியப்பா ஐந்து அடிக்கு மேற்படாதவாறு எழுதி அனுப்ப வேண்டுகிறோம்.

முடிவு நாள் : 1—8—1972

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

பா அனுப்பவேண்டிய முகவரி:—

ஆசிரியர் (பாப் போட்டி),
'' தமிழரசு '' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு :
அஞ்சல் அட்டையில் வரும் பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.



BAYER

## பாயரின் தரமான பூச்சி மருந்துகள்

உபயோகிப்பதன்

மூலம் பூச்சி பூஞ்சாண உபாதை-
களினாலான நஷ்டத்தை
தவிர்க்கிறார்கள்

## நெல் விளைவிக்கும் விவசாயிகள்.

நெல்லில் தோன்றும்
பலவகைப் பூச்சிகளை
சிறந்த வகையில்
மலிவான வழியில்
கட்டுப் படுத்த

**ஃபாலிடால்.**




**ஹீனோஸானை**
உபயோகிப்பதனால்
நெல் குலை நோய்
மூலம் பயிர்
நாசமில்லை.




இலை சுருட்டும் புழுக்-
களையும் இதர
பூச்சியினங்களையும்
கட்டுப்படுத்தி சிறந்த
பலனளிக்க வல்லது

**மெட்டாஸிட் காம்பி** தெளித்தல்




ஒவ்வொரு அடைப்புகளுடன்
இணைக்கப்பட்டிருக்கும்
உபயோகிக்கும் முறை-
களின்படியே ஃபாலிடால்
ஹீனோஸான் மெட்டாஸிட்
காம்பி பூச்சி மருந்துகளையே
உபயோகியுங்கள்.

நெல் பயிரின் பூச்சி பூசண
தொல்லைகளிலிருந்து சிறந்த
முறையில் பாதுகாக்க நம்பிக்-
கைக்குகந்த ஃபாலிடால்
ஹீனோஸான் மெட்டாஸிட் காம்பி
தெளிக்கவும்.

5-A/162 (760)



# உண்மையின் சந்நிதி

சோம.மகாதேவன்

## 5. நினைவில் நிற்பது யாரோ ?

பீட்டர் சென்றதும், அவன் வந்த அவசரத்தையும், சொன்னதையும் நினைத்து, உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டான் பாண்டியன்.

பையிலிருந்த அந்தக் கடிதத்தையெடுத்து மறுபடியும் பிரித்தான்.

கடிதமென்றால், அது யாராலும் யாருக்கும் எழுதப்பட்டதல்ல. நோட்டுப் புத்தகத்தின் நடுவிலிருந்து எடுக்கப்பட்ட, குறுக்குக் கோடுகள் போட்ட வெள்ளைக் காகிதம். அதில் மூன்று வரிசைகளில், ஒன்றன்பின் ஒன்றாக, இடம் இருக்கும் வரையிலும் ‘ முத்துப் பாண்டியன் ’, ‘ முத்துப் பாண்டியன் ’ என்று எழுதப்பட்டிருக்கிறது.

தன்னையே மறந்த நிலையில் தான் அவள் எழுதி இருக்கிறாள்.

இதைத் தேடிப் பிடித்து எடுத்து, கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போகிறானே பீட்டர். ‘வேலையற்ற தடியன்’ என்று இவனைக் கரித்துக்கொட்டுகிறாளாம். சகோதரியை இவ்வாறு பழி தீர்த்துக் கொண்டதில் இவனுக்கொரு நிம்மதி.

பாண்டியன் நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டான்.

கிராமத்தில் எங்கோ ஒரு மூலையில் ஒதுங்கி வாழ்பவன் மைக்கேல் கிழவன். அடுக்கடுக்காக ஐந்து குழந்தைகள் அவனுக்கு. பொதுவாக அந்தக் குடும்பங்களில் கல்வியறிவு முதன்மையாகக் கருதப்படுமல்லவா ? நித்திய நோயாளியான தாயையும் கவனித்துக் கொண்டு, வீட்டுக் காரியங்களையும் பார்த்துக் கொள்வதில், மூத்தவளான டெய்சி பத்மாவின் படிப்பு எட்டாவதோடு நின்று விட்டது.

பெரிய குடும்பத்தையே நிருவகித்து வரும் டெய்சி கெட்டிக்காரிதான்.

அரசியும் இவளும் உயிர்த் தோழிகள்.

முன்பெல்லாம் அடிக்கடி வீட்டிற்கு வந்து விடுவாள். அரசிக்கு அந்த மன ஊக்கத்தைக் கொடுத்தவளே டெய்சிதானே.

படபடவென்று என்னமாய் பேசுகிறாள்.

அவள் மாநிறம் தான். மூடித் திறக்கும்போது, அவளது அகன்ற விழிகளில் மின்னும் ஒளி, இன்னும் கண்ணுக்குள்ளே நிற்கிறது.

மதம் வேறுபடலாம். சாதி மாறுபடலாம். அதிலும் தாழ்த் தப்படலாம். ஓரினம் என்று ஒன்றுபடும் போது, இந்த மதமும்—சாதியும், குறுக்கே நின்று என்ன செய்யும் ?

எண்ணங்கள் வலுவடைந்தன-உறுதியாயின.

இந்தப் பெயரைத் தான் எத்தனை தடவைகள் எழுதி இருக்கிறாள்.

பாண்டியன் புன்னகையோடு நிமிர்ந்து உட்கார்ந்து, அந்தக் காகிதத்தை மடித்துப் பையிலே வைத்துக் கொண்டான்.

அப்போது வாசலிலே ஆளரவம் கேட்டது.

“ அந்தப் பொன்னையா களத்திலே நின்னு ‘ஓ’ன்னு கத்துறான்” என்று செய்தி சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான் கன்னையா.

கன்னையா அந்த ஊராட்சிக் கணக்கன்.

வேலாயுதத்தோடு ஒட்டிக் கொண்டிருந்த பெருமாள்சாமி, அவருடனே போய் விட்டான். பாண்டியன் இந்தக் கன்னையாவை உள்ளே இழுத்துப் போட்டுக் கொண்டான்.

“ நீயேன் ‘ஓ’ன்னு கத்திக்கிட்டு வாரே. அவனுக்காக வேலையை நிறுத்திட்டீங்களா ? ” என்று கேட்ட பாண்டியன் களத்துக்கே புறப்பட்டுவிட்டான்.

“ வேலை நடக்கு. வடக்குப் பக்கம் மேட்டைப் பிரிச்சு, மேற்காலே போடுறாங்க. பொன்னையா குறுக்கே வந்து நின்று வரை முறை இல்லாமல் பேசுறான்” என்றவாறு பாண்டியனைப் பின் தொடர்ந்து வந்தான் கன்னையா.

மேடு பள்ளமாக இருக்கும் களத்தை, வசதிகளோடு கூடிய காங்ரீட் தளமாக்கி, அறுவடையின் போது, ஏக்கருக்கு இவ்வளவென்று நெல்லையே வாடகைக் கூலியாகப் பெற்று, ஊராட்சியின் வருமானத்தைப் பெருக்கலாமென ஆரம்பித்த வேலை.

களத்தின் கீழ்க் கோடியில் பொன்னையா என்பவன், ஐந்தாறு வருடங்களாகக் குடிசை கட்டிக் கொண்டு குடி இருக்கிறான். களத்தைச் சமப்படுத்தும்போது பொன்னையாவின் குடிசையும் எடுபட வேண்டியதாகிறது. பொன்னையா—வேலாயுதத்தின் பண்ணையில் வேலை செய்பவன். அதிலும் பொன்னையாவின் தம்பி சடையன் வேலாயுதத்துக்கு மிகவும் அந்தரங்கமான போக்கிரி. இரண்டாண்டுகளுக்கு முன்னர், கலக வழக்கில் தண்டனைப்பெற்று உள்ளே இருக்கிறான். இவ்வளவு இருக்கும் போது, பொன்னையாவுக்குத் துணிவு வரத்தானே செய்யும்.

களத்து மேட்டில், வேடிக்கை பார்ப்பதில் ஒரு கும்பலே சேர்ந்திருக்கிறது.

பாண்டியனைக் கண்டதும், வேலை செய்துக் கொண்டிருந்தவர்களுக்கு மத்தியிலே நின்று, உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்த பொன்னையாவின் சுதி சற்று உள்ளடங்கியது.

"ஏற்கனவே உங்களுக்குச் சொல்லி இருக்கேன். சத்தம் போடுறதுனலே வேலை நின்று போகும்ன்னு நினைக்கிறீங்களா ?" என்று பொன்னையாவின் பக்கத்தில் போய் நின்று கேட்டான் பாண்டியன்.

பொன்னையா கொதிப்போடு திரும்பினன்.

"குடிசையைப் பிரிக்கணும்ன்னுதானே—இந்த வேலையை ஆரம்பிச் சிருக்கீங்க", என்ருன்.

பாண்டியன் அமைதியாகவே சொன்னன்.

"இப்ப, அறுவடை நேரத்திலே ஒரு மழை பெய்தாலும் களத்தைப் பயன்படுத்த முடியலே. இதைச் செம்மை படுத்தினு வசதிகளும் பெருகுது. பஞ்சாயத்துக்கு நிலையான வருமானமும் வருது. மேற்குப் பக்கம் புறம்போக்கிலே நீங்க வீடு போட்டுக்கலாம்ன்னு போன வாரமே உங்ககிட்டச் சொல்லியாச்சு, மறுபடியும் நடக்கிற காரியத்துக்குக் குறுக்கே வர்றது நல்லா இல்லே." என்ருன்.

அப்போது, கூட்டதோடு நின்று கொண்டிருந்த, பொன்னையாவின் மனைவி சிவந்தியும், அவனுக்குப் பக்கமாக வந்து நின்ருள். அதில் தெம்பு வந்தது.

மேற்கு மந்தையிலே, வீட்டடியை என்பேருக்குப் பட்டாப் போட்டுக் கொடுங்க", என்று கேட்டான், பொன்னையா.

இப்ப இங்கே இருக்கிற வீட்டுக்குப் பட்டா இருக்கா ?" என்று திருப்பிக் கேட்டான் பாண்டியன்.

"எப்படியும் எங்களை வெளியேத்திப் போடணும். அதிலே தான் குறியா நிக்கிறீங்க," என்ருள் சிவந்தி.

"வேறே நினைவோட இப்படிப் பேசுறிங்க. மேல மந்தையிலே, வீடு இல்லாதவங்களுக்கு மனையடி கொடுக்கிறதா திட்டம் போட்டிருக்கோம். அதிலே உங்களுக்கு இடமிருக்கும்." என்று மேலும் சொன்னன் பாண்டியன்.




"அதைத்தான் எப்பக் கொடுக்கப் போறிங்க", என்று கேட்டான் பொன்னையா.

'அதை இப்பவே சொல்ல முடியாது", என்று சற்று கோபத்துடனே சொன்னன் பாண்டியன்.

"ஊர்ப் பொதுவுக்கு நல்ல பாதையைச் சொன்ன கேட்டுக்கிடணும் பொன்னையா. ஆயிரக் கணக்கிலே போட்டு அரசாங்கத்திலே செய்கிற வேலையை, நீ குறுக்கே நின்னு தடுத்துப் போட முடியுமா ?" என்ருன் சற்றுத் தள்ளி நின்ற கிழவனொருவன்.

அவ்வளவுக்குள், பொன்னையாவுக்கு அப்படியொரு கோபம் வந்து விட்டது.

"உன்னையாரு கேட்டது. பெரிய நாயத்தைக் கண்டவன் சொல்ல வந்தியாக்கும்", என்று கிழவனைப் பார்த்துச் சீறியவன், கும்பலை விட்டு விலகிப் போய் நின்று, "நானும் உயிருக்குத் துணிஞ்சுதான் இருக்கேன். அடுத்த வாரம் என் தம்பி சடையனும் வந்திருவான்- எவன் கூரையைப் பிரிக்க வாரான்னு பாத்துக்கலாம்" என்றுஆக்ரோசத்தோடு சொல்லிவிட்டு, மேலும் ஆரம்பித்த சிவந்தியின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டே, அங்கிருந்து போய்விட்டான்.

'சடையன் விடுதலையாகி வருகிருன்' என்ற செய்தி கூடி இருந்தவர்களைத் திடுக்கிடவே வைத்தது.

"பொதுக் காரியத்துக்கு நடுவிலே உயிரைப்பத்திப் பேசிட்டுப்போருனே" என்ருன் கன்னையா.

"அவரும் திட்டம் போட்டுட்டுத்தான் பேசுருரு. பேசட்டும். நீங்க காரியத்தைப் பாருங்க" என்று சொல்லி விட்டுப் பாண்டியன் திரும்பினன்.

"எல்லாம் பெரிய வீட்டிலே வேலை செய்யிற திமிர்".

"போங்காலம்தான் பொன்னையாவைப் பின்னுக்குத் தள்ளது".

"கூரையைப் பிரிச்சுத் தூக்கியெறியுறதுக்கு எவ்வளவு நேரமாகும்". என்றெல்லாம் தங்கள் உள நிலையைச் சொல்லி விட்டு, வேடிக்கை பார்த்த கும்பல் பிரிந்து சென்ற பின், பாண்டியன் களத்திலிருந்து

புறப்பட்டபோது, அவனைத் தேடிக்கொண்டு லிங்கம் அங்கே வந்து சேர்ந்தான்.

அந்த நாளிலிருந்தே பாண்டியனையும் லிங்கத்தையும், ஊருக்குள் ' இரட்டையர்கள் ' என்று குறிப்பிடுவார்கள்.

லிங்கம் துடியானவன்.

'' பொன்னையா புலம்பிக் கிட்டே போறானே ?'' என்று கேட்டுக்கொண்டே வந்தான்.

'' புலம்பல் இல்லே. சவால் விட்டுட்டுப் போறாரு. அடுத்த வாரம் சடையன் விடுதலையாகி வரப் போறானாம். இப்பவே வீட்டைப் பிரிக்கப் போறது யாரு—வந்து பாருங்கன்னு சொல்லிட்டுப் போறான்'' என்று சொல்லிக் கொண்டே நடந்தான் பாண்டியன்.

'' அதுக்குள்ளே தண்டனை முடிஞ்சி போச்சா ?'' என்று வியப்போடு கேட்டுப் பாண்டியனைத் தொடர்ந்தான் லிங்கம்.

'' வர்றதா கடிதம் போட்டிருக்கானாம் ''.

லிங்கம் சற்றுத் தயங்கியே சொன்னான்.

'' மனுசத் தன்மையே இல்லாதவன் நீட்டின இடத்திலே பாய்வான் '', என்றான்.

'' பாயட்டும். அவங்கிட்டத்தான் நெருங்கிப் பழகணும் என்றான் பாண்டியன்.

'' இப்ப எங்கே போறோம் '' என்று கேட்டான் லிங்கம். பேசிக் கொண்டே முத்தலாலம்மன் கோவிலைக் கடந்து வந்து விட்டார்கள். '' நீ போட்ட போடு—கோவில் கிணத்தையே மூடப்போறாங்களாமே '', என்றான் லிங்கம் கோவில் கிணற்றைத் திரும்பிப் பார்த்து.

பாண்டியனும் நின்றான்.

'' எங்க வீட்டிலே குடிக்கிறதே இந்தத் தண்ணிதானே. கிணத்தை மூடுற அளவுக்குத் துணிவு வருமா ?'' என்றவன், கோவிலுக்குஎதிர்ப்பக்கம் சற்றுத் தள்ளி இருக்கும் தென்னந்தோப்பின் வேலியோரமாக நிற்கும் குருவையாவைத் திரும்பிப் பார்த்தான்.

'' என்ன தம்பி—நிக்கிறிங்க, வாங்களேன் இந்தப் பக்கம். இளநி குடிச்சிட்டுப் போகலாம் '', என்று குரல் கொடுத்தார் குருவையா.

குருவையாவுக்கு ஐம்பது வயதைத் தொட்டிருக்கும்.

கிராமத்திற்குள் நடக்கும் எந்த வம்பு தும்பிலும் தலையைக் கொடுக்காத பிறவி. பகலிலும், இரவிலும் அவருக்கு, அம்மனுக்கெதிரே இந்தத் தோப்புக்குள்ளேதான் குடியிருப்பு எப்போதாவது—ஊருக்குள் செல்லும் போது, குருபாதம் ஊரிலிருந்தால், அவருடன்தான் பேசிவிட்டு வருவார். பாண்டியனிடமும் இவருக்கு அன்பும் மரியாதையும் உண்டு.

அழைப்பைக் கேட்டதும் பாண்டியனும் லிங்கமும் தோப்புக்குள்ளே வந்தார்கள்.

வேலியோரமாகக் கட்டிலைத் தூக்கிப் போட்டு '' உட்காருங்க '', என்று உபசரித்தார் குருவையா.

பாண்டியன் உள்ளுக்குள் தள்ளிப் போய் நின்று பார்த்தான்.

'' தோப்புக்குள்ளேயே, காய்கறி, வாழை யெல்லாம் போட்டிருக்கீங்களே '', என்று வியப்போடு கேட்டான்.

'' வீட்டுக்கு வேண்டியதையெல்லாம், அரிசி ஒண்ணத்தவிர, இந்தத் தோப்பே கொடுத்துப் போடுது. காய் வெட்டுறப்ப பதருமக் கயித்தை கட்டித்தான் இறக்கிக்கிட்டிருக்கோம். ''

'' எங்களுக்கெல்லாம் ஐயா வழிகாட்டியா இருக்கிங்க, நான் கூட எங்க தோப்பிலே துவரையை ஊடு பயிரா போடலாம்னு இருக்கேன் '', என்றான் லிங்கம்.

'' உடம்பை வளைச்சு அதைச் செய் முதல்லே'', என்று சொல்லிச் சிரித்தான் பாண்டியன்.

''கொஞ்சம் இருங்க. வழுக்கைப்பதமா நாலு இளநி வெட்டியாரச் சொல்றேன்'' என்ற குருவையா, '' டே . . . . . . முனிசாமி '' என்று குரல் கொடுத்துக் கொண்டே தோப்புக்குள் நடந்தார்.

லிங்கம் அருகிலிருந்த தேன் கூட்டையே குனிந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

பாண்டியன் பாதையைப் பார்த்தபடி வேலியோரமாகப் போய் நின்றான்.

எதிரே, கோவில் கிணற்றில் ஐந்தாறு பெண்கள் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

பார்வை அங்கேயே லயித்தது.

அருகிலேயே, வைகையும், முல்லைக் கால்வாயும், பருவம் தவறாமல் பெருக் கெடுத்தாலும், பரம்பரையாகவே, இந்த மக்களின் தாகத்தைத் தீர்க்கும், இந்த நீரூற்றை, அது யாருக்குச் சொந்தமாக இருந்தாலும் இழுத்து மூடி விட முடியுமா ?

பாண்டியன் ஊரின் பக்கமாகத் திரும்பினான்.

அவனது கண்கள் அகல விரிந்தன.

இடுப்பில் குடத் தோடு டெய்சி வந்துகொண்டிருந்தாள்.

பையிலிருக்கும் காகிதத்தின் நினைவு வந்தது.

சிரிப்பும் வந்தது.

இப்படித் திரும்பத் திரும்ப எழுதச் சொல்லி யார் தண்டனை கொடுத்தது இவளுக்கு.

பாண்டியன் வேலியைக் கடந்து, சற்று முன்னால் வந்து நின்றான்.

டெய்சியும் பாண்டியனைப் பார்த்து விட்டாள்.

தயங்கித் தயங்கி நெருங்கி வந்தாள்.

அப்போது, '' வாங்க தம்பி இளநி வெட்டி வச்சிருக்கேன்'' என்று பின்னாலிருந்து, குருவையா அழைக்குரல் கேட்டு பாண்டியன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

குருவையாவுக்குத் தெரியாதபடி, அவருக்குப் பின்னால் நின்ற லிங்கம் சிரிப்பதும் தெரிந்தது.

(வளரும்)




“அண்ணு! அண்ணு! அந்தப் புதிய இருபது ரூபாய் நோட்டைக் கொடுங்களேன், பார்த்து விட்டுத் தருகிறேன்!'' என்ருள் ஆவலாக மலர்விழி. அவள் அண்ணன் மாறன் அந்தப் புதிய நோட்டை அவ ளிடம் கொடுத்தான். நோட் டைத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள் மலர்விழி.

'' இது எவ்வளவு அழகாக இருக்கிறது! '' என்று மலர்விழி சொன்னதும், '' ஆமாம் அழகாகத்தான் இருக்கும், அநா வசியமாகச் செலவழிக்காத வரை! இந்த நோட்டு மட்டு மல்ல, எந்த நோட்டுமே முத லில் அழகாகத்தானிருக்கும்..'' என்ற மாறன் சில்லறைக் காசுகளையும், சில நோட்டு களையும் தன் சட்டைப் பையில் திணித்துக் கொண் டான்.

'' மலர்விழி, ஒவ்வொரு நாளும் நம் கைகளில் வந்து உறவாடி, பிறகு உருண்டோடி விடும் இந்த நாணயத்தைப் பற்றி எப்போதாவது சிந்தித் திருக்கிறேமா? இந்த நாணயம் முதலில் எப்படித் தோன்றி யது ? இது தோன்றுவதற்கு முன் மக்கள் என்ன செய் தார்கள் ? என்றெல்லாம் நாம் நம்மை நாமே கேட்டுக் கொண்டிருக்கிறேமா ? ''

'' இல்லை! இல்லை! இல்லை!'' என்ருள் அழுத்தந்திருத்தமாக மலர்விழி.

'' இந்த ' இல்லை ' என்பதைத்தான் இல்லாமல் செய்ய வேண்டும். அதற்காக நாம் ஒவ்வொன்றையும் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம் இல்லையா ?''

'' ஆமாம் அண்ணு!'' அப்படியானல் இந்த நாணயம், பணமெல்லாம் எப்படித் தோன்றியது என்று நீங்களே எனக்குச் சொல்லுங்களேன். நான் அதைப் பற்றித் தெரிந்து கொள்கிறேன் '' என்ருள் மலர் விழி.

'' வாழ்க்கை எனும் வண்டியின் சக்கரங்களாக எதுவாக இருக்க முடியும் ? உனக்குத் தெரியுமா ?''

'' ஓ, தெரியுமே! அதன் சக்கரங்கள் நாணயங்களாகத் தான் இருக்க முடியும் ... ... ...''

'' எப்படி ? சொல் பார்க்கலாம் ?''

'' சக்கரமும் வட்டமாக இருக்கிறது ; நாணயமும் வட்டமாக இருக்கிறது ... ... ... ... —''

'' நன்ருகச் சொன்னுய் மலர்விழி! காசு வட்டமாய் இருப்பதோடு மட்டுமல்ல, அந்தக் காசெனும் சக்கரம் தான் வாழ்க்கையெனும் வண்டியின் உயிரோட்டமாகவும் இருக் கிறது ... — ... — ... — ...''

'' ஆமாம் அண்ணு. நாணயம் இல்லாவிட்டால் நாம் சாப்பிட முடியுமா? நல்ல உடை உடுத்த முடியுமா ? இந்த வீட்டில்தான் வாடகை தராமல் இருக்க முடியுமா ? இன்று எதற்கெடுத்தாலும் காசு, பணம்தான் முன்னே வந்து நிற்கிறது. காசு இல்லாவர் தூசுக்குச் சமம் ... . . . . என்ன நான் சொல்வது உண்மைதானே அண்ணு?''

'' முற்றிலும் உண்மை. அதனுல்தான் பெரியவர்கள் ' பணமில்லாதவன் பிணம் ' என்று சுருங்கச் சொன்னுர்கள். பணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தத்தான் ' பணமென்ருல் பிணமும் வாய் திறக்கும்! என்ருர்கள். இன்று உலகில் ஆடுவது, பாடுவது எல்லாம் இந்த நாணயத்துக்காகத் தான். நாணயம்தான் மனிதனை நாணயமாக வாழ வைக்கிறது. நாணயமற்றவன் நடுத் தெருவில் நிற்கும் நிலையும் பார்க்கிறேம்!'' என்று சொல்லிவிட்டு மாறன் அலமாரியிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து வந்து அதை மேசையில் வைத்தான்.

மலர்விழி அதை உற்றுப் பார்த்தாள். அதில், ' பணம்— சிறு விளக்கம்—தமிழ் வெளியீட்டுக் கழகம் ' என்றிருந்தது. மாறன் அதிலுள்ள ஒரு பக்கத்தைப் புரட்டிப் படித்துக் காட்டினுன்.

'' மனிதனின் கண்டுபிடிப்புகளில் பணம்தான் மிகவும் அடிப்படையானது. ஒவ்வோர் அறிவியல் துறைக்கும் ஓர் அடிப்படையான கண்டுபிடிப்பொன்று உண்டு. பொறித் துறையில் சக்கரமும், விஞ்ஞானத்தில் நெருப்பும், அரசியலில் வாக்குச் சீட்டும் அடிப்படையான கண்டுபிடிப்புகள். அது போன்றுதான் பொருளாதாரத்தில்—மனிதன் சமூக வாழ்வின் வாணிபத் துறை முழுமையும்—பணம் ஓர் இன்றியமையாத கண்டுபிடிப்பாகும். இதன் அடிப்படையில்தான் ஏனைய யாவும் அமைந்திருக்கின்றன. . . . . . . . . ... ..''

'' எத்தனை இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது! ஆமாம் பணம் தோன்றுவதற்கு முன்பு இருந்த நிலைமை என்ன? அதைச் சொல்லுங்கள் அண்ணு!'' என்று மலர்விழி கேட்டதும், மாறன் அதே புத்தகத்தில் உள்ள குறிப்பைத் தொடர்ந்து படித்தான்.

'' வீட்டு விலங்குகளே ஆதி விவசாயக் குடிகளின் செல்வங்களாகக் காட்சியளித்தன. அவைகளே பணமாகப் பயன் படுத்தப்பட்டன. ஆனல், எம்

மிருகமும் பணமாகப் பயன்படுத்தப்பட்டபோது பெரிய இடர்பாடுகள் நேர்ந்தன. எல்லா வெள்ளாடுகளும் ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒருவன் ஒரு துண்டு நிலத்தை இருபது வெள்ளாடுகளுக்கு விற்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் பெறும் வெள்ளாடுகள் மிகவும் இளைத்தவையாகவோ அல்லது வாங்குகிற மந்தையிலேயே மிகவும் பிணி பிடித்தவைதாகவோ இருந்தால்தான் ஏமாற்றப்பட்டதாக நினைப்பான். மேலும், வெள்ளாடுகளில் இன்னும் மற்றக் குறைபாடுகளுமுண்டு. அவைகளுக்கு நோய் பரவினால், ஒருவன் செல்வம் முழுமையும் அழிந்துவிடும். அவைகளின் இனப் பெருக்கப் பருவத்தின்போது சமுதாயத்தின் பண அளிப்பு மிக அதிகமாக இருக்கும். ஒருவனுடைய பணம் வெளியில் தப்பித்து ஓடிவிடாதபடிக்கும், மற்றைய விலங்குகளுக்கு இரையாகமலுமிருக்க எச்சரிக்கையுடனிருக்க வேண்டும். வீட்டு விலங்குகளுக்கு மிக அதிகமான குறைபாடுகளிருப்பதைப் போல, மற்றப் பண்டங்களில் நிறைய நன்மைகள் இருக்கின்றன.

“எல்லாப் பண்டங்களைக் காட்டிலும் உலோகங்களே பணமாகப் பயன்படுவதற்குச் சாலச் சிறந்தவையென்பது சமீபத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. உலோகங்களைக் கையாள்வது மிக எளிது; அவைகளின் அளவைச் சுலபமாக அறுதியிடலாம். அவைகள் அழிவதுமில்லை. அவைகளை வைத்துக் காப்பதும் எளிது. சேகரித்து வைப்பதற்கென்று பெரிய இடமொன்றும் தேவையில்லை. ஓர் ஆண்டில் உலோகங்களின் உற்பத்தி; பழக்கத்திலுள்ள உலோகங்களின் அளவில் ஒரு சிறிய உற்ப்புப்பகுதியே ஆகையால் அவ்வுற்பத்தியின் அளிப்பு ஒவ்வோர் ஆண்டிலும் அதிகமாக வேறுபடுவதில்லை. எனவே, இதற்கடுத்த நாகரீக காலத்தில் உலோகங்களே பெருவாரியாகப் பணமாகக் கையாளப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.”

“அப்படியானால் முதலில் ‘பண்டமாற்று முறை’ தான்





வழக்கத்தில் இருந்தது இல்லையா?” மலர்விழி ஏதோ நினைவுக்கு வந்தவள் போலக் கேட்டு விட்டு அண்ணனைப் பார்த்தாள். உடனே மாறன், “ஆமாம் மலர்விழி. பண்டைக் காலத்தில் மனிதன் பண்டமாற்று முறை ஒன்றை மட்டுமே தெரிந்து வைத்திருந்தான். ஆட்டைக் கொடுத்து அரிசி வாங்குவதும், மாட்டைக் கொடுத்து மிளகாய் வாங்குவதும்தான் அவன் பழக்கத்திலிருந்த நாணயங்கள். இவற்றில் பசுக்களே விலை மதிப்புள்ளதாகக் கருதப்பட்டது. பண்டமாற்று முறையில் பல குறைபாடுகள் காணப்பட்டதால், இதற்குப் பதிலாக வேறொரு முறையை அவர்கள் நாட நேர்ந்தது. அத்தகைய பொருள் கெடாதவையாகவும், எந்த இடத்திற்கும் எளிதாக எடுத்துச் செல்லக் கூடியதாகவும், அனைவராலும் ஒரு குறிப்பிட்ட மதிப்புடையதாக ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணினர். அதுவே பிறகு ‘நாணயம்’ என்ற பெயரில் உருவானது என்றான்.

“முதலில் நாணயங்களை எதைக் கொண்டு செய்தார்கள்?”

“முதலில் நாணயங்களைச் செம்பு போன்ற சாதாரண உலோகங்களால் செய்தார்கள். கி.மு. 5வரையுள்ள நூற்றாண்டுகளில் வெள்ளியும், வெண்கலக் கட்டிகளும் நாணயங்களாகப் பயன்பட்டன. பண்டைக் காலத்தில் பொன், வெள்ளி மட்டுமல்ல, இரும்பைக்கூட நாணயமாக உபயோகித்து வந்தார்கள். துண்டு துண்டு கம்பிகள்கூட நாணயங்களாக வழக்கத்தில் இருந்தன. சீனாவில் வேளாண்மைப் பொருட்கள் பண்டமாற்றுக்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டன. அதனால் அவர்கள் நாணயங்களை வேளாண்மைக் கருவிகள் உருவத்திலேயே செய்திருந்தனர். கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் அவர்கள் நாணயங்கள் செய்யத் தொடங்கினர்”.

“கம்பி நாணயம் என்றீர்களே, அது ஒன்றுக்கொன்று எடை மாறுபட்டிருக்காதா?”

“நிச்சயம் இருக்கும். இந்தக் கம்பி நாணயங்கள் குறிப்பிட்ட எடை இல்லாததால், குறிப்பிட்ட எடையுள்ள உலோகத் துண்டுகள் நாணயங்களாக வழக்கத்துக்கு வந்தன. அத்தகைய நாணயங்களை நிறுத்துப் பார்க்காமலேயே ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில், அவற்றின்மீது ஒரு வகை முத்திரை இடப்பட்டது. இத்தகைய நாணயங்கள் முதன் முதலில் கிரீசிலும், இந்தியாவிலும் வழக்கத்துக்கு வந்தன.

“நாணயத்தில் முத்திரை முறை இப்படித்தான் பரவியதா?”

“இப்படித்தான் பரவியிருக்க வேண்டும். ஆசியா மைனரிலுள்ள லிடியா என்னும் பகுதியில் கி.மு. 680-ல் வாழ்ந்த ஒரு வணிகர் தாம் தயாரித்த நாணயம் ஒரே எடை உள்ளதாக இருப்பதற்காக அதன்மீது முத்திரை ஒன்றைப் பதித்தார். இதுவே மேல்நாட்டில் முதல் நாணயமாகக் கருதப்பட்டது. இதற்குப் பிறகு நாணயம் வெளியிடுபவர் தம்முடைய நகரத்தின் சின்னத்தைப் பொறிக்கும் வழக்கம் வந்தது. ஆதன்ஸ் என்னும் நகரத்தில் ஒரு பக்கத்தில், தங்கள் தேவதையான அதினேயின் உருவத்தையும் இன்னொரு பக்கத்தில் அதினேயின் பறவையான ஆந்தையின் உருவத்தையும் பொறித்தனர். இந்த முத்திரை முறை எங்கும் பரவத் தொடங்கியது. மேல்நாட்டில், நாணயத்தில் தம் உருவத்தைப் பொறித்த முதல் மன்னன் யார் தெரியுமா? மகா அலெக்சாந்தர்தான்!”

“அப்படியா? ஆமாம், முதலில் நாணயங்களை யார் செய்தது?”

“மேல்நாட்டில் கி.மு. 8-ஆம் நூற்றாண்டிலிருந்த லிடியா நாட்டு மன்னன் கிரீசஸ் என்பவனே முதன் முதல் நாணயங்களைச் செய்தான். பிறகு இதை ஐரோப்பிய, ஆசிய நாடுகள் பின்பற்றின. இந்நாடுகள் முதலில் விலை மதிப்பு மிக்க பொன், வெள்ளியினாலேயே நாணயங்களைச் செய்தன; செம்புக்கு மதிப்பு இல்லாததே இதற்குக் காரணமாகும். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து இந்தோ-கிரேக்க மன்னர்கள் நிக்கல் உலோகத்தை நாணயத்துக்குப் பயன்படுத்தினார்கள். ஏன், காரீயத்தில் கூட நாணயங்கள்

வெளி வந்தன. மலேயா நாடுகளில் இத்தகைய நாணயங்கள் இருக்கின்றனவாம்.''

''உலோகங்களில் மட்டும் தான் நாணயங்கள் வெளி வந்திருக்கின்றனவா?''

''இல்லை. தோலினுல்கூட நாணயம் இருந்ததாக மராத்தியக் கவிஞர் ஒருவர் 12-ஆம் நூற்றுண்டில் குறிப்பிட்டிருக்கிறுர். முகமது துக்ளக் காலத்தில் சாதாரண பொருட்களான தோல், பித்தளை செம்பு ஆகியவைகளைக் கொண்டு அவை செய்யப்பட்டன. நாணயங்கள் பெரும்பாலும் வட்ட வடிவமாகத்தான் இருக்கும். ஆனுல் சில சதுரமாகவும், சில செவ்வகமாகவும் இருந்திருக்கின்றன. சில நாணயங்கள் வளைந்த கம்பி வடிவத்தில் இருந்தன. அக்காலச் சீனுவில் நாணயங்கள் வட்ட வடிவமாகவும் நடுவில் சதுரத் துளையுடையதாயுமிருந்தன.''

''இந்திய நாணயங்களைப் பற்றிச் சொல்லுங்கள் அண்ணு?''

''சொல்கிறேன் மலர்விழி! இந்தியாவில் முதலில் நாணயங்கள் தோன்றியபோது அவற்றில் மன்னர்களின் உருவமில்லை. அதற்குப் பதிலாகச் சில குறிகள் மட்டுமே அவற்றில் பொறிக்கப்பட்டிருந்தன. கிரேக்கர்கள் படையெடுப்பிற்குப் பிறகு, அவர்கள் ஆட்சியில் மன்னர்கள் உருவங்களைக்கொண்ட நாணயங்கள் வெளி வந்தன. ஆனுல், அத்தகைய நாணயங்களை இந்திய மன்னர்கள் எதிர்த்து வந்தனர். நீண்ட காலத்துக்குப் பிறகு இந்து மன்னர் ஒருவர் தம் உருவத்தை நாணயங்களில் பொறித்தார். அவர் பெயர் சௌதமீ புத்திர யஞ்ஞஸ்ரீ சாதகர்ணி; நாணயத்தில் உருவத்தைப் பொறித்த முதல் இந்து மன்னர் இவர்தான்'' என்று சொல்லிவிட்டு மாறன் எழுந்து சென்று அலமாரியிலிருந்த ஒரு புத்தகத்தை எடுத்து வந்து உட்கார்ந்து கொண்டே, ''நாணயத்தால் எத்தனை நன்மைகள் தெரியுமா?'' என்ருர்.

''ஓ, தெரியுமே! விரும்பிய பொருட்களையெல்லாம் நிறைய வாங்கலாம். சுற்றுப் பயணம் செய்து ஊரெல்லாம் பார்த்து மகிழலாம்.......''

''இவை மட்டுமல்ல, மலர்விழி இன்னும் எத்தனையோ நன்மைகள் அதனுல் உண்டு. இந்தியாவின் பண்டைக் கால வரலாற்றை நாம் இதன்மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது. அக்கால மன்னர்கள், ஆட்சி முறை, சமயம், கலை முதலானவற்றைத் தெரிந்து கொள்ளவும் இதனுல் முடிகிறது. பண்டைக்காலத்தில் குப்தர்கள் ஆட்சியில் நாணயம் ஒரு கலையாகவே வளர்ந்து வந்தது. குப்தர்களின் பொன் நாணயங்கள் அழகு வாய்ந்தனவாக இருந்தன. நாணயம் செய்யும் கலை முதலாம் சந்திர குப்தரால் தொடங்கப் பெற்றது. முஸ்லீம்கள் வட இந்தியாவைக் கைப்பற்றியதும், இந்திய நாணயங்களில் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டன. அதன் விளைவாக உருவம் பொறிக்கும் வழக்கம் நின்றது. நாணயங்களில் உருவம் பொறிப்பதை அவர்கள் விரும்பாததே அதற்குக் காரணம்.''

''அப்படியானுல் முஸ்லீம்கள் தம் நாணயங்களில் என்னதான் மாறுதலைச் செய்தார்கள்?''

''அவர்கள் வெளியிட்ட நாணயங்களில் மன்னருடைய பெயர், விருதுகள், ஹிஜிரா ஆண்டு ஆகியவை பாரசீக எழுத்துக்களால்




இருபக்கமும் காணப்பட்டன. தில்லி சுல்தான் காலத்தில்தான் முதல் முதலில் நாணயங்களில், நாணயம் அடித்த இடத்தின் பெயர் பொறிக்கப்பட்டது. தில்லி சுல்தான்கள் தங்கம், வெள்ளி, வெள்ளியும் செம்பும் கலந்தவை ஆகியவற்றில் நாணயங்கள் வெளியிட்டனர். அலாவுதீன் முகம்மத் ஷா (கில்ஜி) என்னும் சுல்தான் தென்னிந்தியா மீது படையெடுத்து வென்று கொள்ளையடித்தான். இவர் காலத்தில் தங்க நாணயங்கள் ஏராளமாக வெளியாயின. இவர் உருவாக்கிய காப்பு உலோக நாணயத்தில்தான் முதல் முதல் தேதி பொறிக்கும் பழக்கம் தோன்றியது.''

''அப்பாடா! பணத்தைப் பற்றித்தான் எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன! சொல்ல வேண்டியவை இன்னும் இருக்கிறதா?'' என்று மலைப்புடன் கேட்டுவிட்டுக் 'கொஞ்சம்' இருங்கள் காபி கொண்டு வந்து விடுகிறேன்!'' என்று மலர்விழி சமையலறைக்குச் சென்ருள். சில நிமிடங்களில் கையில் காபியுடன் வந்து, ''அண்ணு! முதலில் காபியைக் குடியுங்கள். பிறகுக் கதையைச் சொல்லுங்கள்'' என்ருள். மாறன் மேலும் சொல்ல ஆரம்பித்தார்:

''அக்பரைப் பற்றித்தான் உனக்குத் தெரியுமே! அவர் காலத்தில் நாணயங்கள் சதுரமாகவும், வட்டமாகவும் இருந்தன. ஜகாங்கீருடைய தங்க நாணயங்கள் மிகவும் அழகாய் இருந்தன. இவர் நாணயத்தில் படங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. சிலவற்றில் ராணி நூர்ஜகான் பெயரையும் பொறித்துள்ளார். ஐதர் அலி பகோடா, பணம் என்ற நாணயங்களை வெளியிட்டார். திப்பு சுல்தான் வெள்ளியிலான ஒன்று, அரை, கால், அரைக் கால் வீசம், அரை வீசம் ரூபாய்களை வெளியிட்டார். 1612-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்த டேனியர் தஞ்சாவூருக்கு அருகேயுள்ள தரங்கம்பாடியில் பொன், வெள்ளி நாணயங்களைத் தயார் செய்து புழக்கத்தில் விட்டனர். 16-ஆம் நூற்றுண்டின் இறுதியில் வந்த டச்சுக்காரர்கள் நாகப்பட்டினம், பழவேற்காடு முதலிய இடங்களிலிருந்து பொன், வெள்ளி, செம்பு, ஈய, துத்தநாக நாணயங்கள் வெளியிட்டனர்.''

''அண்ணு! சென்னையில் நாணயங்களை எங்கு அச்சடித்தார்கள்?''

''சொல்கிறேன் கேள் மலர்விழி. 1639-ல் ஆங்கிலேயர் இப்போதுள்ள சென்னை இருக்கும் இடத்தைச் சந்திரகிரி என்னும் மன்னனிடமிருந்து விலைக்கு வாங்கினுர்கள். அந்த இடத்தில் நாணயங்கள் அடிக்கவும் அனுமதி பெற்ருர்கள். ஆனுல் ஒரு நிபந்தனை விதித்தார் மன்னர். தாம் வணங்கும் கடவுளின் உருவத்தைப் பொறிக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. ஆங்கிலேயர் 1661-லிருந்து 1816 வரை பொன், வெள்ளி நாணயங்களை வெளியிட்டனர். மன்னர் விருப்பப்படி கடவுளின் உருவத்தை அதில் பொறித்திருந்தனர். 1809—11-ஆம் ஆண்டுகளில் சென்னைத் தங்கசாலையில் அதாவது இப்போது அரசினர் அச்சகமாக இருக்கும் கட்டடத்தில் இரண்டு பணம், ஐந்து பணம், அரை, கால், அரைக்கால் ரூபாய்களையும் அச்சடித்தனர். பிறகு ஆங்கிலேயர் மொகலாய ரூபாக்களைப் போல் நாணயங்கள் வெளியிட முயன்ருர்கள். அதற்கு மொகலாய மன்னன் முகம்மது

ஷாவின் அனுமதி வேண்டியிருந்தது. நீண்ட காலத்திதுக்குப்பின் 1742-ஆம் ஆண்டில் மொகாலய மன்னன் 'ஆர்க்காடு ரூபா' என்னும் ரூபாய்களை அடிக்க ஆங்கிலேயருக்கு அனுமதியளித்தான். இவர்கள் வெளியிட்ட செப்புக் காசுகளின் மேல், தமிழ், தெலுங்கு, பாரசீகம் மொழிகளில் தேவநாகரி, கன்னடம் மொழிகளில் நாணயத்தின் மதிப்பு பதிக்கப் பட்டிருந்தது.'' என்று சொல்லி விட்டு மாறன் முகத்தைத் துடைத்துக் கொண்டே ''தென்னிந்திய நாணயங்களைப் பற்றிச் சொல்லப் போகிறேன்!'' என்றார்.

அதற்கு உடனே, ''பணத்தின் கதை இன்னும் முடியவில்லையா?'' என்று கேட்டாள் மலர்விழி.

''இன்னும் நிறைய இருக்கிறது. தூக்க முடியாத பெரிய பணத்தைப் பற்றியும் உனக்குச் சொல்லப் போகிறேன்'' என்று கூறிவிட்டு மேலும் தொடர்ந்தார்.

''அந்தக் காலத்தில் நாணயத்துக்குப் பல பெயர்கள் இருந்தன. பணம், பகோடா, மொகராக்கள், காசு, ரூபாய், வராகன், தாம், பூவராகன், பைசா என்றெல்லாம் அதன் பெயர்களாக இருந்தன. தென் இந்தியாவில் நாணயங்கள் வளர்ந்த கதையைப் பற்றிச் சிறிது தெரிந்து கொள்வோமா?'' என்று கேட்டார் மாறன்.

அதற்கு மலர்விழி ''ஓ, தாராளமாக. பணத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுத வேண்டுமென்று ஆசிரியர் கூறியிருக்கிறார். நீங்கள் சொல்கின்ற குறிப்புகளெல்லாம் என் கட்டுரைக்கு மிகவும் உதவியாக இருக்கும்..........ம்......சொல்லுங்கள் அண்ணா'' என்றாள் ஆர்வமாக.

''தமிழகத்தை 3, 9 நூற்றாண்டுகளில் ஆண்ட பல்லவர்கள், முத்திரை நாணயங்களை வெளியிட்டார்கள். அவற்றில் காளை உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. சிம்ம உருவ நாணயங்களும் வெளிவந்தன. சாளுக்கியருடைய நாணயத்தில் பன்றியும், மன்னனுடைய பெயரும் இருந்தன. இந்த வமிசத்தைச் சேர்ந்த இராசராச சோழருடைய நாணயத்தில் ஒரு பக்கத்தில் நடுவில் பன்றியும், அதன் இருபுறத்திலும் விளக்குகள், அங்குசம், குடை, சாமரம் ஆகியவை இருந்தன. நாணயத்தின் விளிம்பைச் சுற்றி ஆறு முத்திரைகளும், ஒவ்வொன்றிலும் தெலுங்கு அல்லது கன்னட மொழியில் 'ஸ்ரீராஜராஜ சம்ராட்' என்று பொறிக்கப்பட்டிருக்கும். இதில் ஆட்சி புரிந்த ஆண்டும் குறிக்கப்பெற்றிருக்கும். சோழ நாணயங்களில் புலி உருவம் பல விதங்களில் காணப்படும். இராசராசருடைய நாணயங்கள் பலவகையானவை. நாணயத்தின் ஒரு பக்கத்தில் மன்னர் நிற்கும் தோற்றமும், தேவதை அமர்ந்திருக்கும் காட்சியும் காணப்படும். இதிலுள்ள வாசகம் தேவநாகரி எழுத்தில் இருக்கும். இராசேந்திரருடைய நாணயங்களில் 'ஸ்ரீராஜேந்திரா' என்ற பெயரும், 'கங்கை கொண்ட சோழர்' என்ற பெயரும் காணப்



படும். குலோத்துங்கருடைய நாணயங்களில் மன்னரின் உருவமும், புலி உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும். சிலவகை நாணயங்களில் 'சு' என்ற எழுத்து மட்டும் இருக்கும்; இது, மன்னர் சுங்க வரியை நீக்கியதைக் குறிக்குமாம். இன்னுஞ் சில வகை நாணயங்களில் 'மலைய நாடு கொண்ட சோழன்' என்ற வாசகம் காணப்படும்.''

''பாண்டிய, சேர, மன்னர்கள் இருந்தார்களே, அவர் காலத்தில் நாணயங்கள் எப்படி இருந்தன? அதைச்சொல்லுங்கண்ணா?''

''பாண்டியர் 'நாணயங்கள் சதுரவடிவமானவை. ஒருபுறம் யானை இருக்கும். மறுபுறம் ஒன்றுமிருக்காது. சில நாணயங்களில் மீன் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். தங்கம், வெள்ளி நாணயங்களில் சமஸ்கிருத வாசகமும், செப்பு நாணயங்களில் தமிழ் வாசகமும் காணப்படும். சேரர்தம் நாணயங்களில் குடமும், முதலையும் பதித்தனர்.

''நம்முடைய இந்திய நாணயங்கள் எப்போது முதல் அச்சாகி வெளி வருகின்றன அண்ணா?''

''நவாப் சுராஜ் உத்தௌலாவுக்கும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் பேரில், ரூபாய்கள் அச்சடிக்கும் தொழிற்சாலை கல்கத்தாவில் ஆரம்பிக்கப்பட்டது. இந்திய நாணயங்கள் முதன் முதலில் 1757-ஆம் ஆண்டு ஆகஸ்டு 29-ஆம் நாள் அச்சடிக்கப்பட்டன. 1824-ல் இத்துறை மேலும் மேலும் முன்னேறியது. 1835-ல் நாணயங்களுக்கானவடிவமைப்பு(டிசைன்) ஏற்படுத்தப்பட்டது. அந்தக் காலத்தில் அம்மன் காசுகள் என்பவை புழக்கத்தில் இருந்தன ..''

''அம்மன் காசுகளோ? இப்படியும் ஒரு காசா?''

''ஆமாம் மலர்விழி. காலணாவுக்கு எத்தனை அம்மன் காசுகள் தெரியுமா? ஐந்து அம்மன் காசுகள். ஆறு அம்மன் காசுகள் கொடுத்தால் வயிறாரச் சாப்பிடலாம். ஒருரூபாய்க்கு 320 அம்மன் காசுகள் என்று கணக்கு வைத்திருந்தார்கள். காலணா, தம்பிடி என்றெல்லாம் அன்று வழக்கத்திலிருந்தன. செம்பால் ஆன சல்லிக்காசுகளை நாகூர் சல்லி, தென்னை மரத்துச்சல்லி என்று அழைத்தனர். தென்னை மரம் பொறித்த இலங்கைக் காசு அப்போது தமிழ் நாட்டில் செல்லத்தக்கதாய் இருந்தது. காலணாவை எடுத்துக் கொண்டால் அதில் எத்தனை வகைகள் தெரியுமா? கும்பினி காலணா, எட்டவர்ட் காலணா இதைத்தான் மொட்டைத் தலைக் காலணா என்று அழைத்தார்கள். இன்னும் ஜார்ஜ் காலணா, ஓட்டைக் காலணா, குதிரைக் காலணா என்றெல்லாம் இருந்தன.

''ஒன்றைச் சொல்ல மறந்து விட்டேன்'' 1950-ஆகஸ்டு 15-ஆம் நாள் இந்திய விடுதலையின் மூன்றாவது ஆண்டு விழா. அப்போது இந்திய நாணயங்களின் உருவ அமைப்பு முற்றிலும் மாறுதலடைந்தது. நாணயங்களின் முகப்பில் இருந்த மன்னர் தலைக்குப் பதில் அசோகத் தூண், சிங்க உருவம், பொறிக்கப்பட்டது. அதைச்

சுற்றி இந்திய அரசு என்னும் ஆங்கில எழுத்துக்கள் இருந்தன. ஒரு ரூபாய், எட்டணு, நான்கணு நிக்கல் நாணயங்களில் தானியக்கதிர்ச் சின்னமும் அச்சிட்ட ஆண்டு, நாணய மதிப்பு ஆகியவையும் இருந்தன. 1957 ஏப்ரல் முதல் நாளிலிருந்து தசாம்ச நாணயங்கள் முதன் முதல் அமலுக்கு வந்தன' என்று மாறன் சொன்னதும் மலர்விழி, தன் அண்ணனை பெருமையோடு உற்று நோக்கினுள். எவ்வளவு விஷயங்களை அவர் தெரிந்து வைத்திருக்கிறுர். என்று எண்ணிப் பெருமிதம் கொண்டாள். உடனே ஏதோ நினைவுக்கு வந்தவளாய்,

'' அண்ணு, அண்ணு ஏதோ பெரிய பணத்தைப் பற்றிச் சொல்லப் போகிறேன் என்று சொன்னீர்களே, அதைச்சொல்லவில்லையே '' என்று மாறனுக்கு நினைவூட்டினுள்.

''மலர்விழி, உனக்கு நல்ல நினைவு இருக்கிறது. பெரிய பணம் எது என்று உன்னைக் கேட்டால் நீ என்ன சொல்வாய்? ஒரு கோடி ரூபாய்—இதுதான் பெரிய பணம் என்பாய். ஆனல், அதுவல்ல பெரிய பணம், சாதாரணக் கல்தான் பெரியபணமாகக் கருதப்பட்டது. ''

''என்ன? கல்லா பெரிய பணம்? அது இன்று நிறையத் தெருக்களில் இருக்கிறதே!''

''இன்று அது வெறுங்கல் ; அன்று அது பெரும்பணம். இன்று யாராவது கல்லைப் பணம் என்று கொடுத்தால், கல்லடிதான் வாங்க வேண்டும்!'' என்று சிரித்துக்கொண்டே சொன்ன மாறன், கல் பணம் பற்றி சொல்ல ஆரம்பித்தார் :

''பசிபிக் பெருங்கடலில் சுமார் பத்தாயிரம் தீவுகள் இருக்கின்றன. மனித இனம் கடைசியாக யாகக் குடியேறிய நிலம் அவைதான் என அறிஞர்கள் கருதுகின்றனர். இங்குள்ள தீவுகளில் 'மைக்ரானேசியா' என்பது ஒன்று. இங்குள்ளவர்களை மைக்ரானேசியர் என்று அழைத்தனர். இவர்கள் கிளிஞ்சல்களையும் கற்களையும் நாணயங்களாகப் பயன்படுத்தி வந்தனர். இவையே ஒருவனைச் செல்வந்தனுகவும் கருதச் செய்தது. தீவுகளில் கிளிஞ்சல் மாலைகள் சிறிய தொகைக்கு ஈடாகவே மதிக்கப்பட்டன. ஆனுல் பெரிய தொகைக்கு ஈடாக ஒன்றைக் கண்டுபிடிக்க எண்ணினுர்கள். உடனே அவர்கள் நினைவுக்கு வந்தது கல்தான். ஆகவே, அவர்கள் கல்லாலான சக்கரத்தைப் பணமாகக் கருதினர். அதுவே பெரிய பணமாகவும் மதிக்கப்பட்டது. இந்தக் கல் சக்கரம் மூன்றிலிருந்து நான்கு அடி வரை விட்டமும், கனமாகவும், நடுவில் ஓட்டையுடனும் காணப்படும். பாரமான இந்தப் பணத்தைத் தூக்கிச் செல்ல இரண்டு பேர் வேண்டும். அவ்வளவு பெரிய பணம் இது! ''

''சில்லறைக் காசையே, பையில் வைத்துக் கொள்ள கனமாக இருக்கிறது. இந்தக் கல் சக்கரத்தை எப்படி எடுத்துப் போவது அண்ணு? '''

''நன்ருகக் கேட்டாய் மலர்விழி. இந்தப் பணத்தை இரண்டு பேர் ஒரு கொம்பில் கோத்து, கொம்பின் இரு முனைகளையும் தோளில் சுமந்து செல்வார்கள். பணம் கிடைப்பதே பெரும்பாடு. அது கிடைத்தும்கூட அதை எடுத்துச் செல்ல எத்தனைபாடு பார்த்தாயா? மனிதனைப் பணம் படுத்திய பாடு இருக்கிறதே அப்பப்பா! அதைச் சொல்லி முடியாது . . . . ''

''சரி, சரி. இந்தக் கதையைச் சொல்லி முடியுங்கள் அண்ணு''

''இந்தக் கல் பணத்தை அத்தீவு வாசிகள் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் கிடைத்தற்கரிய பொருளாக அது இருந்ததேயாகும். அங்குக் கற்களைக் கண்டெடுப்பது என்பது பொன்னை எடுப்பது போலாகும். ஆனுல் மற்ருெரு தீவில் சுக்காங்கல் பாறை பாளம் பாளமாக வெடித்துக் கிடந்தன. பணக்காரனுக விரும்பியவர்கள் படகில் சென்று அதை எடுத்து வந்தனர். கற்களை ஏற்றிக் கொண்டு கடலில் படகில் வருவது என்ருல் பெரும் பாடாகும். சில சமயங்களில் அரும்பாடு பட்டு ஏற்றி வந்த கல் நாணயங்கள் நழுவிக் கடலிலே விழுந்து விடுவதுண்டு.

இப்படிப் பலர் தாம் கொண்டு வந்த கற்களைக் கொண்டு பெரும் பணக்காரர்களாஞர்கள். சிலர் ஒரு கிராமத்தையே கூட இந்தக் கல்லைக் கொண்டு விலைக்கு வாங்கியிருக்கிருர்கள் '' என்று மாறன் சொன்னதும், உடனே மலர்விழி தன் கையில் மடித்து வைத்திருந்த இருபது ரூபாய் நோட்டை அண்ணனிடம் கொடுத்து விட்டு, ''நான் இதைக் கொடுக்க மறந்தே விட்டேன் '' என்ருள்.

''இவ்வளவு நேரம் நோட்டைக் கையில் வைத்துக் கொண்டே, இந்தக் காகிதப் பணம் ஏன் வந்தது என்று கேட்க மறந்து விட்டாயே '' என்ருன் மாறன்.

''ஆமாம் அண்ணு, அதையும் மறந்து விட்டேன் ''என்று சொல்லி விட்டு காகிதப் பணத்தைப் பற்றியும் சொல்லும்படி வற்புறுத்தினுள்.

''நாணயங்களைச் செய்வதற்கு நிறைய உலோகப் பொருட்கள் தேவைப்பட்டன. இதன் பற்ருகுறையினுல் அதிகமான நாணயங்களைத் தயார் செய்ய முடியவில்லை. அதனுல் எளிதில் கிடைக்கக்கூடிய காகிதமே பணத்துக்கு மிகவும் பயன்பட்டது. காகிதப் பணத்தை வேண்டிய அளவு பெருக்கிக் கொள்ளலாம் ; பெரும் தொகையைக் கூடச் சிறிய காகிதத்தால் குறித்துவிடலாம். வங்கிகளில் அதாவது பாங்குகளில் பணத்திற்குப் பதிலாகச் 'செக்' முறை இருப்பது பற்றித்தான் நீ அறிவாயே '' என்ருர் மாறன்.

உடனே மலர்விழி , '' ஆமாம் நீங்கள்தான் முன்பு அதைப்பற்றி சொல்லியிருக்கிறீர்களே!'' என்ருள்.

''புதை பொருளில் நாணயங்களும் கிடைத்தன. அவைகளை எல்லாம் சேகரித்து வைத்து அறிஞர்கள் பலர் ஆராய முற்பட்டனர். இதற்கு 'நாணயவியல்' என்று பெயர். இன்று உலகில் 'நாணயவியல்' இல்லாத பொருட்காட்சிகளே இல்லை எனலாம். இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் பொருட்காட்சி இத்துறையில் மிகச் சிறந்து விளங்குகிறது. இந்தியப் பொருட்காட்சிகளிலும் இத்தகைய நாணயப் பிரிவுகள் உள்ளன'' என்று சொல்லிவிட்டு மாறன் கடிகாரத்தைப் பார்த்தார். இரவு மணி ஒன்பது.

''மலர்விழி வா, சாப்பிட்டு விட்டுப் படுக்கப் போகலாம்... பணமென்ருல் சாப்பாடும் மறந்து போம்'' என்று சிரித்துக் கொண்டே எழுந்தார். மலர்விழியும் அண்ணனைப் பின் தொடர்ந்து சென்ருள்.

### அதிகப் பால் தரும் அதிசயப் பசு

ஒரு பசுவிலிருந்து 4 தடவைகள் பால் கறந்தால் சிறிய நீச்சல் தொட்டிகள் எட்டை நிறைத்துவிட முடியும் என்ருல் நாம் நம்பத்தான் மாட்டோம். அவ்வாறு பால் தரும் கறவை இனம் ஒன்று ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் உள்ள பவேரியாவில் இருக்கிறது. சிபைல் என்று அழைக்கப்படுகின்ற இந்தப் பசு ஒரு நாளுக்கு 44·6 லிட்டர் பால் தருகிறது. இது கடந்த 5 ஆண்டுகளாக இவ்வாறு பால் தந்து வருகிறது.




காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருப்புக்குழி ஊராட்சி மன்ற குடும்பநலத் திட்டக் கட்டடம் மற்றும் பணியாளர் குடியிருப்புக்கட்டடங்களை திரு சி. வி. எம். அண்ணாமலை, எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், அவர்கள் துவக்கி வைத்து அதன் சிறப்பை விளக்கினார். இதேபோல் பரந்தூரிலும் கட்டடங்கள் திறந்துவைக்கப்பட்டன.

* * *

செங்கை மாவட்டம் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், புதுப்பட்டு ஊராட்சியைச் சேர்ந்த கொம்மந்தாங்கல் கிராமத்தில், திருவள்ளூர் கோட்ட ஆட்சித் தலைவர் திரு வி. மனோன்மணி அவர்கள் தமிழ்நாடு அரசு பரிசு சீட்டு திட்ட வருவாய் மூலம் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

செங்கற்பட்டு வடக்கு மாவட்ட வளர்ச்சி அலுவலர் திரு பி. எஸ். சீனிவாசன் கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பள்ளி மாணவ மாணவியர்களுக்கு மேலும் ஊக்கந்தரும் வகையில் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

* * *

கிராமங்களில் சத்துணவு கிடைக்கச்செய்வதற்காக மதுரை மாவட்டத்தில் ஒரு திட்டம் அமலாக்கப்பட விருக்கிறது. அந்தந்தக் கிராமங்களில் பெறப்படும் பொருட்களைக் கொண்டு சத்துணவு தயாரிக்கப்பட்டு 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிகள், குழந்தை பெற்ற பெண்கள் ஆகியோருக்கு ஒரு வேளை உணவு வழங்கப்படும். இம்மாவட்டத்தில் 5 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில்' 35 கிராமங்களில் இத்திட்டம் அமல் நடத்தப்படவிருக்கிறது. நாள்தோறும் ஒரு குழந்தைக்கு 40 காசு, பெண்ணுக்கு 30 காசு மதிப்புள்ள (ஒரு வேளை மதியம்) உணவு வழங்கப்படும். தமிழ் நாட்டிலேயே முதல் கட்டமாக மதுரைப் பகுதியில் இது தொடங்கப்பட இருக்கிறது. மற்றும் குடும்பநலப் பிரச்சாரம் நவம்பர், டிசம்பரில் மதுரை மாவட்டத்தில் தீவிரமாக்கப்படும் போது 40,000 குடும்பநல அறுவைச் சிகிச்சைகள் நடத்தப்படவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

* * *

இராமநாதபுரம் மாவட்டம் பேரூராட்சி மன்றத்தின் சார்பில் நாள் அங்காடி ஒன்றை அமைச்சர் மாதவன் அவர்கள் திறந்து வைத்தார். பேரூராட்சியின் மூலம் வருமானத்தைப் பெருக்கும் இங்கு 25,000 ரூபாய் செலவில் நாள் அங்காடிக் கிடங்குத் திறக்கப்பட்டுள்ளது. இப்பேரூராட்சி ஆண்டுக்கு 7,200 ரூபாய் வருமானத்தைப் பெருக்குகிறது. வருமானத்தைப் பெருக்குவதில் இது வெற்றி பெற்று வருகிறது.

நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதில் அரசு விரைந்து செயல் படுகிறது என்றும், பொதுமக்கட்கு ஓயாது நன்மை செய்ய வேண்டுமென்பதிலும், பொது மக்களிடமுள்ள சுமைகள் குறைக்கப்பட வேண்டும் என்பதிலும் அரசு பெரிதும் அக்கறை செலுத்துகிறது என்றும் அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டார்.

* * *

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கொட்டாம்பட்டியில் மனு நீதித் திட்டத்தின் கீழ் 2,500 மனுக்களை விசாரித்தார். இந்த மனு நீதித் திட்டம் பயனுள்ளதாகவும் இருந்தது. கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்திற்காக ரூ. 5 இலட்சம் அனுமதிக்கக் கோரும் திட்டமொன்று அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளதென்றும், 'இதற்கு அனுமதி அளிக்கப்பட்டதும் கடன் வசதியளிக்கப்படும் என்னும் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி கேட்டவர்களுக்கு ஆட்சித் தலைவர் பதிலளித்தார்.

மதுரை மாவட்டத்தில் பள்ளி செல்லும் வயதிலுள்ள சுமார் 60,000 குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் இருப்பதாகவும், இவர்களை செப்டம்பர் மாதத்திற்குள் பள்ளிக்குச் செல்ல வைக்கும் தீவிர முயற்சித் திட்டம் ஒன்றைத் தான் தயாரித்திருப்பதாகவும் இதற்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோர் உதவ வேண்டும் என்றும் கூறினார்.

கடந்த ஆண்டில் 18,000 பேருக்கு நிலமும், வீட்டு மனையும் அளிக்கப்பட்டது என்றும் இவ்வாண்டில் 25,000 பேருக்கு நிலம் வீட்டுமனையளிக்க திட்டமிடப்பட்டுள்ளதென்றும் அவர் சொன்னார்.

மதுரை மாவட்டம் சோழவந்தான் பகுதி விளாம்பட்டி கிராமத்தில் 'கள்ளர்' சீரமைப்பு வளர்ச்சிப் பணிக்கான அடிக்கல் நாட்டுவிழா சட்டமன்ற உறுப்பினர் திரு பி.எஸ். மணியம் தலைமையில் நடந்தது. பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

ஆவாரம்பட்டியில் இதுவரையில் குடிசையில் இயங்கி வந்த பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்காக ரூ. 5,000-ம் வழங்கப்பட்டது. கள்ளர் நல நிதியிலிருந்து 27 மாணவர்கள் பயிலும் விளாம்பட்டி கள்ளர் உயர்நிலைப் பள்ளிக்கு 670 ரூபாயும், 5 மாணவர்கள் பயிலும் கருதன்பட்டி ஆதாரப் பள்ளிக்கு 30 ரூபாயும், 7 மாணவர்கள் பயிலும் மட்டப்பாறை உயர்நிலைப்பள்ளிக்கு 168 ரூபாயும், 27 மாணவர்கள் பயிலும் அணைப்பட்டி நடுத்தரப் பள்ளிக்கு 165 ரூபாயும் 30 மாணவர்கள் பயிலும் அய்யப்ப நாயக்கன்பட்டிநடுத்தரப் பள்ளிக்கு 300 ரூபாயும் ஆக மொத்தம் 86 மாணவர்களுக்காக ரூ. 1,333-ஐ தமிழ் நாடு அரசு ஒதுக்கியிருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.



# கண்ணகிக் கோட்டம்

## மதுரையின் மேற்கு வாயில்

மதுரை மாநகரில் கோட்டைக்குரிய மேற்கு வாயிலுக்கு முன்னே பழமையான கோயிலொன்று; அதன் வாயிலுக்கு இருபக்கமும் இரண்டு வேப்ப மரங்கள் தழைத்துக் கவிழ்ந்து நிழலிட்டு நிற்கின்றன. வாயிலுக்கு எதிரே பல கற்சிலைகள் நிற்கின்றன. அவைகள் பாண்டிய நாட்டு வீரர்கள், போரில் தமது மன்னன் வெற்றி பெறுவதற்காகத் தங்களை வேலாலும், வாளாலும் அக்கோயிலிலுள்ள தெய்வத்திற்குப் பலியிட்டுக் கொண்டதற்கு நினைவாக, மக்கள் அமைத்து வழிபடும் வீரக்கற்களாகும். இக்கோயிலே அன்று அரசு செலுத்திய பாண்டிய மன்னர்களும் வீரர்களும் மக்களும் வழிபட்ட வரலாற்றுச் சிறப்புடைய கொற்றவைக் (துர்க்கை) கோயிலாகும்.

## வீரபத்தினி

மேற்கு வாயில் வழியாக ஒரு பெண் விரித்த கூந்தலும், வெறித்த முகமுமாக வெளியே வருகின்றாள். அவளுடைய முகத்தில் களை இல்லை. கவலை கவிழ்ந்துள்ளது. வெறித்த பார்வையில் வெறுப்புணர்ச்சி நிலைத்துள்ளது. மார்பகத்தை மறைத்து நிற்கும் அவளது ஆடையின் இடப்பக்கம் இதயமிட்ட இலச்சினையாக இரத்தக் கசிவின் பசுமை தெரிகின்றது. கோயிலிலிருந்த கொற்றவையே மதுரையினுள் சென்று கோரவடிவோடு கோயிலுக்குத் திரும்புகின்றாளோ என்ற தோற்றம். கோயிலுக்கு முன் வந்தாள். உற்று ஒரு முறை கொற்றவைச் சிலையை நோக்கினாள். பார்வையை மீட்டுத் தன் கைகளில் ஒளிவிடும் சங்கு வளையல்களை உறுத்துப் பார்த்தாள். கண்களிலிருந்து பெருகும் நீர் மார்பில் …யும் செந்நீருடன் பெருகுகின்றது. அவலக் குரலுடன் இரு கைகளையும் சேர்த்து உயர்த்தி அடித்தாள். கோயில் வாயிலில், திக்கெங்கும் தெறித்தன வளையல்கள். அலறலுடன் அவ்விடமிட்டு அகன்றாள். விரைந்து நடந்தாள் மேற்கு நோக்கி.

இந்நிகழ்ச்சி கற்பனையல்ல. இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் நிகழ்ந்ததாகும். இவ்வாறு மதுரை நகரின் மேற்கு வாயிலிலிருந்து, கண்ணீரும் கம்பலையுமாகக் கதறிக் கொண்டு சென்ற நங்கையே முலைமுகம் திருகி மதுரையழலூட்டிய வீரபத்தினி கண்ணகியாகும்.

## மதுரையில் இருந்து கண்ணகி நடந்த வழி

கொற்றவைக் கோயில்களைக் கடந்து விம்மலும் அலறலுமாகப் புலம்பி நடந்த கண்ணகி வையை ஆற்றின் கரைக்கு வந்து நின்றாள். மேற்கு மலையில் பெய்த மழையால் வெள்ளம் மிகுந்து, வையை என்னும் பெண்ணானவள் கரையில் நிற்கும் கண்ணகியைக் கண்டு நிலை கலங்கித் தடுமாறி ஓடுபவளைப் போலக் குதித்தும் சுழித்தும் அரித்தும் நுரைத்தும் பேரிரைச்சலுடன் ஓடினாள். வெள்ளப் பெருக்கால் ஒலித்து ஓடும் வையையின் ஒரு கரையாகும் தென்கரை வழியே மதுரையிலிருந்து தொடரும் வழியாகும். மேடும் பள்ளமும் காடும் கறம்புமாகக் கிடந்த அவ்வழியே சிந்தனையின்றி மேற்கு நோக்கியே நடந்தாள் கண்ணகி.

கணவனை இழந்த கொடுந்துன்பம் உள்ளத்தையும், உடலையும் குலைக்க, பாண்டியன் செய்த தீமை அறிவை வெறியாக்க, மங்கல மிழந்து வாழ விரும்பாத கண்ணகி காட்டிலும் மேட்டிலும் குண்டுக் குழியிலும் நடந்தும் ஓடியும், கால் இடறி விழுந்தும் போது கலங்கி அலறி எழுந்தும் சில நாட்கள் நடந்தாள். இரவு பகலாக ஓய்வின்றி ஓடியதால் உண்டான தளர்ச்சியும், சிதைத்த மார்பில் செறிந்த புண்ணால் வந்த நலிவும், மனப்புண்ணால் மடிந்துவரும் உடலும் எல்லாம் சேர்ந்து கண்ணகியின் இறுதிநாளை அறுதியிட்டன. இந் நிலையில் வையையாற்றின் தோற்றப் பகுதிக்கே வந்துவிட்டாள். எதிரே வானளாவி உயர்ந்து படர்ந்து நீண்டு வளைந்து நின்றது நெடுவேள் குன்றம்; தான் என்ன செய்கிறோம் என்ற நினைவைக் கைவிட்ட கண்ணகி மலையென்று மலைக்கவில்லை; தான் நடப்பதை நிறுத்தாது அடிவரை மீது அடிவைத்து ஏறினாள். மலையின் மேல் தளத்திற்கே வந்துவிட்டாள். அடுக்கடுக்காக உயர்ந்த நெடுவேள் குன்றத் தொடரின் தலைப்புகளில் ஒன்றாகும் பரந்த தாழ்வரை. அங்கே மலைவேங்கை மரங்கள் நெருங்கி வளர்ந்து மலர்ந்து திட்டாக நிழலிட்டு நின்றன. அவ்வேங்கை மரக் கானலுள்ளும் விழைந்து நடந்தாள் கண்ணகி. கண்களில் பார்வை மழுங்கியது. விழிகள் சுழன்றன. உடலில் உயிர் ஊசலாடுவதை ஒவ்வொரு மூச்சும் இரைச்சலுடன் வெளிப்படுத்தியது.

அப்பொழுது அம் மலையில் வாழும் குறவர் குலமக்கள் கண்ணகியின் நிலையைக் கண்டு அஞ்சினர். ஆயினும் அருகில் சென்றனர். குறவர்களின் தலைவன், வணங்கிய உடலோடும் வணங்கிய கைகளோடும் அஞ்சிய குரலால் 'அம்மா! தாங்கள் யாரம்மா?' என்று கேட்டான். "தீவினையில் விளையாட்டுப்பாவை பாவியேன்" என்றாள். அதற்கு மேல் பேச்சில்லை. அசைவில்லை; அழுகையும் இல்லை. கண்ணகி மதுரையிலிருந்து புறப்பட்டது முதல் பதினான்காம் நாளே அந்நாள். உடல்நிலை தடுமாறியது.

மண்ணகத்தில் சோழநாட்டில் மானிடப் பெண்ணுகப் பிறந்து, கற்புக்கரசியாகி, கணவனுடன் பாண்டியநாட்டு மதுரைக்கு வந்த கண்ணகி, சேர நாட்டெல்லையுள் நெடுவேள் குன்றின்மேல், வேங்கை மரத்தின் அடியில் தனித்து நின்று பத்தினித் தெய்வ மாளுள். (இறந்தாள்.)

### கண்ணகி வழிபாடு

நேரில் கண்ட குன்றக் குறவரின் கண்கள் காண விண்ணுலகடைந்த பெண்ணின் பெயரை அவர்கள் அறிந்திலர். மங்கலச் சின்னமாகும் தாலியுடன் தனித்து நின்று ஒரு பெண் மரணத்தை விருப்புடன் ஏற்றது வியப்பாக இருந்தது. எனவே, தெய்வமாகக் கருதினர். தாம் கண்ட அடையாளத்தைக் கொண்டே 'மங்கலதேவி' என்று பெயரிட்டனர். நறுஞ்சினை வேங்கை நன்னிழற் கீழாகவே தெய்வமாகக் கொண்டு மங்கலதேவியைக் கொண்டாடிவழிபட்டனர். தமிழகத்தில் கண்ணகி வழிபாடு, பத்தினி வழிபாடு, நெடுவேள் குன்றத்தில்வாழ்ந்தகுறவர்களால் முதன் முதலில் கொண்டாடப்பட்டது. நெஞ்சை அள்ளும் இத்தகைய நிகழ்ச்சி உண்மையாகவே நிகழ்ந்ததா? அன்றிக் கற்பனையா? என்னும் உள்ளக் கிளர்ச்சி ஏற்படுவது இயற்கை தானே! எனவே,

### ஆராய்ச்சி அரும்பியது

கி. பி. 1945-ல் கண்ணகி பிறந்த காவரிப்பூம்பட்டினத்தைக் காணச் சென்றேன். சிலப்பதிகாரம், பட்டினப்பாலை ஆகிய பழந்தமிழிலக்கியங்களில் விரிவாக விளக்கப்பெறும் செல்வ வளங்களுடன் சிறந்திருந்த பூம்புகாரின் ஒரு சிறு பகுதியும் இன்றில்லை. முயன்று,தொடர்ந்து மூன்றுண்டுகள் ஆராய்ச்சி செய்ததன் பயனுக, பூம்புகார் கடல் கொந்தளிப்பாலும், காவரியாற்றின் பெருக்காலும் கடலிலும், தரையிலும் அழிந்து மறைந்து விட்டது என்பதை ஆங்காங்கே எஞ்சியதாகக் கிடைத்த சின்னங்கள் உணர்த்தின.

எனவே, காவரிப்பூம்பட்டினம் கற்பனையாகாமல், இளங்கோவடிகள் குறித்தபடி சீருடன் இருந்த பின்னர், இயற்கையின் விளையாட்டால் இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிட்ட உண்மையைக் கண்டதைக் கொண்டு, சிலப்பதிகாரத்தில் குறிக்கப் பெறும் பழமையான ஊர்களையும், வழிகளையும், இடங்களையும் நேரில் கண்டு ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ற ஆர்வம் எனக்கு உண்டாயிற்று.

### திட்டமான ஆராய்ச்சி

காவரிப்பூம்பட்டினத்திலிருந்து மதுரைக்குக் கண்ணகியுடன் கோவலன் புறப்பட்டுச் சென்ற வழியாக சிலப்பதிகாரம் குறிப்பதைப் பின்பற்றிய முறையில், பூம்புகார் முதல் காவரியாற்றின் வடகரை வழியாகத் திருவரங்கம் உறையூர் வரையில் முதல் பகுதியாகவும், உறையூர் முதல் கற்குடி, பூங்குடி, கொடும்பாளூர் வழியாக பிரான்மலை, அழகர்மலை வையையாறு வரையில் இரண்டாம் பகுதியாகவும், மதுரை மாநகர் ஆராய்ச்சி மூன்றும் பகுதியாகவும், கணவனை மதுரையில் இழந்த கண்ணகி மதுரை முதல் வையைக் கரை வழியாக நெடுவேள் குன்றம் சென்று தெய்வமான இடம் வரையில் உள்ளவற்றை நான்காம் பகுதியாகவும் வைத்து என் ஆராய்ச்சிக்குரிய பகுதிகளைத் திட்டமிட்டு அமைத்துக்கொண்டேன்.

பழங்காலக்கல்லெழுத்துக்களைப் படித்தறியும் பயிற்சியுடன் பழம் பொருட் சின்னங்களைக் கால வகையுடன் கணித்தறியும் அனுபவமும், ஓவியத்திறனும் ஓரளவு என்னிடம் அமைந்திருந்த துணிவினுல் பூம்புகாரிலிருந்து கால்நடையாகவே திட்டமிட்டபடி ஆராய்ச்சியைத் தொடந்து நிகழ்த்தலானேன். கால்நடையாகவே ஆர்வமுடன் தொடர்ந்த என் ஆராய்ச்சிமுறை, ஒரே தொடர்பாக அமைய ஏதுமில்லை. ஓய்வு நாட்களும் கைப்பொருளும் ஒன்றியபோது,விட்ட இடத்திலிருந்து தொடரும் பாங்கிலேயே அமையலாயிற்று. விடாது தொடர்ந்து ஆராய்ச்சி செய்த இடங்களில் பழைய தமிழகத்தின் வரலாற்றினை விரிவு செய்யும் கருத்துடைய புதிய கல்வெட்டுக்கள், பழைய கட்டடக் கலை, சிற்பக் கலை, வெண்சுதைக் கலை ஆகியவற்றின் சின்னங்கள், முதுமக்கள் தாழிகள், நடுகற்கள், வீரக்கற்கள் ஆகிய வரலாற்றுச் சான்றுகள் பழமையான இடங்களில் ஆராய்ச்சி செய்யுங்கால் காணக் கிடைத்தமையே யான் மேலும் ஆராய்ச்சியினைத் தொடர்ந்து செய்வதற்கு ஊக்கமளித்தது. மற்றும், புதியதும் புதுமை நிறைந்தது மாகிய பழைய தமிழக வரலாற்றுப் பழம் பொருட்களைக் காணக் காணச் சிலப்பதிகாரத்திற்குரிய கண்ணகி கோவலனைப் பற்றிய சின்னங்களும் எங்காவது இருக்கக் கூடும் என்ற எண்ணம் என் மனத்தில் இடம் பெறலாயிற்று.




### உறையூரில் கண்ணகி வழிபாடு

உறையூரில் கண்ணகியும் கோவலனும், கவுந்தியடிகளுடன் ஓரிரவு தங்கினுர்கள் என்று சிலப்பதிகாரம் குறிக்கின்றது. பழைய உறையூரின் அமைப்பினைக் கல்வெட்டுச் செய்திகளைக் கொண்டு ஓராண்டளவில் பல பகுதிகளை ஆராய்ச்சி செய்ததனல், சங்க கால உறையூரில் பரந்த அமைப்பும் சிறப்பும் புலப்பட்டதே தவிரக் கண்ணகியைப் பற்றியதொன்றும்கிடைக்கவில்லையாயினும், 'சோழன் பெருங்கிள்ளி கோழி (உறையூர்) அகத்து எத்திறத்தாலும் வரந் தரும் இளவோர் பத்தினிக் கடவுள் ஆகுமென நங்கைக்குப் பத்தினிக்கோட்டம் அமைத்து நித்தல் விழாவணிநிகழ்வித்தான்' என்றும் சிலப்பதிகாரம் உரை பெறு கட்டுரைப் பகுதியைக் கொண்டு ஆராய்ச்சி செய்த போது, இன்றுள்ள உறையூரில் இருக்கும் நாச்சியாரம்மன் கோயில் சோழர்காலப் பழமையுடன் அமைந்திருப்பதிலும் பெண் தெய்வத்திற்குரிய பெருங் கோயிலாக வளர்ச்சியடைந்து விளங்கினதாலும், சங்க காலத்தில் பெருங்கிள்ளி சிறியவடிவில் அமைத்த பத்தினிக் கோட்டமே காலப் போக்கில் உருவும் பெயரும் மாற்றமடைந்து நாச்சியாரம்மன் கோயிலாக பல அங்கங்களுடன் விரிவடைந்துள்ளது என்பதைச் சிந்தித்து அறிய முடிந்தது. உறையூரைப் பற்றிய

என் ஆராய்ச்சியினை, தமிழ்ப் பொழிலில் "புகார் முதல் வஞ்சி வரை" என்ற கட்டுரைகளாக எழுதியுள்ளேன்.

### மதுரை வரையில்

உறையூர் ஆராய்ச்சி நன்முறையில் முடிந்த பின்னர், கண்ணகியும்கோவலனும் கவுந்தியடிகளுடன் மதுரைக்குச் சென்ற வழி எது என்பதைச் சிலப்பதிகாரம் குறிப்பதைக் கொண்டும், நில இயற்கையைக் கொண்டும் சிந்தித்துத் திட்டமிட்டபடியே. உறையூரின் தென் கோடியிலிருந்து என் ஆராய்ச்சியினைத் தொடர்ந்தேன். பழைய உறையூரின் தென் எல்லையின் ஒரு பகுதி உய்யக் கொண்டான் திருமலையாகும். அப்பகுதியிலிருந்து முறையே தெற்கேயுள்ள விராலிமலை, கொடும்பாளூர், அழகர் மலையின் பல பகுதிகள் ஆகியவற்றை ஆராய்ச்சி செய்து முடித்தேன். இப்பழமை மிகுந்த இடங்களில் புதிதாகக் கிடைத்த தமிழக வரலாற்றுச் செய்திகளும், கல்வெட்டுக்களும் பலவாகும். இடையிடையே காடுகளில் வழி தெரியாது அலைய நேர்ந்ததாலும், கள்வரிடம் அகப்பட்டுக் கொண்டதாலும் எனக்குண்டான துன்பங்கள் சொல்லும் தரமன்று. எல்லாவற்றையும் வாழ்க்கையின் அனுபவமாகவே கருதி, மனத்தை அமைதி செய்துகொண்டு, மேலும் கண்ணகி நடந்து சென்ற வழியாக இளங்கோவடிகள் குறிக்கும் பகுதிகளை இயன்ற அளவில் நடந்து சென்றே ஆராய்ச்சி செய்வதன் பயனை வையையாற்றின் வடகரையை அடைந்தேன். கொடும்பாளூருக்கும் வையையாற்றுக்கும் இடையே அழகர் மலைக்கு வட கிழக்காக உள்ள கொடுங்குன்றத்தையும் (பாரி-பறம்பு மலை) தென் கிழக்காகவுள்ள யானை மலையையும் ஆராய்ச்சி செய்து முடித்தேன். இவ்வாறாகப், பூம்புகார் கடற்கரையிலிருந்து தொடங்கிய ஆராய்ச்சி மதுரை வரையில் நிகழ்ந்தற்குரிய இடைக்காலமாகப் பன்னிரண்டாண்டுகள் தொடர்ந்து கழிந்திருந்தன.

### பழைய மதுரை

மதுரை மாநகர் முற்றிலும் புதிய தோற்றமாக இன்று ஆகியுள்ளது. ஓராண்டு அளவில் பலமுறை அங்குச்சென்று நகரின் உட்பகுதிகளையும், வெளிப்புறப் பகுதிகளையும் வரலாற்று நோக்குடன் ஆராய்ச்சி செய்ததின் பயனைப் பிற்காலப் பாண்டியரின் அரசியல் சின்னங்களுடன், நாயக்க மன்னர், முகம்மதிய மன்னர் ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் உண்டான கட்டடங்கள் சிதைந்த நிலையிலும் பிறவாறும் காணக் கிடைத்தன.

### மதுரையில் கண்ணகி சிலை

வையை ஆற்றுக்கும் மதுரைக்கும் இடையே அமைந்த தென் கரைப் பகுதியினை ஆராய்ச்சி செய்யலானேன். அப்பகுதியில் யாதவப் பெருமக்கள் மிகுதியாக வாழும் தெருக்களைச் சார்ந்த வடக்கு மாசி வீதியில் '' செல்லத்தம்மன் '' என்ற பெயருடன் பழமையான அம்மன் கோயிலொன்று உள்ளது. கோயில் வடக்கு நோக்கிய பாங்கில் அமைக்கப்பட்டுள்ளது. கருவறைக்கு முன்னருள்ள மண்டபத்தில் கிழக்கு நோக்கியதாக பாண்டிய மன்னனொருவனால் அமைக்கப்பட்ட கண்ணகி சிலை ஒன்று உள்ளது. இச்



சிலையே முன்னர் கோயிலுக்குரிய மூல தெய்வமாக செல்லத்தம்மன் என்ற பெயரில் அமைக்கப்பட்டிருந்தது என்ற செய்தியை முதியவர்கள் கூறக் கேட்டறிந்தேன். மானிட வடிவில் சிலை இருப்பதால் கருவறையிலிருந்து இடம் பெயர்த்து மண்டபத்தில் வைத்து அதற்கென்று கிழக்கு நோக்கிய வாயிலும் அமைத்துள்ளனர். கருவறையில் காளிவடிவில் சிலை செய்தமைத்துள்ளனர். இந்நிகழ்ச்சி பிற்காலத்தில் நிகழ்ந்திருக்கின்றது.

பிற்காலப் பாண்டியர் வளர்த்த சிற்பக்கலை நுட்பங்களுடன் விளங்கும் இக்கண்ணகி சிலை, மானிட வடிவில் இரண்டு கைகளோடு இருக்கின்றது. கருணை பொழியும் முகம், வாரி இடப்புறம் கொண்டையிட்ட கூந்தல் தோளளவு தொங்கும் அணிகளில்லாத தொள்ளைக் காதுகள், மங்கல அணியுடன் (தாலி) விளங்கும் மார்பு. வலது கை ஒரு மலரை ஏந்தி நிற்க, இடது கையில் இலாவகமாகச் சிலம்பொன்று உள்ளது. வலது காலைக் குத்திட்டு இடது காலை மடக்கி மணையில் அமைத்தமர்ந்த தோற்றம். ஓர் இளம் பெண் எழுந்துவந்து எதிரே உட்கார்ந்துள்ளதைப் போன்ற உயிர்ப்பான காட்சி. இத்தகைய சிறப்புடன் பிற்காலப் பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்டு செல்லத்தம்மன் என்ற பெயருடன் விளங்கிய கண்ணகி சிலையை மதுரையில் வடக்குப் பகுதியில் கண்டறிந்த பின்னர், நகரில் தெற்குப் பகுதியினை ஆராய்ச்சி செய்யலானேன்.

### கோவலன் பரம்பு

மதுரையிலிருந்து திருப்பரங்குன்றத்திற்குச்செல்லும்சாலையில் இடப்புறம் ஒரு திடல் உள்ளது. மேடு பள்ளங்களுடன் புதரடைந்து கிடந்த அப்பகுதியை '' கோவலன் பொட்டல் '' என்றும் 'கோவலன் பரம்பு', என்றும் கூறுகின்றனர். அப்பகுதியை யான் ஆராய்ச்சி செய்தபோது பூமிக்கு அடியில் பழங்காலத்து முதுமக்கள் தாழிகள் இருக்கக்கண்டேன். அவற்றைக் கொண்டு சிந்தித்த போது, ஒரு காலத்தில் அப்பகுதி மதுரைக்குரிய இடுகாடாக இருந்த உண்மை புலனாயிற்று. மதுரையில் கொலைக்களப் பட்ட கோவலன் உடலை, அக்கால வழக்கப்படி தாழியில் வைத்து அடக்கம் செய்யப்பட்ட காரணத்தினாலேயே, அவ்விடுகாடு '' கோவலன் பரம்பு '' என்ற குறிப்புடன் சிறப்புப் பெயர் பெற்றது போலும்! இன்றும் அப்பகுதியிலுள்ளவர்கள் இப்பெயருடன் அத்திடலைக் குறிப்பிடுவதைக் கேட்டு அறியலாகும். (மதுரை நகரில் வளர்ச்சிப் பகுதிகளுள் ஒன்றாக இன்று இப்பகுதியிருப்பதால், குடியிருப்புக்கள் நாளும் தோன்றி பரப்பிடம் குறுகி வருகின்றது) மதுரை மாநகர் ஆராய்ச்சியினை ஒருவாறு முடித்துக்கொண்டு, மேல் கண்ணகி மதுரையை விட்டு மேற்குக் கோட்டை வாயில் வழியாக வெளியேறி, வையைக் கரை வழியைப் பின்பற்றி மேற்கு நோக்கிச் சென்ற வழியைப் பின்பற்றலானேன்.

### வையைக் கரைவழி

வையைக் கரை வழியென்பது, இன்று வையையாற்றின் தென்

கரையிலுள்ள சோழவந்தான் என்னும் ஊரின் வழியாகச் செல்லும் தென் கரைவழியே யாகும். இதுதான் கண்ணகி நடந்த வழியென்பதற்கு இயற்கை அமைப்பு திட்டமாக அமைந்துள்ளது. மதுரைக்கு நடக்கும் எல்லையாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓடிவரும் வையைக்குத் தெற்கில், அதாவது மதுரைக்கு மேற்கே நாகமலைத் தொடர் கிழக்கிலிருந்து மேற்காக ஆற்றுக்கு இணையாகவே நீண்டு தொடர்ந்துள்ளது. எனவே, ஆற்றுக்கும் மலைத் தொடருக்கும் இடைப்பட்ட கரைப்பகுதி என்றும் மாறாத இயற்கை வழியாகும். இளங்கோவடிகள் குறித்தபடி வையையில் நீர் பெருகி ஒலித்துச் சென்றதால் வையையின் தென்கரைப் பகுதியாகும் ஒரு கரையைப் பின்பற்றியே கண்ணகி மேற்கு நோக்கிச் சென்றாள் என்பது தெளிவாகும். அவ்வாறுள்ள வையையின் தென்கரை வழியினைப் பின் பற்றிச் சென்றால், இடையிடையே காடும் மேடும், பள்ளமும், படுகையும், மலைப்பாங்குமாகவே தரையின் இயற்கையமைப்பு தொடர்ந்து அமைந்துள்ளது.

## வையையின் தொடக்கம்

தென்கரையைத் தொடர்ந்து மேற்கே சென்றால், தேனி என்னும் ஊருக்கு முன்னர் வையையில் ஒரு பெருந்திருப்பம் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். தேனிக்குத் தெற்கே அமைந்திருக்கும் கம்பம் பள்ளத்தாக்கின் கோடியான வர்ஷநாட்டிலிருந்து உற்பத்தியாகி வடக்கு நோக்கி ஓடிவரும் வையை, எதிரே வளர்ந்தோங்கி நிற்கும் கொடைக்கானல் மலைத்தொடரின் சரிவான அடிவாரப் பள்ளத்தாக்கமைப்புக்கேற்பக் கிழக்கு நோக்கித் திருப்பங் கொள்ளுகிறது. இத்திருப்பத்தில் குன்னூர் (குன்றூர்) என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. குன்னூரிலிருந்து வையையின் தொடக்கம் வரையில் இருபுறமும் பல அருவிகளும் சிற்றாறுகளும் ஆங்காங்கே வந்து கூடுகின்றன. இப்பகுதியே கம்பம் பள்ளத்தாக்கு என்று பொதுவாகக் கூறப்படும், பரவலானதும் வளமுடையதுமான நிலப்பரப்பாகும். பெரும்பான்மையும் இப்பகுதி பள்ளத்தாக்காக இருப்பதற்குக் காரணம் சுற்றிலும் மலைகள் சங்கிலித் தொடர்போல் சூழ்ந்துள்ளதேயாகும்.

குன்னூரிலிருந்து வையையைப் பின்பற்றி மேலே செல்வது எளிதல்ல ; காரணம் இங்கு சிற்றாறாக ஓடிவரும் வையையைச் சூழ்ந்துள்ள பகுதி, காடும், கரம்பும், புதரும், களிமண் உளையுமாக அமைந்துள்ளதேயாகும். இப்பகுதியில் ஆங்காங்கே பல சிற்றூர்கள் இருப்பினும் அவைகள் மலைவளம் நிறைந்த மண்வளத்தின் பயனைக் கருதி உழைக்கும் மக்களைக் கொண்டதாகவே இருக்கின்றன. அவற்றுள் மோட்டாங்காடு, செங்குன்னூர், சுருளிப் பட்டி என்ற ஊர்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இங்குள்ள காடுகளில் யானைகள், நிலைத்து வாழுகின்றன. வருடை என்ற மானினங்களும் மிகுதியாக உள்ளன.

சென்ற ஐந்து ஆண்டுகளில் நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் மற்றும் திருவைகுண்டம், கோயில் பட்டி, சங்கரன் கோவில் வட்டங்களில் நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையினரால் பாலங்கள், ஊராட்சி ஒன்றியக் கட்டடங்கள், சாலைகள் முதலியன மிகச் சிறந்த முறையில் போடப்பட்டுள்ளன.

கடந்த ஐந்து ஆண்டுகளில் தூத்துக்குடி கோட்டத்தில் 80 கிலோ மீட்டர் நீளமுள்ள கப்பிச் சாலைகள் தார் சாலைகளாகச் சுமார் ரூ. 11 இலட்சம் செலவில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

## செங்கோட்டு உயர்வரை

இங்கிருந்து மேலும் செல்ல வேண்டுமானால் எதிரே எங்கும் வழியில்லை. காடுகளோடு தொடர்ந்து வானளாவி செங்குத்தாக உயர்ந்து மேகப் படலங்கள் படிந்து உயர்ந்துள்ள சிகரங்களை உடைய செங்கோட்டு உயர் அடுக்கு மலை மேல் ஏறியே ஆகவேண்டும். இயற்கையமைப்பு, குதிரைலாட அமைப்பில் இங்கு மலைத் தொடர் சூழ்ந்து அமைந்துள்ளதே காரணம் என்பதை மேலே விளக்கியுள்ளேன். இம்மலைத் தொடரே பிற்காலத்தில் சுருளிமலைத் தொடர் என்று பெயர் பெற்றுள்ளது.

## நெடுவேள் குன்றம்

இம்மலைத் தொடரிலுள்ள செங்குன்று ஒன்றின் தலைப்பாக அமைந்த உயர்மட்டத் தாழ்வரையில் அடர்ந்த காடுகளுக்கிடையே பழமையான முருகன் கோயில் ஒன்றுள்ளது. முருகனை, பழந்தமிழ் மக்கள் நெடுவேள் என்று சிறப்பாகக் குறிப்பிடுவர். எனவே பழங்காலத்தில் இக்குன்றம் நெடுவேள் குன்றம் என்று பெயர் பெற்றுள்ளது. அப்பெயர் காலப்போக்கில் மாற்றமடைந்து செங்குத்தாக வானளாவி உயர்ந்து நிற்கும் குன்று என்ற காட்சியளவையான் பெறும் பெயராகச் செங்குன்று என்று அமைந்தது. அதுவும் கால வழக்கில் மறைந்து மலையிலிருந்து சுருண்டுவிழும் அருவியின் பெயரால் ' சுருளருவி மலை ' என்றாகி, அப்பெயரும் தேய்ந்து சுருளி மலையாக இன்று இருக்கின்றது.

இவ்வாறு கால வழக்கில் பெயர் மாற்றம் பெற்று வருவது இயற்கையே யாயினும், மேலே கூறப்பட்ட மூன்று பெயர்களும், மலையின் இயற்கைத் தோற்றத்தை நேரில் காணும்போது பொருத்தமாகவே தோன்றுகின்றன. அருவியுள்ள பகுதி சுருளிமலையாகவும், செங்குத்தாக உயர்ந்துள்ள சிகரம் செங்கோடு அல்லது செங்குன்றாகவும், முருகன் கோயில் உள்ள பகுதி நெடுவேள் குன்றாகவும் பாகுபாடு பெற்றுள்ளதே தவிர மலைத் தொடர் முழுவதும் நெடுவேள் குன்றத் தொடர் என்று பெயர் பெற்றது. மலைத் தொடரின் தலைமை பற்றி வந்த சிறப்புப் பெயராக அமைந்திருந்ததென்பதை, நேரில் காணின் தெளிவாகும். இதற்கு எடுத்துக் காட்டாக ஒன்று கூறலாகும்.

மதுரைக்கும், அழகர்மலைக்கும் கிழக்காக நீண்டு அமைந்துள்ள மலைக்கு " யானை மலை " என்று பெயர். இப்பெயர் இம்மலையொன்றையே குறிப்பதாகும். அதற்குக் காரணம் மாபெரும் யானையொன்று தெற்கு நோக்கிப் படுத்துள்ளதைப் போன்று தொலைக்காட்சிக்கு அம்மலையின் தோற்றம் அமைந்திருப்பதேயாகும். இதுவன்றி யானைகள் ஒரு காலத்தில் வாழ்ந்திருந்ததால் இப்பெயர் பெற்றுள்ளது என்று கொள்ளின் யானைகள் வாழுகின்ற மலைகளெல்லாம் யானைமலை என்றே பெயர் பெற்றதாதல்வேண்டும். அவ்வாறில்லாமல் இயற்கை வடிவைக்கொண்டே யானைமலை என்ற காரணப் பெயர் பெற்றுள்ளது.

(தொடரும்)




**வினா :** இவ்வூரில் ஒரு குறிப்பிட்ட நன்செய் நிலத்தில் வேலம் பாசி முளைத்துச் சாகுபடியைப்பாழ் செய்கிறது. களை எடுத்தாலும் அது போவதில்லை. இவ்வாறு ஏற்படும் குறையை நீக்க வழியைத் தயை செய்து விளக்கமாகக் கூறவும்.

—வீ. விசயபாண்டியன், இளைஞர் அணி, செய்வானந்தம், வட ஆர்காடு மாவட்டம்.

**விடை :** மயில் துத்தம் (Copper Sulphate) என்னும் இரசாயன உப்பை வாங்கிச் சிறு துணிப் பையில் போட்டுக் கட்டி வேலம்பாசி முளைத்துள்ள இடங்களில் போட்டால், மயில் துத்தம் கரைந்து, பாசியை முற்றிலும் அழித்து விடும். மயில் துத்தத்தைப் பாசன நீருடன் கலந்து நிலத்திற்குப் பாய்ச்சுவதாலும் பாசியை அழித்துவிடலாம். ஏக்கருக்கு 1 கிலோ மயில்துத்தம் வீதம் எடுத்து, அதை ஒரு துணிப் பையிலிட்டுக் கட்டிக் தண்ணீர் விடும்போது வயலின் வாய்மடையில் வைத்து விட்டால், அது தண்ணீரில் கரைந்து வயலெங்கும் பரவும். அதனால் பாசி அழிந்துவிடும்.

வேலம்பாசி மிகவும் அதிகமாகக் காணப்பட்டால், வயலில் உள்ள தண்ணீரை வடித்து விட்டு, சுட்ட சுண்ணும்பு 1 கிலோ, மயில் துத்தம் 1 கிலோ ஆகிய இரண்டையும் நன்கு கலந்து வயலெங்கும் ஒரே சீராகத் தூவி விட வேண்டும். சுண்ணும்பும், மயில்துத்தமும் சேர்ந்த கலவையைக் கூடுமான வரை பயிர்களின் மேல் படாமல் மண்ணின் மேல் தூவ வேண்டும். இக்கலவை பயிரின் மேல் பட்டால், பயிர் ஓரளவு அழிந்துவிடக் கூடும். எனவே. கவனமாகத் தூவ வேண்டும். பிறகு சிறிது தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும். இரண்டு நாட்களுக்குப் பிறகு தண்ணீரை வடித்துவிட வேண்டும். இவ்வாறு செய்தால், பாசிகள் அழிந்துவிடும். இவ்வாறு செய்த பின்பும் பாசிகள் வயலில் காணப்படின், ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்குப் பிறகு இரண்டாம் தடவையாக வயலில் உள்ள தண்ணீரை வடித்து விட்டுச் சுண்ணும்பு, மயில் துத்தக் கலவையை தூவி விட்டு, தண்ணீர் விட்டு இரண்டு நாட்களுக்குப் பிறகு தண்ணீரை வடித்து விடவும். இதனுல் பாசிகள் முழு அளவில் அழிந்து விடும்.

மயில்துத்தத்தை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கிலிருந்தோ அல்லது தனிப்பட்ட மளிகைக் கடைகளிலிருந்தோ வாங்கிப் பயன்படுத்தலாம்.

* * *

**வினா :** சூரிய காந்தியைப் பயிரிட எந்தெந்த மாதங்கள் ஏற்றவை? சூரிய காந்தியைத் தனிப்பயிராகப் பயிரிடலாமா? அல்லது ஏதேனும் கலப்புப் பயிருடன் பயிரிட வேண்டுமா? சூரிய காந்தி விதை எங்கே கிடைக்கும்?

—கே. கே. சாமி, பெரியம்மா பாளையம், திருச்சி மாவட்டம்.

**விடை :** சூரியகாந்தி பயிரிட பின்கண்ட 3 பட்டங்கள் சிறந்தவை.

1. ஜூன் முதல் செப்டம்பர் வரை.

2. அக்டோபர் முதல் ஜனவரி வரை.

3. மார்ச்சு முதல் மே வரை.

சூரிய காந்தியைத் தனிப்பயிராகவோ அல்லது நிலக்கடலை, பருத்தி, மரவள்ளி, மஞ்சள் ஆகியவற்றுடன் ஊடுபயிராகவோ பயிரிடலாம். சூரிய காந்தி விதை பெற உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களையோ அல்லது உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மைஅலுவலர் (வளர்ச்சி) அவர்களையோ அணுகுங்கள்.

* * *

**வினா :** மரவள்ளி சாகுபடி செய்வதற்குப் பருவம், ஏக்கருக்குத் தேவையான கரணைகள், உர அளவு, உரமிடும் காலம், பயிர்ப்பாதுகாப்பு ஆகிய விவரங்களைக் கூறவும்.

—ரமண சமுத்திரம் உழவர் விவாதக் குழு, நெல்லை மாவட்டம்.

**விடை :** மரவள்ளியை எல்லாப் பருவங்களிலும் பயிரிடலாம். ஆனல் ஆடிப்பட்டமும் (ஜூலை-ஆகஸ்ட்), தைப்பட்டமும் (டிசம்பர்-ஜனவரி) மிகவும் சிறந்தவையாகும்.

ஒரு ஏக்கர் மரவள்ளி நட, இடைவெளிக்கு ஏற்ப, 5,000 முதல், 7,000 கரணைகள் தேவைப்படும். கரணைகளைத் திடமான கிளைகளின் அடி அல்லது மையப் பகுதியிலிருந்து தயாரிக்க வேண்டும். ஒவ்வொரு கரணையும் 6 அங்குல நீளமிருக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 3 அடி இடைவெளியும், வரிசையில் கரணைக்குக் கரணை 2½ அடி இடைவெளியும் விட்டுக் கரணைகளை நடுதல் நல்லது.

நிலத்தை 3 அல்லது 4 தடவை உழுது ஏக்கருக்கு 10 முதல் 20 வண்டி தொழு எருவைக் கடைசி உழவில் இட்டு மண்ணுடன் நன்கு கலக்குமாறு உழுதுவிட வேண்டும். கடைசி உழவில் அடியுரமாக ஏக்கருக்கு 75 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 35 கிலோ யூரியா, 75 கிலோ சூப்பர் பாஸ்பேட், 35 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இட வேண்டும். இதே அளவு உரத்தை மரவள்ளி நட்ட 90 நாட்களுக்குள் மேலுரமாக இட வேண்டும்.

மரவள்ளியை முக்கியமாக 'மொசைக்' என்னும் வைரஸ் நோய் தாக்குகிறது. இது ஒரு வித வெள்ளைத் தத்துப்பூச்சியின் தாக்குதலால் பரவுகிறது. இதைத் தடுக்க மரவள்ளி நட்ட 3 முதல் 4 மாதங்களுக்குள் மாதம் ஒரு முறையாக 'ரோகார்' அல்லது 'என்ட்ரின்' போன்ற மருந்தை, 100 மில்லி லிட்டர் மருந்திற்கு 100 லிட்டர் தண்ணீர் வீதம் கலந்து தெளிக்க வேண்டும். இந்நோய் தாக்கிய செடிகளை அகற்றுதல் வேண்டும். மரவள்ளியை சிலந்திப்பேன், செதில்கள் போன்ற பூச்சிகளும் தாக்குகின்றன.

இதைத் தவிர்க்க 'ரோகார்' அல்லது 'மெட்டாசிஸ் டாக்ஸ்' மருந்தை 100 மில்லி லிட்டர் மருந்திற்கு 100 லிட்டர் தண்ணீர் வீதம் கலந்து தெளிக்கவேண்டும்.

* * *

வினா: சாரதாவின் வயது என்ன? ஏக்கருக்கு எவ்வளவு விதை தேவை? மகசூல் என்ன? சரியான பட்டம் எது?

—வரிச்சிக்குடி உழவர் விவாதக்குழு, புதுவை மாநிலம்.

விடை 'சாரதா' கேழ்வரகின் வயது 105 நாட்கள். ஒரு ஏக்கர் நடுவதற்கு 1 கிலோ விதைகளை நாற்று விட வேண்டும். இறவையில் ஏக்கருக்கு 1,500 முதல் 1,800 கிலோ வரையில் மகசூல் கொடுக்கும். ஜூன்-ஜூலை பட்டத்திற்கு ஏற்றது.

* * *

வினா : குறுவைக்குக் கரிகாலனா அல்லது கண்ணகியா? இதில் எது சிறந்தது? அதை எப்போது பயிர் செய்வது?

—புத்தூர் உழவர் விவாதக் குழு, தஞ்சை மாவட்டம்.

விடை: கரிகாலன், கண்ணகி ஆகிய 2 ரகங்களும் குறுவைக்கு ஏற்றவை தான். கரிகாலன் 110 நாட்கள் வயதுடையது. ஏக்கருக்கு 2, 3 டன் மகசூல் தருகிறது. கண்ணகி ரகம் 103 நாட்கள் வயதுடையது; ஏக்கருக்கு 2·2 டன் மகசூல் தருகிறது. தஞ்சை மாவட்டத்தில் குறுவையில் பயிரிட இவை ஏற்றவைகளாகும்.

* * *

வினா : எங்கள் பகுதியில் ஆண்டிற்கு ஒரு முறை மானாவாரியில் காய்கறி பயிரிடுகிறோம். எங்களுக்கும் காய்கறி பயிரிடக் கடன் கிடைக்குமா? அல்லது ஆண்டு முழுவதும் காய்கறி பயிரிடுவர்களுக்குத்தானா? எவ்வளவு கடன் கிடைக்கும்? யாருக்கு மனுச் செய்ய வேண்டும்?

பெ. நாகேஷ்,
பெரியம்மாபாளையம்,
வேப்பூர் ஊராட்சி ஒன்றியம்,
திருச்சி மாவட்டம்.

விடை : காய்கறி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், காய்கறி பயிரிடுவோருக்கு ஏக்கருக்கு ரூபாய் 120 வீதமும், தனிப்பட்ட ஒருவருக்கு அதிக அளவாக ஒரு பருவத்திற்கு ரூபாய் 240 வீதமும் குறுகிய காலக்கடன் வழங்கப்படுகிறது. இரு பருவங்களில் காய்கறி பயிரிட்டால் தனிப்பட்ட ஒருவருக்கு உச்ச அளவாக ரூபாய் 480 கடன் கொடுக்கப்படும். இக்கடன் வசதி காய்கறி மேம்பாட்டுத் திட்டம் செயல்படும் இடங்களில் மட்டுமே கிடைக்கும். இக்கடன் வசதி தங்கள் பகுதியில் கிடைக்குமா என்பதை அறிய உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களை அணுகவும்.

## 'தமிழரசு'க்குப் பாராட்டு

'தமிழரசு, இதழில் வெளிவந்த 'அதிசயக் கிச்சிலி ஐ.ஆர். 20 நெல்லின் கட்டுக் கோப்புச் சாகுபடி முறைகள்' பற்றிய விரிவான குறிப்புகள் விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக உள்ளன. அத்துடன் 'ஸ்டாம் எப்—34, களைக் கொல்லி மருந்து உபயோகிக்கும் விதம் பற்றிய விரிவான விளக்கமும் மிக்க உதவியாக உள்ளன. தாங்கள் மேற்கண்ட விவசாய முறைகளை வெளியிட்டமைக்கு மிக்க நன்றி. இது போன்றே ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு பயிர் பற்றிய கட்டுக் கோப்புச் சாகுபடி முறைகள் விரிவான முறையில் எழுதப்பட வேண்டும். வானொலியின் மூலம் விளக்கமாகக் கூறினாலும், தங்களின் இதழ் மூலம் வெளியிடுவதால், அத்தகைய விவசாயக் குறிப்புகளைப் பத்திரப் படுத்தி வைத்து உபயோகித்துக் கொள்ளலாம். சந்தேகங்கள் ஏற்படும்போதும் அவற்றைப் பார்த்துக் கொள்ளலாம்.

—ஜி. வெங்கடசாமி,
பொன்னேரி உழவர் மன்றம், உடுமலை வட்டம், கோவை மாவட்டம்.

வினா : எனது தோட்டத்தில் கே. 1. மிளகாய் பயிர் செய்துள்ளேன். அதன் விதையை அடுத்த ஆண்டிற்குப் பயன்படுத்தலாமா? கூடாதா, வீரியம் குறையாத விதை எங்கு பெறலாம்? வேர் அழுகல் நோயைக் கட்டுப்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்கிக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

—மா. சிவலிங்கம்,
மேற்பனைக்காடு.
தஞ்சை மாவட்டம்

விடை : கே. 1. மிளகாய் விதையை நன்கு காயவைத்து, தூய்மைப் படுத்தி, பத்திரப் படுத்தி வைத்திருந்தால் 3 ஆண்டுவரைப் பயன்படுத்தலாம். விதை எடுக்கப்பெற்ற 3 மாதங்களுக்குப் பிறகு விதைகளைப் பயன்படுத்துவதே சிறந்தது. வீரியம் குறையாத விதைகளைக் கீழ்க்கண்ட முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(1) பயிர் நுண்ணறிஞர்,
மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,
கோவில்பட்டி (அஞ்சல்),
திருநெல்வேலி மாவட்டம்.

(2) காய்கறி நுண்ணறிஞர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்—3.

வேர் அழுகல் நோய் என்று தாங்கள் குறிப்பிட்டுள்ளது 'வாடல் நோய்' (Wilt) எனப்படும். இந்நோய் தாக்கப்பட்ட செடி முழுவதுமே வாடி இறந்துவிடும். இதை உழவர் பெருமக்கள் கவனித்து உடனே 'பைட்டலான்' மருந்தை (2.5 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து) அல்லது நீரில் கரையக் கூடிய செரசான் 0.1 சதம் மருந்தைத் (1 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து) தெளிக்க வேண்டும். அத்துடன் செடிகளைச் சுற்றிலும் உள்ள மண்ணையும் மேற்கூறிய மருந்துக் கலவையில் ஒன்றைத் தெளித்து நனைக்க வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் மற்றச் செடிகளையும் இந்நோய் விரைவில் தாக்கும்.

* * *

வினா: நான் கோழிப்பண்ணை அமைக்க விரும்புகிறேன். எனவே நல்ல வீரியமுள்ள கோழி வகைகள் எங்குக் கிடைக்கும்? இதற்கு அரசின் கடன் உதவி உண்டா? அப்படியானால் யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்?

—எஸ். கோவிந்தராசன்,
கடுவெளி, திருத்துறைப்பூண்டி வட்டம், தஞ்சை மாவட்டம்.

விடை: உயர்ரகக் கோழிக் குஞ்சுகள் பெற உங்கள் ஊராட்சி ஒன்றியக் கால்நடை வளர்ச்சி அலுவலர் அவர்களை அணுகுங்கள். ஒரத்தநாடு கால்நடைப் பண்ணையிலிருந்தும் நீங்களே உயர்ரகக் கோழிக் குஞ்சுகளை வாங்கிக் கொள்ளலாம்.

கோழிப் பண்ணை அமைக்க ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மானியம் கொடுக்கப்படுகிறது. உங்கள் ஊராட்சி ஒன்றியக் கால்நடை வளர்ச்சி அலுவலர் அவர்களை இதுபற்றி கலந்தாலோசியுங்கள்.

கூட்டுறவுச் சங்கங்களின் மூலமும், அல்லது வணிக வங்கிகள்மூலமும் தற்பொழுது கோழிப்பண்ணை அமைக்கக் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது. இது பற்றிய முழு விவரமும் அறியத் தஞ்சாவூரில் உள்ள மண்டலத் துணை இயக்குநர், கால்நடைத்துறை அவர்கள் அலுவலகம் சென்று விசாரித்தல் நல்லது.

# நெற்பயிரையும் களையையும் வேற்பிரித்தறிவது கடினமானதால், நாங்கள் களையை மட்டும் ஒழிக்கும் ஸ்டாம் F-34 தயாரித்திருக்கிறோம்



களையைப் பிய்த்தெடுக்கும்போது நிறைய நெற்பயிர்களும் பிய்ந்து வருகின்றன அல்லவா? மேலும், கையால் பிய்த்தெடுப்பது சிரமமான காரியம். நிறைய சமயம் விரயமாகிறது. களையை அறவே ஒழிக்கவும் முடியாது. ஆகவே புது வழியைப் பின்பற்றி களைகொல்லியான ஸ்டாம் F-34 தெளியுங்கள். அது நெற்பயிர்களுக்கு ஒரு கெடுதலும் விளைவிக்காமல் களையை மட்டுமே ஒழிக்கிறது. இதன் பயனாக நெற்பயிர் அதிக ஆரோக்கியமானதாகச் செழித்து வளரும். உங்கள் வருவாயும் பெருகும்.

ஸ்டாம் F-34 — குறைந்த செலவில் துரிதமாக களையை மட்டும் ஒழிக்கும் அற்புத களைகொல்லி!




இண்டோஃபில் கெமிக்கல்ஸ் லிமிடெட்
பம்பாய் 25, இந்தியா

STAM F-34 என்ற பெயரும், ஃப்ளாஸ்க்கின் சின்னமும், ரோம் அண்ட் ஹாஸ் கோ., ஃபிலடெல்ஃபியா, பா., வின் டிரேட் மார்க்குகள். இவை யு.எஸ்.ஏ. மற்றும் இதர நாடுகளில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டவை,

IF.9868



# அறிவுடையோர் போற்றுகின்றார்

கற்கால மனிதருக்கும் நற்பண் பாடு
கற்பிக்க இந்நிலத்தில் முளைத்த வர்க்குப்
பொற்காலம் தமிழ்நாட்டில் வருமா ? மீண்டும்
புதுவாழ்வு புலர்ந்திடுமா ? என்னும் ஐயம்
தற்காலம் படிப்படியே நீங்கக் காண்போம்.
தாங்கவொணுத் தொல்லைகளை ஏற்றுக் கொண்டும்
பிற்காலம் வளமுறவே பெருநன் மைகள்
பின்னிவர முன்வந்து தொண்டு செய்வோம்.

சாய்க்கடையின் ஓரத்தில் சகதிச் சேறே
சதமாக நிதமுழலும் வறிய வர்க்கும்,
போக்கிடமே யில்லாது புழுதி யூடே
புழுவாக நெளிவோர்க்கும் வாழ்வு நல்கிப்
பூக்காடாய் நாடெல்லாம் வளம்சி ரிக்கப்
புதுப்புதிதாய் மாளிகைகள் எழுப்பு கின்றேம்.
ஊக்கமுடன் நிலமற்றோர் மனையும் அற்றோர்
உரிமைபெறப் பட்டாவும் வழங்கு கின்றேம்.

கற்பனைக்கும் எட்டாத இழிந்த வாழ்வில்
கடைக்கோடி மனிதரெனத் திரிந்தோர் தம்மை
நற்பதவிக் கேற்றிவைத்து நலிவு நீக்கி
நல்வாழ்வு நல்குகின்ற இல்லம் கண்டோம்.
அற்பமென எண்ணுமல் விழியி ழந்தோர்
அவலத்தைப் போக்குதற்கே ஊர்கள் தோறும்
அற்புதமாய்ச் சிகிச்சைமுகாம் அமைத்துப், பார்வை
அளிக்கின்றேம் ; ஒளிபெற்றேர் வாழ்த்து கின்றூர்.

வறண்டிருந்த பாழ்நிலத்தில் குழாய்போ ருத்தி
வளமாக்கி உரமிட்டு விளைச்சல் ஓங்கத்,
திரண்டுவரும் நீர்தேக்கி, அணைகள் கட்டித்,
திகைப்பின்றித் தொழில்பெருக்கி, அமைதி கண்டு,
மிரண்டிருந்தோர் அறியாமை இருளை நீக்கும்
மின்னலென இலவசமாய்க் கல்வி தந்தோம்.
புரண்டுவரும் வெள்ளமெனக் கோடி நன்மை
புரிகின்றேம் ; அறிவுடையோர் போற்று கின்றூர்.

**கவிஞர் கருணானந்தம்**

# வெண்பாப் போட்டி

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:

எழில்வேந்தன்,
13/1, வி. சி. கார்டன் 2-வது சந்து,
சென்னை-28.

*வாழ்க ! விழியிழந்தே வாடு மெளியோரின்
வாழ்வி லொளியேற்றும் வள்ளன்மை—வாழ்க, இம்
மண்ணுல குள்ளவரை மங்கைப் பருவம்போல்
வண்ணமுடன் நாளும் வளர்ந்து !

—எழில் வேந்தன், சென்னை 28.

வாழ்க எனநாளும் வாய்நிறையச் சொல்வதன்றி
வீழ்க எனப்பகரல் வீணன்றே ?—கீழ்மையுமாம்
என்பதனை ஓர்ந்திங்கே என்றுந் திகழ்ந்திடுவார்
வன்மைய ராவார் வளர்ந்து.

—வித்துவான் சு. முத்துக்கருப்பன், நகரம்.

' வாழ்க ' எனுஞ்சொல்லில் வாய்மை குடியிருக்கும் !
தாழ்வில் மகிழ்ச்சித் தளிர்தழைக்கும் !—சூழ்கின்ற
ஆழ்துயர் நீங்கும்! அருட்குழந்தைப் பூமணக்கும் !
வாழ்வியல் ஓங்கும் வளர்ந்து!

—புலவர் முத்துவேங்கடேசன், இலால்குடி.

வாழ்க! மகனேயுன் வன்பகைவன் வேல்மார்பில்
ஆழ்ந்துள்ளே பாய அருஞ்சமரில்—வீழ்ந்திடினும்
தேனளவு தித்திக்கும் செயல்புரிந்தாய் ; நின்புகழ்
வானளவு ஓங்கி வளர்ந்து !

—குழ. அண்ணாமலை, கோவை.

வாழ்களனும் வாழ்த்தொலிக்க வஞ்சியெனைக் கைபிடித்த
வாழ்வரசர் போனார் வளந்தேடி—பாழ்பிரிவால்
போராடும் பெண்நெஞ்சைப் புண்ணுக்க வெண்ணிலவே
வாராதே விண்ணில் வளர்ந்து !

—கோ. நெடுஞ்செழியன், மேலைச்சேரி.

வாழ்களனப் போற்றின் வருவதென்ன? காழ்ப்புணர்வால்
வீழ்களனத் தூற்றின் விளைவதென்ன?—வாழ்வோம்நாம்
மானில் கவரியைப்போல் ; மண்ணில் தமிழகம்போல் ;
வானில் பிறைபோல் வளர்ந்து !

—ந. செனுர்த்தனம், அரக்கோணம்.

வாழ்க தமிழரசு! ' வல்லரசாய் ', ' நல்லரசாய் '
ஆழ்க புவிமீதில், ஆரணங்கே !—பாழ்செய்யும்
கீழ்மை ' களை 'க்களைந்து, கேடின்றி எந்நாளும்
வாழ், ''கவிதை ''யாலே வளர்ந்து !

—அரி. இல. தமிழடியான், மல்லிகா, பரிக்கல் (அஞ்சல்).

வாழ்க உலகென்றே வானின்று மாநிலத்து
வீழ்கின்ற கார்தன்னை வீணின்றி—ஆழ்கடல்போல்
தேக்கி அணையிட்டாற் தேங்கியஅந் நீரும்வான்
நோக்கி உயரும் வளர்ந்து.

—கா. முருகாண்டி, மதுரை-9.

வாழ்க தமிழ்நாடு வையத்தில் ; தீமையெலாம்
வீழ்க ; தமிழினத்தார் வென்றிடுக—சூழ்கவே
நல்ல பொருள்வளமும் நாடும் தொழில்களிலே
வல்லமையும் நாட்டில் வளர்ந்து.

—ப. சண்முகானந்தம், தேவம்பாடிகாளிபாளையம்.

வாழ்க உறவென்று வண்ணமலர்ப் பஞ்சணையில்
மூழ்கச் சுவைதந்த மொய்குழலே!—யாழ்இசைஉன்
ஆராரோப் பாட்டின் அமுத மொழிகேட்க
வாராளோ கண்ணன் வளர்ந்து.

—சிவராம நமசிவாயம் திருச்சி-15.

# வெண்பாப் போட்டி

' வாழ்க ' எனுஞ்சீரை வாழ்த்தித் தருவதன்றி
ஏழைதன் பெண்ணுக் கெதுகொடுப்பான்—வாழ்வில்சீர்
கோடியே தந்திடினும் கொண்டவனின் அன்பிலையேல்
வாடுமேதுன் பத்தில் வளர்ந்து.

—எஸ். ஞானம் எத்திராஜ், பருகூர்.

வாழ்க தமிழ்நாடு! வற்று வளங்கொழித்தே
ஏழ்மை இலையென்ப தாயிடுக—வாழ்நாளை
மற்றவர்க்காய் அர்ப்பணிக்கும் மாபெற்றி கொண்டவர்கள்
வற்றுது வாழ்க வளர்ந்து !

—வ. தோதாத்திரி, எம்.எஸ்.சி., பாளையங்கோட்டை.

வாழ்க! புலமை வளர்க்கும்வெண் பாப்போட்டி
சூழ்க கவிஞர் தொடர்ந்ததனை—ஆழ்கடலில்
முத்துக் குளிப்பதுபோல் மூழ்கித் தமிழரசார்
வைத்த பரிசால் வளர்ந்து.

—நெல்லை ஆ. கணபதி, சென்னை–15.

வாழ்க மனிதவினம் ; வாழியவே மண்வளனும்
ஆழ்கடல் சூழுலகில் அன்பேதான்—சூழ்க!
அளவாய்க் குடும்பம் அழகாகப் பெற்று
வளமாய் உயர்க வளர்ந்து!

—தே. சீனிவாசராகவன், புதுதில்லி-23.

வாழ்க மணமக்காள், வாழிய பல்லாண்டு!
பாழ்படும் சாதிப் பழிதன்னை—வீழ்த்திக்
' கலப்புமணம் ' கண்டு கருத்தொரு மித்தீர்!
நலம்பெறுவீர் நன்றே வளர்ந்து!

—மூர்த்தி, பி.எஸ்சி., வெள்ளறம்.

வாழ்க வெனப்பிறரை வாழ்த்தும் நிலைமாற்றி
வாழ்கவெனத் தன்னைப் பிறர்வாழ்த்த—வாழ்புவியில்
நல்லுழைப்பால் சொல்லால் நவிந்தோரை வாழவைக்கும்
வல்லவர்கள் வாழ்க வளர்ந்து!

—ச. கந்தசாமி, மேலூர்.

வாழ்க!வாழ் நாளெல்லாம் வையகத்தில் பஞ்சைகளாய்ப்
பாழ்வெளியில் வாழ்ந்துவந்த பாமரர்க்கு—வாழ்வகங்கள்
உண்டாக்கித் தந்த உயர்கலைஞர் வாழ்கவே,
வண்டமிழைப் போல வளர்ந்து!

—வயி. அறிவுடைநம்பி, சித்தனேந்தல்.

வாழ்க ஒளிபெற்று வையமதில் கண்ணிழந்தோர்
தாழ்வின்றித் தாமே வழியேக—ஆள்வோர்
நிலைநாட்டுங் கண்சிகிச்சை நேர்மையாய்க் கோவ
மலைபோல் உயர்க வளர்ந்து.

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

வாழ்க நலஞ்சிறந்து வள்ளுவன் செந்நெறியில்
ஆழ்க உலகமெலாம் அன்பிணைந்து—சூழ்க!
அகில்மணம்போல் பொங்கும் அறிவுநலம் பெற்றே
மகிழ்மனத்தால் மாந்தர் வளர்ந்து!

—புலவர் எழில்வேலன், கோபிசெட்டிப்பாளையம்.

வாழ்க உழவர்கள் மற்றும் குடிசைவாழ்
தாழ்ந்தவர்கள் இன்பத் தமிழ்நாட்டில்!—ஏழ்மையில்
வாழ்ந்தாலும் நேர்மை வழுவாமல் நல்லோராய்
வாழ்வில் உயர்க வளர்ந்து!

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி வடக்கு.

வாழ்க! மலர்மணக் கொள்கையால் நாட்டுமக்கள்
சூழ்வினை நீக்கிச் சுடராக்கி—வாழ்க்கையில்
கண்ணொளி பெற்றிடவே காட்டுகின்ற நன்முயற்சி
மண்ணில் செழிக்கும் வளர்ந்து.

—பரிதியார், சென்னை–32.

வாழ்களன் செல்வமே! வண்ணத் திருநாட்டில்
வீழ்கநின் ஆற்றலால் வேற்றுமை,—வாழ்க்கையில்
மேன்மையுற் றேழைகள் மேதினி போற்றுமோர்
வான்மழைக் கொப்பாய் வளர்ந்து.

—அ. கோவரசு, அரக்கோணம்.

வாழ்க எனச்சொல்லி வாழ்வுக்குத் தீதாற்றும்
தாழ்வு மனப்பான்மை தாங்கிடுவோர்—வீழ்ச்சியுற
எல்லாரும் சேர்ந்தே இடர்மாய்ப்போம் நற்பண்பு
வல்லமைகள் நெஞ்சில் வளர்ந்து.

—இலக்கியன், ஆலங்காயம், (வ.ஆ.)

' வாழ்க ' எனஉம்மை வாயார வாழ்த்துகின்றோர்
பாழ்வறுமை நீங்கிய பாட்டாளர்—தாழ்ந்தோர்
நலங்காக்கும் எம்'நிதி'யே! நல்லமைச்சே! என்றும்
வளமொடு வாழ்க வளர்ந்து.

—மு. வி. அறிவுக்கதிரோன், சென்னை–24.

'' வாழ்க இரவெ ''ன்றேன் வஞ்சியவள் நெஞ்சொடிந்து
''போழ்தும் அரும்பிப் புலர்ந்ததனல்—சூழ்கடலின்
வெங்கதிரோன் மேலெழுமுன் விட்டெழுவீரெ''ன்றாளே
மங்காத்தன் ஊடல் வளர்ந்து.

—மு. உலகநாதன், சென்னை–49.

வாழ்க தமிழரசு வண்மையுடன் எந்நாளும் ;
தாழ்க பகைமைத் தலைகளெலாம் ;—வீழ்கவே
பொய்யும் கொலையும் பொச்சரிப்பும் தீச்சொல்லும் ;
வையம் சிறக்க வளர்ந்து.

—எல். மீனாட்சி, சென்னை–24.

# வெண்பாப் போட்டி

வாழ்க வளந்தேக்கி வண்டமிழின் சீர்தேக்கிச்
சூழ்செந் தமிழர் துணைதேக்கித்—தாழ்ந்த
குலத்துதித்த மக்கள் குமிழ்ச்சிரிப்பைத் தேக்கி
வலந்தருவார் நாப்பண் வளர்ந்து.

—வே. அரங்கராசன், கும்பகோணம்.

'வாழ்கநிதி!' என்ருல் 'வழங்கு நிதியை!' என்பார் ;
ஏழ்மையினி மக்களுக்கேன்? எம்முதல்வர்—வாழ்நாள்
பெருகப் பெருகவிங்குப் பின்னடைந்தோர் எல்லாம்
வருவரன்ருே முன்னே வளர்ந்து.

—கி. திருநாவுக்கரசு, சேலம்–1.

வாழ்க வெனமுழங்கி வான்கவிதை தூவிவிடும்
ஆழ்கடலின் முத்தனைய ஆன்ருேரின்—ஏழ்மையை
நீக்கி,அவர் இன்புறவே நேர்கலைஞ நீவாழ்க
மாக்கடல்போல் மண்ணில் வளர்ந்து.

—அ. மோகனன், வங்கனூர்.

வாழ்க வளமோடு வாழுமுயிர் எல்லாமும்
சூழ்க அறவினைகள் ; சோம்பலெலாம்—ஆழ்கடலுட்
போகட்டும் ; புத்துலகம் பூக்கட்டும் ஒல்லையுரு
வாகட்டும் இன்று வளர்ந்து.

—சோ. முத்துமாணிக்கம், அலங்கானூர்.

வாழ்கவென வாழ்த்த வளஞ்சேர்க்கும் வண்டமிழே!
ஊழைப் புறங்காணும் உள்ளொளியே!—ஆழ்கடலின்
நன்முத்தே! நாயகியே! நானிலத்தில் நின்பெருமை
மன்னுகவே என்றும் வளர்ந்து.

—செ. நாச்சிமுத்து, ஒடையகுளம்.

வாழ்க உழவர்! பிறரும் வளமுற்றே!
வீழ்க கொடிய வினைகளெல்லாம்!—ஏழுலகும்
சாதிப்போர் மாய்ந்தழியச் சத்தியமே நீநிலைப்பாய்
வாதில்லா நெஞ்சில் வளர்ந்து.

—மு. கிருஷ்ணவேணி, அழகர்நாயக்கன்பட்டி.

வாழ்க தமிழன்னை வாழ வகைசெய்தோர் ;
வாழ்க அமிழ்தமொழி வையமெங்கும்—வாழ்த்தி
உளம்நிறைவாய் ஓதின், உயர்வடைவோம் வாழ்வில்
வளர்பிறை போலே வளர்ந்து.

—என். சுந்தரேசன், சின்னச்செங்காடு.

'வாழ்க தமிழரசு' வற்ரு மொழிச்சுவையால்
தாழ்வகற்றும் நம்மரசுத் தன்மைக்கு—வீழ்வா?
விழிகொடுத்து வாழ்வளிக்கும் வேள்கலைஞர் ஆட்சி
வழியாகச் செல்வோம் வளர்ந்து.

—சொ. தமிழ்ச்செல்வன், தென்காசி.

''வாழ்க கலப்புமணம் வாழ்வியலில்'' என்ருலும்
சூழ்ந்த இனவெறியால் தூயவரை—வீழ்த்துகின்ற
பாழும் நிலைமாற்றிப் பண்பை வளர்த்திட்டால்
வாழு முலகு வளர்ந்து.

—கு. முத்துக்கிருட்டிணன், அரக்கோணம்

வாழ்கவென வாழ்த்தி வளர்சாதிப் பேய்பிடித்துத்
தாழ்ந்த உளத்தால் தழைக்காது—சூழ்ந்த
களைநீக்கல் வாழ்வின் கடமையெனக் கொண்டால்
வளம்பெறுவோம் நாமும் வளர்ந்து.

—கு. மருதமணி, கிருபில்ஸ் பேட்டை, அரக்கோணம்.

வாழ்கநீ கண்ணே மறுபடியும் ; கண்பார்வை
பாழ்பட்டோர் கண்பெற்றுப் பாங்குறவே—தாழ்வற்ற
தாயுள்ளம் கொண்டிருந்தார் ; தானமாய்க் கண்கொடுத்தார் ;
மாயுமுன் நெஞ்சம் வளர்ந்து.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

வாழ்க! தமிழணங்கே! மாதுன்சீர் போற்றுதார்
வீழ்க! நினைமதியார் வீறழிக!—தாழ்விலா
நெஞ்சமுடை யோராய் நெறியோ டுனைக்காக்கும்
வஞ்சமிலார் தொண்டு வளர்ந்து.

—சி. கதிர்வேலு, காட்டுக்கூடலூர்.

வாழ்க கொடிமுல்லை வாழ்கின்ற மென்னகையே
சூழ்க தமிழ்க்காதல் சுற்றிடவே—ஆழ்க
பிரிவறியா வின்பத்தில் போதையே எஞ்ஞான்றும்
வரவோடு வாழ்வும் வளர்ந்து.

—கே. எஸ். ஜெகநாதன், பொள்ளாச்சி.

வாழ்க வளர்கதிராய் வண்டமிழ்த் தேன்சுவையாய்
ஆழ்கடல் வாழ்த்தும் அருட்குவையே—தாழ்விலா
வாழ்வைத் தமிழர்க்குத் தந்தளிக்கும் நின்றனைச்
சூழ்க வளமாய் வளர்ந்து.

—காவனூர் அரங்கமாதிருஎழில் வேந்தன், மேல்நல்லாத்தூர்.

'வாழ்க' எனும் வாழ்த்தால் வரையிகந்து செல்லார்பின்
வீழ்க' எனும்எதிர்ப்பால் வேதனைக்குள்—ஆழ்ந்தங்கே
நில்லார் எவரோ அவராட்சி நீண்டிருக்க
வல்லதாம் அன்ருே வளர்ந்து.

—தி. தேமொழி, சேலம்-6.

வாழ்க அறிவுலகம் ; வாய்க்கட்டும் பொற்காலம் ;
வீழ்க சமுதாய வேற்றுமைகள் ;—பால்போல்
தெளியட்டும் பாரெல்லாம் தேறட்டும் சமதர்மம்
வாழும் தமிழ்போல் வளர்ந்து.

—சோ. தமிழரசு, ஆலம்பட்டு.







நான்கு நண்பர்கள் ஒன்ருகச் சேர்ந்து கொண்டு வெளியூருக்குப் பயணம் போனுர்கள். அவர்கள் போகும் வழியில் ஒரு பணமுடிப்பு கிடந்தது. அதை நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு எடுத்தார்கள். பணம் எனக்குத்தான் சொந்தம் என்று நால்வரும் வாதாடினுர்கள். பிறகு ஒரு முடிவுக்கு வந்தார்கள். பணத்தை ஒரு குடத்தில் போட்டு, முத்திரையிட்டு எடுத்துச் சென்ருர்கள்.

வழியில் உள்ள ஒரு பட்டணத்தில் ஒரு கிழவி கடை வைத்திருந்தாள். அவளிடம் அந்த நால்வரும் சென்று பணமுடிப்பு உள்ள குடத்தைக் கொடுத்தனர். ''அம்மா'', அதோ தெரிகிறதே ஒரு குளம். அந்தக் குளத்தண்டை நாங்கள் கட்டுச் சாதம் சாப்பிட்டு விட்டுவருகிருேம். நாங்கள் நால்வரும் வந்து கேட்டால் இந்தப் பணத்தைக் கொடு, அதுவரை இதைப் புதைத்துப் பத்திரமாக வைத்திருங்கள்'' என்று கூறிவிட்டு நால்வரும் சாப்பிடச் சென்ருர்கள்.

நால்வரும் குளத்தில் இறங்கிக் குளித்தனர். பிறகு குளக்கரையிலிருந்த பெரிய ஆலமரத்து நிழலில் உட்கார்ந்து கொண்டு சோற்றை அவிழ்த்துச் சாப்பிட்டு விட்டுக் களைப்பாறினுர்கள்.

அவர்களுள் ஒருவன் தம்முள் ஒருவனைப் பார்த்து, '' நீ போய்க் கிழவியிடம் குடம் ஒன்று வாங்கி வா. நிறைய மோர் வாங்கி ஆசை தீரக் குடிக்கலாம்.'' என்றனர். அவனும் சரியென்று கிழவி இருக்கும் இடத்துக்குச் சென்ருன். '' அம்மா அந்த குடத்தைக் கொடு '' என்ருன். கிழவி, '' மற்றவர்கள் வந்தால்தான் குடத்தைக் கொடுப்பேன் '' என்று கூறினுள். '' அம்மா, நான் பொய் சொல்லவில்லை, அவர்கள்தான் வாங்கி வரும்படி கூறினுர்கள். வேண்டுமானுல் நீங்களே கேளுங்கள் '' என்று கூறிக் கூப்பிடு தூரத்தில் உட்கார்ந்திருந்த மூவரையும் பார்த்து, '' கிழவி குடத்தைத் தர மாட்டேன் என்கிருள் '' என்று உரக்கக் கத்தினுன். அதற்கு அவர்கள், '' குடத்தைக் கொடுங்கள் '' என்று பதிலுக்குக் கத்தினுர்கள்.

உடனே, கிழவி பணமுடிப்பு உள்ள குடத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அவன் அதை வாங்கிக் கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் ஓடிவிட்டான். சிறிது நேரம் கழித்து மூவரும் கிழவியிடம் வந்து குடத்தைக் கொடுக்கும்படி கேட்டனர். அதற்குக் கிழவி '' அந்தக் குடத்தைத்தான் அவன் அப்போதே வாங்கிக் கொண்டு போய் விட்டானே '' என்ருள். மூவரும் கிழவியிடம் சண்டை போட்டுப் பணத்துக்கு நீதான் பொறுப்பாளி என்று கூறிப் பணத்தைக் கொடுக்கும்படி மிரட்டினர். அவர்கள் அவளை அவ்வூர் நீதிபதியிடம் அழைத்துச் சென்ருர்கள். அந்த நீதிபதியோ, '' கிழவிதான் பணத்தைக் கொடுக்க வேண்டும் '' என்று தீர்ப்புக் கூறினுர்.

தீர்ப்பைக் கேட்ட கிழவி அழுது கொண்டே வீட்டுக்கு வந்தாள். அப்போது வழியில் இராமன் என்ற ஒரு சிறுவன் தன் தோழர்களுடன் கோலி விளையாடிக் கொண்டிருந்தான். கிழவி அழுதுகொண்டு போவதைக் கண்ட இராமனுக்கு அவள் மீது இரக்கம் உண்டாயிற்று. ''பாட்டி ! ஏன் அழுகிருய் ? என்ன நடந்தது ? '' என்று கேட்டான். அதற்குக் கிழவி நடந்ததைச் சொல்லி மீண்டும் அழுதாள். இதைக் கேட்ட இராமன், '' இந்தத் தீர்ப்பு அநியாயமானது. இந்தத் தீர்ப்புச் சொன்னவன் வாயில் மண்தான் விழ வேண்டும்!'' என்று கூறிக் கொண்டே கோலி ஆடுவதில் ஈடுபட்டான்.

அப்போது அந்த நாட்டு மன்னர் இராயர் என்பவர் அவ்வழியாகப் பல்லக்கில் வந்து கொண்டிருந்தார். அவருடன் அவர் மைத்துனர் வெங்காஜிராவும் பல்லக்கில் இருந்தார். சிறுவன் இராமன் சொன்னது வெங்காஜிராவின் காதில் விழுந்தது. அவர் பல்லக்கை நிறுத்தச் சொல்லிக் கீழே இறங்கி வந்து, '' தம்பி, நீயே நீதிபதியாக இருந்தால் என்ன தீர்ப்புச் சொல்வாய் ? ' என்று கேட்டார். அதற்கு அந்தச் சிறுவன், '' நான் நீதிபதியானுல், அப்போது அதற்குப் பதில் சொல்வேன் ' என்ருன். வெங்காஜிராவ் இராயரிடம் இராமன் சொன்னதைக் கூறினுர். அதற்கு இராயர், 'இந்தச் சிறுவனை ஒருநாள் நீதிபதியாய் நியமித்துத் தீர்ப்பைக் கவனிக்க வேண்டும்' என்ருர். அதன்படி ஒருநாள், இராமன் நீதிபதியாய் நியமிக்கப்பட்டான்.

இராமன் கிழவியையும், மற்ற மூவர்களையும் அழைத்து, எழுத்து மூலமாகத் தங்கள் வழக்கை எழுதித் தரும்படி கூறினுன். அதன்படி அவர்களும் எழுதிக் கொடுத்தார்கள்.

இராமன் விசாரிக்கலானுன்.

''பணம் உள்ள குடத்தை ாரிடம் கொடுத்தீர்கள் ''

'' கிழவியிடம் ''

'' என்ன சொல்லிக் கொடுத்தீர்கள் ? ''

'' நாங்கள் நால்வரும் வந்து கேட்கும் போது கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொடுத்தோம்.''

'' சரி, இப்போது நீங்கள் மூவராகத்தானே வந்து கேட்கிறீர்கள். நீங்கள் நால்வரும் சேர்ந்து வாருங்கள். கிழவி அந்தக் குடத்தைக் கொடுப்பாள் ''. என்று சிறுவன் தீர்ப்பளித்தான்.

இராமனின் அறிவுமிக்க இத்தீர்ப்பைக் கேட்ட வெங்காஜிராவும், மன்னரும் வியந்தனர். இவனே பிற்காலத்தில் மரியாதை இராமன் என்ற பெயருடன் புகழ் மிக்க நீதிபதியாய் விளங்கினான் என்று சொல்லுகிறார்கள்.

* * *

# நீதிக்கு ஒரு கதை

ஒரு வியாபாரி, பத்து மாடுகளின் மேல் வெல்ல மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வெளியூருக்குச் சென்று கொண்டிருந்தான். வழியில் ஒரு மாடு மூட்டையைக் கீழே தள்ளி விட்டது. வியாபாரியால் அந்தப் பெரிய மூட்டையைத் தூக்க முடியவில்லை. அப்போது அங்கே ஒரு மாடு மேய்க்கும் சிறுவன் வந்து கொண்டிருந்தான். அவனை அழைத்து, '' கீழே கிடைக்கும் மூட்டையைத் தூக்கிவைத்தால் உனக்கு நிறைய வெல்லம் தருகிறேன் '' என்றான்.

சிறுவனும், வியாபாரியும் சேர்ந்து மூட்டையைத் தூக்கி மாட்டின் முதுகின் மீது வைத்தனர். வியாபாரி ஒரு சிறு உருண்டை வெல்லத்தைச் சிறுவனுக்குக் கொடுத்தான். ''நிறைய வெல்லத்தைக் கொடுக்கிறேன் என்றாய், ஆகவே, நிறைய வெல்லம் கொடு '' என்று சிறுவன் கேட்டான். வியாபாரி சரி என்று இன்னும் கொஞ்சம் வெல்லம் கொடுத்தான். ''இது கொஞ்சம், இன்னும் நிறையக் கொடு '' என்றான் சிறுவன். மறுபடியும் வியாபாரி கொஞ்சம் வெல்லம் கொடுத்தான். அப்போதும் அந்தச் சிறுவன் இது கொஞ்சம், நிறையக் கொடு'' என்று தொந்தரவு செய்தான்.

உடனே வியாபாரி பையனை அழைத்துக் கொண்டு, நீதிபதி மரியாதை ராமனிடம் சென்றான். நடந்த விவரத்தை நீதிபதியிடம் கூறினான்.

நீதிபதி, சிறுவனுக்கு ஒரு வீசை வெல்லம் கொடுக்கும்படி கூறினார். வியாபாரியும் ஒரு வீசை வெல்லத்தைத் தராசில் நிறுத்துக் கொடுத்தான். அப்போதும் சிறுவன், '' இவ்வளவு தானா ? இன்னும் கொடு '' என்றான். சிறுவனின் பேராசையைக் கண்ட நீதிபதி அவனை அருகே அழைத்து, ஒரு கையில் நிறைய வெல்லமும், இன்னொரு கையில் சிறிது வெல்லமும் வைத்து, '' இப்போது எந்தக் கையில் நிறைய வெல்லம் இருக்கிறது சொல் பார்க்கலாம் ? '' என்று கேட்டார். அதற்குச் சிறுவன் இந்தக் கையில்தான் நிறைய வெல்லம் என்று அதிகமாயுள்ள கையைக் காட்டினான். '' சரி, அப்படியானால் நீ கேட்டபடி நிறைய வெல்லம் இது தான் எடுத்துப் போ '' என்றார் நீதிபதி. அந்த வெல்லமோ பாக்கு அளவுதான் இருந்தது.

'' ஐயோ ! முன்பே வியாபாரி கொடுத்த வெல்லத்தை நான் வாங்கிக் கொள்ளாமல் போனேனே ! '' என்று வருந்தினான் சிறுவன். பேராசை பெரு நஷ்டம் என்பதை அப்போது தான் அந்தச் சிறுவன் உணர்ந்தான்.




ஆராய்ச்சி மணி 7
கதை: இளவல்
படம்: கோபன்ஜு
.... போலீஸ் நிலையத்தில்...
டாக்டர் பொன்மலை கொலை செய்யப்படவில்லை. அவர்போன்ற முகத்தை, கொலை செய்யப்பட்ட வேறு ஒருவன் மீது மாட்டி வைட்டிருக்கிறார்கள் என்பதை அப்போதே தெரிந்து கொண்டேன்.
பிரேத பரிசோதனையின்போதுகூட இந்த ரகசியம் வெளியாகாமல் பார்த்துக் கொண்டோம். மணியையும், மாணிக்கத்தையும் தப்பவைத்ததும் நாம்தான் என்பது பையன்களுக்கும் தெரியாது.
ஆனால் இப்பொழுது வேறு முடிவு செய்திருக்கேன்.
நான் கூட நினைத்தேன் சார்... நாம் மர்மமாக செய்யற காரியங்கள் வேறு விதமா மாறிவிடாமல் கவனித்துக் கொள்வது ரொம்ப முக்கியம்!
ஆல்ரைட்! எல்லாச் செய்திகளையும் பத்திரிகைக்குக் கொடுங்க...! மணியின் தந்தையிடம் எல்லா விவரங்களையும் சொல்லிட்டு வாங்க!
அதே சமயத்தில் தங்கத்தின் வீட்டில் அவளுடைய தந்தை ஞானசிகாமணி கோபமாகக் கூப்பிட்டார்...
தங்கம்! தங்கம்!
என்ன அப்பா...!
தங்கம் உன் தம்பியோ மகா வாலு! அதுவும் அந்த இரட்டை வாலு மணியோட சேர்ந்தா உருப்படுவானா? எங்கேயோ எதையோ செய்துட்டு வந்திருக்கானுங்க!
அன்னைக்கு நீங்க தானே அப்பா மணியையும் மாணிக்கத்தையும் பற்றிப் பிரமாதமா சொன்னீங்க..!
அப்போ சொன்னா இப்பவும் அப்படிச் சொல்லணுமா என்ன? நான் எல்லாம் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். போலீசிலிருந்து தப்பி வந்திருக்கிறான் நமக்கு எந்த வம்பும் வேண்டாம். ஏதாவது சொல்லி முதல்லே மணியையும் அவன் அக்காவையும் வீட்டை விட்டு அனுப்பி வை.
கயல்விழி! தப்பா நினைச்சுக்காதே! அப்பாவைப் பார்க்க போலீஸ் அதிகாரிங்க யாரோ வர்றாங்களாம். அதனாலே மணியைக் கூட்டிக்கிட்டு உங்க வீட்டுக்கு உடனே போ!
எனக்கு ஒண்ணுமே புரியலே! ஒரே குழப்பமா இருக்கு....
எனக்கு ஒரு ஐடியா தோணுது.... சின்ன வயசிலே எனக்குத் தைச்ச கவுன் இருக்கு; அதைப் போட்டு அழைச்சுக்கிட்டுப் போயேன்!


திருஞானம் வீட்டில்...
என்னாலே நம்பவே முடியல்லீங்க! இவ்வளவு பெரிய வீரச் செயலையா மணி செய்திருக்கான்...
இதுநாள் வரை கண்டுபிடிக்க முடியாமலிருந்த ஒரு பெரிய திருட்டுக் கூட்டத்தை மணி கண்டுபிடித்து விட்டான். அந்த விவரங்களை மணியிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்க. மணி கெட்டிக்காரப் பையன்.
கடைசியா ஒண்ணு சொல்ல மறந்துட்டேன். இதுக்காக மணிக்கு கவர்ன்மெண்டிலே பரிசளிக்கப் போறாங்க... எதிர் காலத்திலே மணி பெரிய ஆளா வருவான் பாருங்க
அப்பா..!
இவ்வளவு நேரமா எங்கே போயிருந்தே கயல்விழி? ஆமா இந்தச் சின்னப் பெண் யாரு?
வந்துப்பா.......இது என் தோழி தங்கத்தின் சின்னம்மா பெண் பெயர் மணி... அதாவது கண்மணி....
தெரியுமா சேதி உனக்கு... நம்ப மணி பெரிய அட்வஞ்சர்ஸ் எல்லாம் செய்திருக்கான். ஒண்ணும் பயன்படமாட்டான்.. பயிவாலு என்று நாம நினைச்சிருந்தோம். அவன் பெரிய பெரிய காரியங்களைச் செய்திருக்கான்; அவனுக்குப் பாராட்டு விழா நடத்தப் போறாங்களாம்! எங்கே அந்தப் பெண் கண்மணியைக் காணோம்?
டேய் மணி மணி எங்கேடா போனே...
மணியா?
மணிதான் சார் போலீசிலே இருந்து தப்பிச்சு வந்ததாலே இப்படிப் பெண் வேடத்திலே வந்தான்; அதனாலேதான் நான் கூட பொய் சொன்னேன்.
அதே சமயத்தில் தோட்டத்திலுள்ள மரத்தின் உச்சிக் கிளையில் மணி ஏறியதால் மரத்தின் கிளை முறிந்தது...
ஐயோ...!
அம்மா...!
தொடரும்...

# ஒப்பந்தப் புள்ளி அறிவிப்புகள் (டெண்டர்கள்) வேலை வாய்ப்பு விளம்பரங்கள்

## தஞ்சாவூர் நகராட்சி

வேலையின் பெயர்—தஞ்சாவூர் தொழிற்பேட்டையில் பிளாக் ஒன்றில் "எல்" வகை பணிக்கூடங்கள் 4 எண்ணிக்கை கட்டுதல்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பிரிவு, தொழில் வணிகத்துறை மற்றும் இதர அரசு துறைகளின் கட்டுமானப் பிரிவிற்கு உரிய பிரிவைச் சேர்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 29–7–1972 மாலை மணி 3–00 வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3.10 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர், கட்டுமானப் பிரிவு, தொழில் துறை, 2 விஜயராகவாச்சாரி சாலை, தியாகராய நகர், சென்னை–17 அவர்களால் அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தவடிவம்—மொத்த தொகை.
கட்டுத்தொகை—ரூ. 2,500.
ஒப்பந்தப்பத்திரங்கள் விலை—விற்பனைவரியுடன் வரை படங்கள் சேர்த்து—ரூ. 10.40
வேலை முடிக்கவேண்டிய காலம்—6 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்கள் நிர்வாகப்பொறியாளர் அலுவலகம் (கட்டுமானம்), திருச்சிக் கோட்டம், திருச்சியில் 18–7–1972 முதல் அலுவலக நேரங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை விற்பனை வரியுடன் ரூ. 10.40 (திருப்பித் தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் **XXIX Industries other Receipts** என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்), திருச்சிக் கோட்டம், 63 இராமநாதபுரம், புத்தூர், திருச்சி அவர்தம் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கட்டுத்தொகை, சலான் வடிவிலோ, டெபாசிட் அட் கால் ரிசிப்ட் மற்றும் செட்யூல்டு வங்கிகளின் டிமாண்டு டிராப்ட் வடிவிலோ மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். நிர்வாகப் பொறியாளர் (கட்டுமானம்) திருச்சிக் கோட்டம் அவர்கள் பெறும் வகையுடன் செலுத்தப்பட்ட செட்யூல்டு வங்கியின் டிமாண்டு டிராப்ட்கள் மட்டுமே கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். மாநில அரசின் பாதுகாப்புப் (Securities) பத்திரங்கள் மற்றும் தமிழ்நாடு மாநில மின்வாரியப் பத்திரங்கள் மார்க்கெட் மதிப்பிற்கு 5 சதவீதம் குறைவாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய சேமிப்புப் பத்திரங்கள் சம்பந்தப்பட்ட அஞ்சல் அலுவலகத்தின் அனுமதியுடன் ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய மயமாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய பாங்கு காரண்டியும் ஏற்றுக் கொள்ளப்படும். வேறு வகையில் செலுத்தப்படும் தொகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பெரிய கட்டடம் கட்டும் வேலையில் குறைந்தது மூன்று ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

சி. பி. மாத்யூ,
மேற்பார்வைப் பொறியாளர்,
கட்டுமானப் பிரிவு,
சென்னை.

(த.50)

---

## வீட்டு வசதி வாரியம்

(அறிஞர் அண்ணா நகர் கோட்டம்)

கீழ்க்கண்ட வேலைக்காக, உறையின் மீது வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் குறிப்பிடப்பட்ட, மூடி முத்திரையிட்ட ஒப்பந்த புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவருக்கு, 5–8–1972 மாலை 3.00 மணிக்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன.

வேலையின் பெயர்.

வேலையின் சுமார் மதிப்பு—ரூ. 5,77,000.

கட்டுத் தொகை—ரூ. 8,700.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

ஒப்பந்தப்பத்திரங்கள் விலை—ரூ. 25.00+விற்பனை வரி (திருப்பித் தரப்படமாட்டாது).

ஒப்பந்தப் பத்திரங்கள் நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அண்ணா நகர் கோட்டம், சென்னை–40ல் 5–7–1972 முதல் 4–8–1972 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் 12 மணி வரை பணத்தைச் செலுத்திப் பெறலாம்.

நிருவாகப் பொறியாளர்,
அறிஞர் அண்ணா நகர்
கோட்டம்.

(த. 23)

---

## பொதுப்பணித் துறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைக்காக மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, கோயம்புத்தூர்-நீலகிரி மாவட்டம் அவர்களால் கோயம்புத்தூரில் உள்ள அவர்தம் அலுவலகத்தில் 28–7–1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

வேலையின் பெயர்:—

திருப்பூர் அரசு பெண்கள் கலைக் கல்லூரிக்குக் கட்டடங்கள் கட்டுதல்.

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை—ரூ. 25,000.

ஒப்பந்தப்பத்திரங்கள் விலை வரைபடத்துடன்—ரூ. 31.05.

வேலை முடிக்க வேண்டிய காலம்:—12 மாதங்கள்.

ஒப்பந்தப்பத்திரங்கள் மேலாளர், நிர்வாகப் பொறியாளர் அலுவலகம், கட்டடக் கோட்டம், கோயம்புத்தூர் அவர்களிடம் எழுதிக் கேட்டு, மேற்குறிப்பிட்டுள்ள தொகையைச் செலுத்தி (திருப்பித்தரப்பட மாட்டாது) 10–7–1972 முதல் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரங்களில் பெறலாம்.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப் பணித்துறை,
கோயம்புத்தூர்-நீலகிரி வட்டம்,
கோயம்புத்தூர்-1.

(த. 21)

---

## சிதம்பரம் நகராட்சி

மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள், நகராட்சி ஆணையர் அவர்களால் தனது அலுவலகத்தில் 28—7—1972 அன்று மாலை 4-00 மணி வரை வக்காரமாரியில் உள்ள நகராட்சி குடிநீர் குழாய் தலைப்பு நிலைய இணைப்புச் சாலைக்குத் தூசியில்லாச்சாலை அமைக்கும் வேலைக்கு வரவேற்கப்படுகின்றன. அவைகள் அன்று மாலை 4–15 மணிக்குத் திறக்கப்படும். மதிப்பீட்டுத் தொகை ரூ. 30,000 கட்டுத் தொகை ரூ. 1,500. மற்றைய விவரங்கள் நகரப் பொறியரிடமிருந்து கேட்டுத் தெரிந்துக் கொள்ளலாம். ஷெடியூல் பெறக் கடைசித் தேதி 27—7—1972.

எம். கோவிந்தன்குட்டி நாயர்,
ஆணையர்.

(த. 86)

---

## பழனி நகராட்சி

நகராட்சியில் மொத்தம் எஸ்டிமேட் ரூ. 1,33,350-ல் 25 வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் ஆணையரவர்களால்28—7—1972-ம் தேதி மாலை 4.00 மணிவரை வரவேற்கப்படுகிறது. தகுந்த டெபாசிட்டில்லாத ஒப்பந்தங்கள் எவ்வித முகாந்தரமுமின்றி நிராகரிக்கப்படும். வரப்பெற்ற ஒப்பந்தங்கள், அன்று மாலை 4.30 மணிக்குத் திறக்கப்படும். மேற்கொண்டு விவரம் தெரிந்து கொள்ள விரும்புவோர் நகராட்சிப் பொறியர் அலுவலகத்தில் நேரிலோ அஞ்சல் மூலமாகவோ தெரிந்து கொள்ளலாம்.

கு. பொன்னுசாமி,
ஆணையர்.

(த.83)

## தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம்
(அக்ரோ இல்லம், தொழில்பேட்டை, கிண்டி, சென்னை-32),

இக்கழகத்திற்கு உரிமையான என்ஜினின் வைக்கப்பட்டிருந்த சுமார் 250 காலி பேரல்கள் (Barrels) 200 லிட்டர் 175 லிட்டர், 50, லிட்டர் அளவுகளில் விற்பனைக்காக உள்ளது. வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்கூறிய அலுவலகத்தில் 29—7—1972 மாலை 3 மணிக்குள் வந்து சேரும்படி வரவேற்கப்படுகின்றன.

விவரங்களுக்கு எம்மை அணுகவும்.

நிருவாக இயக்குநர்.

(த-75)

## குடிநீர் வடிகால் வாரியம்

வேலையின் பெயர்—நீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டம் இரண்டாம் நிலை (பாகம் ஒன்று) மேல் மட்டப் பகுதிக்கு நீர் வழங்கும் திட்டம்—சி.ஐ.எஸ்.சி., பி.வி.சி. குழாய்கள் மற்றும் சிறப்பு இணைக்கும் வால்வுகள் அமைத்தலும், பொருத்தலும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், மேற்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், பொதுநலப் பொறியியல் வட்டம், சென்னை அவர்களால், அவர்தம் அலுவலகம் எண் 52, கங்குரெட்டிசாலை, எழும்பூர், சென்னை-8ல் இந்தத் துறையில் அல்லது எந்த அரசு அமைப்புகளில் உரிய பிரிவில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து குறிப்பிடப்பட்ட துறைக்கான படிவத்தில் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 19—7—1972 மாலை 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்த வடிவம்—கே-2.
கட்டுத் தொகை—ரூ. 1,590.

(கருவூலச் சலான் வடிவிலோ அல்லது ஒப்பந்த வடிவத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஏற்றுக் கொள்ளக் கூடிய ஏதாவதொரு வடிவிலோ கட்டுத் தொகை இருக்க வேண்டும்).

ஒப்பந்தப்பத்திரங்களின் விலை—ரூ. 10.35 காசு.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை, நிருவாகப் பொறியாளர், பொது நலப்பொறியியல் கோட்டம், தஞ்சாவூர் அவர்தம் கணக்கில் "I. Deposits and Advances—I Deposits bearing interest—Other Deposits TWAD Board Funds—1 Receipt—G (iii) Other Remittances and for Sales Tax—Sales—D Miscellaneous—I General Sales Tax" என்ற தலைப்பில் தனித்தனிச் சலானில் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் பத்திரங்கள் பெறுவதற்கு—
நிருவாகப் பொறியாளர்,
பொது நலப் பொறியியல் கோட்டம்,
28, ராஜாஜி தெரு,
சீனிவாசபுரம், தஞ்சாவூர்.
அவர்களுக்கு விண்ணப்பித்து, (ஒப்பந்தப் பத்திரங்கள் விலை நேரில் பணமாகவோ அல்லது மணி ஆர்டர் மூலமாகவோ) பெற்றுக் கொள்ளலாம்.

வேலை முடிக்க வேண்டிய காலம்—4 மாதங்கள்.

மேற்பார்வைப் பொறியாளர்,
மக்கள் நல்வாழ்வுப் பொறியியல் வட்டம்,
குடிநீர் வடிகால் வாரியம்,
சென்னை-8.

(த.39)

## திருவள்ளூர் நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை நகர்மன்ற ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 21—7—1972 வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். இதர நிபந்தனைகளுக்கும் ஒப்பந்தப் புள்ளி நமூனாவிற்கும் அலுவலகத்தில் விண்ணப்பிக்கவும்.

| வரிசை எண்ணும், வேலையின் விவரமும். | மதிப்பீடு தொகை. | பிணை வைப்புத் தொகை. முதல் தவணை. | இரண்டாவது தவணை. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1. கவரைத் தெரு மற்றும் தகினிக் கோட்டை தெரு ஆகிய தெருக்களின் தூசியில்லாத் தளத்தைப் புதுப்பித்தல். | 8,000 | 200 | 200 |
| 2. பேருந்து நிலையத்தின் தூசியில்லாத் தளத்தைப் புதுப்பித்தல். | 7,900 | 200 | 195 |
| 3. பெரிய பிராமணத் தெருவின் தூசியில்லாத் தளத்தைப் புதுப்பித்தல். | 7,500 | 190 | 185 |
| 4. சித்தி விநாயகர் கோயில் தெருவின் தூசியில்லாத் தளத்தைப் புதுப்பித்தல். | 6,600 | 165 | 165 |
| 5. குட்டகரை சந்து மற்றும் முத்திரியர் சந்துகளின் சாலைகளைப் புதுப்பித்தல். | 3,600 | 90 | 90 |
| 6. பெருமாள் செட்டித் தெருவின் தூசியில்லாத் தளத்தைப் புதுப்பித்தல். | 3,200 | 80 | 80 |
| 7. இலக்குமிபுரம் சாலையில் அரிசன நலத்துறை பள்ளியருகில் மலஜல அறை கட்டுதல். | 2,800 | 70 | 70 |
| 8. பெரிய எடபாளையத்தில் பஜனை கோயிலுக்கருகிலுள்ள சாலையைப் புதுப்பித்தல். | 1,300 | 35 | 30 |

## ஏல அறிவிப்பு

## திருவள்ளூர் நகராட்சி

கீழ்க்கண்ட பழுதடைந்த பொருட்களை நகராட்சி பழைய நீர்த் தேக்க நிலையத்தில் 21—7—1972 காலை 11-00 மணியளவில் ஆணையரால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகளுக்கும் இதர விவரங்களுக்கும் அலுவலகத்தில் விண்ணப்பிக்கவும்.

| | |
|---|---|
| 1. கைவண்டி இரும்புச் சட்டம் .. .. .. | 4 |
| 2. கை வண்டிகள் .. .. .. .. | 3 |
| 3. தண்ணீர் வண்டிகள் .. .. .. | 3 |
| 4. பேருந்து நிலையக் கடிகாரம் .. .. .. | 2 |
| 5. தண்ணீர் வண்டி இரும்புச் சட்டம் .. .. | 5 |
| 6. டயர்கள் (எ.டி.வி. 5·00—19) .. .. | 15 |
| 7. மின் விசிறி (நிறுத்தி வைத்தல்) .. .. | 1 |
| 8. 1 எச்.பி. (ஒரு குதிரை ஓட்ட மோட்டார்) .. | 6 |
| 9. 1 எச்.பி. (ஒரு குதிரை ஓட்ட பம்புகள்) .. | 5 |
| 10. 2" கை பம்புகள் .. .. .. .. | 3 |
| 11. 3/4" இரும்புக் குழாய்கள் சிலிப்பு .. .. | 80 |
| 12. 3/4" ஜே. சி. சூபர் குழாய்கள் .. .. | 28 |
| ஜெய்சான் குழாய்கள் .. .. .. | 21 |
| லண்டன் டெயிலர் .. .. .. | 20 |
| ஜி.ஐ. குழாய்கள் .. .. .. .. | 12 |
| 13. பக்கெட்டுகள் .. .. .. .. | 6 |
| 14. வாசல் கதவு (கேட்) கம்பிகள் .. .. | 5 |
| 15. வண்டி வட்டை .. .. .. .. | 1 |
| 16. தார் டிரம்கள் .. .. .. .. | 10 |
| 17. 3/4" பைப்புத் துண்டுகள் .. .. .. | 60'—0" |
| 18. $1\frac{1}{4}$" பைப்புத் துண்டுகள் .. .. .. | 50'—0" |
| 3" பைப்புத் துண்டுகள் .. .. .. | 5'—0" |
| 6" பைப்புத் துண்டுகள் .. .. .. | 3'—0" |
| 19. பாண்டு .. .. .. .. .. | 2 |
| 20. வண்டிச் சக்கரம் .. .. .. .. | 1 |
| 21. கூரை மரத் தளவாடம் .. .. .. | 35 |
| 22. காலி சிமெண்டு சாக்குப் பைகள் .. .. | 300 |
| 23. ரேடியோக்கள் .. .. .. .. | 2 |

ஆணையர் பொறுப்பு.

(த.65)

## ஒப்பந்தப் புள்ளி

## உதகமண்டலம் நகராட்சி

சுகாதார வேலையாட்களுக்கு காக்கி மட்டி துணியில் ஒவ்வொருவரின் அளவுக்கும்தகுந்தார்ப்போல் தைக்கப்பட்ட முழுகை சட்டைகள், தேவையான பட்டன்கள் மற்றும் பாக்கெட்டுகளுடன் வழங்குவதற்கு, ஆணையர், உதகமண்டலம் நகராட்சி, உதகமண்டலம் அவர்களால் 28—7—72 மாலை 3-30 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப் படிவம் மற்றும் நிபந்தனைகள், நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களிடம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 2·06 பணமாகச் செலுத்திப் பெறலாம்.

ஆணையர்,
உதகமண்டலம் நகராட்சி.

(த. 1)

## ஒப்பந்தப் புள்ளி

### மீன் துறை

தூத்துக்குடியில் இத்துறைக்குச் சொந்தமான உறைபனி நிலையத்தை (Freezing Plant) குத்தகைக்கு விடுவதற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 2—8—1972 பிற்பகல் 2-00 மணிவரை சென்னை மீன்துறை இயக்குநரால் ஏற்றுக் கொள்ளப்படும். இதுகுறித்த விவரங்களை மீன்துறை இயக்குநரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மீன்துறை இயக்குநர்.

(த. 98)

## ஏல விளம்பரம்

### உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியம்

1972-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 3-00 மணிக்கு உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பழைய கிர்லாஸ்கர் ஆயில் என்ஜின்கள் நான்கும் அதைச்சார்ந்த பம்புகளும் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

ஏல நிபந்தனைகளையும் இதர விவரங்களையும் அலுவலக நேரங்களில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.

பி. எ. எஸ். சாலமன்,
ஆணையர்.

(த. 85)

## ஏல விற்பனை

### தீயணைப்புத் துறை

திருச்சிராப்பள்ளிக் கோட்டத்தைச் சேர்ந்த கண்டனம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட நோயாளி வண்டிகளை, திருச்சிராப்பள்ளி தீயணைப்பு நிலையத்தில் 31—7—1972 திங்கட்கிழமை காலை 11-00 மணி அளவில் பகிரங்க ஏலத்தில் விடப்படும். இந்த நோயாளி வண்டிகளைத் திருச்சிராப்பள்ளி தீயணைப்பு நிலையத்தில் பார்வையிடலாம்.

ஊர்திகளின் விவரம்—

(1) பதிவு எண் எம். எஸ். ஒய். 9452, ஊர்தியின் வகுப்பு நோயாளி வண்டி, மேக்—பார்கோ, வருட மாடல்—1956.

(2) பதிவு எண்—எம். எஸ். ஒய்—9447, ஊர்தியின் வகுப்பு—நோயாளி வண்டி, மேக்—ஸ்டுடிபேக்கர் , வருட மாடல்—1955.

விற்பனை நிபந்தனைகளை திருச்சிராப்பள்ளி கோட்டத் தீயணைப்பு அலுவலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. இரத்தினசாமி,
கோட்டத் தீயணைப்பு அலுவலர்.

(த. 96)

## ஏல விற்பனை

### வேளாண்மைத் துறை

ஒரு சவர்லெட் சரக்குப் பேருந்து (எம். எஸ். சி. 9545), (லாரி) 1945 வருட மாடல், 22—7—1972 காலை 11 மணிக்கு உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு) திருநெல்வேலி-7 அவர்களால் பொது ஏலத்தில் விடப்படும்.

இந்த வண்டியை மேற்கூறிய அலுவலகத்தில் எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

அரசினரின் நன்மை குறித்து இந்த ஏலத்தை ஒத்தி வைக்கவோ, நீக்கி விடவோ, அல்லது திரும்பப் பெறவோ வேளாண்மைத் துறைக்கு முழு உரிமையுண்டு.

ஏல சம்பந்தமான வரையறைகள், நிபந்தனைகள் ஆகியவற்றை உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு) திருநெல்வேலி-7 அவர்களிடமிருந்து பெறலாம்.

வேளாண்மை இயக்குநர்.

(த 92)

## ஒப்பந்தப் புள்ளி

மருந்து சரக்குகள் (Drugs and Medicinses) வழங்குவதற்கான 1—9—1972 முதல் 31—12—1972 வரையிலுள்ள ஒப்பந்த அறிவிப்பு காலத்தில் புகழ்பெற்ற உள்ளூர் வட்டார நிறுவனங்களிடமிருந்து "Tender for Suply of medicines due on" 9—8—1972 என்று உரையின் மீது தலையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்பு 9—8—1972 அன்று மாலை 3-00 மணி வரை வரவேற்கப்படும்.

ஒப்பந்த அறிவிப்புப் படிவம் கீழே கையொப்பமிட்ட அலுவலகத்தில் 8—8—1972 வரை எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் கிடைக்கும். ஒப்பந்த அறிவிப்பு படிவத்தின் விலையான ரூபாய் 3 பணத்தை ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா அல்லது ஸ்டேட் பாங் ஆப் இந்தியாவில் XXIII Medical J. Miscellaneous-other Receipts என்றதலைப்பில் செலுத்தி அந்தச் சலானை அலுவலகத்தில் தாக்கல்செய்து ஒப்பந்த அறிவிப்பு படிவத்தைப் பெற்றுக்கொள்ளாலம். 12 காசு செலுத்தி வேறு ஒரு செலானும் "XII Sales Tax and Surcharge on ST. Receipts under State Sales Tax Act MGST for Sale of Tender forms என்ற தலைப்பில் கட்டவேண்டும்.

மேற்கண்ட தலைப்புகளில் கட்டிய கட்டணம் எவ்வித சூழ்நிலையிலும் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

எம். சாரதாமேனன்,
கண்காணிப்பாளர், அரசினர் மனநல
மருத்துவமனை, சென்னை-10.

(த. 94)

## ஏல விற்பனை

### வனத் துறை

கீழ்க்கண்ட தோராயமான அளவுள்ள மரங்கள் மத்திய மரக்கிடங்கு, கார்குடி பாதை ஓரமுள்ள மரக்கிடங்கு, தொரப்பள்ளி ஆகிய மரக் கிடங்குகளில் நீலகிரி வடக்கு மாவட்ட வன அலுவலராலோ அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராலோ 3—8—1972 அன்று ஏலம் நடத்தப்படும். ஏலம் காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும்.

மரங்களின் அளவு.

| | | |
|---|---|---|
| (1) தேக்கு .. .. .. .. | 375 | கனமீட்டர். |
| (2) மத்தி .. .. .. .. | 300 | " |
| (3) தடசு .. .. .. .. | 20 | " |
| (4) ஹொன்னே .. .. .. .. | 35 | ,, |
| (5) நந்தி .. .. .. .. | 25 | ,, |

மற்றைய விவரங்களுக்கு நீலகிரி வடக்கு மாவட்ட வன அலுவலருக்கு அல்லது வனச்சரக அலுவலர், முதுமலை சரகம், கார்குடி, கூடலூர் தாலுகா, நீலகிரி மாவட்டம் அவர்களுக்கோ எழுதிப்பெறவும்.

எஸ். சுப்பராயலு நாயுடு,
மாவட்ட வன அலுவலர், நீலகிரி வடக்கு கோட்டம்.

(த. 97)

## ஒப்பந்தப் புள்ளி

### தென்னார்க்காடு மாவட்ட விவசாய விளைபொருள் விற்பனைக் கழகம், கடலூர்-1.

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தப் புள்ளிகள் அடிற் கையொப்ப மிட்டவரால் 2—8—1972 (1972 வருடம் ஆகஸ்ட் மாதம் இரண்டாம் நாள்) மாலை 4-00 மணிக்குள் பெற்றுக் கொள்ளப்பெறும். ஒப்பந்தக் குறிப்புகளும், இதர ஒப்பந்த வரையறைகளும் 15—7—1972 முதல் 31—7—1972 வரை உள்ள எல்லா அலுவலக நாட்களிலும் இவ்வலுவலகத்தில் காலை 11-00 மணி முதல் மாலை 4 மணி வரையிலும் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்த வரையறை பெற்றுக் கொள்ள விரும்புவோர் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 10-35 வீதம் இவ்வலுவலகத்தில் செலுத்தி வரையறை பெற்றுக்கொள்ள வேண்டும். மேற்கொண்டு விவரங்களுக்கு செயலாளரை அணுகவும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | வேலையின் உத்தேச மதிப்புத் தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1 விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஒரு புதிய ஏலக் கொட்டகை அமைத்தல். | 35,300 | 883 |
| 2 விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 2-வது ஏலக் கொட்டகையை அபிவிருத்தி செய்தல். | 23,900 | 598. |
| 3 திருக்கோயிலூர், விழுப்புரம், விருத்தாசலம், கள்ளக்குறிச்சி ஆகிய விற்பனைக் கூடங்களில் கட்டவிருக்கும் ஏலக் கொட்டகைகளுக்கு இரும்பு உத்திரக் கோப்பு தொகுதிகள் ("L" Angle Trusses) சப்ளை செய்து பொருத்திக் கொடுத்தல். | 1,50,000 | 3,750 |

எஸ். வீராசாமி,
செயலாளர்-பொறுப்பு.

(த. 93)

## தொழில் நுட்பக் கல்வி இயக்கம் (கட்டுமானப் பிரிவு) கிண்டி, சென்னை-25

வேலையின் பெயர்—கிண்டி, சென்னை-25ல் பொறியியல் கல்லூரியின் சிவில் பொறியியல் வசதிக்காக மேலும் கட்டடம் கட்டுதல்.

பார்வை—இந்த அலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். சி. டபிள்யூ 3251–டி1–72/தேதி 25–5–1972.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைக்காக, மேற்கண்ட அலுவலகத்தில், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் தொழில் நுட்பக் கல்விக் கோட்டங்களில் வேலைகளை எடுப்பதற்காகப் பதிவு செய்து கொண்டுள்ள 3 மற்றும் அதற்கு மேற்பட்ட பொருத்தமான பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 24–7–1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 3-30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்தகாரர்கள் முன்னிலையில் மேற்கண்ட அலுவலகத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்தவடிவம்—மொத்தத் தொகை.
கட்டுத் தொகை—ரூ. 3,500.
ஒப்பந்தப்பத்திரங்களின் விலை வரைபடங்களுடன்—ரூ. 20·00 + விற்பனை வரி 3½ சதவிகிதம்.
வேலை முடிக்க வேண்டிய காலம்—6 மாதங்கள்.
மேற்கண்ட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள்—10–7–1972 முதல் 22–7–1972 வரை.

ஒப்பந்தப்பத்திரங்கள் விலை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்படமாட்டாது) கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ P W Remittances III Other remittancesஎன்றதலைப்பில்நிர்வாகப் பொறியாளர், தொழில் நுட்பக் கல்விக் கோட்டம், சென்னை-25 அவர்தம் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனை வரி தனிச் சலானில் கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் "XII Sales tax b Receipts under state sales tax Act General sales Tax" என்ற தலைப்பில் செலுத்தப்படவேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் சலானைக் கொடுத்த பிறகு மட்டுமே வழங்கப்படும்.

சென்னை தொழில் நுட்பக் கல்வி இயக்கம் கட்டுமானப் பிரிவு வேலைகளுக்கு உரிய வகுப்பில் பதிவு செய்யாத ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

கட்டுத்தொகை சலான் வடிவிலோ செட்யூல்டு வங்கியின் டெபாசிட் அட்கால் ரிசிப்ட்ஸ் வடிவிலோ ஏற்றுக் கொள்ளப்படும். அரசு உறுதிப் பத்திரங்கள், மாநில மின்வாரியப் பத்திரங்கள் மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரங்கள் மார்க்கெட் மதிப்பில் அல்லது அசல் மதிப்பில் எது குறைவாக இருக்கிறதோ அதில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய மயமாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய பேங் காரண்டியும் கட்டுத்தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு வகையில் செலுத்தப்படும் தொகை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் உரிய பிரிவுகளில் பெரிய கட்டடங்கள் கட்டும் வேலைகளில் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்கவேண்டும். தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களுக்கு எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எக்காரணமும் கூறுமல் நிராகரிக்க உரிமையுண்டு.

குறிப்பு—பார்வையில் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை, இந்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளக்குகிறது.

**தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்,**
சென்னை.

(த. 30)

---

வேலையின் பெயர் :—சென்னை வானொலி நிலையத்துக்கு, தொலை படக்காட்சி (Television) நிலையம் அமைப்பதற்குக் கட்டடங்கள் கட்டுதல்.

தமிழக ஆளுநருக்காகவும் அவர் சார்பிலும் மேற்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப்பணித்துறை, சென்னை—செங்கல்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களால் 3–8–1972 மாலை 3–00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். அன்று மாலை 3–15 மணி அளவில் வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கல்பட்டு வட்டம் அவர்களால் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

1. ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.

2. முன் வைப்புத் தொகை—ரூ. 70,000.

3. ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 40 + விற்பனை வரி 3½ சதவிகிதம்.

4. முடிக்க வேண்டிய காலம்—18 மாதங்கள்.

5. ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கல்பட்டு வட்ட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கிடைக்கும் காலம்—19–7–1972 முதல் 2–8–1972 வரை.

6. ஒப்பந்தப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படும் கடைசி நாள்—3–8–1972 மாலை 3–00 மணி.

7. ஒப்பந்தப் பத்திரங்களின் விலை—"P. W. D. Remittances—III. Other Remittances" என்ற தலைப்பில் செயற் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடக் கோட்டம் எண். (2), சேப்பாக்கம், சென்னை–5 அவர்கள் கணக்கிலும். ஒப்பந்தப்பத்திரங்களுக்குரிய விற்பனை வரி மேற்கண்ட சலானில் "XII. Sales Tax—[b] Receipts under the State Sales Tax" என்ற தலைப்பிலும் அரசாங்கக் கருவூலங்களிலோ அல்லது ரிசர்வ் வங்கியிலோ கட்டப்பட வேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் மேற்கண்ட சலானைக் கொடுத்தபின்னர்தான் வழங்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்களின் விலை ஒருபோதும் திருப்பித் தரப்பட மாட்டாது.

8. மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கல்பட்டு வட்டம், சேப்பாக்கம், சென்னை–5 அவர்கள் ஒப்பந்தங்களை எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

9. மற்ற விவரங்கள் மேற்பார்வைப் பொறியாளர், சென்னை—செங்கல்பட்டு வட்ட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அலுவலக நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**ந. லக்ஷ்மிநாராயணன்,**
மேற்பார்வைப் பொறியாளர்,
பொ.ப.துறை. சென்னை—செங்கல்பட்டு வட்டம், சென்னை–5.

(த. 79)

---

## தொழில் நுட்பக் கல்வி இயக்கம், (கட்டுமானப் பிரிவு)

கிண்டி, சென்னை–25.

வேலையின் பெயர்.—கோயம்புத்தூர், அரசு பெண்கள் பாலிடெக்னிக்கிற்காக அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல்.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கண்ட வேலைக்காக, மேற்கண்ட அலுவலகத்தில், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை–25, அவர்களால், தொழில் நுட்பக் கல்விக் கோட்டங்களில் வேலைகளை எடுப்பதற்காகப் பதிவு செய்து கொண்டுள்ள 3 மற்றும் மேற்பட்ட பொருத்தமான பிரிவு ஒப்பந்ததாரர்களிடமிருந்து 7—8—72 மாலை 3–00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்பபுள்ளிகள் அதே நாள் மாலை 3–30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில், மேற்கண்ட அலுவலகத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை–25 அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம் :—மொத்தத் தொகை.
கட்டுத் தொகை :—ரூ. 3,250.
ஒப்பந்தப் பத்திரங்கள் விலை வரைபடங்களுடன் :—ரூ. 20·00—விற்பனை வரி 3½ சதவிகிதம்.
வேலை முடிக்க வேண்டிய காலம் :—6 மாதங்கள்.
" மேற்கண்ட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள் :—24—7–72 முதல் 5–8–72 வரை.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது) கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ "P. W. Remittances—III. Other Remittances" என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், தொழில் நுட்பக் கல்விக் கோட்டம், சென்னை–25 அவர்தம் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி தனிச் சலானில், கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் "XII. Sales Tax—[b] Receipts under State Sales Tax Act—General Sales Tax" என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் சலானைக் கொடுத்த பிறகு மட்டுமே வழங்கப்படும்.

சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்கம் கட்டுமானப் பிரிவு வேலைகளுக்கு உரிய வகுப்பில் பதிவு செய்யாத ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது.

கட்டுத்தொகை சலான் வடிவிலோ செட்யூல்டு வங்கியின் டெபாசிட் அட்கால் ரிசிப்ட்ஸ் வடிவிலோ ஏற்றுக் கொள்ளப்படும். அரசு உறுதிப் பத்திரங்கள், மாநில மின்வாரியப் பத்திரங்கள் மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரங்களும் மார்க்கெட் மதிப்பில் அல்லது அசல் மதிப்பில் எது குறைவாக இருக்கிறதோ அதில் 5 சதவிகிதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய மயமாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய பேங் காரண்டியும் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறுவகையில் செலுத்தப்படும் தொகை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் உரிய பிரிவுகளில் பெரிய கட்டடங்கள் கட்டும் வேலைகளில் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை–25 அவர்களுக்கு எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எக்காரணமும் கூறுமல் நிராகரிக்க உரிமையுண்டு.

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,**
சென்னை.

(த. 74)

## அறிவிப்பு

### தமிழ்நாடு அரசின் பொது நியமனங்கள்

தமிழ்நாடு அரசு, பால்பண்ணை வளர்ச்சித்துறையில் கீழ்கண்ட பதவிகளுக்காக மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

| | பதவியின் பெயர். | காலி இடங்களின் எண்ணிக்கை. | சம்பள விகிதம். |
|---|---|---|---|
| 1. | வெட்ரினரி லிவ்ஸ்டாக் (Vety Live stock) இன்ஸ்பெக்டர்கள் | 21 | ரூ. 325—14—550 டி. எ. மற்றும் வழக்கமான அலவன்ஸ் |
| 2. | லிவ்ஸ்டாக் அசிஸ்டன்ட் கிரேடு 1. | 11 | ரூ. 275—10—375 –15-450 டி. எ. மற்றும் வழக்கமான அலவன்ஸ் |
| 3 | லிவ்ஸ்டாக் அசிஸ்டன்ட் கிரேடு 2. | 16 | ரூ. 210—5—245 10—325 டி.எ. மற்றும் வழக்மான அலவன்ஸ் |

தகுதி.—வகை எண் 1-க்கு இந்தியாவில் எந்தக்கால்நடை மருத்துவக் கல்லூரியிலாவது கால்நடை மருத்துவத்தில் டிப்ளமாவில் 2 ஆண்டு படித்திருக்க ( Undergone ) வேண்டும். 1—7—1972 அன்று 25 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

வகை எண் 2-க்கு உயர்நிலைப்பள்ளி இறுதிப் படிப்பு சர்டிபிகேட் பெற்றிருக்க வேண்டும். மற்றும் இந்தியாவில் எந்தக்கால்நடைக் கல்லூரியிலாவது கால்நடை மருத்துவத்தில் நடத்தப்படும் சர்ட்டிபிகேட் படிப்பின் ஸ்டாக்மேன் படிப்பில் தேறியிருக்க வேண்டும். கால்நடை மருந்து பீல்டில் எந்த வகையிலாவது 7 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

வகை எண் 3-க்கு இந்தியாவில் எந்தக் கால்நடைக் கல்லூரியிலாவது கால்நடை மருத்துவத்தில் நடத்தப்படும் சர்டிபிகேட் படிப்பின் ஸ்டாக்மேன் படிப்பில் தேறியிருக்க வேண்டும். 1—7—1972 அன்று 25 வயதிற்குக் குறைவாக இருக்க வேண்டும்.

குறிப்பு.—( deserving cases ) கஷ்டப்படுகிறவர்களுக்கு வயது தளர்த்தப்படும்.

மனுக்கள் டெஸ்டிமோனியல்ஸ் பிரதியுடன் கீழ்க் கையொப்பமிட்டவருக்கு 30—7—1972-க்கு முன்னர் வந்து சேர வேண்டும்.

**ஆணையர்,**
பால் உற்பத்தி மற்றும்
பால்பண்ணை வளர்ச்சி,
சென்னை-51.

(த.81)

## வேலை வாய்ப்பு

### வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், கீழ்க்கண்ட தற்காலிகப் பதவிகளுக்குக் குறிப்பிடப்பட்ட படிவத்திலான மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

| வரிசை எண்ணும், பதவியின் பெயரும், மற்றும் சம்பள விகிதமும். | பதவிகளின் எண்ணிக்கை. | தலைமையகங்கள். |
|---|---|---|
| 1. உதவி வேளாண்மைப் பொறியாளர் ஐ.சி.எ.ஆர். திட்டம். (ரூ. 550—25—600—35—950). | 3 | கடலூர், திருச்சி மற்றும் மதுரை. |
| 2. ஜூனியர் பொறியாளர் (சிவில் வேலைகள்). (ரூ. 400—15—475—20—575—25—650). | 2 | கோயம்புத்தூர். |
| 3. ஜூனியர் பொறியாளர் (எலக்ட்ரிகல்) (ரூ. 400—15—475—20—575—25—650). | 1 | ஷை |
| 4. வேளாண்மைப் பொறியியல் இன்ஸ்ட்ரக்டர் (ரூ. 400—15—475—20—575—25—650). | 3 | ஷை |

குறிப்பு.—(1) பதவிகளுக்கான பொறுக்குதல் முழுதும் தற்காலிக அடிப்படையிலானது.

(2) பொறுக்குக் குழு தேவையான இடங்களில்; குறைந்த பட்சத் தேவைகளை-தகுதிகளை மனுதாரர்கள் வேறு வகையில் பொறுக்குதலுக்குத் தகுதியுடையவர்கள் என்று கருதினால் தளர்த்தும்.

(3) குறிப்பிடப்பட்ட மனுப் படிவம் மற்றும் மனுதாரர்களுக்கு நிபந்தனைகள் பதவிகளுக்குக் குறிப்பிடப்பட்ட தகுதிகள், பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோயம்புத்தூர்-3 அவர்களிடம், கம்ட்ரோலர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அவர்கள் பெறும் வகையில் லாலிசாலை-அலுவலகத்தில் ரூ. 2-க்கான போஸ்டல் ஆர்டரில் எந்தப்பதவிக்கு மனுச் செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டு செலுத்திப் பெறலாம்.

(4) முழுமையான மனுக்கள், பதிவாளர், தமிழ்நாடு-3 வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் அவர்களுக்கு 1972 ஆகஸ்ட் 7-க்கு முன்னர் வந்து சேர வேண்டும்.

**வி. டி. துரைராஜ்,**
பதிவாளர்.

(த.84)

## ஒப்பந்தப் புள்ளி

### தொழில்நுட்பக் கல்வி இயக்கம் (கட்டுமானப்பிரிவு) கிண்டி, சென்னை-25

வேலையின் பெயர்.—அடையாறு, சென்னை-20-ற் சி. ஐ. டி. எல்லைக்குள் மாநிலத் திரைப்படக் கோட்டத்திற்கு மேலும் படக்கூடம் கட்டுதல்.

பார்வை: இந்த அலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் சி. டபிள்யூ—3253 டி.1—72. 25—5—72.

தமிழ் நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும், மேற்கண்ட வேலைக்காக, மேற்கண்ட அலுவலகத்தில், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் தொழில் நுட்பக் கல்விக் கோட்டங்களில் வேலைகளை எடுப்பதற்காகப் பதிவு செய்து கொண்டுள்ள ஐ.எ. மற்றும் மேற்பட்ட பொருத்தமான பிரிவு ஒப்பந்ததாரர்களிடமிருந்து 24–7–72 மாலை 3·00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3.30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில், மேற்கண்ட அலுவலகத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை-25 அவர்களால் திறக்கப்படும்.

ஒப்பந்த வடிவம்.—மொத்தத் தொகை.

கட்டுத் தொகை.—ரூ. 17,500.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை வரைபடங்களுடன்.—ரூ. 20.00 + விற்பனை வரி 3½ சதவிகிதம்.

வேலை முடிக்க வேண்டிய காலம்.—10 மாதங்கள்.

மேற்கண்ட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள்:—10–7–72 முதல் 22–7–72 வரை.

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை (எந்தச் சூழ்நிலையிலும் திருப்பித் தரப்பட மாட்டாது) கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ **"P. W. Remittances—III. Other Remittances"** என்ற தலைப்பில் நிர்வாகப் பொறியாளர், தொழில் நுட்பக் கல்விக் கோட்டம், சென்னை–25 அவர்தம் கணக்கில் செலுத்தப்பட வேண்டும். விற்பனை வரி தனிச் சலானில், கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் **"XII. Sales tax- [b]. Receipts under State Sales tax act—General Sales Tax"** என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப்பத்திரங்கள் சலானைக் கொடுத்த பிறகு மட்டுமே வழங்கப்படும்.

சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்கம் கட்டுமானம் பிரிவு வேலைகளுக்கு உரிய வகுப்பில் பதிவு செய்யாத ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ செட்யூல்டு வங்கியின் டெபாசிட் அட்கால் ரிசிப்ட்ஸ் வடிவிலோ ஏற்றுக் கொள்ளப்படும். அரசு உறுதிப் பத்திரங்கள், மாநில மின்வாரியப் பத்திரங்கள் மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரங்களும் மார்க்கெட் மதிப்பில் அல்லது அசல் மதிப்பில் எது குறைவாக இருக்கிறதோ அதில் 5 சதவீதம் குறைத்து கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய மயமாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய பேங்க்காரண்டியும் கட்டுத்தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். வேறு வகையில் செலுத்தப்படும் தொகை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் உரிய பிரிவுகளில் பெரிய கட்டடங்கள் கட்டும் வேலைகளில் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை–25 அவர்களுக்கு, எந்த அல்லது எல்லா ஒப்பந்தப் புள்ளிகளையும் எக்காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமையுண்டு."

குறிப்பு:—பார்வையில் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை, இந்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளக்குகிறது.

**தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்,**
சென்னை.

(த. 37)

## திருச்சிராப்பள்ளி நகராட்சி

4 அடி டியூப் லைட் ஒன்று, 2 அடி டியூப் 2 வழங்கிப் பொருத்து வதற்கு ஆணையர் அவர்களால் 5—8—72 மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் பத்திரம் மற்றும் இதர விவரங்கள், நகராட்சிப் பொறியாளரின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்தோ அல்லது நேரிலோ பெறலாம்.

டி. கோவிந்தராஜன்,
ஆணையர்.

(த. 45)

## திருச்சிராப்பள்ளி நகராட்சி

4 அடி 40 வாட்ஸ் 3 டியூப் லைட்டுகள் வழங்கிப் பொருத்துவதற்கு ஆணையர் அவர்களால் 5—8—72 மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் மற்றும் இதர விவரங்கள் நகராட்சிப் பொறியாளரின் அலுவலகத்திற்கு விண்ணப்பித்தோ அல்லது நேரிலோ பெறலாம்.

எஸ். கோவிந்தராஜன்,
ஆணையர் பொறுப்பு.

(த. 43)

## திருநெல்வேலி நகராட்சி

நீர் வழங்கு திட்டத்திற்கு ஏ. சி. பிரஸ்சர் பைப்புகள் மற்றும் ஜாயிண்டுகள் வழங்க, நகராட்சி ஆணையர், திருநெல்வேலி அவர்களால், 27—7—72 மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். கொடுக்கும் நாளுக்குப் பின்னர் வரும் ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்பட மாட்டாது. பொருட்கள் வழங்கக் கட்டுத் தொகை ரூ. 125.

மற்ற விவரங்களுக்கு, நகராட்சி ஆணையர் திருநெல்வேலி அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

வி. சுந்தரவரதன்,
ஆணையர் பொறுப்பு.

(த. 2)

## அறிவிப்பு

கவனத்திற்கு—தமிழ்நாட்டில் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் கிராப்ட்ஸ் மென் தேறி வேலையில் அமராத அனைவருக்கும்.

தமிழ் நாட்டில் தொழில் பயிற்சி நிறுவனத்தில் கிராப்ட்ஸ்மென் தேறி வேலையில் அமராத அனைவரும், சென்னையைச் சார்ந்தவர்களாக இருந்தால் தொழில் வணிக உதவி இயக்குநர், சென்னை-34 அவர்களிடமும் சென்னை நகரத்தைச் சேராத அனைவரும் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் தொழில் வணிக உதவி இயக்குநர் அவர்களிடமும், தேவையான வழிகாட்டுவதற்கும், மற்றும் தொழில் கூட்டுறவுக் கழகங்கள் மற்றும் எண்டர்பிரைசஸ் அமைப்பு உதவிகளுக்கும், தொடர்பு கொள்ளுமாறு இதனால் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

வேலை வாய்ப்பு மற்றும் பயி[illegible],
இயக்குநர், செ[illegible]னை-5.

(த. 76)

## பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட், போக்குவரத்து இல்லம். அண்ணாசாலை, சென்னை-2

வாட்டர் ப்ரூபிங் — க்ளாம் ப்ரூபிங் (Tar folt)க்கு பைடுமென் போல்ட் (Bitumen folt) வழங்குவதற்குவதற்குக் கீழே கையொப்ப மிட்டவருக்கு 2—8—72 மாலை 3-00 வரை மூடி முத்திரையிட்ட கொட்டேசன்கள் வரவேற்கப்படுகின்டறன. விளக்கமான நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள் வாங்கும் அலுவலர், பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட், சென்னை-2 அவர்களிடம் எல்லா வேலை நாட்களிலினும் கட்டணமின்றிப் பெறலாம்.

நிருவாக இயக்குநர்,
பல்லவா போக்குவரத்துக் கழகம்
லிமிடெட், சென்னை-2.

## ஏல விளம்பரம்

## பல்லவா போக்குவரத்துக் கழகம் லிமிடெட், போக்குவரத்து இல்லம், சென்னை-2.

உபயோகமற்ற டயர்கள், பார்சல்கள், பாட்டரிகள், ஜாதிக்காய் பெட்டிகள் மற்றவைகள் எடுத்துச் செல்வதற்கு மத்தியப் பணிமனை, அயனாவரம் பணிமனை ஆகியவற்றில் முறையே 21—7—72 காலை 10-00 மணிக்கும் 21—7—72 மாலை 2-30 மணிக்கும் பொது ஏலம் நடைபெறும்.

ஏல நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்கள் மெட்டீரியல்ஸ் மேலாளர் அவர்களிடம் அலுவலக நேரங்களில் கேட்டுப் பெறலாம்.

நிருவாக இயக்குநர்.

(த. 72)

## ஒப்பந்தப் புள்ளி

## பொள்ளாச்சி நகராட்சி மின்துறை

கீழ்க்கண்ட பொருட்கள் வழங்க, 2—8—72 மாலை 4-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

250 கே.வி.ஏ. 22கே.வி./433 வோல்ட்ஸ் டிஸ்ட்ரிபியூசன் டிரான்ஸ்பார்மர்.

தேவையான ஒப்பந்தப்புள்ளி மாதிரி மற்றும் நிபந்தனைகள், நகராட்சி மின்பொறியாளர் அவர்களிடம் கேட்டுப் பெறலாம்.

ஆணையர்.

(த. 53)

## திருச்சிராப்பள்ளி நகராட்சி

ரேடியோ ரிசீவர், டிரைவர் ஆம்ப்ளியர் மற்றும் பவர் ஆம்ப்ளியர் மற்றும் ரேடியோ செட்டுகள் வழங்க ஆணையர் அவர்களால் 31—7—72 மாலை 4-00 மணி வரை மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்த நிபந்தனைகள், மற்றும் இதர வவிரங்கள் நகராட்சிப் பொறியாளரின் அலுவலதகத்திற்கு விண்ணப்பித்தோ அல்லது நேரிலோ பெறலாம்.

எஸ். கோவிந்தராஜ்,
ஆணையர் பொறுப்பு.

(த. 44)

## துறையூர் நகராட்சி

1972–73ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்குப் பத்திரங்கள் மற்றும் பதிவேடுகள் அச்சிட்டு வழங்குவதற்கு, மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவருக்கு 31—7—72 சேருமாறு வரவேற்கப்படுகின்றன. விளக்கமான விவரங்களுக்குச் சிறப்பு அலுவலர் துறையூர் நகராட்சி அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

சையட் அப்துல் காதர்,
சிறப்பு அலுவலர்.

(த. 31).

## ஒப்பந்தப் புள்ளி நீட்டிப்பு

## பொதுப்பணித் துறை

வேலையின் பெயர் :—உதகமண்டலத்தில் தாழ்த்தப்பட்ட பையன்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டுதல்.

மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள் 26—6—72லிருந்து 26—7—72 மாலை 3-30 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தப் பத்திரங்கள், நிருவாகப் பொறியாளர் அலுவலகம், பொ. ப. து. கட்டிடக் கோட்டம், கோயம்புத்தூரில் 24—7—72 வரை விற்பனைக்குக் கிடைக்கும்.

அசல் ஒப்பந்த அறிவிப்பில் கண்ட நிபந்தனைகள் மாற்றமில்லை.

எம். எஸ். கோபாலகிருஷ்ணன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித்துறை,
கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டம்,
கோயம்புத்தூர்.

(த. 26)

## பரமக்குடி நகராட்சி

கீழே சொல்லப்பட்ட பொருள்கள் சப்ளைக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் நகராட்சி ஆணையர் அவர்களால் 27—7—1972-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். கட்டுத் தொகை செலுத்தாத ஒப்பந்தங்கள் கவனிக்கப்பட மாட்டாது. அன்று மாலை 4-30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

| பைப்பு விவரம். | தேவையான எண்ணம். | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| (1) ஆர்.சி.சி. பைப்பு 2.438 மீட்டர் நீளமும் 0.914 மீட்டர் உள்விட்டமும் உள்ள "என்.பி. 2" | 8 | 100 |

இரா. வேலு, பி.ஏ.,
ஆணையர்.

(த. 70)

## பரமக்குடி நகராட்சி

பரமக்குடி நகராட்சி ஆணையரால் மின்வாரியத்தில் பதிவு செய்யப் பட்ட மின் இணைப்பு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்கண்ட வேலைக்கு 27—7—1972 மாலை 4 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன. அன்றே 4-30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்தக் காரர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும். மற்றைய விவரங் களை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ள லாம்.

ஷெட்யூல் பாரங்களை உரிய கட்டணம் நகராட்சிக் கருவூலத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை | முன்வைப்புத் தொகை |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| நகரசுத்தித் தொழிலாளர் குடியிருப்பான 24 வீடுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வயரிங் செய்தல் (சாமான்கள் சப்ளை உள்பட). | 6,200 | 150 |

இரா. வேலு,
ஆணையர்

(த. 68)

## மறு ஒப்பந்தப் புள்ளி

## பரமக்குடி நகராட்சி

கீழே சொல்லப்பட்ட பொருள்கள் சப்ளைக்கான மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் நகராட்சி ஆணையர் அவர்களால் 27—7—1972-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4—00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். கட்டுத் தொகை செலுத்தாத ஒப்பந்தங்கள் கவனிக்கப்படமாட்டாது. அன்று மாலை 4-30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலை யில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

(1) 80 m.m. அளவுடைய (Thickness) மணங்கற்கள் (Stone Slabs) மணங்கல்லின் மேல் ஐந்து பக்கங் களும் One Line Dressing செய்யப்பட்டிருத் தல் வேண்டும். தேவையான அளவு 26.319 ச.மீட்டர். 375

இரா. வேலு, பி.ஏ.
ஆணையர்.

(த. 71)

## திருவாரூர் நகராட்சி

கீழ்க்கண்ட பராமரிப்பு வேலைகளுக்கு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 29—7—1972-ஆம் தேதி சனிக்கிழமை மாலை 4-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். முழு விவரங்களுக்கு நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

| | மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| (1) காரைக்காட்டுத் தெரு | 5,900 | 295 |
| (2) கிழக்கு சன்னதி | 7,500 | 375 |
| (3) ஐ.பி. கோவில் வடக்கு, மத்திய, மேற்கு வீதி. | 8,000 | 400 |
| (4) ஐ.பி. கோவில் தெற்கு சன்னதித் தெரு. | 7,600 | 380 |

க. பெ. அன்பானந்தன்,
ஆணையர்.

(த. 67)

## பரமக்குடி நகராட்சி

பரமக்குடி நகராட்சிக்குத் தேவையான இரும்பு ரேக்குகள் மூன்று சப்ளை செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் நகராட்சி ஆணையர் அவர்களால் 27—7—1972-ம் தேதி வியாழக்கிழமை மாலை 4-00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். அன்று 4-30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும். காப்புத் தொகைக் கட்டாத ஒப்பந்தப் புள்ளிகள் கவனிக்கப்பட மாட்டாது. மற்ற விபரங்கள் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம். காப்புத் தொகை ரூ. 30.

இரா. வேலு, பி.ஏ.
ஆணையர்

(த. 69)

## திருவள்ளூர் நகராட்சி

கீழ்க் குறிப்பிட்டுள்ள பொருள்களுக்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகர்மன்ற ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் 21—7—1972 வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். இதர நிபந்தனைகளுக்கும் ஒப்பந்த நமூனு விற்கும் அலுவலகத்தில் விண்ணப்பிக்கவும்.

பொருட்கள் விவரம்.

| | | |
|---|---|---|
| 1. | 3/4" ஜி.ஐ. டாடா "ஏ" கிளாஸ் | 1,000''—0" |
| 2. | 1" ஜி.ஐ. பைப்பு டாடா "ஏ" கிளாஸ் | 200''—0" |
| 3. | 1 ½" ஜி.ஐ. பைப்பு டாடா "ஏ" கிளாஸ் | 500''—0" |
| 4. | 2" ஜி.ஐ. பைப்பு டாடா "ஏ" கிளாஸ் | 200''—0" |
| 5. | 3/4" ஜி.ஐ. கப்லிங் | 200 |
| 6. | 1" ஜி.ஐ. கப்லிங் | 20 |
| 7. | 1 ½" ஜி.ஐ. கப்லிங் | 50 |
| 8. | 2" ஜி.ஐ. கப்லிங் | 20 |
| 9. | 3/4" ஜி.எம். ஸ்டாப் காக் | 50 |
| 10. | 1 ½" ஜி.எம். ஸ்டாப் காக் | 25 |
| 11. | 2" ஜி.எம். ஸ்டாப் காக் | 10 |
| 12. | 3/4" ஜி.ஐ. எல்போ | 200 |
| 13. | 1 ½" ஜி.ஐ. எல்போ | 100 |
| 14. | 3/4" 1 ½" ரெட்யூசர் எல்போ | 50 |
| 15. | 2" எல்போ | 50 |
| 16. | 3/4" ஜி.ஐ. பெண்ட் | 100 |
| 17. | 1 ½" ஜி.ஐ. பெண்ட் | 100 |
| 18. | 2" ஜி.ஐ. பெண்ட் | 50 |
| 19. | 1" ஜி.ஐ. பெண்ட் | 30 |
| 20. | 3/4"×2" ரெட்யூசர் | 30 |
| 21. | 3/4"× 1½" ரெட்யூசர் | 50 |
| 22. | 3/4× 1" | 20 |
| 23. | நிப்பிள் 3—4" | 100 |
| 24. | நிப்பிள் 1 ½" | 50 |
| 25. | நிப்பிள் 2" | 25 |
| 26. | ரப்பர் இன்சொர்ஷீட | 100 கி.கி. |
| 27. | டீ 3—4 3—4"4× 3/4 | 100 |
| 28. | டீ 3/4× 11—4 11/4" | 50 |
| 29. | டீ 11" 02 3-4" | 20 |
| 30. | பிளக் 3/4" | 50 |
| 31. | பிளக் 1½" | 30 |
| 32. | பட வால்வ் 1" | 5 |
| 33. | ஓயிட்லெட | 100கி.கி. |
| 34. | கிரிஸ் டின் பிரான்ட் நெ. 3 | 3 டசன் |
| 35. | 100 வாட்ஸ் பல்ப் பிலிப்ஸ் 250 வோல்ட் | 100 |
| 36. | மின் விசிறிகள் 36" | 3 |

ஆணையர் பொறுப்பு.

(த. 66)

## ஒப்பந்தப் புள்ளி

### எண்ணூர் அனல் மின்திட்டம்

குறிப்பு எண். S.C.E 453.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட தனித்தனி ஒப்பந்தங்கள் அதன் உறையின் மேல் குறிப்பு எண், வேலையின் பெயர், ஒப்பந்ததாரரின் பெயரும் எழுதப்பட்டு கீழ்க் கையொப்பமிட்டவரால் குறித்த முடிவுத் தேதி அன்று மாலை 2–30 மணி வரை எண்ணூர் அனல் மின் திட்ட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்று மாலையே 3–00 மணிக்கு அங்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

| குறிப்பு எண். | வேலையின் பெயர். | முன்வைப்பு பணம். | ஒப்பந்தப் பிரதி விலை. | முடிவுத் தேதி. |
|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | |
| SCE 453 | Boiler No 4—Erection of Pressure parts and non-Pressure Parts. | 5,000 | 5 | 27-7-1972. |

2. ஒப்பந்தப் பிரதிகள் ஒவ்வொன்றும் ரூ. 5 செலுத்திக் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

3. வேலைக்கான முன்வைப்புத் தொகையை கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் ரொக்கமாக அல்லது கேட்பு உண்டியல் (Demand Draft) மூலம் செலுத்தி அதற்கான ரசீதை இணைத்து அனுப்ப வேண்டும்.

4. வாரியத்திற்கு உரிய தாள்களில் எழுதப்படாத ஒப்பந்தங்களும் முன்வைப்புப் பணம் கட்டியதற்கான ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தங்களும் குறித்த தேதி காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

5. கீழே கையொப்பமிட்டவர் எந்த ஒரு ஒப்பந்தத்தையோ அல்லது ஒப்பந்தங்களையோ எவ்வித காரணம் காட்டாமல் நிராகரிக்கவும் அவ் வேலையை ஒப்பந்ததாரர்களிடையே பிரித்துக் கொடுக்கவும் உரிமையுடையவராவார்.

6. ஒப்பந்தப் பிரதிகள் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு காணாமல் போனால் மின்சார வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பிரதிகள் மாற்றத் தக்கவை அல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
எண்ணூர் அனல் மின் திட்டம்,
சென்னை-57.

தொலைபேசி எண் : 59556 (5 லைன்ஸ்)
தந்தி : ENTERMAL

(த. 78)

---

### மின்சார வாரியம்,

### பரம்பிக்குளம் நீர் மின் திட்டம் மின்பாறை

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக கீழ்க்காணும் ஏடுகள் மற்றும் படிவங்கள்—அச்சிட்டு வழங்குதல் சம்பந்தமாக மூடி முத்திரையிட்டு சாற்றுக் குறிப்பெண்ணும் குறிப்பிட்ட விலையொப்பங்கள் கீழ்க் கையொப்பமிட்டவரால் தவணை தேதியன்று மாலை 3–30 மணி வரை பெற்றுக் கொள்ளப்பட்டு 4–00 மணிக்குத் திறக்கப்படும்.

| எண். | பொருள். | சாற்றுக் குறிப்பெண். | கட்டுத் தொகை | தவணை தேதி. |
|---|---|---|---|---|
| | | | ரூ. | |
| 1 | தமிழ்நாடு மின் வாரிய ஏடுகள்—மற்றும் படிவங்கள் அச்சிட்டு—வழங்குதல் | SE/PAL/RCS 224/72-73 | 1,000 | 28-7-1972. |

விலைக்குறிப்புகளைக் குறித்து அனுப்புவதற்குரிய நமூனா வேண்டுவோர் (Copies specification) ஒப்புச் சாற்றுக் குறிப்பு பிரதி ஒவ்வொன்றும் ரூ. 5 (திரும்பப் பெற இயலாது) பண அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரிலோ, செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பண அஞ்சல் மூலமாக அனுப்புவோர் தமது முகவரியையும் தேவையான ஒப்புச் சாற்றுக் குறிப்பெண்ணையும் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

கட்டுத் தொகையை கீழ் கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் செலுத்தி இரசீது பெற்றோ அல்லது வங்கியில் செலுத்திய (Demand Draft) கேட்பு உண்டியலில் மேற்பார்வைப் பொறியாளர் பரம்பிக்குளம் ஆழியாறு நீர் மின் திட்டம் மின் பாறை (அஞ்சல்) என்ற முகவரியுடன் விலை ஒப்பந்தத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும். எந்த ஒரு விலையொப்பத்தையும் காரணம் கூறாது தள்ளுபடி செய்யவோ, அல்லது ஆர்டரை பிரித்து இரண்டு அல்லது மேற்பட்ட விலையொப்பந்ததாரருக்கு இடையே பிரித்துக் கொடுக்கவோ, கீழ்க் கையொப்பமிட்டவருக்கு அதிகாரம் உண்டு.

ஒப்பந்தப் பிரதிகள் சாதாரண அஞ்சல் மூலமாக அனுப்பப்படும். அவை உரியவருக்கு சேர்ப்பிக்கப்படாவிட்டால் அல்லது காலதாமதமாகக் கிடைத்தால் அதற்கு மின்வாரியம் பொறுப்பல்ல. ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத் தக்கவையல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
பரம்பிக்குளம்—ஆழியாறு நீர்மின் திட்டம், மின்பாறை.

Tele : Parambydel/Alier Nagar
தொலைபேசி : 39, மீன்கரை ஆண்டிப்பட்டிணம்.

(த. 77)

## சேலம் மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட், சென்னை-9

" தமிழரசு " 16—5—1972-ம் தேதி பத்திரிக்கை வெளியீட்டில் பிரசுரமாகியுள்ள இச்சங்கத்தின் விளம்பரத்தில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு சேலம் மாவட்டத்திலுள்ள (1) சேலம், (2) ஆத்தூர், (3) இராசிபுரம், (4) நாமக்கல், (5) வேலூர், (பரமத்தி), (6) திருச்செங்கோடு, (7) கொமாரபாளையம் ஆகிய இடங்களிலுள்ள இரசாயன உர அரசு இருப்பாளர் இடங்களுக்கு லாரிகள் மூலம் அடியிற்கண்ட இடங்களிலிருந்து போக்குவரத்து செய்ய லாரி உரிமையாளர்களிடமிருந்து முத்திரையிட்ட உறைகளில் ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்படுகின்றன.

1. கடலூர் துறைமுகம்.
2. பாண்டிச்சேரி துறைமுகம்.
3. எப்.ஏ.சி.டி. உத்தியோக மண்டலம் (ஆல்வாய்-கேரளா).
4. மாவட்ட மாற்றங்கள்.

ஒப்பந்த நிபந்தனைகளையும் ஒப்பந்தப் படிவங்களையும் படிவம் ஒன்றுக்கு (ரூபாய் ஒன்று) வீதம் சேலம் மாவட்டம் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட்டில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு துறைமுகத்திற்கும் மற்றும் எப்.ஏ.சி.டி., போக்குவரத்து மாவட்ட மற்றும் போக்குவரத்து ஆகியவற்றிற்குத் தனித்தனி ஒப்பந்தப் படிவத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட படிவம் அல்லாத ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

ஒப்பந்ததாரர் ஒப்பந்தத்துடன் ஒவ்வொரு துறைமுகம் போக்குவரத்து மற்றும் எப்.ஏ.சி.டி., போக்குவரத்து மற்றும் மாவட்ட மாற்றம் போக்குவரத்து ஆகியவற்றிற்குத் தனித்தனியே ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) ரொக்கமாக ஒப்பந்தப் புள்ளி காப்புத் தொகையாக சேலம் மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கத்தில் செலுத்தியதற்கான செலான்களையும் இணைத்து அனுப்பவேண்டும்.

ஒப்பந்தங்கள் 31—7—1972-ம் தேதி பகல் 12-00 மணி வரை செயலாளர், சேலம் மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட், சேலம் 9-ல் ஒப்படைக்க வேண்டியது. 31—7—1972-ம் தேதி பகல் 12 மணிக்குப் பின் வரும் ஒப்பந்தங்கள் கண்டிப்பாய் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

மேற்படி ஒப்பந்தங்கள் 31—7—1972-ம் தேதி பிற்பகல் 4 மணிக்கு தென் சேலம் மாவட்ட வளர்ச்சி அலுவலர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் அதிகாரம் பெற்றவராலோ சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

எல். பத்மநாப அய்யர்,
செயலாளர், சேலம் மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட், சேலம்-9.

(த. 13)

## அரசு மாவட்டத் தலைமை மருத்துவ மனை தூத்துக்குடி-3

திருநெல்வேலி மாவட்டம்.

1—8—1972 முதல் 30—11—1972 வரை இம்மருத்துவமனைக்குத் தேவையான மருந்துகள் விநியோகம் செய்ய விலைவாசி விவரங்கள் கேட்கப்படுகிறது.

விலைவாசி விவரங்கள் இவ்வலுவலகத்தில் 31—7—1972 தேதி பகல் 12-00 மணிக்கு வந்து சேரவேண்டும்.

இம்மருத்துவமனைக்குத் தேவையான மருந்துப்பட்டியல் அதைச் சமர்ப்பிப்பதற்கான நிபந்தனைகளுடன், கண்காணிப்பாளர், அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவமனை, தூத்துக்குடி அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

கண்காணிப்பாளர்,
அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவமனை, தூத்துக்குடி-3.

(த. 16)

## இராணிப்பேட்டை நகராட்சி

கீழ்க்கண்ட வேலையைச் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 1972 ஜூலை மாதம் 27-ம் தேதி வியாழக்கிழமை மாலை 4·00 மணிவரை ஆணையர் அவர்களால் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்த ஷெட்யூல் விவரங்களையும், நிபந்தனைகளையும் நேரிலோ, தபாலிலோ ரூ. 10.35 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் விவரம். | மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| ஆர். ஆர் ரோடில் போலீஸ் நிலையத்திற கருகில் 5 கடைகள் கட்டுதல். | 32,000 | 805 |

கே. மாரிமுத்து, எம்.ஏ.,
ஆணையர்.

(த. 9)

## வனத் துறை

கன்யாகுமரி மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட கூப்புகளிலிருந்து அவைகளுக்கெதிரே குறிப்பிட்டுள்ள கனமீட்டர் தடிகளை ஏற்றி நாகர்கோவில் அல்லது பேட்டை விற்பனை மண்டியில் சேர்பிக்க அரசுக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் 24—7—1972-ஆம் நாள் மதியம் 12.00 மணி வரை பாளையங்கோட்டையிலுள்ள திருநெல்வேலி தென் கோட்ட மாவட்ட வன அலுவலரால் கோரப்படுகின்றன. இதன் பேரில் விவரங்களுக்கு திருநெல்வேலி தென் கோட்ட மாவட்ட வன அலுவலருக்கு விண்ணப்பிக்கவும்.

| கூப்பு எண். | உத்தேச கனமீட்டர். |
|---|---|
| மைலார் 63 | 425 |
| மைலார் 64 | 610 |
| மைலார் 65 | 320 |
| மைலார் 66 | 985 |
| மைலார் 67 | 680 |
| மைலார் 68 | 415 |
| பாலமோர் மெண்மரக்கூப்பு 8 | 485 |

சி. என். சுந்தரம்,
மாவட்ட வன அலுவலர், திருநெல்வேலி தென் பிரிவு, பாளையங்கோட்டை.

(த. 8)

## விழுப்புரம் நகராட்சி

கீழ்க்கண்ட வேலைகளுக்கான முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 25—7—1972 அன்று பிற்பகல் 4.00 மணி வரையில் நகராட்சி ஆணையர் அவர்களால் நகராட்சி அலுவலகத்தில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளை அன்று மாலை 4-30 மணி அளவில் வந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். தேவையான ஒப்பந்தப்புள்ளி அட்டவணைகளை நகராட்சிக் கருவூலத்தில் ஒவ்வொரு வேலைக்கும் ரூ. 2 வீதம் செலுத்தி நகராட்சிப் பொறியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| எண். | வேலையின் பெயர். | மதிப்பீட்டுத் தொகை. | பொறுப்புத் தொகை. |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| 1 | ஷண்முகம் தெரு, கோவிந்த ராஜப்பெருமாள் தெரு, சேர்மன் ராஜமாணிக்கப்பத்தர் தெரு—தார் ரோடு வேலை. | 11,800 | 590 |
| 2 | சிதம்பர ஐயர் தெரு, சுப்பராயர் பிள்ளை தெரு, விஸ்வலிங்க ஆச்சாரி தெரு—தார் ரோடு வேலை. | 12,500 | 625 |

பெ. இ. பத்மநாபமேனன்,
ஆணையர்.

(த. 14)

## சேலம் நகராட்சி

சேலம் மாநகரின் பல வட்டங்களில் அமைப்பதற்கான கீழ்க்கண்ட விளக்குகளை சப்ளை செய்ய முத்திரையிட்ட முன்னீடுகள் ஆணையரின் நேர்முகத் துணைவர் அவர்களால் 28—7—1972-ம் தேதி மாலை 3 மணிக்குள் பெற்றுக்கொள்ளப்படும். மற்ற விவரங்களுக்கு நகராட்சிப் பொறியருக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ள வேண்டியது.

1. 2 அடி இரட்டைக் குழல் விளக்குகள்.
2. 2 அடி மூன்று குழல் விளக்குகள்.
3. 4 அடி ஒற்றைக் குழல் விளக்குகள்.
4. 4 அடி இரட்டைக் குழல் விளக்குகள்.
5. 80 வாட்ஸ் மெர்க்குரி விளக்குகள்.
6. 125 வாட்ஸ் மெர்க்குரி விளக்குகள்.
7. 250 வாட்ஸ் மெர்க்குரி விளக்குகள்.
8. 400 வாட்ஸ் மெர்க்குரி விளக்குகள்.
9. போகஸ் விளக்குகள்.

பி. ஹமிதலி, பி.ஏ., பி.எல்.,
ஆணையர்.

(த.4)

## ஏலம்

### வனத்துறை
### தமிழக அரசினர் மரக் கிடங்கு
### பொள்ளாச்சி

சுமார் 500 கன மீட்டர் முதல் 1,000 கன மீட்டர்வரை (சாட்டி, தேக்கு, கரிமருது, தடசு, பில்லமருது மற்றும் பல ஜாதி) மரங்கள் ஆகியவைகளை 19—7—1972-ம் தேதி தமிழ்நாடு அரசு ஆளுநர் அவர்கள் சார்பாக தென் கோவை மாவட்ட அலுவலர் அவர்களால் அல்லது அவரது உத்தரவு பெற்றவர்களால் பகிரங்கமாய் ஏலம் விடப்படும். ஏலம் காலை 9 மணி முதல் தொடர்ச்சியாக நடைபெறும்.

மற்ற விவரங்கட்குப் பொள்ளாச்சியிலுள்ள தமிழ்நாடு அரசு மரக் கிடங்கின் வனச் சரக அலுவலருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

மாவட்ட வன அலுவலர்.

(த. 7)

## ஒப்பந்தப் புள்ளி

### உதகமண்டலம் நகராட்சி

1972-ம் வருடம் ஜூலை மாதம் 26-ம் தேதி மாலை 3-30 மணிக்குள் மழைமானி ( Rain guage ) விநியோகம் செய்வதற்குரிய ஒப்பந்தப் புள்ளிகள் உதகை நகராட்சிப் பொறியாளரால் வாங்கப்படும். ஒப்பந்தப் புள்ளிக்குரிய பத்திரங்களும் நிபந்தனைகளும் 25—7—1972-ம் தேதி மாலை 4-00 மணிக்குள் ஒவ்வொரு பத்திரத்திற்கும் ரூ. 4·12 நகராட்சிக்கருவூலத்தில்செலுத்திஅன்றுமாலைக்குள் ஒப்பந்தப்பத்திரங்களை நகராட்சிப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆணையர்,
உதகமண்டலம் நகராட்சி.

(த. 18)

## ஒப்பந்தப் புள்ளி

### கிங் நிலையம்

ஒப்பந்த அறிவிப்பு ஒப்புதல் கொள்ளும் தேதியிலிருந்தோ அல்லது ஒப்பந்த அறிவிப்பு ஒப்புதல் அதிகாரியால் ஒவ்வொரு இனத்திலும் நிர்ணயிக்கப்படும் வேறு தேதியிலிருந்தோ 1973-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய பொடித்த ஓட்ஸ் (Crushed Oats) லூசிரைன் (Lucerine) வைக்கோல் ( Paddy straw ) கோதுமைத் தவிடு (Wheat bran) எருமைக் கன்றுகள் ( Buffalo Calves ) முதலியன முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் தமிழ்நாடு ஆளுநர் உத்தரவின்படியும் அவர்களுக்குப் பதிலாகவும் இயக்குநர், கிங் நிலையம், கிண்டி, அவர்களால் 1973 ஜூலை மாதம் 27-ம் தேதி மாலை 3 மணிவரையில் பெற்றுக் கொள்ளப்படும். சுமார் இரண்டு வயது அடைந்ததாகவும் நல்ல ஆரோக்கிய முடையதாகவும் சேலம் அல்லது கோவை மாவட்டத்தைச் சேர்ந்ததாகவும் கால்நடை உதவி மருத்துவரால் அத்தாட்சி பெற்றதாகவும் உடைய பெண் எருமைக் கன்றுகள் அம்மை குத்தும் மருந்து தயாரிக்கத் தேவைப்படுகின்றன. அவற்றின் விலை விவரங்கள் கிண்டியிலுள்ள கிங் நிலையத்திற்குச் சரக்கு ரயில் மூலம் கொண்டுவரும் போக்குவரத்துச் செலவும் அடங்கியதாகவும் இருக்கவேண்டும்.

அரசாங்கக் கருவூலத்திலோ அல்லது வங்கியிலோ ரூபாய் 5 (ரூபாய் ஐந்து மட்டும்) XXIV. P.H. (e) Code No. (24AA9) Miscellaneous Bacteriological Laboratories-King Institute, Guindy, Madras-32 என்ற தலைப்பில் பத்தொன்பது காசு செலுத்தியும் " XII-A. Sales tax (1) [b] Taxes under Tamil Nadu Government Sales tax act [1] G.S.T. Code No. என்ற தலைப்பில் செலுத்தியும் அவற்றுக்கான கருவூலம் அல்லது வங்கி ரசீதை இயக்குநர் அலுவலகத்தில் கொடுத்து அதற்கான நமூனா விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். எக்காரணத்தைக் கொண்டும், மேற்படி கட்டிய பணம் திருப்பித் தரமாட்டாது.

டாக்டர் சி. ஞானதேசிகன், எம்.டி.,
இயக்குநர்.

(த. 19)

## ஏல விற்பனை

### அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை-20.

பெட்ரோலினால் இயக்கப்படும் செவர்லெட் ஆம்புலன்ஸ் வண்டி ஒன்று, 1941 மாடல் வீல்பேஸ் 125½, பதிவு எண் எம்.டி.யூ. 1384, " தற்போதுள்ள நிலையில் கண்டபடி " அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் 26—7—1972 தேதி மாலை 3 மணிக்குப் பகிரங்கமாக ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் மேலே குறிப்பிட்டுள்ள இடத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். ஏல நிபந்தனைகளை நேரிலோ அல்லது விண்ணப்பத்துடன் சுயமுகவரியுடன் கூடிய அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட சதா உறைகளின் மூலமாகவோ அதே அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

முதல்வர்.

(த. 25)

## ஒப்பந்தப் புள்ளி

### சேலம் நகராட்சி

சேலம் நகரில் சில பகுதிகளில் அமைப்பதற்காக 125 வாட்ஸ் மெர்க்குரி விளக்குகளும், 2 அடி இரட்டைக் குழல் விளக்குகளும், 4 அடி இரட்டைக் குழல் விளக்குகளும் சப்ளை செய்வதற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் ஆணையரின் நேர்முகத் துணைவர் அவர்களால் 27—7—1972-ம் தேதி மாலை 3 மணிக்குள் பெற்றுக் கொள்ளப்படும். மற்ற விவரங்களுக்குப் பொறியருக்கு விண்ணப்பிக்கவும்.

ஆணையர்.
சேலம் நகராட்சி.

(த. 3)

## ஏல விளம்பரம்

### தேனி-அல்லி நகரம் நகராட்சி
(மதுரை மாவட்டம்).

தேனி—அல்லிநகரம் நகராட்சிக்குச் சொந்தமான தேனி, கிழக்குச் சந்தை சரகத்திலுள்ள 32 ஸ்டால்களை 1—9—1972-ம் தேதி முதல் 31—8—1973-ம் தேதி முடிய 1 வருட காலத்திற்கு உபயோகித்துக் கொள்ள தேனி—அல்லிநகரம் நகராட்சி தனித்தனி அதிகாரி அவர்களால் நகராட்சி மன்ற அலுவலகத்தில் 27—7—1972-ம் தேதி வியாழக்கிழமை காலை 11-00 மணிக்குப் பகிரங்கமாக ஏலம் விடப்படும். ஏல நிபந்தனைகள் மற்றுமுள்ள இதர விஷயங்களை அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

கா. முகம்மது இப்ராஹிம், பி.ஏ.,
தனி அலுவலர்.

(த. 17)

## ஏல விளம்பரம்

இக்கோட்டத்தைச் சார்ந்த கீழ்க்கண்ட உபயோகப்படுத்தக் கூடிய ஆனால் பழமையான இயந்திர உதிரி உறுப்புகள் (ஸ்பேர் பார்ட்டுகள்) மேட்டூர் பொதுப்பணித் துறை மெயின் ஸ்டோரில் நிருவாகப் பொறியாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் 5—8—1972-ம் தேதி சனிக்கிழமை அன்று பகல் 11-00 மணிக்கு அரசினர் விதிமுறைகளின்படி பகிரங்க ஏலம் விடப்படும்.

(1) லாரி உதிரி உறுப்புகள்—189 இனங்கள்.
(2) டம்பர், ஜீப் உதிரி உறுப்புகள்—71 இனங்கள்.
(3) ரோட்ரோலர் புல்டோசர்—129 இனங்கள்.
(4) லோகோ, பார்க்கர் மிக்சர் மற்றும் பம்ப் உதிரி உறுப்புகள்—53 இனங்கள்.

மேற்குறிப்பிட்டுள்ள பொருட்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

ஏல சம்பந்தமான விவரங்களை ஸ்டேன்லி உபகோட்ட உதவிப் பொறியாளர், அல்லது அணைப் பிரிவு இளம் பொறியாளர் அவர்களிடமிருந்து அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

பி. ஸ்ரீபாதராவ்,
நிருவாகப் பொறியாளர், பொ.ப.து.
மேட்டூர் கோட்டம், மேட்டூர் அணை.

(த. 5)

## ஒப்பந்தப் புள்ளி

### உணவுப் பொருள் வழங்கும் துறை
### மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டத்தில் தாலுகா விநியோக அதிகாரிகளிடமும், மற்றும் திண்டுக்கல் உசிலம்பட்டி, உத்தமபாளையம், மதுரை பழங்காநத்தம் அரசினர் கிட்டங்கியிலுள்ள கீழ்க்கண்ட விவரப்படி நல்ல நிலையில் உபயோகப்படுத்தக்கூடிய காலி சாக்குகளும் (Sound and Serviceable gunnies) உபயோகப்படுத்தக்கூடிய ஒட்டுப் போட்ட காலிக் சாக்குகளும் (Serviceable gunnies with patches) பழைய சாக்குகளும் ( unserviceable gunnies ) 100 கிலோ, 75 கிலோ கொள்ளளவு உள்ளதுமான மொத்தம் 33,510 காலி சாக்குகளை விற்பனை செய்ய முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் மதுரை மாவட்ட வருவாய் அதிகாரி அவர்களால் கோரப்படுகிறது. ஒப்பந்தங்கள் பெறப்படுவதற்கான கடைசித் தேதி 17—7—1972. முழு விவரங்கள் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

| நல்ல நிலை சாக்குகள். | | ஒட்டுப்போட்ட உபயோகப் படக்கூடிய சாக்குகள். | | பழைய சாக்குகள். | | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|
| 100கி. | 75கி. | 100கி. | 75கி. | 100கி. | 75கி. | |
| 366 | .. | .. | 7,191 | 16 | 25,937 | 33,510 |

கே. கோவிந்தன்,
மாவட்ட வருவாய் அலுவலர்.

(த. 6)

## இட மாற்றம்

### மின்சார வாரியம்

மேட்டூர் மின் அமைப்பு
மேட்டூர் அணை

ராசிபுரம் வருவாய்ப் பிரிவு இரண்டு துணைத் தலைமைக் கணக்காயர் அலுவலகம் இதுவரை கதவு எண் 45-எ, திருவேங்கட விலாஸ், பள்ளிக் கூட வீதி, ராசிபுரத்தில் இயங்கி வந்தது. இந்த அலுவலகம் மின் நுகர்வோர் சௌகரியத்தை முன்னிட்டு 16—6—1972-ம் தேதியிலிருந்து நாமக்கல் தாலுக்கா, சேந்தமங்கலத்தில் கதவு எண் 129, ஜங்களாபுரம் என்ற கட்டடத்தில் இயங்கி வருகிறது என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

(த.34)

## ஒப்பந்தப் புள்ளி

### மீன் துறை

1972–73 ஆம் ஆண்டில் (ஒப்பந்தக்ம் செய்யப்படும் தேதியிலிருந்து 31—3—1973 வரையில்) சென்னை இராயபுரத்தில் உள்ள அரசு மா. சிங்காரவேலர் நிலையத்தி (மா. சிங்காரவேலர் விசைப் படகுகட்டும் தளம், சென்னை-13)லுள்ள பல்வகையான மாக்கட்டைகளை அறுப்பதற் கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள், சென்னை மண்டல மீன் துறை துணை இயக்குநரால் 20—7—1972 காலை 11 மணி வரையிலும் வரவேற் கப்படுகின்றன.

மேற்படி ஒப்பந்தம் பற்றிய மற்ற விவரங்களை மேற்கூறிய துணை இயக்குநருக்கு விண்ணப்பித்துத் தபால் மூலமாகவும், நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தி. மா. ஆறுமுகம்,
மீன்துறை துணை இயக்குநர் (மண்டலம்),
சென்னை.

(த.40)

## ஒப்பந்தப் புள்ளி

### மன்னார்குடி நகராட்சி

கீழே கண்ட நகராட்சி வேலைகளுக்காக 27—7—1972-ம் தேதி மாலை 4-00 மணிவரை கீழ்க் கையொப்பமிட்டவரால் மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்படும். இதர விவரங்களை நேரிலோ, தபாலிலோ கோரிப் பெறலாம்.

| வேலையின் விவரம். | மொத்த மதிப்பீட்டுத் தொகை. | கட்டுத் தொகை. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| நகராட்சி புதிய பெருந்து நிலையக் கட்டட வேலைகள், செப்டிக் டாங்க் வேலைகள், ரோடு வேலைகள், குடி தண்ணீர்த் தேக்கத் தொட்டி, அலுவலக முன்புறம் காம்பவுண்டு சுவர் கட்டும் வேலை (11 வேலைகள்) | 54,180 | ஒவ்வொரு வேலைக் கும் மதிப்பீட்டுத் தொகையில் 5 சத விகிதம். |

கோ. முருகன், பி.ஏ.,
ஆணையர்.

(த-41).)

## ஒப்பந்தப் புள்ளி

### பொள்ளாச்சி நகராட்சி

நகரமன்ற டிரேக்டர் எம்.டி.சி. 9248-க்கும் ட்ரெயிலர் எம்.டி.இ. 2362-க்கும் பழுது பார்க்கும் வேலைகள் செய்ய,மூடி முத்திரையிடப் பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நாளது 28-7-1972-ம் தேதி மாலை 4-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும்.

கட்டுத் தொகை ரூ. 85.

ஆணையர்.

(த.42)

## ஒப்பந்தப் புள்ளி

### பொள்ளாச்சி நகராட்சி

மூன்று குதிரை வேகமுள்ள மின் மோட்டார், பம்பு செட்டு முதலியன விநியோகம் செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நாளது 28—7—1972 மாலை 4-00 மணி அளவில் ஆணையர் அவர் களால் பெற்றுக்கொள்ளப்படும். முழு விவரம் அடங்கிய ஒப்பந்தப் புள்ளிப் பாரங்கள் விண்ணப்பங்களின் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

கட்டுத்தொகை ரூ. 100.

ஆணையர்.

(த.32)

## ஒப்பந்தப் புள்ளி

### உடுமலைப்பேட்டை நகராட்சி

இந்நகராட்சியின் எம்.டி.இ. 1928 பெட்போர்டு லாரி வாகனத்திற்குத் தகுதி சான்றிதழ் பெறத் தேவையான வேலைகள் செய்யவும் இந்நக ராட்சியின் மாடுகளுக்குத் தேவையான தீவனப் பொருள் வைக்கோல் விநியோகம் செய்யவும் ஜூலை மாதம் 29-ம் தேதி மாலை 4-00 மணிவரை மூடி முத்திரையிடப்பட்ட கட்டுத் தொகையுடன் கூடிய ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக்கொள்ளப்படும். அன்று மாலை 4-15-க்கு அதுபோது வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் திறக்கப்படும்.

(1) லாரி ரிப்பேர் வேலை செய்ய கட்டுத் தொகை ரூ. 300.

(2) மாட்டுத் தீவனப் பொருள் வைக்கோல் சப்ளை செய்ய கட்டுத் தொகை ரூ. 150.

இதர விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

சொ. ரத்தினகிரி,
ஆணையர்.

(த.48)

## ஒப்பந்தப் புள்ளி

கோயம்புத்தூர் மார்க்கெட் கமிட்டி அலுவலகம், திருப்பூர்-4.
(தொலை பேசி எண் : 141).

இக் கமிட்டிக்குத் தேவையான 40" 28" அளவும், 80 கிலோ கிராம் கொள்ளளவு உடையதும் ஒரு கிலோ எடையுள்ளதுமான 5,000 புதிய டி.டபிள்யூ. சாக்குப் பைகள் சப்ளை செய்வதற்காக முத்திரை இட்ட ஒப்பந்தங்கள் 3—8—1972-ம் தேதி பிற்பகல் 4 மணி வரை வரவேற்கப் படுகின்றன. நேரிலோ அல்லது மணியார்டர் மூலமாகவோ ரூ. 2 (ரூபாய் இரண்டு மட்டும்) செலுத்தி, ஷெட்யூல்களுடன் கூடிய பாரங்களை இவ் வலுவலகத்தில் எல்லா அலுவலக நேரங்களிலும் 2—8—1972-ம் தேதி வரை பெற்றுக்கொள்ளலாம்.

ஆர்டர் கொடுத்த ஒரு வார காலத்திற்குள் சாக்குகள் அனைத்தையும் சப்ளை செய்ய வேண்டும். வந்த ஒப்பந்தங்கள் யாவும் 3—8—1972-ம் தேதி மாலை 4-30 மணிக்கு இவ் வலுவலகத்தில் பகிரங்கமாகத் திறக்கப் படும். அச்சமயம் ஒப்பந்தம் கொடுத்தவர்களில் நேரில் வர விரும்பு பவர்கள் வரலாம்.

காரணமின்றியே குறைந்த தொகையுள்ள ஒப்பந்தங்களைத் தள்ளுபடி செய்யவும் இக்கமிட்டிக்கு அதிகாரம் உள்ளது.

செயலர் (பொறுப்பு).

(த.47)

## ஏல விற்பனை

### காவல் துறை

கீழே குறிப்பிட்டுள்ள மதுரை வடக்கு மாவட்ட காவல் துறையைச் சேர்ந்த போலீஸ் மோட்டார் சைக்கிள் மதுரையிலிருக்கும் மதுரை வடக்கு மாவட்ட ஆயுதப்படை காவல் துறை மைதானத்தில் 26—7—72-ம் தேதி காலை 11 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். இது சம்பந்தமான மற்ற விவரங்களையும் இந்த வாகனத்தை நேரில் பார்வையிடுவது குறித்தும் ஆயுதப்படை ஆய்வாளரிடமிருந்து தெரிந்துகொள்ளவும்.

போலீஸ் மோட்டார் சைக்கிள் எம்.டி.எ. 2418 பெட்ரோல் என்பீல்டு-1966 மாடல் சோலோ—3.5 குதிரை சக்தி—சக்கர அடிப்படை—54 அங்குலம்.

ஜே. வாசுதேவபட்,
காவல் துறைக் கண்காணிப்பாளர்,
மதுரை வடக்கு, (இருப்பு) மதுரை.

(த.24)

## கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்,
பொறியியல் பணித்துறை, திருச்சி வட்டம்,
த.பெ. 55, திருச்சிராப்பள்ளி-1.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்காக முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் மேற்பார்வைப் பொறியாளர், பொதுப் பணித்துறை, திருச்சிராப்பள்ளி வட்டம், த.பெ. 55, திருச்சிராப்பள்ளி அவர்களால் திருச்சியிலுள்ள அவர்களது அலுவலகத்தில் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1 வேலையின் பெயர் .. .. | திருச்சி மாவட்டம்—ஆலங்குடி வட்டம், ஆலங்குடியில் 16 படுக்கைகள் கொண்ட பகுதியுடன் ஒரு மருத்துவ விடுதி கட்டுதல். |
| 2 ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம். | 27—7—1972 மாலை 3.00 மணி. |
| 3 பிணைப் பொறுப்புத் தொகை .. | ரூ. 3,200 (ரூபாய் மூவாயிரத்து இருநூறு மட்டும்). |
| 4 ஒப்பந்த முறை .. .. | மொத்தத் தொகை. |
| 5 முடிக்க வேண்டிய காலம் .. | ஒன்பது மாதங்கள். |
| 6 ஒப்பந்தப் பத்திரத்தின் விலை .. | ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்). |
| 7 விற்பனை வரி .. .. .. | ரூ. 0.88 (எண்பத்தெட்டு காசு மட்டும்). |
| 8 ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி. | 7—7—1972. |
| 9 விரும்பும் ஒப்பந்ததாரர்களின் முன்பாக ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம். | 27—7—1972 மாலை 3.30 மணி. |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் :

**XXXVII-Public works—State Revenue Miscellaneous** மற்றும் **XII Sales tax (b) Receipts under the State Sales Tax Act General Sales Tax** என்ற தலைப்புக்களின் கீழ் ஒரே சலானில் செலுத்தலாம். இந்த சலான் மேற்கண்ட வேலையை ஒப்பந்தப் பத்திரங்கள் கோரும் விண்ணப்பத்துடன் தவறுமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்பார்வைப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலேயே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நா. முத்துகிருஷ்ணன்,
திருச்சி வட்ட கண்காணிப்புப் பொறியர்.

(த.27)

## தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை சென்னை-23.

மாநில தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனைக்கு 1—8—1972 முதற்கொண்டோ அல்லது நிர்ணயிக்கப்படும் தேதி முதல் 31—3—1973 வரை எட்டு மாத காலம் எலும்பில்லாத ஆட்டுக்கறி சப்ளை செய்வதற்கான அரக்கு முத்திரை இட்ட ஒப்பந்தங்கள் கண்காணிப்பாளர், மாநில தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனை, சென்னை-23, அவர்களால் 24—7—1972-ம் மதியம் 12 மணியளவில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்த நிபந்தனைகளின் நகல்கள், ஒப்பந்தப் பாரங்கள் ஆகியவைகளை சென்னை மாநில தொழிலாளர் மருத்துவமனையில் பெற்றுக் கொள்ளலாம். அதற்கான கட்டணம் ரூ. 5. இத்தொகையை சென்னை ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவிலோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின் எந்த கிளையிலோ அல்லது எந்த அரசாங்கத்தின் கருவூலத்திலோ தமிழ்நாடு அரசின் கணக்கில்

**XXIII—Medical K. Miscellaneous—Employees State Insurance Scheme—2. Other receipts** என்ற தலைப்பிலும் மற்றும் விற்பனை வரியும் அதில் சர்சார்ஜும் 0.20 காசு **"XII Sales Tax—Receipts under the State Sales Tax Act General Sales-tax"** என்ற தலைப்பிலும் செலுத்த வேண்டும்.

கண்காணிப்பாளர்,
மாநில தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனை,
சென்னை-23.

(த.15)

## பொதுப்பணித் துறை

முத்திரையிடப்பட்ட ஒப்பந்த அறிவிப்புகள் தமிழ்நாடு மாநில ஆளுநர் சார்பில் தமிழ்நாடு பொதுப்பணித்துறை தஞ்சாவூர் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் தஞ்சாவூரிலிருக்கும் அவரது அலுவலகத்தில் 28—7—1972 மாலை 3.00 மணிவரையில் பெற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1 வேலையின் பெயர் .. .. | கும்பகோணம் அரசினர் மகளிர் கலைகல்லூரியில் மேற்பகுதியின் மேல், ரசாயன உயிரியல் பயிற்சிக் கூடங்களுக்கு முதன் மாடிக் கட்டடம் கட்டுதல். |
| 2 ஒப்பந்த தொகை .. .. | மொத்தத் தொகை. |
| 3 பிணைப்பணம் (செலுத்திச் சீட்டு மூலம் பெற்றுக் கொள்ளப்படும்). .. | ரூபாய் 2,650. |
| 4 ஒப்பந்தப் பத்திரங்களின் விலை .. | ரூ. 30 (ரூபாய் முப்பது மட்டும்) அரசினர் கருவூலத்தில் பொதுப் பணித்துறை — செலுத்துத் தொகை III—மற்றைய செலுத்துத் தொகை எனும் தலைப்பில்— செயற்பொறியாளர் கட்டடக் கோட்டம், திருவாரூர் அவர்களின் பெயரில் செலுத்தப்பட வேண்டும். |
| 5 விற்பனை வரி .. .. .. | ரூ. 1.05 (ரூபாய் ஒன்றும் காசு ஐந்து மட்டும்) அரசினர் கருவூலத்தில் " **XII** விற்பனைவரி (பி) பற்றுச்சீட்டு மாநில விற்பனை வரிச்சட்டத்தின்கீழ் பொது விற்பனை எனும் தலைப்பில் செலுத்துதல் வேண்டும். |
| 6 கால அளவு .. .. .. | எட்டு மாதங்கள் (8). |
| 7 ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள். .. | 10—7—1972. |

ஏ. சேஷாத்ரி,
மேற்பார்வைப் பொறியாளர் (பொறுப்பு).

(த.29)

## மாயூரம் நகராட்சி

மாயூரம் நகராட்சி குடிநீர் திட்டத்தின் கீழ் கூறைநாடு கணபதி நகர் காலனிக்கு குடிநீர் பிரதான விஸ்தரிப்பு திட்டதிற்குத் தேவையான ( P. V. C.) பிரதான குழாய் போட்டு மேற்படி வேலையை செய்து முடிப்பதற்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி 27—7—1972-ம் மாலை 4.00 மணிவரை மாயூரம் நகராட்சி ஆணையர் அவர்களால் பெற்றுக் கொள்ளப்படும். அவைகள் அன்றைய தினமே மாலை 4.30 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரங்களுக்கு ரூ. 1.04 நகராட்சிக் கருவூலத்தில் செலுத்தி ஒப்பந்தப் புள்ளி நிபந்தனைகளை பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| ஒப்பந்தப் புள்ளி வைப்புத் தொகை .. .. | 2½ சதவீதம். |
| ஒப்பந்தப் புள்ளி கூடுதல் வைப்புத் தொகை .. | 2½ சதவிகிதம். |
| மதிப்பீட்டுத் தொகை .. .. .. .. | ரூ. 10,000. |

ஆணையர் பொறுப்பு.

(த.12)

## கரூர் நகராட்சி

நகராட்சியால் சப்ளை செய்யப்படும் " பார்கோ " லாரி சேசிங் கேபின் கட்டவும், இலாகா மூலம் சப்ளை செய்யப்படும் 1,000 காலன் கொள்ளளவுள்ள டாங்கை பைப் கனெக்ஷன் போட்டு பிட்டிங் செய்து கொடுக்கவும் ஆணையர் அவர்களால் 26—7—1972 மாலை 4 மணிவரை முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் பெற்றுக் கொள்ளப்படும். டேங்பிட்டிங் செய்வதற்கான முழு விவரங்களுக்கும் ஒப்பந்த கண்டிஷனுக்கும் பொறியருக்கு விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

பி. குமாரசாமி,
ஆணையர்,

(த.11)





# கதர் கிராமத் தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி





கதர்- கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனைவெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்





## கதர் கிராமத் தொழில் துறை

2. சர் தேசிகாச்சாரி சாலை
சென்னை-4

சந்தர்...

## ஒப்பந்தப் புள்ளி

### பெரியகுளம் நகராட்சி

கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரப்படி குழாய் சாமான்கள் வழங்குவதற்காக கீழே கையொப்பமிட்டவரால் 31—7—72-ம் தேதி மாலை 4 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வழங்குவதற்கான பொருட்களின் விவரம். | அடக்கவிலை மதிப்பீடு. | முன் வைப்புத் தொகை. |
|---|---|---|
| | ரூபாய். | ரூபாய். |
| குழாய் சம்பந்தப்பட்ட பொருட்கள். | 4,700 | 120 |

மேலும் தேவையான விவரங்களை நகராட்சிப் பொறியாளர், பெரியகுளம் அவர்களிடமிருந்து விண்ணப்பம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜே. சுருளிராஜ், எம்.ஏ.,
எல்.எல். பி., பி.டி.,
நகராட்சி ஆணையர்.

(த. 57)

## மறு ஒப்பந்தப் புள்ளி

### அரக்கோணம் நகராட்சி

இந் நகராட்சி உபயோகத்திற்குத் தேவையான கீழ்க்கண்ட விவரப்படி மருந்து தெளிப்பான்கள் (Sprayers) சப்ளை செய்ய மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அடியிற் கையொப்பமிடப்பட்டவரால் 27—7—1972 மாலை 4 மணி வரையில் அரக்கோணம் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு, அன்றைய தினமே 4-15 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

விவரம்.

| Articles required. | Quantity required. | Earnest Money Deposit. |
|---|---|---|
| 12·5 litress capacity Hand compression sprayers with necessary accessaries (Brass or Metal Tank) | 4 Nos. | Rs. 100 |

க. ரா. குட்டியப்பன்,
ஆணையர்.

(த. 60)

## ஒப்பந்தப் புள்ளி

### அரசு போக்குவரத்துத் துறை

### அண்ணா சாலை, சென்னை-2

தமிழ்நாடு அரசு போக்குவரத்து இலாகாவின் சார்பில், இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து இலாகா, சென்னை-2 அவர்களால் இலாகாவைச் சேர்ந்த விரைவுப் பேருந்துகளின் பின்புறத்திலும், உட்புறத்திலும், 1—10—1972 முதல் மூன்றாண்டுக் காலத்திற்கு விளம்பரங்கள் செய்யும் பூரண உரிமையைப் பெற அரசுக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளி அண்ணா சாலை, சென்னை-2ல் உள்ள இயக்குநர் அவர்கள் அலுவலகத்தில் 31—7—1972 அன்று மாலை 2-30 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தத்திற்கான நிபந்தனைப் பத்திரங்கள் அண்ணா சாலை, சென்னை-2-ல் உள்ள இயக்குநரின் அலுவலகத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

எச். எம். சிங்,
இயக்குநர்.

(த. 63)

## ஒப்பந்தப் புள்ளி

### போடிநாயக்கனூர் நகராட்சி

தாரிசபடியாத ரோடுகள் இரண்டு ரூ. 87,000 மதிப்பீட்டில் வேலைகள் செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் ஆணையர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் 1972-ம் வருடம் ஜூலை மாதம் 25-ம் தேதி மாலை 4 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அவைகள் அன்று மாலை 4-30 மணிக்குத் திறக்கப்படும். இதர விவரங்களை அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

பி. பகவதிமுத்து, பி.ஏ.,
ஆணையர்.

(த. 58)

## ஏல விளம்பரம்

### ஈரோடு நகராட்சி

1-8-1972 முதல் 31-3-1973 முடிய உள்ள காலத்திற்கு ஆர். கே. வெங்கிடசாமி வீதியில் உள்ள பழைய பேருந்து நிலையத்தில் உள்ள சிற்றுண்டி கட்டடம், பிரயாணிகள் தங்குவதற்குக் கட்டப்பட்ட கட்டடம், டிக்கெட் கொடுக்கப்பட்ட அறைகள், பேருந்துகள் நிற்கப்பட்ட கட்டடங்கள் ஆகியவற்றைக் இடந்கு உபயோகத்திற்கு உபயோகிக்கும் உரிமையை ஈரோடு நகராட்சி ஆணையர் அவர்களாலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 28-7-1972-ம் தேதி காலை 10-30 மணிக்கு ஈரோடு நகர் மன்றக் கட்டடத்தில் பலரும் அறிய பொது ஏலத்தில் விடப்படும். கட்ட வேண்டிய கட்டுத் தொகை ரூ. 300. 1972–73-ம் ஆண்டின் பொது ஏல நிபந்தனைகள் அனைத்தும் இதற்குப் பொருந்தும். கூடுதல் விவரங்களுக்கு அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது கடித மூலமோ தெரிந்து கொள்ளலாம்.

ச. சிதம்பரம்,
ஆணையர்.

(த. 59)

## ஒப்பந்தப் புள்ளி

### செங்கற்பட்டு நகராட்சி

கீழ்க்கண்ட பொருள்களை வழங்க மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 26—7—1972-ம் தேதி மாலை 3-00 மணி வரை கோரப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் மாலை 3-15 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். முழு விவரங்கள் நகராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் விண்ணப்பித்து பெறலாம்.

(1) ரப்பர் படுக்கைகளும், தலையணைகளும்.
(2) குடி தண்ணீர் விநியோக சாமான்கள்.
(3) சீலிங் பேன்கள்.

ஆணையர்.

(த. 56)

## ஒப்பந்தப் புள்ளி

### போடிநாயக்கனூர் நகராட்சி

கீழே குறிக்கப்பட்டிருக்கும் வேலைகளுக்குத் தனித்தனியாக ஒவ்வொரு வேலைக்கும் முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 25—7—1972 தேதி மாலை 4 மணிவரை ஆணையர் அவர்களால் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் நகராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டு அன்று மாலை 4.30 மணி அளவில் ஒப்பந்தப் புள்ளிகள் திறக்கப்படும். இதர விவரங்களுக்கு இவ்வலுவலகத்திற்கு எழுதி தெரிந்து கொள்ளலாம்.

1. ரோடு பராமரிப்பு வேலை, கட்டட வேலைகள், பேருந்து நிலையத்தில் கூடுதல், மின் விளக்கு அமைத்தல்—மொத்தம் ஆறு வேலைகள் —மதிப்பீடு ரூ. 18,450.
2. குடிநீர் விநியோகத்திற்கு ஜி.ஐ. பைப்புகள் மற்றும் முக்கிய பாகங்கள் சப்ளை செய்தல்.

பி. பகவதிமுத்து,
ஆணையர்.

(த. 52)

## ஒப்பந்தப் புள்ளி

### மின்சார வாரியம்

எண். 2/72.

40 வகையான புத்தகங்களையும் பாரங்களையும் பிரிண்ட் செய்து சப்ளை செய்வதற்கு இதன் அடியில் ஒப்பமிட்டுள்ளவரால், மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் செய்தித் தாளில் விளம்பரம் செய்த பதினைந்தாவது நாள் மாலை 4 மணிவரை வரவேற்கப்படுகிறது.

ஒப்பந்தங்கள் அடங்கிய ஒவ்வொரு பிரதிக்கும் ஐந்து ரூபாய் வீதம் ரொக்கமாகவோ பண அஞ்சல் மூலமாகவோ சீப் அக்கவுண்டண்ட், எக்ஸ்பென்டிசர், திருநெல்வேலி மின் அமைப்பு, திருநெல்வேலி-3 அவர்களுக்கு அனுப்பியும் ஸ்பெசிபிக்கேஷன் எண்ணைக் குறிப்பிட்டும், ஒப்பந்தப் பாரப் பிரதிகளையும் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகை, எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. பண அஞ்சல்கள் முடிவு தேதிக்கு ஐந்து தினங்களுக்கு முன்புவரை தான் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் பாரங்கள் சாதாரண அஞ்சலில் தான் மனுதாரர்களுக்கு அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் ஏற்படும் தவறுகளுக்கு மின்வாரியம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது. ஒப்பந்தப் பாரங்களுக்கு விண்ணப்பிக்கையில் ஸ்பெசிபிக்கேஷன் எண் ஒப்பந்த விலை செலுத்தியதற்கான ரசீது முதலியவற்றைத் தவறாது அனுப்ப வேண்டும். மேற்படி ஒப்பந்தப் பாரங்கள் பிறருக்கு மாற்றிக் கொள்ளத் தக்கதல்ல.

ஒப்பந்தங்கள் பரிசீலிக்கப்படுகையில் நேரில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். ஒப்பந்தப் பாரங்கள் 15—7—1972 லிருந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். இதன் மூலம் கீழே ஒப்பமிட்டுள்ளவரை குறைந்த விலை ஒப்பந்தத்தையோ அல்லது வேறு ஒப்பந்தத்தையோ அனுமதிக்கத்தான் வேண்டுமென்று கட்டுப்படுத்தாது என்பதையும் அறிவிக்கப்படுகிறது.

மேற்பார்வை மின் பொறியர்,
திருநெல்வேலி மின்திட்டம்,
திருநெல்வேலி-3.

(த.61)

## வீட்டு வசதி வாரியம்

கீழ்க்கண்ட வேலைக்காக, உறையின்மீது வேலையின் பெயரும், ஒப்பந்ததாரரின் பெயருங்குறிப்பிடப்பட்ட மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழே கையொப்பமிட்டவருக்கு 19—7—1972 மாலே 3.00 மணிக்கு மேற்படாதவாறு வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலே 3.05 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலேயில் திறக்கப்படும்.

| வரிசை எண்ணும் வேலேயின் பெயரும். | சுமார் மதிப்பு. | கட்டுத் தொகை. | ஒப்பந்தப் பத்திரங்கள் விலே. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1 வியாசர்பாடி வடசென்னே புறநகர் திட்டத்தில் 34/68-ன் படி எம்.ஐ.ஜி. ஃப்ளாட்கள் மூன்று அறை கொண்ட இரண்டு அடுக்கு வீடுகள் ஒரு பிளாக் கட்டுதல்— | | | |
| 1 பிளாக் I .. .. .. .. .. .. .. .. .. | 74,008 | 1,125 | 10 விற்பனேவரி. |
| 2 பிளாக் IV .. .. .. .. .. .. .. .. .. | 74,800 | 1,125 | ஷை |
| 3 பிளாக் V .. .. .. .. .. .. .. .. .. | 74,800 | 1,125 | ஷை |
| 4 பிளாக் VI .. .. .. .. .. .. .. .. .. | 74,800 | 1,125 | ஷை |
| 5 பிளாக் VII .. .. .. .. .. .. .. .. .. | 74,800 | 1,125 | ஷை |
| 6 பிளாக் VIII .. .. .. .. .. .. .. .. .. | 74,800 | 1,125 | ஷை |
| 7 பிளாக் IX .. .. .. .. .. .. .. .. .. | 74,800 | 1,125 | ஷை |
| 8 பிளாக் X .. .. .. .. .. .. .. .. .. | 74,800 | 1,125 | ஷை |
| 9 பிளாக் XI .. .. .. .. .. .. .. .. .. | 74,800 | 1,125 | ஷை |
| 10 வியாசர்பாடி அருகில் வடசென்னே புறநகர் திட்டத்திற்காக கழிவுப் பொருள் பம்பிங் நிலேயம் கட்டுதல் ( ME 8/1542/71). | 1,07,350 | 1,620 | 15+விற்பனே வரி |

ஒப்பந்தப் பத்திரங்கள் வரை படங்கள் மற்றும் இதர விவரங்கள் கீழே கையொப்பமிட்டவரின் அலுவலகத்தில் 5—7—1972 அன்று அல்லது அதற்குப் பிறகு எல்லா வேலே நாட்களிலும் காலே 11.00 மணி முதல் மாலே 2.00 மணிவரை சலானில் குறிப்பிட்டபடி தொகையைச் செலுத்திப் பெறலாம். கீழே கையொப்பமிட்டவருக்கு எந்த அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளேயும் எக்காரணமும் கூறாமல் ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ உரிமை உண்டு.

நிருவாகப் பொறியாளர் (கிழக்கு).

(த-30)

## தொழில்நுட்பக் கல்வி இயக்கம் (கட்டுமானப் பிரிவு) கிண்டி சென்னே-25

வேலேயின் பெயர்—1. அடையாறு, சென்னே-20-ல் திரைப்படத் தொழில்நுட்ப நிறுவனத்திற்குத் திரைப்படம் எடுக்கும் அரங்கு கட்டுதல்.

2. அடையாறு, சென்னே-20-ல் திரைப்படத் தொழில் நுட்ப நிறுவனத்திற்குப் புதிய படிப்புகளுக்குக் கட்டடம் கட்டுதல்.

பார்வை—இந்த அலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். சி. டபள்யூ 3252/டி1/72 தேதி 25-5-1972.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் மேற்கண்ட வேலேகளுக்காக மேற்கண்ட அலுவலகத்தில், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னே-25 அவர்களால் தொழில் நுட்பக் கல்விக் கோட்டங்களில் வேலேகளே எடுப்பதற்காகப் பதிவு செய்து கொண்டுள்ள 2 மற்றும் அதற்கு மேற்பட்ட பொருத்தமான பிரிவு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 24-7-1972 மாலே 3 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலே 3-30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலேயில், மேற்கண்ட அலுவலகத்தில் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னே-25 அவர்களால் திறக்கப்படும்.

| | வகை எண் 1. | வகை எண். 2. |
|---|---|---|
| ஒப்பந்த வடிவம் .. .. .. | மொத்தத் தொகை. | மொத்தத் தொகை. |
| கட்டுத் தொகை .. .. .. | 9000+ | 6000+ |
| ஒப்பந்தப்பத்திரங்கள் விலே வரைபடங்களுடன். | ரூ. 20·00 விற்பனே வரி 3½ சதவிகிதம். | ரூ. 20·00 விற்பனே வரி 3½ சதவிகிதம், |
| வேலே முடிக்கவேண்டிய காலம். | 8 மாதங்கள் | 6 மாதங்கள் |

மேற்கண்ட அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் நாள்—10-7-1972 முதல் 22-7-1972 வரை.

ஒப்பந்தப்பத்திரங்கள் விலே (எந்தச் சூழ்நிலேயிலும் திருப்பித் தரப் பட மாட்டாது) கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியிலோ P. W. Remittances III. Other Remittancesஎன்ற தலைப்பில் நிருவாகப் பொறியாளர், தொழில் நுட்பக் கல்விக் கோட்டம், சென்னே-25 அவர்தம் கணக்கில் செலுத்தப்படவேண்டும். விற்பனே வரி தனிச் சலானில், கருவூலம் அல்லது இந்திய ரிசர்வ் வங்கியில் "XII. Sales tax- (B) Receipts under state sales-tax Act General Sales tax என்ற தலைப்பில் செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் சலானேக் கொடுத்த பிறகு மட்டுமே வழங்கப்படும்.

சென்னே, தொழில் நுட்பக் கல்வி இயக்கம் கட்டுமானப்பிரிவு வேலேகளுக்கு உரிய வகுப்பில் பதிவு செய்யாத ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

கட்டுத் தொகை சலான் வடிவிலோ செட்யூல்டு வங்கியின் டெபாசிட் அட்கால் ரிசிப்ட்ஸ் வடிவிலோ ஏற்றுக் கொள்ளப்படும். அரசு உறுதிப் பத்திரங்கள், மாநில மின்வாரியப் பத்திரங்கள் மற்றும் தேசியச் சேமிப்புப் பத்திரங்கள் மார்க்கெட் மதிப்பில் அல்லது அசல் மதிப்பில் எது குறைவாக இருக்கிறதோ அதில் 5 சதவிகிதம் குறைத்துக் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப்படும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கியினுடைய பேங் காரண்டியும் கட்டுத் தொகையாக ஏற்றுக் கொள்ளப் படும். வேறு வகையில் செலுத்தப்படும் தொகை ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் உரிய பிரிவுகளில் பெரிய கட்டடங்கள் கட்டும் வேலேகளில் குறைந்தது 3 ஆண்டு அனுபவம் பெற்றிருக்கவேண்டும். தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், சென்னே-25 அவர்களுக்கு, எந்த அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளேயும் எக் காரணமும் கூறாமல் நிராகரிக்க உரிமையுண்டு.

குறிப்பு: பார்வையில் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை, இந்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விலக்குகிறது.

தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னே.

(த. 38).

## தஞ்சாவூர் நகராட்சி

கீழ்க்கண்ட பொருட்களை வழங்குவதற்காக நகராட்சி ஆணையர், தஞ்சாவூர்அவர்களால் அவர்தம் அலுவலகத்தில் கீழ்க்கண்ட தேதிகளில் மாலை 4.00 மணிவரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகள் அதே நாள் மாலை 4.15 மணிக்குத் திறக்கப்படும்.

| | கொடுக்கும் தேதி. | கட்டுத் தொகை. ரூ. |
|---|---|---|
| 1. தேக்கு மரப் பலகைகள் 24″ 18″, 18″ 12″ மற்றும் 12″ 9″ அளவுகள் டி.டபிள்யூ ப்ளாக்ஸ். | 31—7—1972 | 250 |
| 2. சிங்கிள் பேஸ் மின்சார மீட்டர்கள் 5 மற்றும் 40 | 2—8—1972 | 500 |
| 3, பி.வி.சி. அன்டர் கிரவுண்டு கேபில்ஸ், பைமெட்டாலிக்ஸ், கிளாம்ஸ், எச்.டி. பிளாக் காம்பவுண்டு, | 5—8—1972 | 250 |

விளக்கமான ஒப்பந்த அறிவிப்பு, ஒப்பந்த வடிவம் நகராட்சி மின் பொறியாளர், தஞ்சாவூர் அவர்களிடம் மணி ஆர்டர் மூலம் ரூ. 2.00 செலுத்திப் (திருப்பித்தரப்பட மாட்டாது) பெறலாம். அஞ்சல் ஆணைகள் மற்றும் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**எ. சேவுக பாண்டியன்,**
ஆணையர், தஞ்சாவூர்.

(த-54)

## நெடுஞ்சாலை கிராமப் பணித் துறை
## தேசிய நெடுஞ்சாலை வட்டம், சென்னை—1.

தமிழ்நாடு மாநில ஆளுநருக்காக அன்னார் சார்பில் தேசீய நெடுஞ்சாலை வட்டம் மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் அரசுக்கு முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 9—8—1972 மாலை 3 மணிவரை கீழ்க்கண்ட வேலைக்குப பெற்றுக் கொள்ளப்படும்.

| வரிசை எண்ணும், வேலையின் பெயரும். | கட்டுத் தொகை. |
|---|---|
| 1 தேசீய நெடுஞ்சாலை 45 மைல் 62/1-ல் கட்டப்பட விருக்கும் மேம் பாலத்திற்கு அணுகுச் சாலைகள் அமைத்தல். | ரூ. 9,175 |

ஒப்பந்தப் புள்ளிகள் 9—8—1972 அன்றே மாலை 3-15 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளர் அவர்களால் திறக்கப்படும். ஒப்பந்தத் திற்கான நமூனக்கள், வரைபடங்கள், முதலியவற்றைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசீய நெடுஞ்சாலைக் கோட்டம், 2, கிண்டி, சென்னை- 25 அலுவலகத்தில் 2—8—1972 முதல் 8—8—1972 முடிய விற்பனை வரியுட்பட ரூ. 51·75 கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். இப்பணம் எக்காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேற்குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையைக் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசீய நெடுஞ்சாலைக் கோட்டம், 2, கிண்டி அதிகார எல்லைக்குட்பட்ட எந்த அரசாங்கக் கருவூலத்திலேனும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பின் கீழ் கோட்டப் பொறியாளர் (நெ.) தேசீய நெடுஞ்சாலைக் கோட்டம், 2, கிண்டி பெயரில் செலுத்திச் செல்லுச் சீட்டையாவது அல்லது வங்கி பொறுப்புறுதியாவது ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

குறிப்பிட்ட முன் வைப்புத் தொகையின்றி வரும் ஒப்பந்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.

**தி. மு. ஆ. ஜெயராமன்,**
மேற்பார்வைப் பொறியாளர் (நெ.)

(த-99)

## தாழ்த்தப்பட்டோர் நலத்துறை

1972–73-ஆம் ஆண்டிற்குத் தாழ்த்தப்பட்டோர் நலப் பள்ளிகள் மற்றும் ஆதிவாசிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கும் 10, 11ஆகிய வகுப்புகளுக்கு இலவசமாக சிறப்புப் பாடப்புத்தகங்கள் கீழ்க்கண்டவாறு வழங்க சென்னை நகரம், செங்கற்பட்டில் காஞ்சீபுரம், தென்னாற்காட்டில் கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் மாவட்ட நல அலுவலர்களிடம் வழங்க மூடி முத்திரையிட்ட கொட்டேசன்கள் வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு வகைப் புத்தகத்திற்கும். தனித்தனியான கொட்டேசன்கள் தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு 25—7—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும். கொட்டேசன்கள் மாவட்டத் தலைமை இடத்தில் கலெக்டரேட்டன் இணைந்த மாவட்ட நல அலுவலர்களின் அலுவலகத்தில் வழங்க எடுத்துச் செல்லும் கட்டணம், எல்லா வரிகள் மற்றும் கட்டணமாயிருந்தால் அனைத்தும் சேர்ந்திருக்க வேண்டும். உறையில் பாடப்புத்தகங்களின் விவரமும் எதற்காகக் கொட்டேசன் கொடுக்கப் படுகிறது என்ற விவரமும் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு எந்த ஒரு கொட்டேசனையும் எக்காரணமும் கூறாமல் ஏற்க அல்லது நிராகரிக்க உரிமை உண்டு.

சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் தலைமையிடங்களில் மாவட்ட நல அலுவலர்களின் அலுவலகங்களில் புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும். திருப்திகரமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாவட்ட நல அலுலர்கள் தொகையைச் செலுத்துவார்கள்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய புத்தகங்களின் எண்ணிக்கை பின்னர் தெரியப்படுத்தப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர் புத்தகங்கள் வழங்குவதற்காக ஸ்டாம்பு ஒட்டப்பட்ட காகிதத்தில் ஒப்பந்தப் பத்திரம் எழுதித்தர வேண்டும். மேலும் ஒப்பந்தத்தில் ஒரு விதி முறையாக ஒழுங்காகப் புத்தகங்கள் வழங்கும் பொருட்டு மொத்தமாக ஒப்பந்த மதிப்பில் 10 சதவிகிதம் பொறுப்புத் தொகை கட்ட வேண்டும்.

வழங்கவேண்டிய புத்தகங்கள் (தமிழ்)

வகுப்பு 10 மற்றும் வகுப்பு 11

1. அல்ஜீப்ரா மற்றும் ஜியோமிட்ரி.
2. பௌதிகம்.
3. இரசாயனம்.
4. வரலாறு.
5. உயிரியல்.

**தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர்.**

(த.35)

## பொள்ளாச்சி நகராட்சி

ஒரு 5 குதிரை வேகமுள்ள டீசல் பம்பு, மற்றும் அதற்குண்டான இதர சாமான்கள் விநியோகம் செய்ய மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 28—7—1972-ம் தேதி மாலை 4.00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

கட்டுத் தொகை—ரூ. 180·

**ஆணையர்.**

(த-51)

## வேலை வாய்ப்பு

## காவல் துறை

1. இவ்வலுவலகத்தில் புலனுவுப் பிரிவு உதவியாளர்களாக நியமிக்கப்பட விருப்பமுள்ள, கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றுள்ள நபர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகிறது.

2. இரண்டு வெளிப்படை போட்டியிலும், ஒரு தாழ்த்தப்பட்டோர்/பழங்குடி மக்களும், ஒரு பின் தங்கிய வகுப்பினரும் தேவை.

(அ) இம்மாநிலத்தின் ஒரு பல்கலைக் கழகத்தில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளாயிருக்க வேண்டும்.

(ஆ) மேற்படி பதவிக்கு நியமனம் செய்யப்படுபவர்கள் 1—7—1972ல் 25 வயதுக்குட்பட்டவர்களாயிருக்க வேண்டும்.

(இ) தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து ஆகிய பரிட்சைகளில் குறைந்த பட்சம் கீழ்ப்படிவத்தில் தேர்ச்சி பெற்றவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும்.

(ஈ) மேற்படி பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர்கள் அவர்கட்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகாண் பருவம் முடிவதற்குள், அவர்கள் ஏற்கெனவே தட்டெழுத்து மேல் படிவத்தில் தேர்ச்சி பெற்றிருக்காவிடின் அப்பரிட்சையில் தேர்ச்சி பெற வேண்டும்.

3. தகுதியுள்ள நபர்கட்கு ஆங்கிலம், பொது அறிவு, மற்றும் கட்டுரை ஆகியவைகளில் தேர்வு நடத்தப்படும்.

4. மனுக்கள் 20—7—1972க்குள் இவ்வலுவலகத்தில் வந்து சேர வேண்டும். குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் வரும் மனுக்கள் கவனிக்கப் படமாட்டாது.

**காவல்துறை ஆணையர்.**

(த-33)

## குடிசைப் பகுதி மாற்று வாரியம்

கடித எண் கு.ப.மா.வா. /2791/கோ. 3/வ. 3/72, நாள் 4—7—1972.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும், புளியந்தோப்பு சாலையிலுள்ள பார்வதி கக்கன் காலனி குடியிருப்புப் பகுதியில் பல அடுக்குக் கட்டடங்கள் (கான்கிரீட் குத்துக் கழிகளுக்கு மேல்) கட்டுவதற்கான அரக்கு முத்திரையிட்ட ஒப்பந்தங்களை அடியில் கையொப்பமிட்டுள்ளவர் 19—7—1972 அன்று பிற்பகல் 3-00 மணிக்கு அப்பாற்படாமல் வரவேற்கிறார். ஒப்பந்தம் வைத்தனுப்பும் உறையின் மீது வேலையின் பெயரையும், ஒப்பந்ததாரர்களின் பெயரையும் உரிய முறையில் குறிப்பிட வேண்டும்.

| வரிசை எண். | பிரிவு எண். | வேலையின் பெயர். | வேலையின் தோராய மதிப்பு. ரூ. | ஒப்பந்த வடிவமும் முன்பண வைப்புத் தொகையும். | ஒப்பந்தப் பத்திரங்களின் விலை (திருப்பித் தரப்பட மாட்டாது). |
|---|---|---|---|---|---|
| 1 | III | 40 குடியிருப்புகள் கொண்ட எ 4 எ 5, எ 6 கட்டடங்கள் (கேப்பிங் பீமிற்கு மேல்). | 5,70,000 | எல்.எஸ். / ரூ. 8,550 | ரூ. 15 மற்றும் விற்பனை வரி (ஒவ்வொரு பிரிவுக்கும்). |
| 2 | IV | 30 குடியிருப்புகள் கொண்ட பி 3, பி 4 & பி 5, & 20 குடியிருப்புகள் கொண்ட சி 1 கட்டடங்கள் (கேப்பிங் பீமிற்கு மேல்). | 5,30,000 | எல்.எஸ். / ரூ. 7,950 | ஷை |
| 3 | V | 30 குடியிருப்புகள் கொண்ட பி 6, பி 7, பி 8 & 20 குடியிருப்புகள் கொண்ட சி 2 கட்டடங்கள் (கேப்பிங் பீமிற்கு மேல்). | 5,30,000 | எல்.எஸ். / ரூ. 7,950 | ஷை |
| 4 | VI | 40 குடியிருப்புகள் கொண்ட எ 7, எ 8 & 30 குடியிருப்புகள் கொண்ட பி 9 கட்டடங்கள் (கேப்பிங் பீமிற்கு மேல்). | 5,25,000 | எல்.எஸ். / ரூ. 7,925 | ஷை |

ஒப்பந்தப் பத்திரங்களையும், மற்றும் வரை படங்களையும் 10—7—1972 முதல் 18—7—1972 வரை காலை 10-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை எல்லா அலுவலக நாட்களிலும், நிருவாகப் பொறியாளர், குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம் எண் 3, தாண்டவராயச் சத்திரம், சென்னை-10 அவர்களிடமிருந்து ஒப்பந்தப் பத்திரங்களுக்குப் பணம் அத்துடன் விற்பனை கட்டிய சலானை வழங்கிய பிறகே பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்களுக்கு கானரா பேங்க், கெல்லீஸ் பிரிவில் பெர்சனல் டிபாசிட் அக்கவுண்ட் (பி.டி.எ.ஸ்.) நிர்வாகப் பொறியாளர் குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம்-3 என்ற தலைப்பிலும், விற்பனை வரியை XII. விற்பனை வரி, மாநில விற்பனை வரிச் சட்டம், பொது விற்பனை வரிச் சட்டம் என்ற தலைப்பிலும் கட்ட வேண்டும்.

எக்காரணமும் காட்டாமல், எல்லா ஒப்பந்தங்களையோ அல்லது எந்த ஒரு ஒப்பந்தத்தையோ நிராகரிக்க அல்லது எற்றுக்கொள்ள நிருவாகப் பொறியாளருக்கு உரிமையுண்டு.

நிருவாகப் பொறியாளர்,
குடிசைப் பகுதி மாற்று வாரியம், கோட்டம் எண் 3.

(த. 89)

## வேலை வாய்ப்பு

### அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம்

தமிழ்நாடு பொது சபார்டினேட் சர்வீஸில் பால்பண்ணை வளர்ச்சித் துறையில் பால்பண்ணை உதவியாளர்கள் 10 நியமனம் செய்வதற்காக மாலை 5-00 மணிவரை மனுக்கள் வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்—ரூ. 325—15—550.

வயது—1—7—1972 அன்று 30 வயதிற்குக் குறைவாக.

தகுதி—

(1) குறைந்த பட்சத் பொதுக் கல்வித் தகுதி, மற்றும்

(2) இந்திய அரசு, பால்பண்ணைக் கல்விக் கழகத்தால் வழங்கப்பட்ட பால்பண்ணை ( **Dairying** ) யில் டிப்ளமா.

பின் தங்கிய வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட மலைச்சாதி வகுப்பினர், ஆகியோர் விசயத்திலும் குறைந்த பட்சப் பொதுக் கல்வித் தகுதிக்கு மேலான பொதுக் கல்வித் தகுதி பெற்று இருப்பவர்கள் விசயத்திலும் வயது வரம்பு கிடையாது. அதிக பட்ச வயது வரம்பு மற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட மலைச் சாதியினர் விசயத்தில் 5 ஆண்டுகள் தளர்த்தப்படும். தங்கக் கட்டுப்பாடு சட்டத்தினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்களின் மகன்கள், மணமாகாத மகள்கள், 1—1—1963-ல் அல்லது அதற்குப் பிறகு முழு நேர அடிப் படையில் அண்டர் ஆபீசர் இன்ஸ்ட்ரக்டர் அல்லது சார்ஜண்ட் மேஜர் இன்ஸ்ட்ரக்டராகப் பணி புரிந்த முன்னால் தேசீய மாணவர் படையைச் சேர்ந்தவராக இருந்தால் வயது விசயத்தில் சலுகை உண்டு. இராணுவம் கடற்படை, விமானப்படை ஆகியவற்றிலிருந்து கலைக்கப்பட்டதால் வந்தவர்கள், 1—7—1972 அன்று 40 வயதிற்கு குறைவானவர்கள் 1—1—1964-ல் அல்லது அதற்குப் பிறகு கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் விசயத்திலும் இலங்கை, பர்மா நாடுகளிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டவர்கள் விசயத்திலும் வயது வரம்பு உட்பட தகுதிகள் தளர்த்தப்படும்.

மனுவடிவங்களையும், பிற விவரங்களையும், "செயலாலர்" தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம், சென்னை-2 என்ற முகவரிக்குப் பதவிப் பெயரைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதி 23 செ.மீ. நீளமுள்ள தன் முகவரி எழுதிய (0·30 காசு நூல் அஞ்சல் வில்லை 0·5 காசு அகதிகள் வில்லை) ஒட்டப்பட்டு நூல் அஞ்சல் என்று குறிப்பிடப்பட்ட உறையை உடன் வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

(த-82)

உறுதிக்கும்
உழைப்பிற்கும்

CHETTINAD BRAND

செட்டிநாடு
சிமெண்ட்
எங்கும் கிடைக்கிறது.

தயாரிப்பாளர்கள் :
செட்டிநாடு சிமெண்ட்
கார்ப்பரேஷன் லிமிடெட்
6, அரண்மனைக்காரன் தெரு, சென்னை-1
தந்தி : 'BESTCEMENT' போன் : 27256
பாக்டரி : புலியூர் (கரூர்), திருச்சி மாவட்டம்.
தந்தி : 'CEMENT' போன் : 144.

## கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்

பொறியியல் பணித்துறை, திருச்சிராப்பள்ளி வட்டம்,
தபால் பெட்டி எண். 55, திருச்சிராப்பள்ளி-1.

தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பிலும் கீழ்க்கண்ட வேலைக்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப் பணித்துறை, திருச்சிராப்பள்ளி வட்டம், திருச்சிராப்பள்ளி, அவர்களால் கீழே குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி பெற்றுக் கொள்ளப்படும்.

| | |
|---|---|
| 1 வேலையின் பெயர் .. .. | திருச்சிராப்பள்ளி வட்டம், கரூரில் அரசினர் கலைக் கல்லூரியில் தற்பொழுது உள்ள நிரந்தரக் கட்டடத்தில் மேற்குப் பிரிவின் அதாவது பின்புற பிளாக்கின் மேல் ஒரு தளம் கட்டுதல். |
| 2 ஒப்பந்தம் பெறுவதற்கான கடைசித் தேதி மற்றும் நேரம். | 9—8—1972 மாலை 3·00 மணி. |
| 3 பிணைப் பணத் தொகை .. .. | ரூ. 6,900 (ரூபாய் ஆறுயிரத்துத் தொள்ளாயிரம் மட்டும்). |
| 4 ஒப்பந்த முறை .. .. .. | மொத்தத் தொகை. |
| 5 முடிக்க வேண்டிய காலம் .. | 10 மாதங்கள் (பத்து மாதங்கள்). |
| 6 ஒப்பந்தப் பத்திரத்தின் விலை .. | ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து மட்டும்). |
| 7 விற்பனை வரி .. .. .. | ரூ. 0·88 (எண்பத்தெட்டு காசு கள் மட்டும்). |
| 8 ஒப்பந்தப் பத்திரம் விற்பனைக்குக் கிடைக்கத் தொடங்கும் தேதி. | 20—7—1972. |
| 9 விரும்பும் ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தங்கள் திறக்கப்படும் தேதி மற்றும் நேரம். | 9—8—1972 மாலை 3·30 மணி. |

ஒப்பந்தப் பத்திரங்களின் விலையையும் விற்பனை வரியையும் முறையே அரசின் கருவூலத்தில் **XXXVII Public Works—State Revenue Miscellaneous** மற்றும் **XII Sales Tax b. receipts under the State Sales Tax Act General Sales Tax** என்ற தலைப்புகளின்கீழ் ஒரே சலானில் செலுத்தி மேற்படி சலானை ஒப்பந்தப் பத்திரங்கள் மற்றும் கோரும் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மற்ற விதிகளும் விவரங்களும் விரிவான ஒப்பந்தப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கண்காணிப்புப் பொறியாளர் காரணங்கள் காட்டாமலே எந்த ஒப்பந்தத்தையும் அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் நிராகரிக்க உரிமை உண்டு.

நா. முத்துக்கிருஷ்ணன்,
திருச்சிராப்பள்ளி வட்ட கண்காணிப்புப் பொறியாளர்.

(த. 95)

## குடிநீர் வடிகால் வாரியம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்காகவும், அதன் சார்பாகவும் கீழ்க்கண்ட வேலைக்காக, மேற்பார்வைப் பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம், நிர்வாக வட்டம், தூத்துக்குடி அவர்களால் அவர்தம் அலுவலகம் எண் 34, 10-வது தெரு, தூவேய்புரம், தூத்துக்குடி-3-ல் குறிப்பிடப் பட்ட படிவத்தில் உறையின் மீது வேலையின் பெயர் குறிப்பிட்டு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 9—8—1972 அன்று அவர்தம் அலுவலகக் கடிகார நேரத்தின்படி மாலை 3·00 மணிவரை பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள் மாலை 3·30 மணிக்கு அச்சமயம் வந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

வேலையின் பெயர்.—தூத்துக்குடி தொழில் காம்ப்ளெக்ஸிற்கு நீர் வழங்கும் திட்டம், 20 எம்.ஜி.டி. நீர் வழங்கும் திட்டம்—தொடர்புடைய பி.எஸ்.எஸ். எண்ணிற்கு ஒத்த 48 அங்குலம் (1200 மில்லி மீட்டர் உள் விட்டமுள்ள சி.ஐ.எஸ்./எஸ். ' பி ' பிரிவு குழாய்கள் எப்.ஓ.ஆர். சால்ட் குவாட்டர்ஸ் சென்னைக்கு வழங்குதலும் ஒப்படைத்தலும்.)

ஒப்பந்த வடிவம்—மொத்தத் தொகை.
கட்டுத் தொகை—ரூ. 10,700.
கட்டுத் தொகை—இத்தொகை ஒப்பந்தப் புள்ளியுடன் கருவூலச் சலான் வடிவிலோ அல்லது டிமாண்டு டிராப்ட் வடிவிலோ அல்லது தேசியமாக்கப்பட்ட எந்த வங்கியினுடைய பாங்கு காரண்டியாகவோ குடிநீர் வடிகால் வாரியம் பெறும் வகையில், நிருவாகப் பொறியாளர், குடிநீர் வடிகால் வாரியம், நிருவாகக் கோட்டம் எண். 1, தூத்துக்குடி—3 அவர்கள் கணக்கில் கட்டுத் தொகையாகச் செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப் புள்ளி விற்கப்படும் காலம்— 15—6—1972 முதல் 7—8—1972வரை (மாலை 5·00 மணி வரை).
வேலை முடிக்க வேண்டிய காலம்—2 மாதங்கள்.
ஒப்பந்தப் பத்திரங்கள் விலை—ரூ. 10·35 (விற்பனை வரி உட்பட) திருப்பித்தரப்படமாட்டாது.

ஒப்பந்தப் பத்திரங்கள் கிடைக்கும் இடம்—நிருவாகப் பொறியாளர் அலுவலகம், குடிநீர் வடிகால் வாரியம், நிருவாகக் கோட்டம் எண். 1, 34,10-வது தெரு, தூவேய்புரம், தூத்துக்குடி-3-ல் விலையை நேரில் பணமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ செலுத்திய பிறகு.

வி. வரதராசன்,
மேற்பார்வைப் பொறியாளர்,
குடிநீர் வடிகால் வாரிய
நிர்வாக வட்டம்,
தூத்துக்குடி.

(த. 55)

## தமிழ்நாடு சிமெண்ட்

(டிட்கோவின் அலகு—தமிழ்நாடு அரசின் நிறுவனம்).
ஆலங்குளம் அஞ்சல், ராஜபாளையம் (வழி).

தமிழ்நாடு சிமெண்ட் ஆலையின் ரெயில்வே ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் பணிகளுக்காகத் தமிழ்நாடு அரசு/மத்திய அரசு துறைகளில் பதிவு செய்துள்ள முதல்அல்லது இரண்டாவது வகுப்பு ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 19—8—1972 மாலை 4 மணிவரை வரவேற்கப்படுகின்றன.

உத்தேச மதிப்பீட்டு செலவு—ரூ. 1·5 இலட்சம்.

ஒப்பந்த முறை—ஒப்பந்தத்தின் முழுத் தொகை.

முன்வைப்புத் தொகை—ஒப்பந்தப்புள்ளித் தொகையில் 2½ சதவீதம்.

வேலையை முடிக்க வேண்டிய கால வரையறை—5 மாதங்கள்.

ஒப்பந்தப் பத்திரங்களை 16—7—1972 முதல் 18—8—1972 வரை எல்லா அலுவலக நாட்களிலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை பொது மேலாளர், தமிழ்நாடு சிமெண்ட், ஆலங்குளம் அஞ்சல், ராஜபாளையம் (வழி) என்ற முகவரியில் ரூ. 20·70 கட்டிப் (இப்பணம் திருப்பித்தரப்பட மாட்டாது)பெற்றுக்கொள்ளலாம்.

பொது மேலாளர்,
தமிழ்நாடு சிமெண்ட்.

(த-100)

## வேளாண்மைத் துறை

தமிழ்நாடு அரசு சார்பாக, கீழ்க்கண்ட வீணான மற்றும் கேனிபலேஸ்ட் டிராக்டர்கள் மற்றும் புல்டோசர்கள் இந்த அலுவலகத்தில் எந்த நிலையில் உள்ளதோ அதே நிலையில் எடுத்துச் செல்வதற்கு மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

புல்டோசர்கள்.

D6 5 R—2927
D6 Su—4029
D6 Su—3993
T6 TBK—17914
TD 14A—30803
C 100—121159
TD 14A TDF—26946

டிராக்டர்கள்.

John Deere A.R—271371
David Brown P.D—13190
Massey Harris—30 Ks 1574
Fordson Major A.D—2455

ஒப்பந்தப் பத்திரங்கள் விலை செட் ஒன்றுக்கு ரூ. 3 விற்பனை வரி செலுத்தி இந்த அலுவலகத்தில் பெறலாம். (தொகை திருப்பித் தரப்பட மாட்டாது). ஒப்பந்தப் பத்திரம் விற்கக் கடைசி நாள் 20—7—1972. ஒப்பந்தப் பத்திரம் ஏற்கக் கடைசி நாள் 29—7—1972. விரும்பும் ஒப்பந்ததாரர்கள் தொடர்பு கொள்ளவும்.

உதவி வேளாண்மைப் பொறியாளர்,
(இன்ஸ்பெக்சன்),
நந்தனம், சென்னை-35.

(த.46)

## சேலம், தர்மபுரி மாவட்டங்களில் தமிழ்நாடு கல்வி சார்நிலை ஊழியத்தில் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பாசிரியர்கள் அலுவலர் இடங்களுக்கு நியமனங்கள்.

சேலம், தருமபுரி மாவட்ட ' ஏ ' பிரிவு அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில், சேலம் முதன்மைக் கல்வி அலுவலரின் நியமன வரம்பிற்குட்பட்ட கீழ்க்கண்ட அலுவல் இடங்களுக்கு ஆசிரியர்களை நேரிடையாகத் தேர்வு செய்து நியமனம் செய்ய வேண்டித் தகுதியுள்ள வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | எதிர்பார்க்கும் காலியிடங்களின் எண்ணிக்கை. | | | |
|---|---|---|---|---|
| | அட்டவணையில் கண்ட இனங்கள், அட்டவணையில் கண்ட பழங்குடியினர் களுக்கு ஒதுக்கப் பட்டவை. | பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப் பட்டவை. | மற்றவர் களுக்கு ஒதுக்கப் பட்டவை. | மொத்தம். |
| 1. (அ) இடைநிலை ஆசிரியர்கள் (தமிழில் போதனை செய்யக்கூடியவர்கள் 11 பேர், தெலுங்கு மொழியில் போதனை செய்யக்கூடியவர் 1<br>(ஆ) விழியிழந்தோருக்கு தமிழில் போதிப்பதில் பயிற்சி பெற்றவர் 1 .. .. .. | 2 | 4 | 7 | 13 |
| 2. முதல் நிலை உடற் பயிற்சி ஆசிரியர்கள் 4 .. .. .. .. .. .. | 1 | 1 | 2 | 4 |
| 3. (அ) அரசினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஓவிய ஆசிரியர்கள் 3 .. .. ..<br>(ஆ) ஆதாரப் பள்ளி அல்லாத அரசினர் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி களுக்கு ஓவிய ஆசிரியர்கள் 2 .. .. .. .. .. ..<br>(இ) அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளுக்கு ஓவிய ஆசிரியர்கள் 1 .. .. .. | 1 | 2 | 3 | 6 |
| 4. இரண்டாம் நிலை நெசவு ஆசிரியர்கள் 1 .. .. .. .. .. .. | .. | .. | 1 | 1 |
| 5. இரண்டாம் நிலை விவசாய ஆசிரியர்கள் 2 .. .. .. .. .. .. | 1 | .. | 1 | 2 |
| 6. இரண்டாம் நிலை தெலுங்கு மொழிப் புலவர் 1 .. .. .. .. .. .. | .. | .. | 1 | 1 |

மேற்கண்ட அலுவல் இடங்களுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தகுதிகளும், ஊதிய அளவு வீதமும்.

### 1 (அ) இடைநிலை ஆசிரியர்—(தமிழ் மற்றும் தெலுங்கு—ஆடவர், மகளிர் இருபாலருக்கும் உரியது).

தகுதிகள்.—இடைநிலை ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது முதுநிலை ஆசிரியர் ஆதாரப் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். 1970-ம் ஆண்டிலோ அதற்கு முன்னரோ இடைநிலை ஆசிரியர் பயிற்சி அல்லது முதுநிலை ஆசிரியர் ஆதாரப் பயிற்சித் தேர்வு எழுதித் தேறியவர் மட்டுமே இந்த நியமனங்களுக்கு கவனிக்கப்படுவர். வேட்பாளர்கள், உரிய அலுவல் இடங்களுக்குத் தமிழ் அல்லது தெலுங்கில் போதுமான பயிற்சி பெற்றிருக்க வேண்டும்.

ஊதிய அளவு.—ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

### (ஆ) விழியிழந்தோருக்குத் தமிழில் போதிப்பதில் பயிற்சி பெற்ற இடைநிலை ஆசிரியர் (ஆடவர், மகளிர் இருபாலருக்கும் உரியது).

தகுதிகள்.—இடைநிலை ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் அல்லது முதுநிலை ஆதார ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். இத்துடன் விழியிழந்தோருக்குப் போதிப்பதில் தகுதிச் சான்றிதழ் அல்லது ஜூனியர் டிப்ளமா பெற்றிருக்க வேண்டும். இந்த அலுவல் இடங்களுக்கும் 1970-ம் ஆண்டிலோ அதற்கு முன்னரோ இடைநிலை ஆசிரியர் பயிற்சி அல்லது முதுநிலை ஆதார ஆசிரியர் பயிற்சித் தேர்வு எழுதித் தேறியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

ஊதிய அளவு.—ரூ. 210—5—245—10—325 மற்றும் சிறப்பு ஊதியம் ரூ. 10-ம் வழக்கமான படிகளும்.

### 2. முதல் நிலை உடற் பயிற்சி ஆசிரியர்கள் (ஆடவருக்கு மட்டும் உரியது),

தகுதிகள்.—1938-ம் ஆண்டு அல்லது அதற்குப் பின்னர் மாநில அரசினரால் வழங்கப்பட்ட உயர்நிலை உடற் கல்வி ஆசிரியர் சான்றிதழ் பெற்றவராகவோ, அல்லது முன்னாள் ராணுவத்தினருக்கு மாநில அரசினரால் தனியாக வழங்கப்பட்ட உயர்நிலை உடற் கல்வி ஆசிரியர் சான்றிதழ் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

ஊதிய அளவு.—ரூ. 225—5—250—10—350 மற்றும் வழக்கமான படிகள்.

### 3. (அ) அரசினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஓவிய ஆசிரியர் (ஆடவருக்கு மட்டும் உரியது).

தகுதிகள்.—ஓவியத்தில் உயர்நிலை தொழில் நுணுக்க ஆசிரியர் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

ஊதிய அளவு—. ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

### (ஆ) ஆதாரப் பள்ளி அல்லாத அரசினர் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு ஓவிய ஆசிரியர்கள் (ஆடவருக்கு மட்டும் உரியது).

தகுதிகள்.—மாநில அரசின் தொழில் நுணுக்கத் தேர்வுத் திட்டத்தின்படி ஓவியத்தில் தொகுதிச் சான்றிதழும், ஓவியத்தில் உயர்நிலை தொழில் நுணுக்க ஆசிரியர் சான்றிதழும் பெற்றிருத்தல் வேண்டும்.

ஊதிய அளவு.—ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

### (இ) அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளுக்கு ஓவிய ஆசிரியர்கள் (ஆடவருக்கு மட்டும் உரியது).

தகுதிகள்.—பள்ளிக் கல்வி இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்டதொரு உயர்நிலைப் பள்ளியில் மூன்றும் படிவம் தேறியவராகவோ, அல்லது அரசுத் தேர்வுகளின் ஆணையரால் நடத்தப்பெறும் எட்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் தேறியவராகவோ இருக்க வேண்டும். மேலும் (1) ஓவியம், பூச்சு மற்றும் வடிவமைப்பில் உயர்நிலைத் தொகுதிச் சான்றிதழ் பெற்றவராக இருத்தல் வேண்டும் ; அல்லது (2) வடிவமைப்பிலும் அச்சடித்தலிலும் கலை ஆசிரியர் சான்று பெற்றவராக இருத்தல் வேண்டும்; அல்லது (3) ஓவியம், பூச்சு ஆகியவைகளில் சென்னை அரசு, கலை மற்றும் கைத்தொழில் பள்ளி டிப்ளமா பெற்றிருத்தல் வேண்டும். அல்லது பள்ளிக் கல்வி இயக்குநரால் சமமானதென்று ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு எந்தச் சான்றிதழாவது பெற்றவராயிருத்தல் வேண்டும். பொது மற்றும் தொழில் கல்வியில் நிர்ணயம் செய்யப்பட்ட தகுதிகளைக் காட்டிலும் அதிகத் தகுதி பெற்றுள்ளவர்களுக்கும் அல்லது கல்வித் துறையினரால் அளிக்கப்பட்ட தொழில் நுணுக்க ஆசிரியர் சான்றிதழ் பெற்றுள்ளவர்களுக்கும் அல்லது ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றுள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

ஊதிய அளவு.—ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

## 4. இரண்டாம் நிலை நெசவு ஆசிரியர்கள் (ஆடவருக்கு மட்டும் உரியது).

*தகுதிகள்.*—பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் நிர்ணயம் செய்த மதிப்பெண்களுடன் (தமிழ் 35, ஆங்கிலம் 30, கணக்கு 25, பொது விஞ்ஞானம் 25, சமூக அறிவு 25) சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியில் நடத்தப்படும் நெசவுப்பாட முறையினை முடித்துத் தேர்ச்சி பெற்றதற்கான கைத்தொழில் ஆசிரியர் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அல்லது சென்னை, அரசு நூற்பாலையின் நெசவு ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அல்லது நெசவில் கீழ்நிலை தொழில் நுணுக்க ஆசிரியர் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். (அல்லது) சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியிலோ, பள்ளிக் கல்வி இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட இதர மையங்களிலோ, தொழில் நுணுக்க ஆசிரியர் பயிற்சி முறையினைத் தேர்ச்சி பெற்று முடித்தமைக்கான சான்றிதழ் பெற்றவராயிருக்க வேண்டும்.

*ஊதிய அளவு.*—ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

## 5. இரண்டாம் நிலை விவசாய ஆசிரியர்கள் (ஆடவருக்கு மட்டும் உரியது).

*தகுதிகள்.*—பொதுக் கல்வித் தகுதியாக விவசாயப் பாடமுறையுடன் கூடிய பள்ளியிறுதித் தேர்வில் குறைந்த பட்சம் கீழ்க்கண்ட மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

| | |
|---|---|
| (1) முதல் பகுதி மொழிப் பாடம் .. .. .. .. .. .. | 40 (200-க்கு 80 மதிப் பெண்கள்). |
| (2) இரண்டாம் பகுதி, ஆங்கிலம் .. .. .. .. .. .. | 40. |
| (3) பொதுக் கணக்கு .. .. .. .. .. .. .. | ஏதாவது ஒன்றில் 35 மதிப்பெண்களும் மற்றவைகளில் 30 மதிப்பெண்களும் பெற்றிருத்தல் வேண்டும். |
| (4) பொது விஞ்ஞானம் .. .. .. .. .. .. | |
| (5) விவசாயம் (கருத்தியல்) .. .. .. .. .. .. | |
| (6) விவசாயம் (நடைமுறை) .. .. .. .. .. .. | |

மேற்கண்ட தகுதியுடன் விவசாயத்தில் தொழில் நுணுக்க ஆசிரியர் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

*ஊதிய அளவு.*—ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

## 6. இரண்டாம் நிலை தெலுங்கு மொழிப் புலவர் (ஆடவருக்கு மட்டும் உரியது).

*தகுதிகள்.*—சென்னை, மதுரை அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தெலுங்கு மொழியில் கீழ்த்திசை பயிற்றுப் பட்டம் பெற்றவராகவும் இடைநிலை அல்லது முதுநிலை ஆதார ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற்றவராகவோ அல்லது பண்டிதப் பயிற்சி முறையினை வெற்றிகரமாக முடித்ததற்கான சான்றிதழ் பெற்றவராகவோ, அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வழங்கும் கற்பித்தலுக்கான டிப்ளமா பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

*ஊதிய அளவு.*—ரூ. 210—5—245—10—325 மற்றும் வழக்கமான படிகள்.

*வயது.*—(அ) மேற்குறித்த அலுவல் இடங்களுக்கு விண்ணப்பிக்கும் வேட்பாளர்கள் 1—7—1972-ஆம் நாளன்று 30 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் கூடாது.

(ஆ) 1—7—1972-ல் 40 வயது முடிவடையாத முன்னாள் ராணுவத்தினரும் விண்ணப்பங்களை அனுப்பலாம்.

(இ) அட்டவணையில் கண்ட இனங்கள், அட்டவணையில் கண்ட பழங்குடியினர் விஷயத்தில் 1—7—1972-ல் வயது வரம்பு 35 வயது வரை சலுகை காட்டப்படும்.

விண்ணப்பங்கள் இந்த அறிவிப்பின் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் இருக்க வேண்டும் என்பதுடன், விண்ணப்பங்கள் எண் 114, செரி ரோடு, சேலம் 7-ல் உள்ள முதன்மைக் கல்வி அலுவலருக்கு 31—7—1972 ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ சேரும்படியாக அனுப்பி வைக்க வேண்டும்.

பொது, தொழில் மற்றும் தொழில் நுணுக்கச் சான்றிதழ்களின் நகல்களையும் அனுப்ப வேண்டும். அசல் சான்றிதழ்களை அனுப்பவேண்டியதில்லை. அசல் சான்றிதழ்கள், நேர்காணலின்போது காண்பிக்கப்பட வேண்டும்.

பொறுப்பு வாய்ந்த இரண்டு நபர்களிடமிருந்து 1—1—1972-க்குப் பின்னர் பெற்ற நன்னடத்தைச் சான்றிதழ்களை அசலாக விண்ணப்பத்துடன் இணைத்தனுப்ப வேண்டும்.

அரசினர் (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிக நியமனத்தின் கீழ் ஏற்கெனவே நியமனம் ஆகி, பணியில் இருப்பவர்களும், இந்த அறிவிப்பில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இருப்பின் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மூலம் விண்ணப்பிக்கலாம்.

அரசு உள்ளாட்சி மன்றம், மற்றும் தனியார் பள்ளிகளில் பணியாற்றுவோர், தங்களின் விண்ணப்பங்களை, அவர்களுக்கு வேலை கொடுக்கும் அலுவலர் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும். அவர்கள் விண்ணப்பங்களின் முன் நகலை நேரடியாக இந்த அலுவலகத்திற்குப்பணிந்தனுப்ப வேண்டும்.

ஒவ்வொரு வேட்பாளரும், அரசாங்கக் கருவூலத்தில் ரூ. 10-ஐ (பத்து ரூபாய்) "22. கல்வி—இ. பொது—பலவகை—மற்ற இனங்கள்—குறியீட்டு எண் 4132. 22 எப். இ. 03 22 எ ஜே எபி 03 6" தலைப்பில் செலுத்தி, அசல் செல்லுச் சீட்டினை விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்க வேண்டும். 24—5—1972-க்கு முன்னதாக கருவூலத்தில் மேற்சொன்ன தொகை கட்டப்பட்டிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ள இயலாது.

கீழ்க்கண்ட வகையைச் சேர்ந்த வேட்பாளர்கள் ரூ. 10-ஐச் செலுத்த வேண்டியதில்லை. (1) பல்கலைக் கழக இன்டர்மீடியட் தேர்வில் தேறிய அல்லது இத் தகுதிக்குச் சமமான ஏனைய பல்கலைக் கழகங்களின் தகுதியைப் பெற்ற அட்டவணையில் கண்ட இனங்கள், அட்டவணையில் கண்ட பழங்குடியினர், அல்லது பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள், இந்த வேட்பாளர்கள் வருவாய்த் துறையைச் சேர்ந்த துணைத் தாசில்தார் நிலைக்குக் கீழ்ப்படாமல் உள்ள தாசில்தாரிடமிருந்து, குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் என்பதற்கான சான்றிதழ் பெற்று அசல் சான்றிதழை விண்ணப்பத்துடன் அனுப்பி வைக்க வேண்டும்.

(2) முன்னாள் ராணுவத்தினர், ராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட்டமைக்கான சான்றின் நகல் அனுப்ப வேண்டும்.

எக்காரணத்தைக் கொண்டும் செலுத்தப்பட்ட தொகையைத் திரும்ப அளிக்க இயலாது.

வேட்பாளர்களுடன் நேர் காணல் நடத்திய முடிவுகளின் அடிப்படையில் சேலம் முதன்மைக் கல்வி அலுவலரால் நியமனங்களுக்கு வேட்பாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். நேர்க்காணலுக்கு அழைக்கப்படும்போது வேட்பாளர்கள் தங்கள் சொந்தச் செலவில் வரத் தயாராக இருக்க வேண்டும்.

தேர்வும், அதற்குப் பின்னர் நியமனமும் அரசுப் பணிக்கு உட்படுத்திக்கொள்ள இறுதியானது என உரிமை கொள்ள முடியாது.

அலுவலக உறுப்பினர்கள் மூலமாக, நேரடியாகவோ அல்லது நண்பர்கள், உறவினர்கள் ஆதரவாளர்கள், அலுவலர்கள் போன்றவர்கள் மூலமாகவோ, ஆதரவு தேடும் அல்லது முதன்மைக் கல்வி அலுவலரிடம் செல்வாக்குக் கொண்டுவர முயற்சி செய்யும் வேட்பாளர்கள் எந்தக் காரணத்தையும் குறிப்பிடாமலே எப்படியிருந்தாலும் தேர்வு செய்வதிலிருந்து முழுவதுமாக தகுதியற்றவர்களாக ஆக்கப்படுவார்கள்.

தகவல்கள் முழுவதுமாக இல்லாத விண்ணப்பங்களும், சான்றொப்பமிட்ட பொது தொழில் தகுதிச் சான்றிதழ்களின் நகல்கள் இல்லாமல் அனுப்பி வைக்கும் விண்ணப்பங்களும், நிர்ணயம் செய்த தேதிக்குப் பின்னர் பெறப்பட்ட விண்ணப்பங்களும், கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

போதிய தகுதிகள் இல்லாதவர்களும், அறிவிப்பில் கண்ட நிபந்தனைகளுக்குட்படாத வேட்பாளர்களும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.

இடைநிலை ஆசிரியர் அலுவலர் இடங்களுக்கு மட்டும் பெண் வேட்பாளர்களும் விண்ணப்பிக்கலாம்.

"தமிழரசு" இதழில் அறிவிப்பு வெளியான பின்னர்தான் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

உரிய இணைப்புகளுடன் கூடிய விண்ணப்பத்தை அனுப்பும்போது உறையின் மீது "........................................ ஆசிரியர் அலுவலர் பணிக்கு விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

# தமிழ்நாடு கல்விச் சார்நிலை ஊழியத்தில் இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் சிறப்பு ஆசிரியர்கள் அலுவல்களுக்கு நேரடி நியமனம் கோரும் விண்ணப்ப நமூனா.

1 விண்ணப்பிக்கும் அலுவல் இடத்தின் பெயர் ..

2 (அ) விண்ணப்பதாரரின் பெயர் .. ..

(ஆ) ஆணா, பெண்ணா (திரு, செல்வி, திருமதி என தெளிவாகக் குறிப்பிட வேண்டும்).

(இ) சொந்த மாவட்டம் .. .. ..

3 (அ) தகப்பனார்/கணவர் பெயர் .. ..

(ஆ) தகப்பனார்/கணவர் செய்யும் அலுவல் அல்லது தொழில்.

(இ) தகப்பனார்/கணவர் முழு முகவரி ..

4 (அ) பிறந்த தேதி .. .. .. ..

(ஆ) 1—7—1972-ஆம் தேதியன்று வயது ..

5 தாய் மொழி .. .. .. .. ..

6 (அ) தேசிய இனம் .. .. .. ..

(ஆ) மதம், ஜாதி மற்றும் இனம் .. ..

(இ) விண்ணப்பதாரர் அட்டவணையில் கண்ட இனங்கள்/அட்டவணையில் கண்ட பழங்குடியினர்/பிற்பட்ட வகுப்பினர் அல்லது கிறிஸ்துவ மதத்திற்கு மாறிய இனத்தைச் சார்ந்தவரா? (ஆம் எனில் குறிப்பிடுக) வருவாய்த் துறையினரிடமிருந்து பெற்ற சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் பயின்ற கல்வி நிலையங்கள்:—

| கல்வி நிலையத்தின் பெயர். | வகுப்பு அல்லது படிவம். | படித்த வருடம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |

8 (அ) மிக அதிகமாகப் பெற்ற பொதுக் கல்வித் தகுதி.

(சான்றிதழ் எண். வருடம், எஸ்.எஸ்.எல்.சி.யில் ஒவ்வொரு பகுதியிலும் பெற்ற மதிப்பெண்கள் ஆகியவைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். சான்றொப்பமிட்ட சான்றிதழ்களின் நகல்களை இணைக்க வேண்டும்.

(ஆ) தொழில் மற்றும் தொழில் நுணுக்கத் தகுதிகள் (சான்றிதழ் எண், வருடம், தேறிய வகுப்பு, அல்லது தரம் ஆகியவைகளைக் குறிப்பிட வேண்டும் .சான்றொப்பமிட்ட சான்றிதழ்களின் நகல்களை இணைக்க வேண்டும்.)

9 எஸ்.எஸ்.எல்.சி. அல்லது இதர பள்ளிப் பாட முறையில் படித்த மொழி.

10 தெரிந்த இதர மொழிகள் (பேசவும், எழுதவும் படிக்கவும் தெரியுமா என்பதைக் குறிப்பிடுக)

11 முன் அனுபவம் இருப்பின் அது பற்றிய விவரம்—

| பள்ளியின் பெயர். | வகித்த பதவி. | ஊதியம் | ஊழிய காலம். தேதி முதல் | ஊழிய காலம். தேதி வரை. | நீங்கியதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|

12 விளையாட்டு, என்.சி.சி., ஏ.சி.சி. முதலியவைகளில் வேட்பாளர்களின் பங்கு, பணிகள் பற்றிய விவரம்.

13 சரியான முழு அஞ்சல் முகவரி .. ..

(அ) நிரந்தர முகவரி .. .. ..

(ஆ) தற்போதைய முகவரி .. ..

14 ரூ. 10 செலுத்திய கருவூலத்தின் பெயரும் செல்லுச் சீட்டின் எண்ணும், தேதியும்.

15 நன்னடத்தைச் சான்றிதழ் அளித்துள்ள நபர்களின் பெயர்கள் :

| சான்றிதழ் அளித்த நபரின் பெயர். | முழு விலாசம். | சான்றிதழின் தேதி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |

## உறுதி மொழி.

திரு/திருமதி/செல்வி.......................ஆகிய நான், இதற்கு முன்னர் எப்போதாவது, அரசு ஊழியத்திற்குத் தகுதியில்லை என மருத்துவ அதிகாரிக் குழுவினால் ஆக்கப்படவில்லை எனவும், இந்த விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்குத் தெரிந்தவரை உண்மையானவை என்றும் உறுதி கூறுகிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

(பி.கு.—அசல் செல்லுச் சீட்டினையும், சான்றொப்பமிட்ட சான்றிதழ்களின் நகல்களையும் அசல் நடத்தைச் சான்றிதழ்களையும் இணைக்கவேண்டும்).

எம். சாம்பசிவம்,
முதன்மைக் கல்வி அலுவலர்,
சேலம்-7.

(த. 88)

## "நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் துறை"

"தேசிய நெடுஞ்சாலை வேலைகள்" (மதுரை வட்டம்).

கீழே குறிப்பிட்டுள்ள வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட ஷெட்யூல் ஒப்பந்தங்களை மேற்பார்வைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) மதுரை -2, நெ. 11, ஔவையார் தெரு, நரிமேடு, மதுரை-2 முகவரியிலுள்ள அலுவலகத்தில் 28—7—1972 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 3-30 (அலுவலகக் கடிகாரப்படி) தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவருடைய சார்பிலும் பெற்றுக்கொள்வார். இந்த ஒப்பந்தங்கள் அதே தேதி யன்று பிற்பகல் 3-35-க்குத் திறக்கப்படும்.

| எண். | வேலையின் பெயர். | முன்வைப்புத் தொகை. | இனவாரி ஒப்பந்தப் பாரங்கள். கிடைக்குமிடம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | |
| (1) | தொண்டி திருப்பாலக்குடி சாலையில் கி.மீ. 18—4 (மைல் 11—4)-ல் பாலம் ஒன்று கட்டுதல். | 3,100 | கோட்டப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, கோட்டம்-1, திருச்சிராப்பள்ளி. |
| (2) | தொண்டி திருப்பாலக்குடி சாலையில் கி.மீ. 23—4-ல் (மைல் 14—5)-ல் பாலம் ஒன்று கட்டுதல். | 9,500 | ௸ |
| (3) | தொண்டி திருப்பாலக்குடி சாலையில் கி.மீ. 20—1 (மைல் 13—1)-ல் பாலம் ஒன்று கட்டுதல். | 4,700 | ௸ |
| (4) | தேசிய நெடுஞ்சாலை 49-ல் கீழ்க்கண்ட கி.மீ. களில் உள்ள வளைவுகளை சீரமைத்து மேம்படுத்துதல். கி.மீ. 21—0 முதல் 21—4 வரை; கி.மீ. 22—0 முதல் 22—5 வரை; கி.மீ. 42—6 முதல் 43—4 வரை. | 4,300 | ௸ |
| (5) | தொண்டி-சுந்தரபாண்டியபட்டினம் சாலையில் கி.மீ. 11—0-ல் (மைல் 6—7) பாலம் ஒன்று கட்டுதல். | 9,300 | ௸ |
| (6) | தேசிய நெடுஞ்சாலை 47-ல் கி.மீ. 140 முதல் 144 வரை உள்ள (சேலம் கொசிடிச் சாலை) சாலையைப் பலப்படுத்தி மேம்படுத்துதல். | 11,200 | கோட்டப் பொறியாளர், தே.நெ., கோயம்புத்தூர். |

ஒவ்வொரு செட்டுக்கும் விற்பனை வரி உட்பட ரூ. 20.70 வீதம் தொகை செலுத்தி எழுத்து மூலம் வேண்டிக்கொள்வதன் மூலம், கோட்டப் பொறியாளர், அலுவலகம் (தே.நெ.), கோட்டம்-1, விலாசத்திலிருந்தும், கோட்டப் பொறியாளர், (தே.நெ.), கோயம்புத்தூர் அலுவலக விலாசத்தி லிருந்தும் 26—7—1972 முதல் 27—7—1972 வரையிலான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ஒப்பந்த நிபந்தனை விவர நிர்ணய பாரங்கள், ஷெட்யூல்கள், பிளான்கள் முதலியவற்றைப் பெறலாம்.

மாற்றிய வடிவமைப்புக் கொண்ட ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

மேலே குறிப்பிட்டுள்ள கட்டுத் தொகை டெபாசிட்டை மேற்கண்ட கோட்டப் பொறியாளர்கள் (தேசிய நெடுஞ்சாலை), அதிகார எல்லைக்குள் உள்ள அரசினர் கருவூலங்கள் எதிலும் "ரெவின்யூ டெபாசிட்" என்ற தலைப்பில் செலுத்தியதற்கான செலானை ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். இது தவிர 10 வருட தற்காப்பு டெபாசிட் அத்தாட்சிகளும் 12 வருட தேசியத் தற்காப்புப் அத்தாட்சிகளும், மாநில அரசு ஈட்டுப் பத்திரங்களும் தமிழ்நாடு மாநில மின்சார வாரிய பத்திரங்களும், ஷெட்யூல் பாங்குகளால் வழங்கப்படும் பாங்க் காரண்டிகளும், டிமாண்டு டிராப்டு களும், டெபாசிட் அழைப்பு ரசீதுகளும், கட்டுத் தொகைக்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

பாங்கு கியாரண்டிகளைச் சமர்ப்பிக்கும்பொழுது ரிசர்வ் பாங்கு ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். அப்படி அனுப்பப்படாத ஒப்பந்தங்கள் நிராகரிக்கப்படும்.

முன்பண வைப்புத் தொகைக்கான ரசீது இல்லாத ஒபப்ந்தங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

ப. ஜெயராமன்,
மேற்பார்வைப் பொறியாளர் (தே.நெ.), மதுரை-2.

(த. 90)

---

## வேளாண்மைத் தொழிற் கழகம்

கீழே கொடுக்கப்பட்ட பொருட்களை வழங்குவதற்கு மூடி முத்திரை யிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள், நிருவாக இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம், "அக்ரோ இல்லம்", கிண்டி, சென்னை–32 அவர்களால் 1–8–1972 மாலை 3 மணிக்குள் வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன :—

| | |
|---|---|
| 1. பென்சீன் ஹெக்ஸா குளோரைடு (Benzene Hexachloride) 10 சத வீதம் தூள் தயாரிக்கத் தேவை யான பென்சீன் ஹெக்ஸாகுளோ ரைடு (டெக்னிக்கல்) தயாரிப் பாளர்கள், ஏஜண்டுகள், விநியோகஸ்தர்கள் ஆகியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவேண்டும்.) | 1,400 மெட்ரிக் டன்கள். (1,375 டன்கள்). |
| 2. பென்சீன் ஹெக்ஸா குளோரைடு ( Benzene Hexachloride ) 10 சதவீதம் டைகுளோரோ—டைபினைல்-ட்ரைகுளோரோ-ஈதேன் (Dichloro-Diphenyl Trichloro-Ethane) 5 சதவீதம் தூள்களைத் தயாரிப்பதற்கு ( Filler ) ஆகப் பயன்படுத்தக் கூடிய சுத்தமான ஸ்டியடைட் (Pure Steatite) | 15,000 மெட்ரிக் டன்கள் (14,732·14 டன்கள்) |
| 3. உற்பத்தி செய்யப்பட்ட பென்சீன் ஹெக்ஸா குளோரைடு (Benzene Hexachloride ) 10 சதவீத டைகுளோரோ—டைபினைல்—ட்ரைகுளோரோ ஈதேன் (Dichloro-Diphenyl Trichloro-Ethane) 5 சதவீத தூள்கள் நிரப்புவதற்கு 50 கி.கி. கொள்ளக் கூடிய 91·44, 44½ செ. மீ. × 57·15 செ.மீ. (36" × 22½") அளவும், 312 கிராம் (11 அவுன்ஸ்) எடையும், 310 கிராம் (10·88 அவுன்சு) தார் (Bitumen) பூசப்பட்டதும், 60 கிராம் (2·11 அவுன்ஸ்) கிராப்டு (Kraft) பேப்பர், 150 காஜ் ( gauge ) தகுந்த தரம் வாய்ந்த பாலிஎத்திலீன் ( Polyethylene ) ஒட்டப்பட்ட ( Single Hessian ) பைகள் (Indian Standards Institution) -ஆல் நிர்ணயிக்கப்பட்ட தரங்களுக்குச் சமமாக இருத்தல் வேண்டும்). | 3,32,000 பைகள். |

ஒப்பந்தப் புள்ளிகள் மேற்கூறிய பொருள்களில் ஏதேனும் ஒன்றிற்கோ, அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோ, அல்லது எல்லாவற்றிற்கு மாகவோ அனுப்பலாம்.

ஒப்பந்தப் படிவங்களை நிருவாக இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம், "அக்ரோ இல்லம்", கிண்டி, சென்னை–32 (தமிழ்நாடு, அவர்களிடமிருந்து நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ பெற்றுக் கொள்ளலாம்.)

(த. 91).




# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

## அறிவிப்பு

## அறிஞர் அண்ணா நகர் மேற்கு விஸ்தரிப்பு,

**வியாசர்பாடி மற்றும் திருவான்மியூர்** போன்ற சென்னை நகரச் சுற்றுப்புற இடங்களில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீடு மனைகளைப் பொதுமக்களுக்கு மொத்த விலைக்கும் மற்றும் வாடகைக் கொள்முதல் (Hire Purchase) முறையிலும் ஒதுக்குவது.

| | |
|---|---|
| கிடைக்கும் வீட்டு மனைகளின் எண்ணிக்கை. | சுமார் 1,400 மனைகள் (மொத்தமாக) |
| வீட்டு மனைகளின் பரப்பளவு. | 1 கிரவுண்டுக்கும் 2 கிரவுண்டுக்கும் இடைப்பட்டது. |
| விண்ணப்பதாரர்களின் தகுதி. | ரூ. 3,000-க்கு மேற்பட்ட மதிப்புள்ள ஓர் வீட்டு மனையை அல்லது வீட்டை உடையவராக இருக்கக் கூடாது. |
| விண்ணப்பப் படிவம் கிடைக்க இறுதித் தேதி. | 31-8-1972. |
| விண்ணப்பப் படிவம் விற்பனை. | 17-7-1972 முதல், காலை 10 மணிக்கும் மாலை 2 மணிக்கும் இடையே ரூ. 5 (அஞ்சல் மூலமாகில் ரூ. 3 அதிகப்படி செலுத்த வேண்டும்.) செலுத்தி வரவேற்புக் காரியாலயம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், 56, அண்ணா சாலை, நந்தனம், சென்னை-35 என்ற முகவரியிலிருந்து பெறலாம். |

டி. வி. வாசுதேவன், ஐ.ஏ.எஸ்.
தலைவர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்,
சென்னை-35.

## தாழ்த்தப்பட்டோர் நலத்துறை

1972–73-ம் ஆண்டிற்கு, தாழ்த்தப்பட்டோர் நலப் பள்ளிகள், மற்றும் ஆதிவாசிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கும், 1 முதல் 3 வகுப்பு வரையும், ஐந்தாம் வகுப்பிற்கும் இலவசமாக மலையாள பாடப் புத்தகங்கள் கீழ்க்கண்டவாறு வழங்க, " நாகர்கோவிலிலுள்ள கன்னியாகுமரி மாவட்ட நல அலுவலர்களிடம், 1 முதல் 5-ம் வகுப்பு வரை இலவசமாகப்பாடப்புத்தகங்கள் கீழ்க்கண்டவாறு வழங்க சென்னைப் நகர மாவட்ட நல அலுவலரிடம் மூடி முத்திரையிடப்பட்ட கொட்டேசன்கள் வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு வகைப் புத்தகத்திற்கும், தனித் தனியான கொட்டேசன்கள், தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு 25–7–1972 அன்று அல்லது. அதற்கு முன்பு வந்து சேருமாறு அனுப்ப வேண்டும். கொட்டேசன்கள் மாவட்டத் தலைமையிடத்தில் கலெக்ட்ரேட்டுடன் இணைந்த மாவட்ட நல அலுவலரின் அலுவலகத்தில் வழங்க எடுத்துச் செல்லும் கட்டணம், எல்லா வரிகள் மற்றும் கட்டணமாயிருந்தால் அனைத்தும் சேர்த்திருக்க வேண்டும். உறையில் பாடப்புத்தகங்களின் விவரமும், எதற்காகக் கொட்டேசன் கொடுக்கப்படுகிறது என்ற விவரமும், குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு எந்த ஒரு கொட்டேசனையும் எக்காரணமும் கூறாமல் ஏற்க அல்லது நிராகரிக்க உரிமை உண்டு.

சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் தலைமையிடங்களில் மாவட்ட நல அலுவலர்களின் அலுவலகங்களில் புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும். திருப்திகரமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாவட்ட நல அலுவலர்கள் தொகையைச் செலுத்துவார்கள்.

வழங்கப்பட வேண்டிய புத்தகங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படவேண்டிய கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கையுள்ள புத்தகங்கள் வழங்குவதற்காக ஸ்டாம்ப் ஒட்டப்பட்ட காகிதத்தில் ஒப்பந்தப் பத்திரம் எழுதித் தர வேண்டும். மேலும் ஒப்பந்தத்தில் ஒரு விதி முறையாக ஒழுங்காகப் புத்தகங்கள் வழங்கும் பொருட்டு மொத்தமாக ஒப்பந்த மதிப்பில் 10 சதவிகிதம் பொறுப்புத் தொகை கட்ட வேண்டும்.

| தெலுங்குப் பாடப் புத்தகங்கள். | | மலையாளப் பாடப்புத்தகங்கள். | |
|---|---|---|---|
| 1-வது வகுப்பு .. | 55 செட்ஸ். | 1-வது வகுப்பு .. | 20 செட்ஸ். |
| 2-வது வகுப்பு .. | 46 செட்ஸ். | 2-வது வகுப்பு .. | 15 செட்ஸ். |
| 3-வது வகுப்பு .. | 60 செட்ஸ். | 3-வது வகுப்பு .. | 5 செட்ஸ். |
| 4-வது வகுப்பு .. | 37 செட்ஸ். | .. | .. |
| 5-வது வகுப்பு .. | 12 செட்ஸ். | 5-வது வகுப்பு .. | 1 செட். |

**தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர்.**

(த. 101).

---

## மின்சார வாரியம்

ஸ்பெஸிபிகேஷன் (எண் SEG.BB 56 எஸ்இஜி. பிபி. 56.)

மின்சார வாரியத்தின் சார்பில் மின்சார வாரியத்தின் உத்தரவு வழிகாட்டுதலுக்கு இணங்கச் செயல்படும் பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுஸில் NDCT No 3-ல் உள்ள நீரைக் குளிர்படுத்தும் சிஸ்டத்திற்கு ரெஜிட் PVC பைப்புகள் மற்றும் நோஸெல்கள் Nozzles வழங்கி நிர்மாணம் செய்வதற்காக முழு விவரங்கள் மற்றும் விளக்கங்கள் அடங்கிய முத்திரையிட்ட ஒப்பந்தங்கள் கவரின் மேல் ஸ்பெஸிபிகேஷன் எண், ஒப்பந்தத் தேதி மற்றும் ஒப்பந்ததாரரின் பெயர் ஆகியவைகள் குறிக்கப்பட்டு 31—7—1972 மாலை 1-00 மணிக்குள் சமர்ப்பிக்கப்படுமாறு வரவேற்கிறேன்.

ஒப்பந்தப் பத்திரங்கள் வேண்டுவோர் அதற்கான ரூ. 20 (ரூபாய் இருபது மட்டும்) கீழே கையொப்பமிட்டுள்ளவர் அலுவலகத்தில் தொகையாக நேரிடையாகச் செலுத்தியோ அல்லது துணைத் தலைமை கணக்காளர் (ஜெனரேஷன்) தமிழ்நாடு மின்சார வாரியம், பேசின் பிரிட்ஜ் பவர் ஹவுஸ், சென்னை-12 அவர்களுக்கு ஸ்பெஸிபிகேஷன் எண்ணைத் தெரிவித்து மணியார்டர் செய்தோ பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தப் பத்திரங்கள் சாதாரண தபாலில் சர்டிபிகெட் ஆப் போஸ்டிங்கில் தான் அனுப்பப்படவேண்டும். ஒப்பந்தப் பத்திரங்கள் வழியில் தவறிப் போவதற்கோ அல்லது பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதற்கோ அல்லது விநியோகிக்காமல் இருப்பதற்கோ மின்சார வாரியம் பொறுப்பல்ல.

ஒப்பந்தப் பத்திரங்கள் மாற்றத் தகுந்ததல்ல. எந்தவிதக் காரணமும் காட்டாமல் ஏதாவதொன்று அல்லது எல்லா ஒப்பந்தங்களையும் தள்ளுபடி செய்யக் கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமையுண்டு.

காப்புத் தொகையாக ரூ. 2,000 (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)த்தைக் கீழே கையொப்பமிட்டுள்ளவர் அலுவலகத்தில் ஒப்பந்ததாரர்கள் நேரிடையாகப் பணமாகக் கட்டவேண்டும். அதற்கான பண ரசீதைப் (Cash Receipt ) பெற்று ஒப்பந்தத்தோடு இணைத்து அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட நேரம், குறிப்பிட்ட ஒப்பந்த நாளில் சரியான துறையினரின் படிவத்தில் சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தங்களும் பண ரசீது இணைத்து அனுப்பப்படாத ஒப்பந்தங்களும் தள்ளுபடி செய்யப்படும். ஒப்பந்தங்களும் 31—7—1972 அன்று மாலை 4-00 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

**மேற்பார்வைப் பொறியாளர்,**
பேசின்பிரிட்ஜ் பவர் ஹவுஸ், சென்னை-12.

(த-80)

---

31307-71-டி7-30—6—1972

## மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம், சேலம்—தர்மபுரி வட்டம், சென்னை-4.

வேலையின் பெயர்—

1. கிருஷ்ணகிரியில் கம்பைண்டு கோர்ட்டு கட்டடத்தின் முன் பகுதி ( Front Wing ) கட்டுதல்.
2. கிருஷ்ணகிரியில் கம்பைன்ஸ் கோர்ட்டு கட்டடத்தில் பின்பகுதி ( Rear Wing ) கட்டுதல்.

மேற்கண்ட வேலைகளுக்கு, ஒப்பந்தப் புள்ளிகள் வழங்குவதற்கு கடைசி நாள் 9—8—1972 மாலை 3-00 மணி வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

ஒப்பந்தப் புள்ளிகள் 9—8—1972 மாலை 3-00 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். அதே நாள் மாலை 3-30 மணிக்குத் திறக்கப்படும். ஒப்பந்தப் பத்திரங்கள் 7—8—1972 வரை விற்பனைக்குக் கிடைக்கும். மற்ற நிபந்தனைகள் மாற்றப்படவில்லை.

**ஆர். இராதாகிருஷ்ணன்,**
மேற்பார்வைப் பொறியாளர்.

(த-73.)

---

## சேலம் நகராட்சி

1972–73 ஆம் ஆண்டிற்குச் சேலம் நகராட்சிக்குத் தேவையான நீர் வழங்கு வேலைகளுக்காக நீர்வழங்குவேலைப் பொருட்கள் (சி.ஐ. பைப்புகள் மற்றும் பி.வி.சி., பைப்புகள் மற்றும் ஸ்பெசல் ஸ்லூயிஸ் வால்வுகள் „ ரன்சஸ் மற்றும் கருவிகள் மற்றவைகள் அரைவை மெசின் வழங்க நகராட்சிப் பொறியாளர், சேலம் நகராட்சி) சேலம் அவர்களால் 26—7—1972 மாலை 3-00 மணி வரை மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப் புள்ளிகள் பெற்றுக் கொள்ளப்படும்.

நிர்ணயத் தொகை—ரூ. 94,000.

மற்ற விவரங்களுக்கு நகராட்சிப் பொறியாளர், சேலம் நகராட்சி அவர்களுக்கு விண்ணப்பிக்கவும்.

**பீ. ஹமீத்அலி,**
ஆணையர்.

(த-87)

---

## விளம்பரம்

கிண்டி, தொழிற் பேட்டையில், தற்காலிகமாக ஒரு (Sanitary Inspector சேனிட்டரி இன்ஸ்பெக்டர், சம்பள விகிதம் ரூ. 210—5—245—10—325 மற்றும் சட்டப்படி அலவன்ஸ்களுடனும் நியமனம் செய்வதற்குத் தகுதி வாய்ந்த மனுதாரர்களிடமிருந்து சான்றிதழ் பிரதிகளுடன் மனுக்கள் வரவேற்கப்படுகின்றன. கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்கும் மனுதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

தமிழ்நாடு அரசால் மக்கள் நல்வாழ்வு இயக்குநர் அவர்களைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட தேர்வுக் குழுவால் வழங்கப்பட்ட சேனிட்டரி இன்ஸ்பெக்டர் படிப்பின் சர்ட்டிபிகேட் வேண்டும்.

வயது—1—7—1972 அன்று 30 வயது பூர்த்தியடைந்தவராக இருக்கக்கூடாது.

மனுதாரர்கள் தங்கள் பெயர், தங்கியுள்ள முகவரி தொழில் நுட்பம் மற்றும் பொதுக் கல்வித் தகுதி, அனுபவம் மற்றும் பிறந்த தேதி மற்றவைகளை விளக்கமாக மனுவில் குறிப்பிட்டு, அந்த மனுக்கள் தொழில் வணிக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களுக்கு 31—7—1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்பப்பட வேண்டும். பதவிக்குத் தகுதியான மனுதாரர்கள் பின்னர் குறிப்பிடப்படும் தேதியில் நேர்முகப் பேட்டிக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பேட்டிக்கு வரும் மனுதாரர்களுக்கு பயணப்படி கொடுக்கப்படமாட்டாது.

**தொழில் வணிக இயக்குநர்,**
சேப்பாக்கம், சென்னை-5.

(த-22).


அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இதோ இன்னொரு சாதனை!
தமிழக அரசின் ஆக்கப் பணிகளுக்கு அடித்தளம்!
நாளையத் தலைமுறையின் "நல்வாழ்வுக்குப் புதியபாதை"!
தமிழ் நாட்டில் உருவாகிறது!
தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பூத்துறை என்ற சிற்றூர் குடும்ப நலத்திட்டப் பணியில்
சிற்றூர்!
குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது!
பூத்துறை போன்று பல ஊர்களைத் தமிழகத்தில் உருவாக்குவோம்
தென்னார்க்காடு மாவட்டம்
பூத்துறை
தமிழரசு
குடும்பநலத்துறை
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!!

16—7—11அ

## பாரதத்திலிருந்து பங்களாதேஷுக்கு!

# சங்கர் சிமெண்ட்

## போரினல் உருக்குலைந்த நாட்டைப் புதுப்பிக்கச் செல்கிறது

1968-69ம் ஆண்டில் ஏற்றுமதிக்கென இந்தியா சிமெண்ட்ஸ் அண்மையில் இந்திய அரசிடமிருந்து பாராட்டு இதழ் பெற்றுள்ளது. இந்த ஏற்றுமதி இன்னும் தொடர்கிறது...

சங்கர் சிமெண்ட் ஏற்றுமதியில் இப்போது ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. புது நாடு ஒன்றை நிர்மாணிக்க, அந்நாட்டு மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க, போரினல் சீர்குலைந்த தொழில்களையும் பொருளாதாரத்தையும் செம்மைப்படுத்த அது செல்கிறது. 20,000 டன் சங்கர் சிமெண்ட் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது ... இன்னும் நிறைய ஏற்றுமதி செய்யப்படும்.

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்**
175/1, மவுண்ட் ரோட்
சென்னை-2

தொழிற்சாலைகள்:
சங்கர் நகர், திருநெல்வேலி மாவட்டம்
சங்கரி, சேலம் மாவட்டம்

FDSIC-1773TM




எமது பங்கு

நன்கு நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழிற்கூடங்களோடு தனது முழு உழைப்பைக் கொண்டு நாட்டிற்கும் தொழிலுக்கும் பல துறைகளில் பணிபுரிகிறது

TANSI

- கட்டுமான கட்டமைப்புகள்
- தரமான வார்ப்பு இரும்பு வார்ப்படங்கள்
- எஃகு, பித்தளை ஆகியவற்றில் வடிக்கப்பட்ட உறுப்புகள்
- மின் தடுப்புச் சாதனங்கள்
- விஞ்ஞான வகை கண்ணாடி உபகரணங்கள்
- இறைவை, டீசல் கம்பிகள்

- வேளாண்மைக் கருவிகள்
- பயிர் பாதுகாப்பு கருவிகள்
- டிராக்டர் தொடர்பு வண்டி
- மோட்டார் விசை யேற்றங்கள்
- கரும்பாலை
- வடிமுனைக் குழாய்கள்

அன்றாட உபயோகப் பொருட்கள்

- எஃகு, மரமேஜை, நாற்காலிகள்
- மருத்துவமனை சாமான்கள்
- கதவுகளுக்கான பூட்டு
- தாம்பாளங்கள்
- சுகாதார வசதி பொருட்கள்
- பீங்கான் பொருட்கள்
- காலணிகள்
- தோலணிப் பொருட்கள்

- பல வண்ண சாதாரண தோல்கள்
- நீலநிற சரமான குரோம் தோல்கள்
- கட்டுமான கட்டமைப்புகள்

தகவல்களுக்கு அணுகவும்

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

சாலை, சென்னை-2.




# கதர் கைத்தொழில் அங்காடி

## குறளகம்
சென்னை-1













## கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்

வெளிநாட்டார் போற்றும்
**வியன் பொருள் கலைக்கூடம்**







20461
20462 20463
20464 20465

# அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம் சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு – 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!



தமிழ்நாடு அரசு
சிறுசேமிப்பு இயக்குநரால்
வெளியிடப் பெற்றது

கீழே குறிப்பிட்டுள்ளவைகளை வழங்குவதற்காக மூடி முத்திரையிட்ட கொட்டேஷன்கள் ( quotations ) வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு வகைக்கும் தனித்தனியான கொட்டேசன்கள் தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு 25—7—1972 மாலை 4-00 மணிக்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்பப்பட வேண்டும். பொருள்கள் அந்தந்த மாவட்டத் தலைமை இடங்களில் மாவட்ட நல அலுவலர் அலுவலகத்தில் வழங்கப்பட வேண்டும். F.O.R, கொட்டேசனில் சர்வீசிங் வசதிகள் ( Servicing Facilities உட்படச் சேர்த்துக் குறிப்பிட வேண்டும்.

உறையில் வகையின் விவரம் எதற்காகக் கொட்டேசன் கொடுக்கப்படுகிறது என்பதை விளக்கமாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும். தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு எந்த ஒரு கொட்டேசனையும் எக்காரணமும் கூறாமல் ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ உரிமை உண்டு.

திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாவட்ட நல அலுவலர்கள் தொகையைச் செலுத்துவார்கள். மாதிரி வகைகள் தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர், எழிலகம், சேப்பாக்கம், சென்னை-5 அவர்களிடம் 15—7—1972 காலை 11-00 மணி முதல் மாலை 3-00 மணிக்கு முன்னர் எல்லா வேலை நாட்களிலும் பெறலாம்.

வழங்க இருக்கும் டூல்ஸ் மற்றும் மெசினரிகளின் மாதிரிகளை 31—7—1972 அன்று பார்வையிட்ட ஒப்பந்ததாரர்கள் எழிலகம் சென்னை-5-ல் உள்ள தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களிடம் ஒப்பந்ததாரரின் செலவிலேயே கொண்டு வரவேண்டும்.

மாவட்ட நல அதிகாரிகளுக்கு வழங்கும் பொருட்கள் சென்னையில் பார்வையிடப்பட்டு தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் தரமுடையதாகவே இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அந்த வகைப் பொருட்கள் மாவட்டத் தலைநகர்களிலேயே மாவட்ட நல அலுவலர்களால் தள்ளுபடி செய்யப்பட்டு விடும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பொருட்கள் வழங்குவதற்காக அஞ்சல் தலைகள் ஒட்டப்பட்ட காகிதத்தில் ஒப்பந்தப் பத்திரம் எழுதித் தரவேண்டும். மேலும் ஒப்பந்தத்தில் ஒருவிதி முறையாக விரைவாக முறையாக பொருட்கள் வழங்கும் பொருட்டு மொத்த ஒப்பந்த மதிப்பில்10 சதவிகிதம் பொறுப்புத் தொகை கட்ட வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | Laundry (Iron Boxes) .. .. | 250 |
| 2. | Blacksmithy .. .. .. | 37 |
| 3. | Carpentry .. .. .. | 197 |
| 4. | Leather atriching machines .. .. | 46 |
| 5. | Sewing machines .. .. | 332 |
| 6. | Barbers Kit .. .. .. | 232 |
| 7. | Legging | |

தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர்.

(த-20).

---

1972–73-ஆம் ஆண்டிற்குத் தாழ்த்தப்பட்டோர் நலப்பள்ளி மற்றும் ஆதிவாசிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு நோட் புத்தகங்கள் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ளபடி இலவசமாக வழங்குவதற்கு மூடி முத்திரையிட்ட கொட்டேஷன்கள் வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு வகை நோட் புத்தகத்திற்கும் தனித்தனியான கொட்டேஷன்கள் தாழ்த்தப்பட்டோர் இயக்குநர் அவர்களுக்கு 25–7–1972 அன்று அல்லது அதற்கு முன்னர் வந்து சேருமாறு அனுப்ப வேண்டும். கொட்டேஷன்கள் மாவட்டத் தலைமையிடத்தில் கலெக்டரேட்டுடன் இணைந்த மாவட்ட நல அலுவலரின் அலுவலகத்தில் வழங்க எடுத்துச் செல்லும் கட்டணம் எல்லா வரிகள் மற்றும் கட்டணமிருந்தால் அனைத்தும் சேர்த்திருக்க வேண்டும். உறையில் பாடப்புத்தகங்களின் விவரம் எதற்காக கொட்டேஷன் கொடுக்கப்படுகிறது என்ற விவரமும் குறிப்பிட்டுஅனுப்பவேண்டும். தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர் அவர்களுக்கு எந்த ஒரு கொட்டேஷனையும் எக்காரணமும் கூறாமல் ஏற்க அல்லது நிராகரிக்க உரிமை உண்டு.

சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் தலைமையிடங்களில் மாவட்ட நல அலுவலர்களின் அலுவலகங்களில் புத்தகங்கள் வழங்கப்பட வேண்டும். திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாவட்ட நல அலுவலர்கள் தொகையைச் செலுத்துவார்கள்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய புத்தகங்களின் எண்ணிக்கை பின்னர் தெரியப்படுத்தப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர் புத்தகங்கள் வழங்குவதற்காக ஸ்டாம்ப் ஒட்டப்பட்ட காகிதத்தில் ஒப்பந்தப் பத்திரம் எழுதித் தர வேண்டும். மேலும் ஒப்பந்தத்தில் ஒரு விதிமுறையாக ஒழுங்காகப் புத்தகங்கள் வழங்கும்பொருட்டு மொத்த ஒப்பந்த மதிப்பில் 10 சதவிகிதம் பொறுப்புத் தொகை கட்ட வேண்டும்.

இணைப்பு.

1972–73-ஆம் ஆண்டிற்குத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட மலைசாதியினர் தாழ்த்தப்பட்டோர் நலப்பள்ளிகள் மற்றும் ஆதிவாசிப் பள்ளிகளில் உள்ள மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகம் வழங்குதல் :—

| வரிசை எண்ணும். தேவையான நோட்டுபுத்தகங்களின் விவரமும். | | தேவையான பிரதிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | 20 pages ruled note book .. ...... | 59 |
| 2 | 24 pages drawing note book | 4,332 |
| 3 | 40 pages ruled note nook .. | 19,213 |
| 4 | 40 pages double ruled book .. .. | 12,687 |
| 5 | 40 pages quarter double ruled note book | 7,483 |
| 6 | 40 pages map drawing note book | 3,737 |
| 7 | 40 pages graph note book | 2,343 |
| 8 | 40 pages graph (foolscap) note book .. .. | 1,065 |
| 9 | 40 pages composition note book | 1,270 |
| 10 | 40 pages composition (Foolscap) note book | 4,506 |
| 11 | 40 pages Geometry note book | 450 |
| 12 | 48 pages ruled (foolscap) note book | 9,084 |
| 13 | 48 pages unruled (foolscap) note book | 3,875 |
| 14 | 60 pages ruled note book .. .. | 10,731 |
| 15 | 60 pages essay note book .. .. | 11,340 |
| 16 | 60 pages essay (foolscap) note book | 110 |
| 17 | 80 pages ruled note book .. .. | 96,524 |
| 18 | 80 pages double ruled note book .. | 27,393 |
| 19 | 80 pages maths note book .. .. | 469 |
| 20 | 80 pages Composition note book .. | 11,850 |
| 21 | 80 pages Science (one side ruled note book) | 6,551 |
| 22 | 80 pages Four ruled (one side ruled note book) | 1,200 |
| 23 | Half quire ruled .. .. | 57,265 |
| 24 | Half quire mathematics | 6,059 |
| 25 | Half quire unruled | 21,350 |
| 26 | Half quire unruled (foolscap) note book | 2,090 |
| 27 | Half quire one side ruled note book | 982 |
| 28 | Half quire Map drawing note book | 1,146 |
| 29 | Half quire essay note book | 2,852 |
| 30 | Half quire essay (foolscap) note book | 1,405 |
| 31 | 120 pages maths note book | 355 |
| 32 | 120 pages ruled note book .. .. .. | 4,164 |
| 33 | One quire ruled note book .. .. .. | 72,882 |
| 34 | One quire maths note book .. | 36,065 |
| 35 | One quire unruled note book | 2,906 |
| 36 | One quire unruled (foolscap) note book | 520 |
| 37 | One quire science (one side ruled) note book | 8,721 |
| 38 | Two quire mathematics note book | 27,560 |
| 39 | Two quire ruled note book | 59,957 |
| 40 | Two quire science (one side ruled) note book | 2,925 |
| 41 | Two quire unruled note book | 1,131 |
| 42 | No. 5 ruled note book | 370 |
| 43 | No. 4 one side ruled note book | 280 |
| 44 | No. 4 Mathematics note book | 1,020 |
| 45 | No. 5 note book | 1,000 |
| 46 | Exercise book for core histroy | 1,330 |
| 47 | Exercise book for Geography | 1,330 |
| 48 | Exercise book for elective history | 850 |
| 49 | Record Note elective Biology | 250 |

தாழ்த்தப்பட்டோர் நல இயக்குநர்.

(த. 49)

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2.